இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 30
பக்கங்கள்: 56

சுடர் 32 | கதிர் 204 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆனி 04 ஞாயிற்றுக்கிழமை 18.06.2017

புதிய சேவை அறிமுகம்
பொதிகள் சேவை
Door to Door Service
11Kg க்கு மேல் 01kg க்கான கட்டணம்
அவுஸ்திரேலியா Rs 800/-
லண்டன் Rs 600/-
ParcelLk
இல. 225 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 2224338 / 021 4925024
இல. 25 கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. 024 4930200

## எந்த விசாரணையையும் சந்திப்பதற்கு நான் தயார்

### வடமாகாண அமைச்சர் சத்தியலிங்கம் அறிவிப்பு

வவுனியா, ஜூன் 18
வடக்கு மாகாண சபையிலே பொதுமக்களுக்காகக் கொண்டு வரப்பட்ட நிதியிலிருந்து ஒரு சதம் கூட என்னாலோ அல்லது எனது குடும்பத்தினராலோ மோசடி செய்யப்படவில்லை. அதனை நிரூபிப்பதற்கு எந்த விசாரணைக் குழு முன்பாகவும் சென்று விளக்க >> 49

முதல்வருக்கு எதிரான மனுவில்

## தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் மட்டுமே கையெழுத்திட்டனர்

### வடக்கு மாகாண சபையின் நீதிக்கான அணி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 18
நாம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனோ அல்லது வேறு கட்சிகளுடன் இணைந்து ஆட்சி அமைப்போம் என்று ஒருபோதும் கூறவில்லை. நாங்கள் ஆளுந >> 53

## விக்கியுடன் சமரசம் பேசும் வாய்ப்பைத் தவறவிடோம்

### நம்பிக்கையில்லாத் தீர்மானம் கையளித்த தரப்பினர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 18
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுடன் சமரசத்துக்கான சின்ன ஒளிக் கீற்றுக் கிடைத்தாலும் நாங்கள் தவறவிடமாட்டோம். இது எங்களது மக்களுடைய பிரச்சினை. மக்கள் எங்களுக்குத் தந்த ஆணை தொடர்பான பிரச்சினை. நிச்சயமாகச் சமரசத்துக்கான எல்லா வாய்ப்புக்களையும் நாங்கள் இறுதி வரை பயன்படுத்துவோம். இவ்வாறு, வடக்கு >> 49

## சீனி விலை 3 ரூபாவால் குறைப்பு

கொழும்பு, ஜூன் 18
உள்நாட்டுச் சந்தையில் 99 ரூபாவாகக் காணப்பட்ட ஒரு கிலோ >> 49

# புளொட், ஈபிஆர்எல்எவ், ரெலோ சமரசம் ஏற்படுத்துவதில் தீவிரம்

### விக்கி- தமிழ் அரசுக் கட்சி இடையிலான முரண்பாட்டைத் தீர்ப்பதில் அவை மும்முரம் இணங்கி வருவதற்கு சம்மதம் தெரிவித்து சம்பந்தனுக்கு முதல்வர் நேற்றிரவு கடிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 18
வடக்கு மாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் தமிழ் அரசுக் கட்சிக்கும் இடையிலான முரண்பாட்டை அடுத்து எழுந்துள்ள அரசியல் சிக்கலைத் தீர்ப்பதில் இரு தரப்புகளுக்கும் இடையில் ஒரு சமரசத்தை ஏற்படுத்துவதில் முன்னாள் ஆயுத இயக்கங்களான புளொட், ஈபிஆர் எல்எவ், ரெலோ ஆகியன தீவிர முயற்சி எடுத்து வருகின்றன. இந்த இயக்கங்களின் தலைவர்கள் நேற்று முதலமைச்சரைச் சந்தித்து முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்தனர். இதன் பயனாக சில விடயங்களின் அடிப்படையில் இணங்கி வருவதற்கு முதலமைச்சர் சம்மதம் தெரிவித்து அது தொடர்பான கடிதத்தை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு >> 53

## விக்கியை நீக்கவேண்டும்

### கூறுகிறார் டிலான் பெரேரா



கொழும்பு, ஜூன் 18
வடக்கு முதலமைச்சர் பதவியிலிருந்து சி.வி.விக்னேஸ்வரனை நீக்கிவிட்டுச்சிறப்பாகப் பணியாற்றக்கூடிய ஒருவரை நியமிப்பதே சரியான தெரிவு என சிறிலங்கா >> 04

## மகிந்தவை உடனே கைது செய்யுங்கள்

*அரசிடம் கோருகிறார் அசாத் சாலி*

கொழும்பு, ஜூன் 18
மகிந்த ராஜபக்சவை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் எனத் தேசிய ஐக்கிய முன்னணி >> 49

## யாழ். போதனாவில் பெண்ணுக்கு கத்திக் குத்து

யாழ்ப்பாணம், ஜூன் 18
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பெண் மீது நேற்றுக் கத்திக் குத்து நடத்தப்பட்டது. கத்தியால் குத்திய குற்றச்சாட் >> 49

## கொழும்பு விரைந்தார் வடக்கு ஆளுநர் குரே

கொழும்பு, ஜூன் 18
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தால் எழுந்துள்ள குழப்ப நிலைக்கு மத்தியில், வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே நேற்று முன்தினம் அவசரமாக வானூர்தி மூலம் கொழும்புக்குப் பயணமானார்.
வடக்கு மாகாண சபை உறுப்பினர்களால் ஆளுநரிடம் கையளிக்கப்பட்டுள்ள இரு வேறு தீர்மானங்கள் தொடர்பில் விரிவாக ஆராய்ந்து சட்ட ஆலோசனைகளைப் பெறும் நோக்கிலேயே அவர் >> 53

## சங்குப்பிட்டி பாலம் அருகில் 260 கிலோ கஞ்சா சிக்கியது



கிளிநொச்சி, ஜூன் 18
கிளிநொச்சி, பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்குப்பிட்டிப் பாலத்துக்கு அருகில் நேற்றுக் காலை 260 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள் >> 53

## மதத் தலைவர்களுடன் சிறீதரன் எம்.பியும் சந்திப்பு

*வடக்கு குழப்பத்தை சீர் செய்வதற்காக*

யாழ்ப்பாணம், ஜூன் 18
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சந்தித்த மதத் தலைவர்களை, தமிழ்த் தேசியக் கூட்ட >> 49

## தவறுகளைப் பாடமாக்கிக் கொண்டு சிறந்த சமூகத்தை ஏற்படுத்துவோம்

### நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜூன் 18
கடந்த காலங்களிலே இடம்பெற்ற தவறுகளைப் பாடமாக எடுத்துக்கொண்டு எதிர்காலத்தில் சிறப்பான சமூகத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளவேண்டும்.
இவ்வாறு நீதி மற்றும் புத்தசாசன >> 49

## மகிந்த வந்திராவிட்டால் தமிழீழம் மலர்ந்திருக்கும்

### விமல் வீரவன்ச தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 18
மகிந்த ராஜபக்ச 2005ஆம் ஆண்டு அரச தலைவர் ஆகியிராவிட்டால் தமிழீழம் உருவாகி இப்போது 12வரு >> 04



## மூதூர் சிறுமிகளுக்கு நீதி வேண்டி யாழ்ப்பாணத்தில் நேற்று ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஜூன் 18
திருகோணமலை, மூதூரில் 3 சிறுமிகள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டனர் என்று கூறப்படும் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அதற்குக் காரண >> 49

## ஐவரடங்கிய கொள்ளைக் கும்பல் நகைகள், வாள்களுடன் கைது



கிளிநொச்சி, ஜூன் 18
கிளிநொச்சி கல்லாறுப் பகுதியில் கடந்த வாரம் கொள்ளையடித்த குற்றச்சாட்டில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து ஒரு தொகை நகைகளும் பணமும் மீட்கப்பட்டதோடு கொள்ளையடிக்கப்பட்ட பணத்தில் கொள்வனவு செய்யப்பட்டதாகக் கூறப்படும் மோட்டார் >> 53

## 3 மாகாண சபைகளுக்கு டிசெம்பரில் தேர்தல்

கொழும்பு, ஜூன் 18
ஆட்சிக் காலம் நிறைவடையும் மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தலை >> 49

SDB வங்கியிலிருந்து நிலையான வைப்புக்களுக்கு 16% வரையிலான கவர்ச்சிகரமான வட்டி
011 5 411 411
60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கு ரூ 1.5 மில்லியன் வரை 15% வருட வட்டியும், 55 வயதுக்கு மேற்பட்ட சகல பிரஜைகளுக்கும் கூடுதல் வட்டியும் உரித்தாகும்.
அழையுங்கள்: 0115 411 411
SDB வங்கி
சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. Fitch Rating BB+ (stable), Reg. No: PB62PQ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# குருதிக் கொடையில் சிறந்த மாவட்டமாக மாற்றுவோம்

*யாழ்.போதனா மருத்துவனை பணிப்பாளர் அறைகூவல்*

யாழ்ப்பாணம், ஜூன் 18

குருதிக்கொடை வழக்குவதில் சிறந்த மாவட்டமாக யாழ்ப்பாணத்தை மாற்றுவதற்கு முயற்சிக்கின்றோம் என்று யாழ்.போதனா மருத்துவனைப் பணிப்பாளர் ரி.சத்தியமூர்த்தி தெரிவித்தார். யாழ்.தாதியர் பயிற்சி கல்லூரியில் நேற்றுக் குருதி கொடையாளர் தின நிகழ்வுகள் நடைபெற்றன. அதில் குருதி கொடையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

குருதி கொடை தொடர்பில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஆங்கில ஊடகம் ஒன்று தவறான செய்தியை வெளியிட்டது. அதற்கு நாம் கடுமையான கண்டனத்தையும் எதிர்ப்பையும் வெளியிட்டோம். குருதிக் கொடையில் சிறந்த மாவட்டமாக யாழ்ப்பாணத்தை கொண்டு வர வேண்டும். குருதி கொடையை ஊக்குவிக்க அனைவரும் முன் வர வேண்டும். என்றார். "சாதிப் பிரச்னையையும், குருதிக் கொடையையும் தொடர்பு படுத்தி ஆங்கில ஊடகம் நயவஞ்சக சிந்தினையில் செய்தி வெளியிட்டது. மறுப்பு அறிக்கை கொடுத்த போது அதையும் இருட்டடிப்பு செய்துள்ளது. எந்த நிகழ்சி நிரலில் அந்த செய்தியை வெளியிட்டார்கள் என தெரியவில்லை." என்று நிகழ்வில் உரையாற்றிய மருத்துவர் உமா சங்கர் தெரிவித்தார். (ற-37)

# விபத்தில் இளைஞன் காயம்

சாவகச்சேரி, ஜூன் 18

மோட்டார் சைக்கிள் பயணித்தவர் சாலையின் குறுக்கே ஓடிய நாயுடன் மோதி விபத்துக்குள்ளானார். சம்பவத்தில் காயமடைந்த 23 வயது இளைஞன் யாழ்.போதனா மருத்துவனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று மீசாலை ஐயா கடையடியில் இடம்பெற்றது. (ஐ-9)



# முல்லைத்தீவு, மாங்குளம் நீதிமன்ற கட்டடங்களுக்கு நேற்று அடிக்கல்

முல்லைத்தீவு, ஜூன். 18

முல்லைத்தீவு மாவட்டத்தில் இரு வேறு இடங்களில் அமைக்கப்படவுள்ள புதிய நீதிமன்றக் கட்டடத் தொகுத்திக்கான அடிக்கல் நடும் நிகழ்வுகள் சர்வமதப் பிரார்த்தனையுடன் நேற்று நடைபெற்றன.

மாங்குளத்தில் அமையவுள்ள நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு காலை 9 மணியளவிலும், முல்லைத்தீவு நகர்பகுதியில் அமையவுள்ள நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நண்பகல் 12 மணியளவிலும் நடைபெற்றன.

நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கான அடிக்கற்களை நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ச, நீதி மற்றும் புத்தசாசன பிரதி அமைச்சர் டுஸ்மன்தா மித்ரபால, வடமாகாண



உயர்நிதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன், நீதி மற்றும் புத்தசாசன அமைச்சின் செயலாளர் பத்மசிறி ஜலயமன்னே, முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.எஸ். எம். சம்சுதீன், முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் இணைந்து வைபக ரீதியாக நட்டனர். (ஐ-10,7,35)

# மாலைதீவு சிறையிலிருந்து மூவர் மகசினுக்கு மாற்றம்!

**காணாமல் ஆக்கப்பட்டோரா என்றும் சந்தேகம்**

யாழ்ப்பாணம், ஜூன் 18

இலங்கையில் இறுதிப்போரின் போது காணாமல் ஆக்கப்பட்டனர் என்று உறவினர்களால் தேடப்பட்டுவரும் மூவர் மாலைதீவிலுள்ள இரகசியச் சிறையிலிருந்து மகசின் சிறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் கசிந்துள்ளன.

இறுதிப்போரின்போது பலர் இராணுவத்தினரால் உறவினரது கண் முன்னே பிடித்துச் செல்லப்பட்டனர். இன்றுவரை அவர்கள் பற்றிய தகவல்கள் ஏதுமின்றிய நிலையில் தமது உறவுகளை மீட்டுத் தருமாறுகோரி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கடந்த நான்கு மாதங்களாக இரவு பகலாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இந்த நிலையிலேயே இந்த 3 பேரும் மாலைதீவு இரகசியச் சிறையிலிருந்து வெலிக்கடைச் சிறைக்கு அழைத்து வரப்பட்டு அங்கு அடைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அந்த மூவரில் ஒருவர் கிளிநொச்சி உருத்திரபுரத்தைச் சேர்ந்தவர். மற்றைய இருவரில் ஒருவர் முல்லைத்தீவு மற்றும் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படுகின்றது. (ற-4, 426)

# தென்கொரிய நிதியமைச்சருடன் அமைச்சர் மங்கள சமரவீர சந்திப்பு

கொழும்பு.ஜூன் 18

நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, தென்கொரியாவின் மூலோபாய மற்றும் நிதியமைச்சருமான கிம் யோன்க் எயோனுடன் நேற்று இருதரப்பு பேச்சு நடத்தினார். இந்தப் பேச்சு தெஜு என்ற தீவில் நடைபெற்றது. இரு நாடுகளுக்கு இடையிலான முக்கிய விடயங்கள் மற்றும் இருதரப்பு தொடர்புகளை மேம்படுத்துவது குறித்து இதன் போது ஆராயப்பட்டன. ஆசிய அடிப்படை வசதி முதலீட்டு வங்கியின் வருடாந்த மாநாட்டில் அமைச்சர் மங்கள சமரவீர நேற்று முன்தினம் கலந்து கொண்ட நிலையில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. (ஐ)



# இந்திய நிதியமைச்சருடனும் அமைச்சர் மங்கள சந்திப்பு

இந்திய நிதி அமைச்சர் அருண் ஜெட்லியை, நிதியமைச்சர் மங்கள சமரவீர தென்கொரியாவில் சந்தித்துப் பேச்சு நடத்தினார். தென்கொரியாவில் நடைபெறும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் இரண்டாவது கூட்டத்தில் பங்கேற்பதற்காக அமைச்சர் மங்கள சமரவீர சியோல் சென்றுள்ளார். இதன்போதே இந்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லி, இந்தோனேசிய நிதியமைச்சர் ஸ்ரீ முல்யானி இந்ராவடி ஆகியோரை நிதி அமைச்சர் மங்கள சமரவீர சந்தித்து கலந்துரையாடியுள்ளார். (ஐ)

# அங்கொடையில் மைத்திரி

கொழும்பு, ஜூன் 18

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முல்லேரியாவில் உள்ள அங்கொடை ஆதார வைத்தியசாலைக்கு நேற்றுக் கண்காணிப்புப் பயணம் ஒன்றை மேற்கொண்டார்.



வைத்தியசாலையில் காணப்படும் குறைபாடுகளை ஆராய்ந்த அவர், அவற்றை உடனடியாகத் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளார்.

டெங்கு நோயாளர்கள் அதிகரித்தன் காரணமாக நோயாளிகளை வைத்தியசாலையில் அனுமதிப்பது தற்காலிமாக நிறுத்தப்பட்டாலும் அவர்களுக்குத் தேவையான சகல வசதிகளுடன் தலங்கம, வேதர, பிலியந்தலை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

வேறு வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட நோயாளர்களுக்குத் தேவையான சகல சிறப்பு மருத்துவ வசதிகளை தொடர்ந்தும் வழங்குமாறு அரச தலைவர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதன் பின்னர் டெங்கு நோயாளர்கள் தங்கி சிகிச்சை பெறும் விடுதிக்கு சென்ற மைத்திரி, அவர்களிடம் நலன்களை விசாரித்தார்.

அரச தலைவருடன் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, வைத்தியசாலையின் பணிப்பாளர் திமுது ரத்நாயக்க உட்பட அதிகாரிகளும் வைத்தியசாலைக்குச் சென்றிருந்தனர். (த)

# ஓட்டோ கட்டணம் ஜூலையில் உயரும்

கொழும்பு, ஜூன் 18

அடுத்த மாதம் முதல் முச்சக்கர வண்டி கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய முதலாவது கிலோ மீற்றருக்காக அறவிடப்படும் கட்டணம் 10 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது.

அடுத்த மாதம் 10ஆம் திகதி முதல் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக முச்சக்கர வண்டிச் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட சங்கத்தின் தலைவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

முச்சக்கர வண்டிக்கான உதிரிப் பாகங்களின் விலையில் ஏற்பட்ட அதிகரிப்பே கட்டண உயர்வுக்கான காரணம் என தலைவர் மேலும் கூறினார்.

தற்போது முச்சக்கர வண்டிக்கான ஆரம்பக் கட்ட கட்டணமாக 50 ரூபா அறவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த)

# 3,214 பேர் கைது

கொழும்பு, ஜூன் 18

நாடு முழுவதும் நேற்று முன்தினம் இரவு மேற்கொண்டு சிறப்புத் திடீர்ச் சோதனை நடவடிக்கைகளின்போது பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடய 3214 பேர் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், போக்குவரத்துச் சட்டங்களை மீறிய 3647 பேருக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு நடவடிக்கைக்கு நாடு முழுவதிலும் 11,558 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டதாகப் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளைத் தேடும் மக்களை சந்தித்தார் ஐ.நா. வதிவிட பிரதிநிதி

கிளிநொச்சி, ஜூன் 18
சமாதானம், ஐக்கியம் மற்றும் செழிப்பு மிக்க இலங்கையை உருவாக்குவதற்கு காணாமல் போனோர் மற்றும் காணி விவகாரங்களில் ஏற்பட வேண்டிய முன்னேற்றங்கள் தொடர்பாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இவ்வாறு ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி உனாமெக்குலே தெரிவித்தார்.

கிளிநொச்சியில் தொடர் போராட்டத்தில் ஈடுபடும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை உனாமெக்குலே நேற்றுச் சந்தித்தார். அவர்களுடன் கலந்துரையாடினார். அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது இவ்வாறு குறிப்பிட்டார்.

போர் இடம்பெற்ற காலத்திலும், அதற்கு பின்னரும் வலிந்து கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை மீட்டுத் தர வேண்டும் என்று வலியுறுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர்போராட்டங்கள் நடத்தப்படுகின்றன. நேற்று கிளிநொச்சியில் 118 நாளாகப் போராட்டம் தொடர்ந்தது.





காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடுவதற்கான நடவடிக்கைகள் விரைவில் முன்னெடுக்கப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளபோதும், தமக்கு தீர்க்கமான முடிவு கிடைக்கும் வரை போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பின்னணியிலேயே ஐ.நாவில் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி நேற்று அவர்களைக் கிளிநொச்சியில் சந்தித்துள்ளார். இது அவரது இரண்டாவது சந்திப்பாகும்.

"கடந்த முறை இங்கு வந்த போது மக்கள் தன்மீது மிகுந்த கோபத்துடன் இருந்தனர். ஐ.நா தலையிட்டு பிரச்சினையை தீர்க்கவில்லை என்று அன்று நீங்கள் வடித்த கண்ணீர்தான் இன்று மீண்டும் உங்களை சந்திக்க வைத்துள்ளது. உங்கள் போராட்டம் மிக வலிமையடைந்து வருகின்றது. இது தொடர்பாக நான் ஐ.நாவில் கதைக்க உள்ளேன். இலங்கை அரச தலைவர் உங்களை சந்திக்க வருமுன் எங்களின் பிரதிநிதி ஒருவர் உங்களின் பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடியிருந்தார். நான் உங்களின் பிரச்சினை தொடர்பாக ஐ.நாவில் கதைத்து இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பேன்." என்று ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி போராட்டத்தில் ஈடுபடும் மக்களிடம் தெரிவித்தார்.

வடக்கில் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலும், கிழக்கில் திருகோணமலை மாவட்டத்திலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர் போராட்டங்களை நடத்துகின்றனர். (ற-6)

## பொலிஸ் அதிகாரி உட்பட 9 பேருக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஜூன் 18
பொரளை பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவு அதிகாரி உள்ளிட்ட 5 பொலிஸார் மற்றும் நால்வரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் லால் ரணசிங்க பண்டார உத்தரவிட்டுள்ளார். இடி தாங்கி, தங்க நகை மற்றும் பணம் உள்ளிட்டவைகளைக் கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்களே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் இரண்டு சந்தேகநபர்கள் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்ட போதிலும், மேல் மாகாண சபை உறுப்பினர் ரொய்ஸ் பெர்ணாந்தோவின் எழுதுவினைஞரால் அந்த சந்தேகநபர்களை அடையாளம் காட்ட முடியவில்லை. எவ்வாறாயினும் சந்தேகநபர்களை எதிர்வரும் 30ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஐ-10)

## எல்பிடியவில் சூட்டு சம்பவம் இருவர் காயம்

கொழும்பு,ஜூன் 18
எல்பிடிய பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் காயமடைந்தனர் என்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் பத்தேகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கராப்பிடிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். தனிப்பட்ட பிரச்சினை ஒன்றின் காரணமாகவே இந்தத் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டது என்று ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ)

## சுகாதாரத் தொண்டர்களின் போராட்டம் நேற்றும் தொடர்வு

வவுனியா, ஜூன் 18
நிரந்தர நியமனம் வழங்கக்கோரி சுகாதாரத் தொண்டர்களால் வவுனியாவில் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் நேற்று 45 நாளாகத் தொடர்ந்தது.

" இன்று(நேற்றைய) போராட்டகளத்துக்கு வருகை தந்த வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப. சத்தியலிங்கம் எமது கோரிக்கையைக் கேட்டதுடன், நியமனம் தொடர்பாக திருப்திகரமான பதிலை வழங்காமல் சென்றார். தனது வாகனத்திலிருந்தவாறே அவர் எமக்குப் பதில் வழங்கினார்." என்று போராட்டம் மேற்கொண்டு வரும் சுகாதாரத் தொண்டர்கள் தெரிவித்தனர்.



"வடக்கில் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றும் எமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. எமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் வரை போராட்டத்தை நாம் கைவிடப் போவதில்லை. கஷ்டப் பிரதேசங்களிலும், இக்கட்டான சூழ்நிலைகளிலும் சேவையாற்றிய எமக்கு நிரந்தர நியமனம் இதற்கு முன்னர் பல போராட்டங்களை முன்னெடுத்திருந்த போதும், வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. இந்த முறை எமக்கு உறுதியான தீர்மானம் வழங்கப்படும் வரை போராட்டத்தைக் கைவிட மாட்டோம்" எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ஐ-10)

## ஆபத்தான ஆயுதங்களுடன் திருமலையில் இருவர் கைது

திருமலை, ஜூன் 18
மிருகங்களை வேட்டையாடுவதற்குப் பயன்படுத்தும் துப்பாக்கி ரவைகள் கத்தி, கோடரிமற்றும்284ஈயகுண்டுகள் உள்ளிட்ட ஆபத்தான ஆயுதங்களைத் தம் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மொறவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை ரொட்டவெவப் பகுதியில் பொலிஸாரின் சிறப்புச் சோதனை நடவடிக்கையின் போது நேற்று முன்தினம் இரவு இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஹொரவ்பொத்தானையான் ஓயா பகுதியைச் சேர்ந்த சீனி முகம்மது சுலைமான் லெப்பை (54வயது) மற்றும் றத்மலைப் பகுதியைச் சேர்ந்த ஹனீபா ரவூப் (45வயது) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இருவரும் ரொட்டவெவமிரிஸ்வெவ உள் வீதியினூடாக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது, வீதிச்சோதனைச்சாவடியிலிருந்த பொலிஸாரைக் கண்டு மோட்டார் சைக்கிளைத் திருப்பிச் சென்றனர். சந்தேகம் அடைந்த பொலிஸார் அவர்களைத் துரத்தி சென்று சோதனையிட்ட போது மிருகங்களை வேட்டையாடுவதற்கு பயன்படுத்தும் பொருள்களைக் கைப்பற்றினர். இவர்கள் துப்பாக்கியைக் காட்டில் மறைத்து வைத்துத் தொடர்ச்சியாக வேட்டையாடும் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளனர் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட இருவரும் திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்படுவர் என்று மொறவெவ பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-10-45)

## குடை சாய்ந்தது பாரவூர்தி; பயணித்த இருவர் சாவு

திருகோணமலை, ஜூன் 18
பாரவூர்தியின் சக்கரம் காற்றுப் போனதால் பாரவூர்தி குடைசாய்ந்தது. அதில் பயணித்த மூவரில் இருவர் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாவனல்லைப் பகுதியிலிருந்து தோப்பூருக்கு விற்பனைக்காக மரக்குற்றிகளை ஏற்றி வந்த பாரவூர்தியே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர் காத்தான்குடி பகுதியைச் சேர்ந்த ஆதம்லெப்பை முகம்மது மன்சூர் (51வயது) எனவும், படுகாயமடைந்த வர் வெருகல் -பூநகர் பிரதான வீதியைச் சேர்ந்த கோபாலசிங்கம் ஜெயக்குமார் (40வயது) எனவும், உயிரிழந்த இன்னொரு நபரின் பெயர் விவரங்கள் இன்னும் கிடைக்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் காயமடைந்தவர் கந்தளாய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகள் இடம்பெறுவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ-10- 45)

## பன்னாட்டு யோகா தினம் கிளிநொச்சியில் நேற்று

கிளிநொச்சி,ஜூன் 18
யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் பன்னாட்டு யோகா தினம் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்றது. இதில் நூற்றுக்கணக்கான பாடசாலை மாணவர்கள் கலந்துக் கொண்டனர். மாணவர்களால் யோகா பயிற்சிகளும் நிகழ்த்தப்பட்டன. யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் கொன்சியூலர் ஆ.நடராஜன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஐ.நா.வின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி உனாமெக்குலே, நாடாளு மன்ற உறுப்பினர் சிறிதரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவர் சிலை இன்று திரை நீக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

சாவகச்சேரி சிவன் கோவில் வீதியிலுள்ள தென்மராட்சி கலை கலாசார மண்டபத்தின் முன்பாக அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவரின் திருவுருவச் சிலை இன்று ஞாயிற்றுக்கிழமை பிற் பகல் 2 மணிக்கு திரைநீக்கம் செய்து வைக்கப்படும்.

தென்மராட்சி கலைமன்றத்தின் தலைவர் க.மோகனராஜலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் அறிமுகவுரையை சென்னை காந்தளகம் நிலைய நிர்வாகி திருமதி. சசிரேகா பாலசுப்பிரமணியன், சிறப்புரையை திருவள்ளுவர் சிலையை அன்பளிப்புச் செய்த வி.ஜி.பி உலக தமிழ்ச் சங்கத்தின் தலைவர் செவாலியர் மருத்துவர் வி.ஜி. சந்தோசம் ஆகியோர் நிகழ்த்துவர். நிகழ்வில் சென்னை உச்ச நீதி மன்ற நீதியரசர் டி.என் வள்ளிநாயகம், கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஸ்ணன் ஆகியோர் கலந்து கொள்வர். (ஐ)

## மகிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டங்கள் கடந்திருக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பன்னாட்டுச் சமூகத்துக்கு அடிபணியாமல் எப்படி ஒரு நாட்டை முன்னேற்றுவது என்று மகிந்த ராஜபக்ச நடைமுறையில் நிரூபித்துக் காட்டியுள்ளார். குறிப்பாக,இந்தியாவுடன் அவர் நல்லதோர் இராஜதந்திர உறவைப் பேணினார். சீபா உடன்படிக்கையில் அவர் இறுதிவரை கையெழுத்திடவே இல்லை.

கோத்தாவும் பசிலும் மகிந்தவின் அயலுறவுக் கொள்கை வெற்றியடைவதற்கு உறுதுணையாக இருந்தார்கள் என்றும் சீனாவுடனான இலங்கையின் உறவால் இந்தியாவுக்கு எதுவித ஆபத்தும் ஏற்படவில்லை என்றும் இந்தியாவின் முன்னாள் அயலுறவுச் செயலாளர் சிவ் சங்கர் மேனன் அவர் எழுதிய புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவும் பிரிட்டனும் புலிகளைப் பாதுகாப்பதற்கே முயற்சி செய்தன என்றும் இந்தியாவின் நிலைப்பாடு அதிலிருந்து வேறுபட்டது என்றும் மேனன் அதில் மேலும் கூறி இருந்தார். ஆனால்,பாரதிய ஜனதா கட்சி ஆட்சியைக் கைப்பற்றியதும் இந்தியாவின் நிலைப்பாடு மாறியது.

புலிகளை யார் காப்பாற்றுவதற்கு முயற்சி செய்தார்கள்:யார் அழிக்க வேண்டும் என்று முயற்சி செய்தார்கள் என்பது இதிலிருந்து தெளிவாகின்றது. புலிகளை ஒழித்தே தீரவேண்டும் என்பதில் எல்லோரையும் விட உறுதியாகவும் தீவிரமாகவும் இருந்தவர் மகிந்ததான்.

மகிந்த 2005 இல் அரச தலைவர் ஆகியிராவிட்டால் இப்போது எல்லாம் தலைகீழாக மாறி இருக்கும். தமிழீழமும் உருவாகி இப்போது 12வருடங்கள் ஆகி இருக்கும். ஐக்கிய தேசியக் கட்சி புலிகளுடன் செய்துகொண்ட போர் நிறுத்த உடன்படிக்கையின் ஊடாக இது நடந்திருக்கும்.

புலிகளின் ஊடாக அன்று பெற்றுக்கொள்ள முடியாமல் போனவற்றை இப்போதைய அரசின் ஊடாகப் பெற்றுக்கொள்வதற்குப் புலம்பெயர் தமிழர்கள் முயற்சி செய்கின்றனர். நாம் அரசாக இருந்து எப்படி இந்தச் சதியைத் தடுத்தோமோ எதிர்க்கட்சியாக இருந்தும் தடுப்போம். நாம் விழிப்புடன் இருப்பதனாலேயே அரசால் தமிழீழத்தைக் கொடுக்க முடியாமல் உள்ளது - என்றார். (த-3)

## விக்கியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரக் கட்சியின் பேச்சாளரும், இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையில் ஏற்பட்டுள்ள சர்ச்சை நிலமை குறித்து ஊடகமொன்றுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் விக்னேஸ்வரன் முதலமைச்சராகத் தெரிவுசெய்யப்பட்டபோது அவர் ஒரு சிறந்த தலைமைத்துவத்தை வழங்குவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் முதலமைச்சரானவுடன் அவர் இனவாதத்தைக் கையில் எடுத்ததுடன், வடக்கு மக்களுக்காக எதனையும் செய்யவில்லை.

வடக்கு மாகாணத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதியையேனும் அவர்கள் முழுமையாகச் செலவழிக்கவில்லை. அவ்வாறாயின் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்பதே அர்த்தமாகும். எனவே வடக்கு முதலவர் பதவிக்குச் செயற்திறனுடைய ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும் - என்றார். (த)

# ஞானசார தேரர் அரச தலைவரானால் பௌத்தரின் பிரச்சினைக்குத் தீர்வுகிட்டும்

## இப்படி சொல்கிறார் டிலாந்த வித்தானகே

ஞானசார தேரர் 2020 ஆம் ஆண்டு அரச தலைவரானால் மாத்திரமே சிங்கள பௌத்தர்களின் பிரச்சினைகள் தீரும் என்ற எண்ணப்பாட்டை சிங்களமக்கள் கொண்டுள்ளனர் என்று பொது பலசேனா அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரான டிலாந்த வித்தானகே தெரிவித்தார்.

பொதுபலசேனா அமைப்பின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன் தினம் அந்த அமைப்பின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"ஞானசார தேரரை அரசுதான் ஒளித்து வைத்துள்ளது என முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார். எனவே, இடம், பொருள் அறிந்து பேசுமாறு அவரிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

ஞானசாரதேரர் ஓடி ஒளியவில்லை. இதற்கு முன்னர் அவர் நீதிமன்றத்திலும் முன்னிலையாகியுள்ளார். பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டபலர் இன்று சுதந்திரமாக சுற்றித்திரிகின்றனர். எனவே, ஞானசார தேரர் மீது மட்டும் ஏன் சிறப்புக் கெடுபிடி? தற்போதுள்ள அரசியல்வாதிகள் அனைவரும் 2020 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள அரச தலைவர் தேர்தல்பற்றித்தான் யோசிக்கின்றனர். முஸ்லிம் வாக்குகளை எப்படிப் பெறலாம் என்பதே அவர்களின் இலக்காக இருக்கின்றது. மகிந்த அணியாக இருக்கட்டும், ரணில் அணியாக இருக்கட்டும் இருதரப்பினருமே முஸ்லிம் வாக்குகளைக் குறிவைத்துத் தான் செயற்படுகின்றனர். சம்பிக்க மீதும் எமக்கு நம்பிக்கை இல்லை.

எனவே, 2020ஆம் ஆண்டு ஞானசார தேரர் அரச தலைவரானால் தான் சிங்கள. பௌத்தர்களின் பிரச்சினைகள் தீரும் என சிங்களமக்கள்நினைக்கின்றனர். அந்தநிலைமைக்கு எம்மைத் தள்ளிவிட வேண்டாம் என ஆட்சியாளர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்" - என்றார். (த)


5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
10.05.1952

மறைவு
18.06.2012

அமரர் கணவதிப்பிள்ளை செல்வநாயகம்

ஊன் இன்றி உறவின்றி உடல் வேறு உயிர் வேறானதோ
எம் உயிரான உமை நினைத்து உருகிய நாள்களும் தானோ

பார்வை இழந்தனோ இல்லை - உமை பாரா நிலமை எமக்கு வந்ததோ
கண்ணிருந்தும் கடவுள் உமை காண வரம் கொடுக்கலயே

உம் குரல் கேளாது இங்கு நாம் அனைவரும்
குரலடைத்து போனோம் - ஐயா
என்னுயிரான உமை இழந்து - வாழ்வில்
இன்ப மின்றி தவிக்கின்றோம்

ஆறாததுயருடன் ஐந்து ஆண்டுகள் நகர்ந்தன - ஐயா
இந்த ஐந்தாண்டு நினைவஞ்சலிக்கு
ஆண்டவர் மடியில் அன்புத் துகள்களை
மலர்சாந்தியாக செலுத்துகின்றோம்.

கீரி
மன்னார்.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
மனைவி,பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள் (நோர்வே)



மரண அறிவித்தல்

பிறப்பு
23 . 05 . 1942



இறப்பு
15 . 06 . 2017

திருமதி சரஸ்வதி கந்தசாமி

பாடசாலை வீதி, வியாபாரிமூலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி கந்தசாமி 15.06.2017 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், கந்தசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற விக்கினேஸ்வரன் மற்றும் மல்லிகாதேவி, விக்கினேஸ்வரி (ஜேர்மனி), விஜயகுமார் (லண்டன்), செல்வக்குமார் (தொழில்நுட்ப உதவியாளர், பிரதேச செயலகம், பச்சிலைப்பள்ளி) ஆகியோரின் அன்புத் தாயாரும், இரத்தினசபாபதி, கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜயகுமாரன், பிரபாகரன் (ஜேர்மனி), ஜெயசோதி, ஜம்சனா ஆகியோரின் அன்பு மாமியாரும், ரகுராம், சிவகௌரி, ஜனனி, ரஜிதா, ரஞ்சிதா, நிசாந்தன், ஜிந்துசன், சாலினி, பிரதிகா, ஷஜீவன், பிரவீனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று உடலம் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை வீதி,
வியாபாரிமூலை.

தகவல்:
குடும்பத்தினர்.

077 850 7930



மரண அறிவித்தல்



சின்னத்தம்பி (சிவசம்பு)
சுதாகர்

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மன் ஹம்பேர்க்ஐ வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி (சிவசம்பு) சுதாகர் 16.06.2017 வெள்ளிக்கிழமை நாவற்குழியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சண்முகம்பிள்ளை - கண்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற யோகேஸ்வரியின் ஆருயிர்க் கணவரும், சுவேதா, சுபன் (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தந்தையும், அனாசுயனின் (ஜேர்மனி) அன்பு மாமனாரும், சேகர் (வன்கூவர்), சுதாமதி (பிரான்ஸ்), ஜெயமதி (வன்கூவர்), சுகுமார்(Toronto) ஆகியோரின் அன்புச் சகோதரரும், யோகராணி, சேத்திரகுமார், நிரூபாகரன், அனுஷியா, நாகராஜா, சுரேந்திரநாதன், நல்லைநாதன், நிர்மலாதேவி, விமலாதேவி, பரமேஸ்வரி, சோமாதேவி, கோபிகாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.06.2017 செவ்வாய்க் கிழமை கேரதீவு வீதியில் அமைந்துள்ள அவர்களது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் நாவற்குழி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேரதீவு வீதி,
நாவற்குழி.

தகவல்:
குடும்பத்தினர்.

077 757 0211


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 ஆவது திருக்குறள் மாநாடு கிளிநொச்சியில் ஆரம்பம்



கிளிநொச்சி,ஜூன் 18

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் 15 ஆவது திருக்குறள் மாநாட்டின் முதல் நாள் நிகழ்வுகள் கிளிநொச்சி மாவட்ட கூட்டுற வா ளர் மண்டபத்தில் நேற்று சனிக்கிழமை ஆரம்பமானது. நிகழ்வில் கிளிநொச்சி மகா தேவா சிறுவர் இல்ல மாணவர்களின் வர வேற்பு நடனமும், பளை மத்திய கல்லூரி மாணவர்களின் குறள் இசையும், கிளி நொச்சி மத்திய கல்லூரி மாணவர்களின் ஊரக ஆடலும், முரசுமோட்டை முரு கானந் தாக் கல்லூரி மாணவர்களின் சங்கப் பாட லும் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் திருவள்ளுவர் உருவப் படம் கிளிநொச்சி மகா வித்தியா லயத்திலிருந்து கரைச்சி பிரதேச சபை வளா கத்துக்கு ஊர்வலமாக எடுத்து வரப்பட்டுச் சிலைத் திறப்பு விழாவும் இடம்பெற்றது. உலக தமிழ் சங்கத்தின் ஏற்பாட்டில் வடக்குக் கிழக்கில் திருவள்ளுவர் சிலைகள் 16 திறந்து வைக்கும் திட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத் தில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது. நிகழ்வில் இந்தியாவிலிருந்து உலக தமிழ் சங்க பிரதிநிதிகள் வருகை தந் திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-6)

# மன்னிப்புக் கோரினார் ஜோன்

கொழும்பு, ஜூன் 18

போபிட்டிய பகுதியில் குப்பை கொட்டுவது தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடக வியலாளர் ஒருவரைத் தகாத வார்த்தைக ளால் திட்டியமைக்காக அமைச்சர் ஜோன் அமரதுங்க மன்னிப்புக் கோரியுள்ளார்.

சிறிகொத்த தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் மன்னிப்புக் கோரினார்.

கடந்த 8 ஆம் திகதி முத்துராஜவல பிரதேசத் தில் குப்பை கொட்டுவது தொடர்பில், அமைச் சர் ஜோன் அமரதுங்கவால் கந்தானையி லுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் காரியால யத்தில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப் பில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலா ளரை அமைச்சர் ஜோன் அமரதுங்க தகாத வார்த்தைகளால் கடுமையாகத் திட்டியதா கத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த விவகாரத்துக்குப் பலரும் அதிருப்தி தெரிவித்ததோடு, இந்தச் சம்பவம் மனித உரிமைகள் ஆணைக்குழு வரை சென்றது. இந்த நிலையில் குறித்த விவகாரத்துக்கு அமைச்சர் தற்போது மன்னிப்புக் கோரியுள் ளார்.

(த)

PEOPLE'S BANK

## தங்க நகை ஏலவிற்பனை அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.05.2016 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் - 08.07.2017 (சனிக்கிழமை), 09.07.2017 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய திகதிகளில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதி கிளையில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் | நகை மீளெடுப்பதற்கான இறுதித் திகதி | ஏல விற்பனை நடைபெறும் இடமும் திகதியும் |
|---|---|---|---|
| யாழ்.ஸ்ரான்லி வீதி | கொக்குவில் (நாவலர் வீதி) | 07.07.2017 | 08.07.2017 (சனிக்கிழமை) 09.07.2017 (ஞாயிற்றுக்கிழமை) யாழ். ஸ்ரான்லி வீதி கிளை |
| | மானிப்பாய் | | |
| காங்கேசன்துறை | மல்லாகம் | | |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் | | |
| ஊர்காவற்றுறை | | | |
| நெல்லியடி | | | |
| அச்சுவேலி | புத்தூர் | | |
| சங்கானை | பண்டத்தரிப்பு | | |
| சுன்னாகம் | கோப்பாய் | | |
| | அளவெட்டி | | |
| சாவகச்சேரி | கொடிகாமம் | | |
| | கைதடி | | |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி | | |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி | | |
| | கல்வியங்காடு | | |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் | | |
| பருத்தித்துறை | புலோலி | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையகம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல :- 021 222 2601 / 021 222 8602
தொலை.நகல் :- 021 222 2602

அருந்ததி
இணைய திருமண சேவை
Arunthathee Online Matrimony
simplifying your marriage

### மணமகன் விபரம்

**6517 | வே | 1986**
யாழ்ப்பாணம்| 180 cm
Lecturer| இலங்கை | இந்து
திருவாதிரை (மிதுனம்) |கி.பா: 35

**6861 | வே |1985**
பருத்தித்துறை| 179 cm |சூ +செ:11
Software Developer| இலண்டன்
உத்தரம் (கன்னி) |கி.பா: 50

**8048 | வே |1983**
யாழ்நகரம் | 182 cm | இந்து
Doctor| இலங்கை | சூ + செ: 07
திருவாதிரை (மிதுனம்) |கி.பா: 40

**6666 | வே |1979**
கொக்குவில் | 184 cm |இந்து
Lawyer| அமெரிக்கா | சூ + செ: 09
சித்திரை (கன்னி) |கி.பா: 16

**7545| வே |1981**
ஊர்காவற்துறை | 155 cm |இந்து
Engineer| கனடா | சூ + செ: 09
உத்தரம் (கன்னி)|கி.பா: 11

**6361| வே |1986**
வேலணை | 170 cm |இந்து
Software Engineer | கனடா| செ:07
பூரட்டாதி (கும்பம்) |கி.பா: 30

**7488| வே |1981**
யாழ்நகரம் | 182 cm |இந்து
Lawyer| இலங்கை | சூ + செ: 06
கேட்டை (விருச்சிகம்)|கி.பா: 08

**7311 | வே | 1981**
மீசாலை | 158 cm | இந்து
Civil Engineer |அவுஸ்திரேலியா
ரோகிணி (ரிஷபம்) |கி.பா: 22

**4807 | வே |1983**
யாழ்நகரம்| 157 cm | இந்து
Doctor| இலங்கை | செ:12
ரேவதி (மீனம்) |கி.பா: 22

**4810| வே |1982**
நல்லூர் | 165 cm | இந்து
Doctor| இலங்கை |சைவம்
சுவாதி (துலாம்)|கி.பா: 39

**6906 | வே |1988**
சண்டிலிப்பாய் | 170 cm |இந்து
Software Engineer| இலங்கை
உத்தராடம் (மகரம்)|கி.பா: 32

**6789| வே |1988**
காரைநகர் | 176 cm |இந்து
Engineer| இலங்கை | செ: 01
உத்திரட்டாதி (மீனம்) |கி.பா: 54

**7861| வே |1987**
புங்குடுதீவு | 177 cm |இந்து
Lecturer | இலங்கை| சூ + செ: 10
அவிட்டம் (மகரம்)|கி.பா: 13

**6620| வே |1984**
இளவாலை| 176 cm |இந்து
Electronics Design Engineer|
இலங்கை | செ: 04
அவிட்டம் (மகரம்) |கி.பா: 31

### மணமகள் விபரம்

**7083| வே | 1981**
காரைநகர் | 165 cm | இந்து
Software Engineer |இலண்டன்
திருவோணம் (மகரம்) |கி.பா: 50

**5722 | வே |1984**
உரும்பிராய் | 153 cm | இந்து
Doctor| இலங்கை | செ: 08
புனர்பூசம் (மிதுனம்) |கி.பா: 44

**4708| வே |1987**
பண்டத்தரிப்பு | 165 cm | இந்து
Doctor| இலங்கை | சூ + செ: 05
கேட்டை (விருச்சிகம்) |கி.பா: 28

**7095 | வே |1981**
சண்டிலிப்பாய் | 159 cm |இந்து
Senior Lecturer| இலங்கை
பூராடம் (தனுசு)|கி.பா: 28

**5186| வே |1989**
நல்லூர் | 160 cm |இந்து
Lecturer | இலங்கை | செ: 04
கேட்டை (விருச்சிகம்) |கி.பா: 25

**7101| வே |1987**
யாழ்நகரம் | 173 cm |இந்து
Chemical Engineer| அவுஸ்திரேலியா
உத்தரம் (சிம்மம்)|கி.பா: 18| செ: 08

**7618| வே |1989**
இணுவில்| 158 cm |இந்து
Doctor| இலங்கை | செ: 05
விசாகம் (விருச்சிகம்)|கி.பா: 27

**6657| வே | 1982**
கோப்பாய்| 158 cm | இந்து
Doctor |இலங்கை | செ: 08
மகம் (சிம்மம்) |கி.பா: 05

**6170 | வே |1979**
யாழ்நகரம | 163 cm | இந்து
Lecturer| இலங்கை | செ: 10
பூரட்டாதி (கும்பம்) |கி.பா: 78

**4008| வே |1982**
கொக்குவில் | 165 cm | இந்து
Student| ஜேர்மனி | செ: 02
அனுஷம் (விருச்சிகம்) |கி.பா: 56

**6370 | வே |1975**
நெல்லியடி | 157 cm |இந்து
Lecturer| இலங்கை
அனுஷம் (விருச்சிகம்) |கி.பா: 43

**4864| வே |1978**
புங்குடுதீவு| 154 cm |இந்து
Doctor| இலங்கை | செ: 02
சதயம் (கும்பம்)|கி.பா: 19

**6388 | வே |1989**
அள்ளரை | 152 cm |இந்து
Researcher| இலங்கை|சூ + செ: 08
புனர்பூசம் (மிதுனம்)|கி.பா: 35

**7509| வே |1988**
யாழ்ப்பாணம| 171 cm |இந்து
Doctor| நோர்வே
சித்திரை (துலாம்)

480/2C, காலி வீதி, வெள்ளவத்தை
011 40 63 282

20, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
021 49 27 527

www.arunthathee.com
info@arunthathee.com
0777 16 45 24
Viber, Whatsapp

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பைகளைச் சேகரிக்க மாநகரில் 7 நிலையங்கள்

## மாநகர சபையினர் கூறுகின்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 18
குப்பைகளைத் தரம் பிரித்துச் சேகரிக்கக்கூடிய 7 சேகரிப்பு மையங்களை யாழ்ப்பாணத்தில் திறந்து வைப்பதற்கு யாழ்ப்பாண மாநகர சபை திட்டமிட்டுள்ளது என்று யாழ்ப் பாண மாநகர சபையின் தகவல் வழங்கும் உத்தியோகத்தர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, "குப்பைகளை தரம் பிரித்து சேகரிப்பதால் மீள் சுழற்சிக்கு உட்படுத்த முடியும். அதனால் இந்த சேகரிப்பு மையங்களை நிறுவவுள்ளோம். முதற்கட்டமாக தற்போது பாசையூர், சங்கிலியன் வீதி, குருநகர் ஆகிய பிரதேசங்களில் இந்த சேகரிப்பு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்தச் சேகரிப்பு நிலையங்களுக்கு அண்மையில் உள்ள பிரதேச மக்கள் குப்பைகளைத் தரம் பிரித்துப் போடுவதன் மூலமாகச் சுற்றாடலைத் தூய்மையாக வைத்திருக்க முடியும். இதன் முதற்கட்டமாக சங்கிலியன் வீதியில் உள்ள சேகரிப்பு நிலையம் தற்பொழுது திறந்துவைக்கப்பட்டுள்ளது" - என்றார்.

(4,21,ரி)

இலங்கையில் முதல் தடவையாக
பெண்களுக்குப் பொருத்தமான
பாட நெறிகளைக் கொண்ட அழகுக்கலைக்கல்லூரி
பயிற்சிகள் + சேவைகள்
British College of Beauty Studies ஒளி அழகன் ஸ்ருடியோ
இணைந்து வழங்கும் ஒரு நாள் பயிற்சி வகுப்பு
One Day Tailoring Course
Subjects : Saree blouse, Skirt, Pijama
சாரி பிளவுஸ், பாவாடை, பியாமா போன்றவையை
ஒரு நாளில் வெட்டி தைப்பதற்கு பயிற்சியளிக்க
தீர்மானித்துள்ளோம்.
மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவர்.
வயதெல்லை கிடையாது
பெண்களே இது உங்களுக்கு மட்டுமான கல்லூரி.
British College of Beauty Studies
கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.
(உதயன் பணிமனை அருகில்) (076 7011 645)

## மரண அறிவித்தல்

### பரமநாதன் நித்தியானந்தன் (மெக்கானிக்)



யாழ். சரவணை மேற்கு, காளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வண்ணார் பண்ணை பத்திரகாளி கோயிலடியை வதிவிட மாகவும் கொண்ட பரமநாதன் நித்தியானந்தன் (மெக்கானிக்) நேற்று (17.06.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், . உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

63, பத்திரகாளி கோயிலடி,
வண்ணார்பண்ணை. 077 660 7596

தகவல் :
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



வேலணை மேற்கு
8 ஆம் வட்டாரத்தைப்
பிறப்பிடமாகவும்,
கனடாவை
வசிப்பிடமாகவும்
கொண்ட
**சுப்பையா
தர்மலிங்கம்**

அவர்கள் (14.06.2017) புதன்கிழமை காலமானார்.
அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வேலணை மேற்கு முடிப்பிள்ளையாரை வேண்டி நிற்கின்றோம்.
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**சகோதரி - திருமதி நாகரெத்தினம் இராசலெட்சுமி
குடும்பத்தினர்
சகோதரர் - கதிரவேலு (சாமியார்) முருகண்டிகடை
வேலணை மேற்கு, வேலணை - 08**

# பன்னாட்டு யோகா தின நிகழ்வுகள் சுதந்திர சதுக்க வளாகத்தில் நேற்று



கொழும்பு,ஜூன் 18
பன்னாட்டு யோகா தின நிகழ்வுகள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் கொழும்பு சுதந்திரச் சதுக்க வளாகத்தில் நேற்று நடைபெற்றன. இதன்போது இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி ஸ்கைப் தொழில்நுட்பத்தின் ஊடாக இணைந்து கொண்டு பன்னாட்டு யோகா தினத்துக்கான வாழ்த்துக்களை அரச தலைவருக்குத் தெரிவித்தார். இந்திய அரசின் அனுசரணையில் இந்திய தூதரகர் அலுவலகத்தால் பன்னாட்டு யோகா தின நிகழ்வுகள் மூன்றாவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

நிகழ்வில் தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாரச்சி, இந்திய உயர் ஸ்தானிகர் தரஞ்சித் சிங் சந்து உள்ளிட்ட குழுவினர் கலந்து கொண்டனர். (ஐ)

# வாள்வெட்டுக் குழு அடாவடி குப்பிளானில் மக்கள் அச்சம்

யாழ்ப்பாணம், ஜூன் 18
புன்னாலைக்கட்டுவன் குப்பிளான் தெற்கில் நேற்றிரவு நுழைந்த வாள் வெட்டுக் குழுவினரை கிராமத்தவர்கள் துரத்தினர். எனினும் அவர்கள் மறைந்து நின்று மீண்டும் தாக்க முற்பட்டதால் அங்குள்ள மக்கள் பொது இடத்தில் கூடி நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றிரவு 4 பேர் வாள்களுடன் குப்பிளான் தெற்கு அறிவொளி சனசமூக நிலையத்தை அண்மித்து ராஜப்பர் சேர்ச் பகுதியில் நுழைந்தபோது ஊரவர்கள் அவர்களைப் பிடிக்க முற்பட்டனர். ஆனால் அவர்கள் தப்பியோடி விட்டனர். ஆனால் அங்குள்ள தோட்டக்காணிகளுக்குள் அவர்கள் மறைந்திருக்கலாம் என்று மக்கள் சந்தேகம் தெரிவித்தனர். நாய்கள் தோட்டப் பகுதியை நோக்கி மணித்தியாலக் கணக்கில் குரைத்தவாறு இருந்தன. பொதுமக்கள் அச்சம் காரணமாகக் குறித்த சனசமூக நிலையத்தில் நேற்றிரவு ஒன்றுகூடியிருந்தனர். வீடுகளுக்குச் செல்ல அவர்கள் அச்சமடைந்திருந்தனர். வீடுகளுக்குள் வாள் வெட்டுக் குழு மறைந்திருக்கக்கூடும் என்றும் அவர் கள் அச்சம் தெரிவித்தனர்.

பின்னர் சுன்னாகம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அங்கு சென்ற பொலிஸார் விசாரணை நடத்தினர். பொலிஸாரிடம் எவரும் அகப்படவில்லை. பின்னர் பொலிஸார் திரும்பிச் சென்றுவிட்டனர்.

2 வாரங்களுக்கு முன்னர் அங்கு ஏற்பட்ட முறுகல் நிலையால் வாள் வெட்டுக்குழுக்கள் புகுந்து வாள் வெட்டு நடத்தியது. அதில் 3 பேர் படுகாயமடைந்திருந்தனர். இந்தக் குற்றச்சாட்டில் 2 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ளனர் என்றும் கூறப்பட்டது. (4)

## இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜூன் 18
புற்றுநோயை தடுக்கும் சங்கம் மற்றும் வடக்கு மாகாணத்துக்கு உதவுதல் என்னும் நிறுவனத்தால் நடத்தப்படும் இசை கண்காட்சி இன்று மாலை 5.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் அரிமா பேராசிரியர் இரத்தினம் விக்கினேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 18
"தமிழ்த் தேசிய அரசியலும் வடமாகாணசபையும்" எனும் தொனிப்பொருளில் கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். டி.எம்.ஐ. கல்வி நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது. ஏ.சி.ஜோர்ச் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் ஆரம்ப உரையை சொ.சிவபாலன் ஆற்றுவார் என சர்வதேச மார்க்சிய குழு தெரிவித்துள்ளது.

(ஐ)

## கணபதி ஹோமம்

தென்மராட்சி, ஜூன் 18
நாட்டில் அமைதியும் சமாதானமும் வேண்டி அல்லாரை அறுகம்புலம் மகா கணபதிப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு கணபதி ஹோமம் இடம்பெறும்.

(ஐ-9)

# வளர்ப்பு நாய்களுக்கு நாளை முதல் விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம்,ஜூன் 18
யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்த நாவாந்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது என்று யாழ்ப்பாண மாநகர சபை சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்தார்.

அதற்கமைவாக நாளை திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை பழம் வீதி ஆறுகால் மடத்திலும், முற்பகல் 11 மணியில் இருந்து பிற்பகல் 1 மணி வரை சனசமூக நிலையம் ஆறுகால் மடத்திலும், பிற்பகல் 2.30 மணியிலிருந்து மாலை 4 மணிவரை செழியன் வீதியிலும், நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை புதிய குடியிருப்பு சனசமூக நிலையத்திலும், முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணிவரை அராலி வீதி மானிப்பாய் ஓட்டுமடத்திலும், பிற்பகல் 2.30 மணிதொடக்கம் மாலை 4 மணிவரை ஆர்.சி. பாடசாலையடி நாவலர் வீதியிலும் ஊசியேற்றல் இடம்பெறும்.

எதிர்வரும் 21ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிதொடக்கம் முற்பகல் 11 மணிவரை ஆசாத் வீதியிலும், முற்பகல் 11 மணிதொடக்கம் பிற்பகல் 1 மணி வரை 1ஆம், 2ஆம், 3ஆம் குறுக்குத் தெரு நாவலர் வீதியிலும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை சேமக்காலை வீதி கெனடி வீதியிலும், மறுநாள் 22ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிதொடக்கம் மு.ப 11 மணிவரை தபாற்கந்தோர் வீதி நாவலர் வீதி நாவாந்துறையிலும், முற்பகல் 11 மணிதொடக்கம் பிற்பகல் 1 மணிவரை சனசமூக நிலையம் வசந்தபுரத்திலும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை சனசமூகநிலையம் நித்திய ஒளியிலும் ஊசியேற்றல் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிதொடக்கம் முற்பகல் 11 மணி வரை சனசமூக நிலையம் சூரிய ஒளியிலும், முற்பகல் 11 மணிதொடக்கம் பிற்பகல் 1 மணிவரை சனசமூக நிலையம் சென்நிக்கிலஸிலும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை கோவில் ஒழுங்கை நாவாந்துறையிலும், தொடர்ந்து எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை காதி அபூபக்கர் வீதி நாவாந்துறையிலும், முற்பகல் 11 மணிதொடக்கம் பிற்பகல் 1 மணிவரை சனசமூக நிலையம் கண்ணாபுரத்திலும், பிற்பகல் 2.30 தொடக்கம் மாலை 4 மணிவரை 1ஆம், 2ஆம், 3ஆம் குறுக்கு கண்ணாபுரம் சோலைபுரத்திலும் ஊசியேற்றல் இடம்பெறும்.

எதிர்வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை காலை9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை கற்குளம் நாவாந்துறை வெள்ளாந்தெரு நாவாந்துறையிலும், முற்பகல் 11 மணிதொடக்கம் பிற்பகல் 1 மணிவரை சிவன் பண்ணை சீனிவாசகம் வீதி சந்தியிலும், பிற்பகல் 2.30 தொடக்கம் மாலை 4 மணிவரை கோணாந்தோட்டத்திலும், எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அனைத்துப் பகுதிகளிலும் ஊசியேற்றல் நடைபெறும்.

வளர்ப்பு நாய்களுக்கான உரிமைக் கட்டணமாக ரூபா 30 ஐச் செலுத்தி ஊசியை ஏற்றிக் கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்நடை உற்பத்திகள் யாழில் அதிகரிப்பு

*பண்ணைப் பயிற்சிதான் காரணம் எனக் கூறுகிறார் திணைக்களப் பணிப்பாளர்*

யாழ்ப்பாணம், ஜூன் 18
யாழ்ப்பாண மாவட்டத்தில் கால்நடைகளை வைத்திருக்கும் பண்ணையாளர்களுக்கு உதவித் திட்டங்கள் மற்றும் கால்நடை வளர்ப்புச் சார்ந்த பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதால், கால்நடை சார் உற்பத்திகள் கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் இந்த முறை அதிகளவாக இடம் பெற்றுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

இது தொடர்பில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் வக்சலா அமிர்தலிங்கம் தெரிவித்ததாவது,

கால்நடை சார்ந்த உற்பத்திகளான பால், முட்டை, இறைச்சி போன்ற உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றில் அதிகளவான உற்பத்தியாக பால் உற்பத்தி முன்னிலை வகிக்கின்றது.

யாழ்ப்பாணம், நல்லூர், சாவகச்சேரி, கோப்பாய், கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி, தெல்லிப்பளை, சண்டிலிப்பாய், வட்டுக்கோட்டை, வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர் ஆகிய பிரதேச செயலங்களின் கீழ் இவ்வாறு பால் உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றன.

2014 ஆம் ஆண்டு ஒரு கோடியே 2 லட்சத்து 14 ஆயிரத்து 642 லீற்றர் பால் உற்பத்தியும், 2015 ஆம் ஆண்டு ஒரு கோடியே 59 லட்சத்து 4 ஆயிரத்து 351 லீற்றர் பால் உற்பத்தியும், 2016 ஆம் ஆண்டு ஒரு கோடியே 59 லட்சத்து 8 ஆயிரத்து 482 லீற்றர் பால் உற்பத்தியும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஒப்பீட்டு ரீதியாக கடந்த வருடம் அதிகளவான லீற்றர் பால் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டிருந்ததாக திணைக்கள புள்ளி விவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

பாற் பண்ணையாளர்களுக்கான உரிய நிதி உதவிகள், உற்பத்தி சார்ந்த பயிற்சி நெறிகள், போன்றவை வழங்கப்பட்டதன் காரணமாக குறித்த உற்பத்தி அதிகளவு வளர்ச்சி கண்டுள்ளது. ஏனைய கால்நடைப் பண்ணையாளர்களுக்கான பயிற்சி முகாம் மற்றும் மருத்துவ முகாம் என்பவை நடப்பு ஆண்டில் அதிகமாக ஏற்பாடு செய்யப்படவுள்ளதால் எதிர்காலத்தில் கால்நடை சார்ந்த உற்பத்திகள் மேலும் அதிகரிக்கும்"என்றார். (4-21-ரி)

# எங்கள் வாழ்வாதாரத்தை நாமே முன்னெடுப்பதற்கு சாரதிப் பத்திரம் வேண்டும்

## பெற்றுத்தருமாறு வலியுறுத்துகின்றனர் வடக்கு மாகாண மாற்று வலுவுடையோர்

யாழ்ப்பாணம், ஜூன் 18
வாகனங்களைச் செலுத்தத் தகுதியிருந்தும், மாற்று வலுவுடையவர்கள் என்ற ஒரே காரணத்தினால் நாம் சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதில் பெருஞ் சிரமங்களை எதிர்கொள்கின்றோம். சாரதியப் பத்திரம் இருந்தால் எமது வாழ்வாதாரத்தை நாமே முன்கொண்டு நகர்த்த முடியும். எனவே எமக்கு வாகனச் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுத்தருவதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாற்று வலுவுடையவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது,
"கடந்த காலங்களில் இடம் பெற்ற உள்நாட்டுப் போர் காரணமாக பொதுமக்கள், முன்னாள் போராளிகள் எனப் பலர் மாற்றுவலுவுடையவர்களாக்கப்பட்டனர். இதனால் அவர்கள் தங்களுக்கான வாழ்வாதாரத்தைப் பெற்றுக் கொள்வதற்குச் சிரமப்படுகின்றனர். வாகனங்களைச் செலுத்தி அதன் மூலமாகக் கிடைக்கும் வருமானத்தில் வாழ்கை நடத்துவது மாற்றுத் திறனாளிகளுக்கு இலகுவானதாகக் கருதப்படுகின்றது.

எனவே சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடிய மாற்று வலுவுள்ளவர்களைத் தெரிந்தெடுத்து அவர்களுக்கான சாரதி அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொடுக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போதைய சூழ்நிலையில் மாற்று வலுவுள்ளோரில் அநேகமானோர் சாரதி அனுமதிப்பத்திரம் பெறக்கூடிய நிலையில் உள்ளனர். சாரதி அனுமதிப்பத்திரம் இல்லை என்ற ஒரே காரத்துக்காக முன்னாள் போராளிகள் உட்பட மாற்றுத்திறனாளிகள் பலர் பல வேலை வாய்ப்பை இழக்கின்றனர். இதனால் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. இதற்குத் தீர்வு பெற்றுக்கொடுக்கும் வகையில் மாற்றுவலுவுடையோரில் ஓரளவுக்கு இயலுமானவர்களை இனங்கண்டு அவர்களுக்கு ஊந்துருளி மற்றும் முச்சக்கர வண்டி வாகனங்களுக்கான சாரதி அனுமதிப்பதிரன்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். அதன் மூலமாக நாங்கள் எங்களது வாழ்வாதாரத்தை முன்னேற்றமுடியும்" என்று மாற்றுவலுவுள்ள பலரும் கோருகின்றனர்.

"வாகனங்களைச் செலுத்த உரிய தகுதிகளைக் கொண்ட மாற்று வலுவுடையவர்களுக்காகச் சாரதி அனுமதிப் பத்திரங்கள் பெற்றுக்கொடுக்கவேண்டும்என்றுவடக்கு மாகாண சபையில் பிரேரணை ஒன்று உறுப்பினர் து.ரவிகரனால் கொண்டுவரப்பட்டு நிறை வேற்றப்பட்டது. அதன் அடிப்படையில் நாம் மாற்று வலுவுடையவர்களுக்கு எவ்வாறான வழியில் சாரதி அனுமதிப்பத்திரத்தை வழங்க முடியும் என்று ஆராய்ந்தோம். அதற்கான முயற்சிகளையும் எடுத்தோம். அதன் பயனாக தற்பொழுது வாகன சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் மாற்று வலுவுடையவர்களின் மருத்துவச் சான்றிதழ்கள் வடக்கு மாகாணத்தில் காணப்படுகின்ற மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகளால் ஆராயப்பட்டு அவர்களின் பரிந்துரைகளுக்கு அமைய சாரதி அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்ள கொழும்பு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப் படுகின்றனர். இந்த முறைமையை எமது மாகாணத்தில் செய்வதற்கான வசதி வாய்ப்புக்கள் இல்லாமையினாலேயே கொழும்புக்கு சென்று சாரதி அனுமதிப்பத்திரத்தை பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது" என்று வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் சட்டத்தரணி பா. டெனிஸ்வரன் தெரிவித்தார். (4-21-8)



# முறிப்புக் குளத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு மரங்கள் அடியுடன் சாய்ந்து அழியும் நிலை

## உரிய நடவடிக்கையை விரைவுபடுத்தக் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 18
கிளிநொச்சி முறிப்பு குளத்தில் திட்டமிடப்படாத வகையில் சட்டவிரோதமாக பெருமளவில் மண் அகழ்வு இடம்பெற்று வருகிறது. அதனைத் தடுத்து நிறுத்த எவரும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. இத்தகைய நடவடிக்கை ஆபத்தான நிலையை ஏற்படுத்தவுள்ளது. இதனை உடனடியாகத் தடுத்து நிறுத்துங்கள். இவ்வாறு குறித்த குளத்தின் சுற்றாடலில் உள்ள மக்களும் விவசாயி களும் கவலை தெரிவிக்கின்ற னர்.

கிளிநொச்சி முறிப்பு குளத்தில் திட்டமிடப்படாத வகையில் பெருமளவில் மண் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. குறித்த குளத்திலிருந்து சட்ட விரோதமாக மண் அகழ்வு இடம்பெற்றுள்ளமையால், அந்தக் குளத்தில் உள்ள தாவரங்கள் அழிவடையும் நிலையிலுள்ளன என்று பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். பெரிய மரங்களை அண்டிய பகுதியில் மிக மோசமாக மண் அகழப்பட்டுள்ளன. அது இன்னமும் தொடர்கிறது.

மணல் அகழ்வினால் அதனைச் சுற்றியுள்ள பனைகள் உட்பட மரங்கள் வேருடன் சாய்ந்து அழியும் நிலையும் ஏற்பட்டுள்ளது. அவை நீண்ட காலங்களுக்கு நிலைத்திருக்கமுடியாதவாறு திட்டமிட்டு அழிவு ஏற்படுத்தப்படுகிறது. இவ்வாறு சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படும் மண் அகழ்வைத் தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

"இந்த மண் அகழ்வு தொடர்பாக பிரதேச செயலாளருடன் தொடர்பு கொண்டு கேட்டுக் கொள்ளுங்கள்" என்று கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் தெரிவிக்கின்றனர்.

"இது தொடர்பிலான முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது. அது தொடர்பாக நேரடியாக சென்று பார்வையிட்டு நடவடிக்கை எடுக்கப்படும்" என்று கரைச்சி பிரதேச செயலாளர் ஜி.நாகேஸ்வரன் தெரிவித்தார். (4-6)

## முல்லையில் அழிவடையும் நிலையிலுள்ள

# வாவெட்டீஸ்வரர் ஆலயத்தை உடனடியாகச் சீரமையுங்கள்

## ஆலய நிர்வாகத்தினர் வடக்கு முதல்வருக்கு மனு

முல்லைத்தீவு, ஜூன். 18
வரலாறுகள் மறைக்கப்பட்டு அழிவடையும் நிலையில் உள்ள வாவெட்டீஸ்வரர் ஆலயத்தின் சிறப்புக்களையும், தமிழ் மக்களின் வரலாற்றையும் காப்பதற்கு வாவெட்டீஸ்வரர் ஆலயத்தின் சீரமைப்பு மிக முக்கியமானது. அதற்குரிய நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுங்கள்

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சருக்கு ஆலய நிர்வாகத்தினரால் மனு ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

**ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய ஆனி மாத உற்சவ காலத்தில் 13ஆம் திருவிழா வேட்டைத் திருவிழா. சுவாமி வேடுவர் வேடம் தரித்து அடிய வர்கள் புடைசூழ வாவெட்டீஸ்வரர் ஆலய சூழலில் வேட்டையாடும் நிகழ்வு இடம்பெற்று வந்துள் ளது.**

"வாவெட்டீஸ்வரர் ஆலயம் இலங்கை முன்னைய அரசன் இராவணேஸ்வரன் காலத்திலிருந்து நன்கு பராமரிக்கப்பட்டு வழிபாடு இயற்றப்பட்டுவந்த இடம். இது ஆய்வாளர்கள் கண்ணில் சிக்காமல் இருந்ததில்லை. வாவெட்டீஸ்வரர் ஆலய சூழல் தமிழ் மன்னர்களின் இராசதானியாக விளங்கிய துடன் சங்கிலிய மன்னன் இப்பிரதேசத்துக்கு வந்து போது வாவெட்டீஸ்வரர் ஆலயச் சூழலில் இறை வனை வழிபட்டுத் தங்கிச் சென்றமையும் வரலாற்றில் பதியப்பட்டுள்ளது. வாவெட்டீஸ்வரன் மலை உச்சியில் ஒரு பீடமும் கொடிமரமும் இருந்தமையை இன்றும் காணக்கிடைக்கின்றது. மலை அடிவாரத்தில் [illegible] கட்டப்பட்ட திருக்குளமும் அழிவடைந்த நிலையில் காணக்கிடைக்கின்றது.

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய ஆனி மாத உற்சவ காலத்தில் 13ஆம் திருவிழா வேட்டைத் திருவிழா. சுவாமி வேடுவர் வேடம் தரித்து அடியவர்கள் புடைசூழ வாவெட்டீஸ்வரர் ஆலய சூழலில் வேட்டையாடும் நிகழ்வு இடம்பெற்று வந்துள் ளது.

காலப்போக்கில் அது வனப்பிரதேசமாக மாறியுள்ளதால் வேட்டை நிகழ்வு குறித்த இடத்தில் நடத்தப்படாது தற்போது ஒரு வயல் வெளியில் வேட்டையாடும் நடைமுறை பின்பற்றப்பட்டு வருகின்றது. அண்மைக் காலத்தில் இவ்வாலயத்தைச் சீரமைப்புச் செய்து வழிபடுவதற்கு ஒரு நிர்வாகசபை அமைக்கப்பெற்றுள்ளது. நாம் இவ்வாலயத்தை சீரமைப்புச் செய்து, வாவெட்டீஸ்வரர் பெருமானை வழிபடுவதற்கு உரிய நடவடிக்கையை உடன் எடுத்து தவுங்கள் என்றுள்ளது.

இதேவேளை, ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள வேட்டைத் திருவிழாவை ஆதிகாலத்தில் நடைபெற்றமை போன்று வாவெட்டீஸ்வரர் ஆலயச்சூழிலேயே சுவாமி வேடுவ ஆடியார்களுடன் அடியவர்கள் புடைசூழ வேட்டைக்குச் செல்லும் விதத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-21-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் கோ விடயத்தில் அத்துமீறவில்லை சட்டப்படியே சர்வேஸ்வரா நியமனம்

வடக்கு மாகாண அமைச்சர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைக் குழுவின் அறிக்கை பற்றிய விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசனின் தன்னிலை விளக்க அறிக்கையின் நான்காவது பகுதி.

### ஏற்று நீர்பாசனத்தை வெற்றியளிக்காததாக காட்ட முயல்வதை ஏற்கவே முடியாது

முத்தையன்கட்டு திட்டமானது 1990ஆம் ஆண்டு போர்ச் சூழ்நிலை காரணமாக எரிபொருள் தட்டுப்பாடு நிலவியதால் கைவிடப்பட்டு மீள்குடியமர்வின் பின்னர் 2011ஆம் ஆண்டு 17 நீர் இறைக்கும் பம்பிகள் பொருத்தப்பட்டு 944 ஏக்கர் விவசாய நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டது. இதன்பிரகாரம் 2013ஆம் ஆண்டுவரை முழுமையாக மேட்டுநிலப் பயிர்ச்செய்கை செய்யப்பட்டு 487 பயனாளிகள் உரிய விளைச்சலைப் பெற்று மிகவும் பயனடைந்தார்கள். 2014ஆம் ஆண்டு கடும் வறட்சி காரணமாக 200 ஏக்கர் அளவிலேயே பயிர் செய்யப்பட்டது. எனினும் 2015 ஆம் ஆண்டு 900 ஏக்கர் அளவில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. குளச் சீரமைப்பின் காரணமாக சென்ற ஆண்டு எவ்வித பயிர்ச் செய்கையும் மேற்கொள்ளப்படவில்லை. ஆகவே ஏற்று நீர்ப்பாச னத் திட்டங்களை வெற்றியளிக்காத திட்டமாக காட்ட முயல்வது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று.

● விவசாயத் திட்டம் ஒன்றை செயற்படுத்த திட்டமிடும்போது நீர்ப்பாசனத்தை மட்டும் நம்பியிருக்காது விவசாய பொருளாதார சாத்தியக்கூற்று அறிக்கையை பெற்று முதலீடு செய்ய வேண்டும் என விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புழுதியாறு ஏற்றுநீர்ப்பாசனத் திட்டத்தை ஆரம்பிக்கும்போது விவசாய, நீர்ப்பாசன, சுற்றுச்சூழல், பொருளாதாரம் மற்றும் நீடித்து நிலைத்திருக்கத்தக்க அபிவிருத்திக்கான சாத்திய ஆய்வுகள் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை நியமங்களின் பிரகாரம் நிதி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அனுமதிக்கப்பட்டே திட்டத்துக்கான முதலீடு செய்யப்பட்டுள்ளது. எனவே விசாரணைக் குழுவின் சபையின் பரிந்துரையைவிட மேலதிக ஆய்வுகளை நிறைவேற்றியிருக்கின்றோம் என்பதனை தெரியப்படுத்த விரும்புகின்றேன்.

●விவசாயத் திணைக்களம் முறையாக இந்தச் செயற்றிட்டத்தில் இணைக்கப்படவில்லை எனவும் விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் மற்றும் அந்தப் பகுதிக்கான விவசாய விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் திட்டம் ஆரம்பிக்கப்பட முன்னரே பல களப் பயணங்களை மேற்கொண்டு மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் அனுபவத்தைப்பெற்றும் மண்வளத்தை ஆராய்ந்தும் எவ்வாறான பயிர்களை நாட்ட முடியுமென தீர்மானித்ததுடன் இந்தத் திட்டத் தொடக்க விழாவின்போது 100 பயனாளிகளுக்கும் ஓர் பொதியும் வழங்கப்பட்டது. அந்தப் பொதியில் அந்தக் காலபோகத்துக்கான விதைகள் மற்றும் உபகரணங்கள் அடங்கியிருந்தன. அவர்கள் கண்காணிப்பையும் ஆலோசனையையும் தற்போதுவரை வழங்கி வருகின்றனர்.

● திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நீர் இறைக்கும் இயந்திரம் இயக்கப்படவில்லை எனவும், தங்களுடன் கலந்துரையாடப்படாமல் செயற்படுத்தப்பட்ட திட்டமெனவும், இந்தத் திட்டத்துக்குப் பதிலாக ஒவ்வொரு காணிக்கும் ஒவ்வொரு கிணற்றை அமைத்துத் தந்திருக்கலாம் எனவும் பயனாளிகள் குறிப்பிட்டதாகவும் விசாரணை அறிக்கை தெரிவிக்கின்றது.

2015ஆம் ஆண்டு விவசாய நடவடிக்கை குறித்த பகுதியில் இடம்பெற்றிருக்கின்றது என்பது சகலரும் அறிந்த விடயம். நீர் இறைக்கப்படவில்லையெனில் எவ்வாறு பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்க முடியும். அவ்வாறு இயக்கப்படவில்லையெனில் தற்போது எவ்வாறு இயந்திரங்களை இயக்கி விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது? எனவே இது ஊகத்தின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்ட கருத்தாகும்.

### பயனாளிகளுடன் கலந்துரையாடவில்லை எனக் கூறுவது தவறு

வடக்கு மாகாண சபையால் இந்தத் திட்டம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் பல கலந்துரையாடல்கள் அந்தப் பகுதி விவசாயிகளுடனும் ஏனைய பங்குதாரர்களுடனும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக நிதி ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டிய சாத்திய அறிக்கை தயாரித்தலின்போது பல தடவைகள் எமது நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளும் விவசாயத் திணைக்கள அதிகாரிகளும் அந்தப்பகுதி மக்களுடன் கலந்துரையாடல்களை நிகழ்த்தியுள்ளனர். எனவே பயனாளிகளுடன் கலந்துரையாடப்படவில்லை எனக் கூறப்படுவது உண்மைக்குப் புறம்பானதாகும்.

ஒவ்வொரு காணிக்கும் ஒவ்வொரு கிணற்றைத் தந்திருக்கலாம் என அபிப்பிராயம் தெரிவித்திருப்பது அறியாமையினால் ஆகும். அந்தப் பகுதியில் காணப்படுகின்ற ஒருசில கிணறுகளில்கூட ஆனி, ஆடி மாதத்தின் பின்னர் நீரைக் காண்பது மிகவும் அரிதாகும். இவ்வாறான நிலையில் கிணற்றை அமைத்துக் கொடுத்திருந்தால் நீரற்ற குழிகளை வெட்டிக் கொடுத்ததாக இன்று விசாரணைக் குழு குற்றம் சுமத்தியிருக்கும். உண்மையில் இந்த ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தை முழுமையாக பயன்படுத்துவார்களேயானால் நிச்சயமாக நிலத்தடி நீர் மேம்படுவதனூடாக கிணறுகளிலும் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படும். இந்தத் திட்டம் நடைமுறையில் இல்லையாயின் தனித்தனிக் காணிகளுக்கு கிணறு வெட்டுவதிலும் எந்தப் பயனும் இருக்கப் போவதில்லை.

● விசாரணைக்குழு முன் சாட்சியமளித்த பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் விவசாய அமைச்சரின் கோரிக்கையின் பிரகாரமே இந்தத் திட்டத்தைச் செயற்படுத்தியதாகவும், அமைச்சரின் நெருக்குதல் காரணமாக நிர்மாணிக்கப்பட்ட இந்தத் திட்டம் எதிர்பார்த்த இலக்கை அடையாத காரணத்தால் இதற்கு விவசாய நீர்ப்பாசன அமைச்சரே பொறுப்புக்கூற வேண்டும் எனத் தாங்கள் அபிப்பிராயப்படுவதாக விசாரணைக் குழுவினர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இந்த அறிக்கை ஊடகங்களில் வெளியானதன் பின்னர் என்னைச் சந்தித்த பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதைப்போன்று எனது கோரிக்கையின் அடிப்படையிலேயே இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டதாகத் தான் எதனையும் விசாரணைக் குழுவுக்கு தெரிவிக்கவில்லையெனவும், தன்னால் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்து மூலமான அறிக்கையில் உள்ள தகவல்களையே தனது வாக்குமூலத்திலும் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டார். சாத்தியம் இல்லாத திட்டங்களை அதிகாரிகளை நிர்ப்பந்தித்து செய்வதற்கு நான் ஒன்றும் சித்தசுவாதீனம் அற்றவன் அல்ல. உண்மையில் இந்தத் திட்டம் நீண்ட காலமாக இந்தப் பிரதேச மக்களால் விடப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் மாவட்ட மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு திட்டமாகும். எனினும் வடமாகாண சபை தோற்றம் பெற்ற பின்னர் மாகாண சபையின் அமர்விலே கிளிநொச்சி மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சு. பசுபதிப்பிள்ளை அவர்களின் முன்மொழிவைத் தொடர்ந்தே விவசாய அமைச்சினுள் இது உள்வாங்கப்பட்டு திணைக்களத்தினூடாக, இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சின் செயலாளரால் பணிக்கப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான டீசல், நீர் இறைக்கும் இயந்திரத்தின் இயக்கச் செலவு அதிகமாக இருக்கும் என்பது வெளிப்படை.

மலையகத்தில் இருந்து இடம்பெயர்ந்து வந்து இந்தப் பகுதியில் ஏழ்மையில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு இந்தத் திட்டத்தை எந்த விலை கொடுத்தேனும் செயற்படுத்த வேண்டிய தார்மீகப் பொறுப்பு எங்களுக்கு உண்டு. விவசாயம் அங்கு கைவிடப்படவில்லை. நடைபெற்று வருகிறது. (இணைப்பு இல 10) காலதாமதம் ஆனாலும் இந்தத் திட்டம் அதன் எதிர்பார்த்த இலக்கை அடையும். இந்தத் திட்டத்தால் ஏற்படும் நேரடியானதும், மறைமுகமானதுமான விளைவுகள் பொது நிதியில் இருந்து செலவிடப்பட்ட 32 மில்லியனுக்கு உரிய மீள்பெறுகையை அனுமானித்தே இந்தத் திட்டம் நிதி ஆணைக்குழுவால் அனுமதிக்கப்பட்டது என்பதை இங்கு தெரியப்படுத்த விரும்பு கின்றேன்.

### குற்றச்சாட்டு இலக்கம் 4.9 (அ)

யாழ்கோ பாற்பண்ணை கூட்டுறவுச் சங்கத்துக்கு 2014 ஆம் ஆண்டு மே மாதம் வரை தலைவராக இருந்த திரு. பெரியதம்பி இராசநாயகம் இரஞ்சன் என்பவரை நியாயமான காரணங்களின்றிக் கூட்டுறவு ஆணையாளருக்கு ஊடாக அதிகார துஷ்பிரயோகம் மூலம் பதவி நீக்கம் செய்தமை

### மாவட்டச் செயலரின் பரிந்துரை அவசியமில்லை

●மாவட்டச் செயலரின் பரிந்துரையின்படி பொதுச் சபைக்கு நியமிக்கப்பட்டு, பொதுச் சபையால் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு 30.04.2014 வரை தலைவராகக் கடமையாற்றிய திரு இ.ரஞ்சனது பதவி பறிக்கப்பட்டு, அந்தப் பதவிக்கு மாவட்ட செயலரின் பரிந்துரையில் நியமிக்கப்படாத திரு இ. சர்வேஸ்வரா நியமிக்கப்பட்டுள்ளார் என விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



திரு இராசநாயகம் ரஞ்சன் மாவட்டச் செயலரின் பரிந்துரைப்படி பொதுச் சபைக்கு நியமிக்கப்பட்டு, பொதுச் சபையால் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டவர் என்பது தவறான கருத்தாகும். இவர் ஒரு நியமனத் தலைவர் ஆவார். இவர் சங்கத்தின் துணைவிதி பிரிவு 35.1இன் கீழ் மாவட்டச் செயலரால் பெயர் குறித்து விதப்புரை செய்யப்பட்டு கூட்டுறவு உதவி ஆணையாளரால் நியமிக்கப்பட்டவர். இவர் மீது சங்கத்தின் உறுப்பினர்களாக உள்ள கால்நடை வளர்ப்பாளர்கள் தொடர்ச்சியாக முறைப்பாடுகளைத் தெரிவித்துவந்ததன் அடிப்படையிலும், யாழ்கோவின் செயற்பாடுகள் குறித்து மாகாண கால்நடை அபிவிருத்தித் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையிலும் (இணைப்பு இல 11) இவர் மீது விசாரணைகளை மேற்கொள்வதற்கு வசதியாகத் தலைவராக திரு இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா 01.05.2014இல் கூட்டுறவு உதவி ஆணையாளரால் நியமிக்கப்பட்டார். இந்த நியமனத்தின் மூலம் திரு பெரியதம்பி இராசநாயகம் இரஞ்சன் தலைவர் பதவியில் இருந்து நீங்கி, இயக்குநர் சபையின் ஒரு உறுப்பினராகப் பதவி நீடித்தார்.

● திரு இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா மாவட்டச் செயலரின் பரிந்துரை இன்றி நியமிக்கப்பட்டது தவறு என்று விசாரணைக்குழு தெரிவித்துள்ளது.

### மாவட்டச் செயலர் அனுமதி தேவையற்றது

கூட்டுறவு உதவி ஆணையாளருக்கென 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் கீழ் வெளிநாட்டு உள்நாட்டு வியாபார அமைச்சரால் ஆக்கப்பட்டதும் 1973 நவம்பர் 20ஆம் திகதிய தேசிய அரசப் பேரவையால் அங்கீகரிக்கப்பட்டதுமான விதி 20க்கு அமைவாக ஒரு தலைவரை அல்லது உபதலைவரை அல்லது இருவரையும் நியமிப்பதற்கு அதிகாரம் உண்டு. (இணைப்பு இல 12) இந்தத் தத்துவத்தின் அடிப்படையிலேயே மாவட்டச் செயலரின் பரிந்துரை இல்லாமல் உதவி ஆணையாளர் திரு. இரத்தினசிங்கம் சர்வேஸ்வராவை சங்கத் தலைவராக நியமனம் செய்துள்ளார். இது முறைகேடானது அல்ல சட்ட பூர்வமானது.

● விசாரணை அறிக்கையில் தம்மால் முறைகேடாக நியமிக்கப்பட்ட திரு. இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா மற்றும் திரு கந்தையா மகாதேவன் ஆகியோர்களது பெயர்களை தனது கடிதத்தில் உள்ளடக்கி அதுவும் நியமனம் வழங்கப்பட்டபின் ஏறக்குறைய ஒருவருடத்தின் பின்னரே கூட்டுறவு உதவி ஆணையாளரால் மாவட்டச் செயலருக்கு விண்ணப்பம் செய்யப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது எனவும் குறிப்பி டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நான் விசாரித்து அறிந்த வரையில் இந்தத் தகவல் உண்மையேயாகும். மாவட்டச் செயலரிடம் இந்த நியமனத்துக்கு விண்ணப்பித்து அனுமதி பெறப்பட்டது அவசியம் அற்ற ஒன்றாகும். இவர்களது நியமனம் கூட்டுறவு உதவி ஆணையாளரால் அவருக்கு உரித்தான தத்துவத்தின் கீழ் விதிப்பிரிவு 20இன் கீழேயே இடம்பெற்று வந்துள்ளது. இதனை முறைகேட்டை மறைப்பதற்கான ஒரு நடவடிக்கையாகக் கொள்ள இயலாது.

### யாழ்கோ விடயத்தில் அத்துமீறவில்லை

● இந்த நியமனக் காலத்தில் கூட்டுறவுத் திணைக்களம் எனது அமைச்சிடம் இணைக்கப்பட்டு இருக்கவில்லை, முதலமைச்சர் அவர்களது அமைச்சுடனேயே இணைக்கப்பட்டு இருந்துள்ளது என்பதைக் கவனத்தில் கொள்வதாக விசாரணை அறிக்கையில் தெரிவிக்கபட்டுள்ளது.

முதலமைச்சர் தனது வேலைப்பளு காரணமாக, கால்நடைத் திணைக்களம் எனது அமைச்சுக்கு உட்பட்டது என்ற வகையால் யாழ்கோ விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துமாறு கேட்டிருந்தார். அதன் அடிப்படையில் கூட்டுறவு ஆணையாளர் கடிதம் மூலம் என்னிடம் கேட்டுக் கொண்டதற்கு அமைவாக, யாழ்கோவின் இயக்குநர் சபைக்கு நியமனம் செய்வதற்குரிய நால்வரின் பெயர்களை எனது செயலாளரின் ஊடாகப் பரிந்துரை செய்திருந்தேன். கூட்டுறவு ஆணையாளர், முதலமைச்சரின் ஒப்புதல் பெற்றே இந்த நியமனங்களை மேற்கொண்டுள்ளார் (இணைப்பு இல.13). அந்த வகையில் இங்கு முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என்று நான் கருதவில்லை.

● திரு. இராசநாயகம் இரஞ்சன் அவர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட்டாலும் இரண்டு வருட காலத்தின் பின்னர் 2016ஆம் ஆண்டிலேயே அவருக்கு எதிரான குற்றச்சாட்டுப் பத்திரம் வழங்கப்பட்டதை அதிகார துஷ்பிரயோகத்தை மூடி மறைப்பதற்காக செய்யப்பட்ட செயலாக விசாணைக்குழு கருதியுள்ளது.

இவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பில் கூட்டுறவுச் சட்டத்தின் 461 பிரிவுக்கு அமைய முறைப்படி விசாரணைகள் இடம் பெற்றுள்ளன. பொதுவாகவே 461 விசாரணை நீண்டகாலம் எடுக்கும் ஒரு விசாரணை முறைமையாகும். இவர் மீது அதிக எண்ணிக்கையிலான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டதால் விசாரணையை முடிவுறுத்தி குற்றச்சாட்டுப் பத்திரம் கையளிக்க இரண்டு வருட காலம் நீடித்தது என்பதே கூட்டுறவு உதவி ஆணையாளர் தெரிவித்த கருத்தாகும்.

இவர் மீதான குற்றச்சாட்டுகள் பொது ச்சபையில் சமர்ப்பிக்கப்பட்டு பொதுச்சபையில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதன் அடிப்படையில் 5 வருட காலங்கள் முடியும் வரையில் குறிப்பிட்ட சங்கத்தில் இயக்குநராகவோ ஊழியராகவோ இவர் பதவி வகிக்க முடியாது என இவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுத் துறையின் அண்மைக் கால வரலாற்றில் 461 விசாரணையை பொதுச் சபை ஏற்றுக் கொண்டு குற்றம் சாட்டப்பட்டவரை பதவி விலக்கியது இதுவே முதல் முறையாகும். (இணைப்பு இல 14)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்களில் பொலித்தீன்களைத் தடைசெய்ய நடவடிக்கை எடுங்கள்

## பிரதேச சபைகளிடம் பொதுமக்கள் கோருகின்றனர்



முல்லைத்தீவு, ஜூன். 18

ஆலயச் சூழலில் காணப்படும் பொலித்தீன்களை மாடுகள் உண்பதால் அவை உயிரிழப்புக்களைச் சந்தித்துவருகின்றன. இவை ஒவ்வொரு வருடமும் தொடர்கதையாக உள்ளது. இனிவரும் காலங்களில் ஆலயத்தில் பொலித்தீன் பாவனையைத் தடைசெய்து தங்கள் வாழ்வாதாரத்தையும் சூழலையும் பாதுகாக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் வருடாந்த வைகாசிப் பொங்கல் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. பொங்கல் முடிந்ததன் பின்னர் ஆலயத்தின் சூழல் எங்கும் பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருள்கள் நிறைந்து காணப்படுகின்றன. ஆலயத்துக்கு வரும் அடியவர்களே இவ்வாறு பொலித்தீன் பைகளைப் பயன்படுத்துகின்றனர்.

ஆலயத்தின் சூழலில் மேச்சலுக்காக வந்துசெல்லும் மாடுகள் பொலித்தீன்களை உண்பதால் இறப்புக்களைச் சந்தித்துள்ளன. இவை கடந்த காலம் முதல் நடைபெற்று வருகின்றது.

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் லட்சக் கணக்காக பக்கதர்கள் வருகை தந்து சிறப்பாக நடைபெறும் கண்ணகி அம்மன் பொங்கல் காலங்களில் முற்றாக பொலித்தீன் பாவனை தடைசெய்யப்பட வேண்டும். இதனால் எங்கள் சூழலைப் பாதுகாக்க முடியும். இதற்கு எல்லோரும் ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டும் என்று வற்றாப்பளை மக்கள் தெரிவித்துள்ளனர்.

கரைத்துறைப்பற்று பிரதேச சபை, ஆலயச் சூழலில் உள்ள கழிவுகளை அகற்றி வருகின்றபோதிலும் போதிய ஆளணி இல்லாமையால் தாம் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக பிரதேச சபையினர் தெரிவித்தனர்.

பொதுவாக அனைத்து ஆலயங்களிலும் பொலித்தீன்கள் பாவனையில் உள்ளன. அங்கு செல்லும் பொதுமக்கள் பொலித்தீன்களைப் பயன்படுத்திவிட்டு அங்கு வீசிவிட்டுச் செல்கின்றனர். அது சூழலுக்கும் கால்நடைகளுக்கும் ஆபத்தாக அமைந்துவிடுகிறது.

ஒவ்வாரு பிரதேச சபையினரும் இந்த விடயத்தில் அக்கறை கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (4-7)

# படையினருக்கான வீடமைப்பில் சபைகளின் பொறியியலாளர்கள்

## மாகாண ஆணையாளருக்கு உள்ளூராட்சி அமைச்சர் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

படையினருக்காக மேற்கொள்ளப்பட்டுவரும் வீடமைப்புத் திட்டங்களின் மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்களின் உதவிகள் பெறப்படவுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் கமல் பத்மசிறி மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

சேவைகளின்போது அங்கவீனர்களாக ஆக்கப்பட்டு ஓய்வு பெறச் செய்விக்கப்பட்ட படைவீயினர்களுக்கும், உயிரிழந்தவர்களுக்கும், காணாமல் போன படையினர்களின் குடும்பங்களுக்கும் பொருத்தமான வீடுகள் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு பாதுகாப்பு அமைச்சு, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு, ரணவிரு சேவைகள் அதிகார சபை மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை ஆகியவை இணைந்து ' விரு சுமிதுரு ' என்னும் வீடமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளன.

இந்தத் திட்டத்தில் நாடு பூராகவும் ஆயிரத்து 950 புதிய வீடுகளையும் குடியிருப்பதற்கு ஏற்ற வகையில் அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்படாத பகுதியளவிலான ஆயிரத்து 700 வீடுகளுமாக மொத்தம் 3 ஆயிரத்து 650 வீடுகளை நான்கு வருடத்தில் நிர்மாணிப்பதற்கும் வீடுகளை அமைக்கும் பணிகளை மேற்கொள்ள முப்படை, பொலிஸார் மற்றும்சிவில் பாதுகாப்புபடையினரைப் பயன்படுத்தவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரணவிரு குடும்பங்களில் பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளைப் பூர்த்தி செய்வதற்காக மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கும், ஏனைய தொழில்நுட்பநடவடிக்கைகளுக்கும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் தற்போது சேவையில் உள்ள தொழில்நுட்ப அலுவலர்கள் போதாதுள்ளதனால், உள்ளூர் அதிகார சபைகளில் சேவையில்உள்ள பொறியியலாளர்களதும் தொழில்நுட்ப அலுவலர்களதும் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப் படுகிறது.

எனவே ரணவிரு சேவை அதிகார சபை மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மூலமாக இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் பொருட்டு உள்ளூர் அதிகார சபைகளில் சேவையில் ஈடுபட்டுள்ள பொறியியலாளர்கள், தொழில்நுட்ப அலுவலர்கள் ஆகியோரின் உதவிகள் கோரப்படும்போது தேவையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். அதற்கான நடவடிக்கை எடுக்குமாறு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கும் அறிவிக்குமாறும், அமைச்சின் செயலாளர் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்களுக்கு அறிவித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (4 - 9)



# இளைஞர் சேவை மன்றத்துக்கு வவுனியாவில் புதிய கட்டடம்

வவுனியா, ஜூன்18

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் யுனிசெப் நிறுவனத்தின்நிதியுதவியின் கீழ் வவுனியாவில் அமைக்கப்பட்ட இளைஞர் சேவை மன்றத்துக்கான புதிய கட்டடம் தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகார அமைச்சர் நிரோசன் பெரேராவால் நேற்று முன்தினம் திறக்கப்பட்டது.

நிகழ்வில் இளைஞர்சேவைகள்மன்றத்தில் கற்கும்மாணவர்களுக்கானசிறப்புஉதவித் திட்டங்களும்வழங்கப்பட்டன. வடமாகாண சபை உறுப்பினர்களான் செ. மயூரன், ஜெயதிலக, வவுனியாமாவட்டச்செயலர்ரோஹண புஸ்பகுமார, கைத்தொழில்வாணிபஅமைச்சின் இணைப்பாளர் முத்து முகமது, தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் இளைஞர் கழக சம்மேளத்தின் தலைவர் சு. காண்டீபன், இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் கேசவன் உட்படப் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ)




தன்னம்பிக்கையுடன் தலைநிமிர.

**உலகின் முன்னணி ஆங்கில வல்லுனர்களிடம் இணைந்து பயிலுங்கள்.**

கற்கை நெறி கட்டணங்கள்
ரூ.19,000 முதல் விலையிடப்படுகின்றன

ஜூலை மாதம் ஆரம்பமாகும் அடுத்த கற்கை நெறிக்காக அழையுங்கள் - 0117 521 521.

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 இலவச வருட உத்தரவாதம்

15 மாதங்கள் வட்டி இல்லாமல் தவணை முறையில் செலுத்துங்கள்

மாதாந்தம் ரூ.2,499 இலிருந்து

acer explore beyond limits | hp | Lenovo

## QUAD CORE NOTEBOOKS

**HP DUAL CORE**
- Intel Celeron
- 4GB RAM
- 500GB HDD
- 15.6" Display
- DOS

2 Year Warranty
ரூ.52,900
விசேட விலை ரூ.46,900
மாதமொன்றிற்கு ரூ.2,499 இலிருந்து

**ACER QUAD CORE**
ES1-533
- Quad Core - N3450 Processor
- 4GB RAM
- 500GB HDD
- 15.6" Display
- Linux

2 Year Warranty
ரூ.54,900
விசேட விலை ரூ.46,900
மாதமொன்றிற்கு ரூ.3,493 இலிருந்து

**IP110 CELERON**
- Intel Celeron DC
- 4GB RAM
- 1TB HDD
- DOS

2 Year Warranty
ரூ.49,900
விசேட விலை ரூ.43,900
மாதமொன்றிற்கு ரூ.2,910 இலிருந்து

## i5 NOTEBOOKS

**HP AY i5**
- Intel i5-7th Generation
- 4GB RAM
- 1TB HDD
- 15.6" Display
- Intel Graphics
- Windows 10

FREE 3 YEAR Warranty
ரூ.89,900
விசேட விலை ரூ.79,900
மாதமொன்றிற்கு ரூ.4,199 இலிருந்து

**ACER E5-575 CORE i5**
- CORE i5-7th Generation
- 4GB RAM
- 1TB HDD
- 15.6" Display
- 2GB Nvidia 940 VGA

FREE 3 YEAR Warranty
ரூ.92,990
விசேட விலை ரூ.82,990
மாதமொன்றிற்கு ரூ.4,649 இலிருந்து

**LENOVO YOGA 510 i5**
- Intel i5-7th Generation
- 4GB RAM
- 1TB HDD
- 2GB VGA
- WINDOWS 10
- Full HD

1 Year Warranty
ரூ.148,900
விசேட விலை ரூ.137,900
மாதமொன்றிற்கு ரூ.8,686 இலிருந்து

## i3 NOTEBOOKS

**HP AY i3**
- Intel i3-7th Generation
- 4GB RAM
- 1TB HDD
- Intel Graphics
- 15.6" Display

FREE 3 YEAR Warranty
ரூ.79,900
விசேட விலை ரூ.72,900
மாதமொன்றிற்கு ரூ.3,729 இலிருந்து

**ACER E5-575G CORE i3**
- Core i3-7th Generation
- 6GB RAM
- 1TB HDD
- Intel Graphics
- 15.6" Display

FREE 3 YEAR Warranty
ரூ.81,990
விசேட விலை ரூ.73,990
மாதமொன்றிற்கு ரூ.4,100 இலிருந்து

**IP 310 i3**
- Intel i3 - 7th Generation
- 4GB RAM
- 1TB HDD
- Intel Graphics
- Full HD 15.6" Display

FREE 3 YEAR Warranty
ரூ.79,900
விசேட விலை ரூ.69,900
மாதமொன்றிற்கு ரூ.3,730 இலிருந்து

## i7 NOTEBOOKS

**HP AU i7**
- Intel i7 - 7th Generation
- 8GB RAM
- 1TB HDD
- 4GB Nvidia VGA
- 15.6" Display

FREE 3 YEAR Warranty
ரூ.144,900
விசேட விலை ரூ.129,900
மாதமொன்றிற்கு ரூ.6,762 இலிருந்து

**ACER E5-5737-CORE i7**
- CORE i7-7th Generation
- 8GB RAM
- 1TB HDD
- 15.6" Display
- 4GB Nvidia GTX 940

FREE 3 YEAR Warranty
ரூ.143,990
விசேட விலை ரூ.128,990
மாதமொன்றிற்கு ரூ.7,199 இலிருந்து

**LENOVO YOGA 910 i7**
- Intel i7-7th Generation
- 8GB RAM
- 256SSD
- 13.9" Full HD Display
- WINDOWS 10

1 Year Warranty
ரூ.259,900
விசேட விலை ரூ.239,900
மாதமொன்றிற்கு ரூ.15,160 இலிருந்து

## TABS | PHABS

CALLING FUNCTION

**LENOVO TAB3 710i**
- 1.3QC Processor
- 7" Display
- 16GB Storage + Upgradable upto 64GB Micro SD
- 1GB RAM
- 0.2MP Front 2MP Rear camera
- Up to 9 hours battery
- 3G/Wifi/ Call Function

1 year warranty
ரூ.29,900
விசேட விலை ரூ.22,900
மாதமொன்றிற்கு ரூ.1,246 இலிருந்து

1st TIME IN SRI LANKA
PHONE + TABLET
CALLING FUNCTION

**LENOVO PHAB2 PHABLET**
- 1.3 Ghz QC
- 6.44" IPS Display
- 32GB Storage + Upgradable upto 128GB Micro SD
- 3GB RAM
- 13MP Rear Camera
- 5MP Front Camera
- 4050 mAh Battery
- 4G/Wifi/Dual SIM

1 Year warranty
ரூ.39,900
விசேட விலை ரூ.34,900
மாதமொன்றிற்கு ரூ.2,328 இலிருந்து

*நிபந்தனைகள் உண்டு

IT HOTLINE 5886655 | us at www.facebook.com/abansit | நாடெங்கிலுமுள்ள அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் கிடைக்கும். | Abans

## இலங்கையில் முதல் முறையாக

Haier Inspired Living

# மறைமுக கட்டணங்கள் இல்லை!

இப்பொழுது ஹையர் Wi-Fi வளிச்சீராக்கிகளுக்கு எவ்வித மேலதிக கட்டணங்களும் இன்றி

2 வருட உத்தவாதம் இலவசம்!

சுற்றுச்சூழல் நட்பு R410A

Comfort Made Easier

Wi Fi Smart Control

புதுமையான மற்றும் மலிவான ஹையர் Wi-Fi வளிச்சீராக்கியை நீங்கள் இருக்கும் இடத்திலிருந்தே Wi-Fi ஆதாரத்தில் உங்கள் ஸ்மார்ட்.:.போன் மூலம் கட்டுப்படுத்த முடியும். இரவு மற்றும் பகல் நேரங்களில் வெப்பநிலையை சரிசெய்து ப்ரீசெட் செய்யவும், முன்கூட்டியே ஒரு வாரத்திற்கு புரோகிரம் செய்யவும் முடியும். மேலும், உங்கள் குழந்தைகள் வீட்டில் தனியாக இருக்கும் சந்தர்ப்பங்களில் வளிச்சீராக்கியின் பயன்பாட்டை கண்காணிக்கவும் முடியும்.

வட்டியில்லா 12 மாத கொடுப்பனவு

வட்டி இல்லை ஜொலி அதிகம்

## 47% துரித குளிரூட்டல்
## 17m + தூரத்திற்கு காற்றோட்டம் வீசும்

| கொள்ளளவு | 9000BTU | 12000BTU | 18000BTU | 24000BTU |
|---|---|---|---|---|
| விலை | ரூ.74,990 | ரூ.79,990 | ரூ.99,990 | ரூ.122,990 |
| விசேட விலை | ரூ.64,490 | ரூ.70,990 | ரூ.90,990 | ரூ.112,990 |
| மாதாந்த தவணை | ரூ.5,838 | ரூ.6,222 | ரூ.7,761 | ரூ.9,530 |

- R410a சூழல் நட்புறவுடைய எரிவாயு
- அரிப்பை எதிர்க்கும் வெளிப்புற அலகு
- Wi-Fi தொழில்நுட்பம்:
- மூட் கட்டுப்பாடு
- விசிறி வேக கட்டுப்பாடு
- டைமர் செயற்பாடு
- வெப்பநிலை கட்டுப்பாடு
- காற்று திசைக்காட்டி இயக்கம்
- பிழை கண்டறிதல்
- ஸ்லீப் கர்வ்: நீங்கள் உறங்கும் நேர அட்டவணைக்கு அமைவாக, முன்கூட்டியே ஒரு வார காலத்திற்கான வெப்பநிலையை சரிசெய்திட முடியும். (22.00 முதல் 8.00)

Hotline: 0115999000 | A/C Projects: 0714020800 | Abans

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு





## தேவை



### விற்பனைக்கு
வளன்புரம், கொழும்புத்துறையில் மூன்று அறைகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
077 6633 722 / 077 8099 047 (CS 4684) (10)

### காணி விற்பனைக்கு
கோண்டாவில் சந்திக்கு அருகில் பலாலி வீதியில் சிங்கர் கம்பனிக்கு அருகில் 2பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (இரண்டாவது காணி)
076 697 2287 (CS 4793) (14)

### காணி விற்பனைக்கு
கோண்டாவில் பலாலி றோட் தாயகம் கிளினிக்கிற்கு பின்புறமாக 9 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.
075 542 9401, 077 452 7317

### விற்பனைக்குண்டு
Prima வின் முதல் தரமான இறைச்சி மற்றும் முட்டைக் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. வட பிராந்திய அங்கீகாரம் பெற்ற ஏகவினியோகஸ்தர் VSP
077 704 8972

### காணி விற்பனைக்கு
சண்டிலிப்பாய், காரைநகர் வீதியில் 5½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. (C/28779) (22,18)
077 532 2947

### கிளிநொச்சியில் காணி விற்பனைக்குண்டு
கிளிநொச்சி கனிஸ்ட பாடசாலை அருகில் பரவிப்பாஞ்சானில் 8 பரப்பு உறுதிக்காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 171 4222

### காணி விற்பனைக்கு
சங்கத்தானை சாவகச்சேரி இந்து கல்லூரியிலிருந்து 300 மீட்டர் மேற்காக 5 பரப்பு சதுரக்காணி பொழிகற்களால் கட்டப்பட்ட குடி நீர் கிணற்றுடன் விற்பனைக்குண்டு.
078 721 2272

### விற்பனைக்குண்டு
U.K இல் இருந்து கொண்டு வரப்பட்ட பாவித்த மற்றும் புதிய நிலையிலுள்ள Drillers, Hilti, Jigsaw, Sanders, Electric stappler குஞ்சு பொரிக்கும் இயந்திரம் incubator என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு: 076 615 1837

### காணி விற்பனைக்கு
பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, துறைமுகம், சந்தைக்கு மிக அருகில் பீச் றோட்டில் உள்ள 03 பரப்பு காணி பகுதியாகவோ, முழுமையாகவோ விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு. 077 968 5566

### வீடு வளவு விற்பனைக்கு
இராசபாதை கரந்தன் சந்தியில் இருந்து மேற்குப் பக்கமாகப் போகும் றோட்டில் இரண்டாவது முடக்கில் கோயிலுக்கு வடக்கே சுற்று மதிலுடன் 3பரப்புக் காணி புதிய வீட்டுடன் மின்சாரவசதி குழாய்க்கிணறு, பங்காக உரிய வெட்டுக்கிணறு வழிவாய்க்கால் பாவிப்பு உரித்துடன் விற்பனைக்கு உண்டு.
077 978 3206/076 978 9016

### விற்பனைக்கு
* கன்ரேனர் பெட்டி (அலுவலக உபயோகம், களஞ்சி யப்படுத்தல்)
* செங்கல் விற்பனைக்கு உண்டு.
* பாவித்த ஓடுகள், பாவித்த தீராந்தி, பனைமரங்கள்.

தொடர்பு:
077 959 7231

### பட்டா விற்பனைக்கு
EX2 ACE பட்டா, புல்பொடி,
PX ---- வாகனம்
விற்பனைக்கு.
077 766 7730

### வீடு விற்பனைக்கு
யாழ்ப்பாணம் பலாலிபிரதான வீதி, பரமேஸ்வரா(கம்பஸ்) சந்திக்கு மிக அருகில் (கெற்றப்போல் சந்தி) 2பரப்பு 05 குளியில் அமைந்த நான்கு அறைகளைக் கொண்ட புதிய வீடு உடன் விற்பனைக்கு உண்டு. கொள்முதல் செய்பவர் மாத்திரம் தொடர்பு கொள்ளலாம்.
076 992 1092

### வேலையாள்கள் தேவை
- அலுமினிய பிற்றிங் வேலை செய்வதற்கு வேலை ஆள்கள் தேவை.
- வெல்டிங் வேலை செய்வதற்கு வேலை தெரிந்தவர்கள் தேவை.

077 646 8452

### மணமகள் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1985 நிரந்தர அரச தொழில்நுட்ப சேவையில் உள்ள மணமகனுக்கு உள்நாட்டு அல்லது வெளிநாடு விரும்பத்தக்கது. மணமகள் அரச தொழில், சைவபோசனம் உடையவர் விரும்பத்தக்கது. (கணவனை இழந்தவர்களும் தொடர்பு கொள்ளலாம்) நிபந்தனைகள் உண்டு.
தொடர்பு: 0777 122 688

### மணமகன் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1992 இல் பிறந்த (திருவோண நட்சத்திரம்) கொழும்பில் பணியாற்றும் விஞ்ஞானத்துறை சார் பட்டதாரி மணமகளுக்கு 31 வயதுக்கு மேற்படாத வைத்தியர், பொறியியலாளர், விரிவுரையாளர் மற்றும் உயர் பதவி வகிக் கின்ற மணமகன் தேவை.
077 217 4038

### வேலையாள்கள் தேவை
யாழ் நகரிலுள்ள பான்சிக்கடை (சில்வர்) ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை. (ஆண், பெண் இருபாலாரும்)
077 662 7774 (CS 4948) (14)

### காணி தேவை
கௌரவமான குடும்பத்துக்கு நல்லூர், கந்தர்மடம் உள்ளிட்ட யாழ்.மாநகர எல்லைக்குள் நல்ல சூழலில் வீடு கட்டுவதற்கு உகந்த 2 பரப்புக்காணி தேவை.
077 273 0627

### பணியாளர் தேவை
யாழ் நகரில் இயங்கும் பிரபல பல்பொருள் அங்காடிக்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.
✔ விற்பனையாளர்கள் (ஆண்கள்)
தொடர்பு : திரு சதீஸ் 077 900 7950
✔ உதவி முகாமையாளர்/ மேற்பார்வையாளர்
தொடர்பு : திரு சீலன் 077 477 3483

## ஏனையவை

### வகுப்புக்கள்
கிளிநொச்சியில் பட்டதாரி ஆசிரியரால் கணித, விஞ்ஞான பாடங்கள், தரம் - 08 தொடக்கம் O/L வரை விசேடமான தொகுப்புக்களுடன் தனியாகவோ, குழுக்களாகவோ கற்பிக்கப்படும்.
077 026 1966

### முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி கற்கை நெறிகள்
கொழும்பில் இயங்கும் திவ்யா பயிற்சி நிலையம் யாழ்ப்பாணம், சுன்னாகத்தில் தனது பயிற்சி கிளை நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி கற்கை நெறியினை கற்க விரும்புவோர் ஆனி மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை சுன்னாகத்தில் உள்ள பயிற்சி நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
விலாசம்: இல.234, K.K.S வீதி, சுன்னாகம்.
011 250 4218/077 941 5686

### தேவை
அச்சகத்தில பணிபுரிவதற்கு கணினியில் அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் தேவை.
077 828 6497, 077 555 3918

### Vacancy
Sierra Construction ku, Anuradhapuram, Kaluthura, Slaveisland (Colombo) மேசன், காா்பெண்டா, கம்பி, வைலிங் போன்ற வேலைகளுக்கு Contractors தேவை.
T.P: 071 234 3970, 071 234 2600, 077 740 9953, 077 257 1408

அதி நவீன உயர்தகு அச்சு இயந்திரங்கள் உடனடி விற்பனைக்கு
01. KORD (Long Box) 23 லட்சம்
02. SORKZ 2 Colour 40 லட்சம்
03. SORDZ 2 Colour இரண்டு இயந்திரங்கள் 39x2 லட்சம்
04. SORD 1 Colour 24 லட்சம்
மேலே குறிப்பிட்ட இயந்திரங்கள் உடனடி விற்பனைக்கு உண்டு.
Imashi Publications
No. 96A, Wanatha Road, Gangodawila, Nugegoda. Tel: 0712772570, 011 5513852-Ext: 14

## வாடகைக்கு

### வீடு வாடகைக்குண்டு
நவாலி தெற்கு மானிப்பாயில் 6அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. 786 காரைநகர் பஸ் பாதையில் வட்டுக்கோட்டைக்கு போகும் பாதையில் உண்டு.
தொடர்பு: 077 788 0066

### வீடு வாடகைக்கு
நாவலர் வீதியில் 8 அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. வாகனத்தரிப்பிட வசதி உண்டு. அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
077 858 3838

### வீடு வாடகைக்கு
திருநெல்வேலி வடக்கில் உள்ள பெரிய வீடு வாடகைக்கு உண்டு. களஞ்சியத் திற்கோ அல்லது தனி நிறுவனத்திற்கோ உகந்தது.
0214914633, 076 668 8253

### அறை வாடகைக்கு உண்டு
கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் யாழ் மருத்துவக் கல்லூரிக்கும் மிக அருகில் அமைந்துள்ள வீட்டில் மாணவர்களுக்கு தங்கிப்படிக்க அறைவாடகைக்குண்டு.
021 205 2392, 076 341 3954

### அறைகள் வாடகைக்கு
குறைந்த விலையில் அறைகள் வாடகைக்கு உண்டு. நாள் வாடகை 600/= முதல் 3000/= வரை A/C. T/V அனைத்து வசதிகளுடன் உண்டு.
Hotel Villa City
422/1, Galle Road, Wellawatte. p/n -072 255 2222

### வீடு வாடகைக்கு
பலாலி வீதியில் நொதேன் சென்ரலுக்கு அருகில் Room களும் அனெக்ஸ் வாடகைக்கு உண்டு.
077 570 1963

### வீடு வாடகைக்கு உண்டு
நல்லூர்க் கோயிலுக்கு மிக மிக அருகில் சகல வசதிகளும் கொண்ட புதிய மேல்மாடி வீடு உடன் வாடகைக்கு உண்டு. (நிறுவனங்கள் விரும்பத்தக்கது)
T.P: 071 894 5692

உதயன்

### விளம்பர தொடர்புகளுக்கு
T.P: 021 493 1111
Fax: 021 222 9731
e-mail: advt@uthayan.com

### விஷேட பல் வைத்திய சேவை
- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்
- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

### சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 934 7687 (லதா)

### றோயல் மெடிக்கல் சென்றர்
45, ... வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




விசாரணை ☎ 021-2227712
MajesticCineplexSL
www.ceylontheatres.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாரதி தேவை**

கிளிநொச்சியில் இயங்குகின்ற மிதிவெடி அகற்றும் நிறுவனத்துக்கு (டாஸ்) சாரதி தேவை. கனரக வாகன ஒட்டுநர் அனுமதிப்பத்திரம், முன் அனுபவம் உள்ளோர் விரும்பத்தக்கது. சம்பளம் + ETF, EPF வழங்கப்படும்.

demin02@yahoo.com
072 727 2166, 021 320 7784

**பாரவூர்தி தேவை**

கிளிநொச்சியில் இயங்குகின்ற மிதிவெடி அகற்றும் நிறுவனத்துக்கு (டாஸ்) 16 அடி நீளமுள்ள கூட்டுடன் நல்ல நிலையிலுள்ள பாரவூர்தி வாடகை அடிப்படையில் தேவை.

**072 727 2166, 021 320 7784**

**ஐரோப்பிய நாடுகளுக்கான உங்கள் பயண கனவு நிறைவேற !**

**CANADA / FRANCE / SWISS / USA / LONDON RUSSIA / ROMANIA / BELARUS / UKRAINE / CYPRUS** மாணவர் வீசா மற்றும் சுற்றுலா வீசாவில் செல்ல விரைவான நம்பிக்கையான சேவைகள் சகல நாடுகளுக்குமான வீசா விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்து கொடுக்கப்படும்

**AUSTRIAN COLLEGE / TEL : 0764254227** / austrian36@gmail.com

**வேலையாள்கள் தேவை**

சுஜித் எண்டப்பிரைசஸ் நிறுவனத்தில் பணிபுரிய அலுவலக உதவியாளர் (பெண், சிங்களம் கற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை), பணம் அறவிடும் உத்தியோகத்தர் - ஆண், விற்பனை முகவர்கள் (முன் அனுபவம் உள்ளவர்கள் சம்பளம் 40,000 - 50,000 வரை பெறலாம்) அவற்றுடன் பட்டா வகை வாகனங்களும் தேவை. (70 000 - 100 000) வரை சம்பளம் பெற்றுக் கொள்ளலாம்.

**077 904 1258/ 021 227 0586**

**ஸ்ரீ லக்ஷ்மி பிளாசா**



**Sri Lakshmi Plaza**

திருமணம்,
கொண்டாட்டங்கள்
பெருநிறுவன நிகழ்வுகள்
பிறந்தநாள் விழா
பூப்புனித நீராட்டு விழா
விசேட நிகழ்வுகள்
இன்னும் பல..

இல.84, ஐயனார் கோயில் வீதி,
(தட்டாதெரு சந்தி அருகில்)
யாழ்ப்பாணம்.

E-mail :- jaffnasrilakshmiplaza@gmail.com
http://www.facebook.com/jaffnasrilakshmiplaza
021 222 9296, 075 783 6550, / 0044 746 657 8511

(C/30138)(10)

**Study & work in North & East Provincial**

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இயங்கும் எமது Granton நிறுவனத்துக்கு முகாமைத்துவ பயிற்சியாளர்கள் வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற பிரதேசங்களில் பயிற்சி பெற விரும்புபவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ✓ பயிற்சி இலவசம்
- ✓ பயிற்சியின் போது 12000/= - 15000/= பின்னர் 50000/= EPF, ETF
- ✓ தொழில் நிரந்தரமாக்கப்படும்.
- ✓ பயிற்சிக்காலம் (03 - 06 மாதங்கள்)

**Granton International (Pvt) L.T.D**
**Contact No - 077 802 1371**

அனைத்து முச்சக்கரவண்டி குத்தகையுடனும்
பெறுமதியான மின்விசிறி மற்றும்
**02 MRF ரயர் இலவசம்**




SINGER FINANCE

சுஜந்தன் 077 7 391 449
தனு 077 9 357 ...

இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்

**THE THINNAI**

**Tender- கேள்வி அறிவித்தல்**

**Retail Shop for lease**

புதிதாக அமைக்கப்பட்ட எமது ஹோட்டலில் உள்ளக விருந்தினர் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு உகந்த பொருள்களை விற்பனை செய்யக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ள விற்பனை நிலையத்தில் குத்தகை அடிப்படையில் வியாபாரத்தை மேற்கொள்ள விருப்பமுள்ளவர்கள் எம்மைத்தொடர்புகொள்ளவும்.

T.P.:021 2030 400 / 077 3916 738
E.mail: info@thethinnai.com
Address: The Thinnai
No.86, Palaly Road, Thirunelvely.Jaffna.

**DAMRO**

We seek to recruit suitable males below 26 years of age for the following position.

**SALES ASSISTANTS**

**Vavuniya**

*APPLICANTS SHOULD :*

- be permanent residents within 25km from the above showroom.
- have G.C.E (A/L) qualification and a flair for customer relations.

**Total earnings will not be less than Rs. 30,000/- p.m.**

The selected candidates will be given following benefits.

- *Company pension scheme.*
- *EPF / ETF.*
- *Annual bonus & other welfare benefits.*

If the above positions are of interest to you, please forward a detailed resume with your contact numbers & contact details of two non-related referees to reach us within 10 days of this advertisement.

**The Human Resources Manager,**
**DAMRO**
**No: 361, Kandy Road,**
**Nittambuwa.**
**E-mail: hrm@damro.lk**

**இலவச அழுகுக்கலை மற்றும் சிகை அலங்கார பயிற்சிப்பட்டறை**

யாழ்.மாவட்ட அழகுக்கலை நிபுணர் ஒன்றியம் Evon Cosmatics நிறுவனத்துடன் இணைந்து கொறியாவில் இருந்து வருகை தரும் அழகுக்கலை நிபுணரினால் மாபெரும் இலவச அழகுக்கலை மற்றும் சிகை அலங்கார பயிற்சிப்பட்டறையை நடத்தவுள்ளது.

இடம் :- வீரசிங்க மண்டபம், யாழ்ப்பாணம்
திகதி :- 24.06.2017 (சனிக்கிழமை )
நேரம் :- 9.00 மணி

சான்றிதழ்கள் வழங்கப்படும்

**பயிற்சிப் பட்டறை:-**

- Skin care Analysis
- Facial
- Hair Straightening
- Hair Coloring

தொடர்புகளுக்கு:-
Miss T.Anitha - 077 555 0396
Mrs. G.Abirami - 077 514 2040



Miss. Mutumali
(From Coria)

Sponsored by
EVON COSMETICS

Organized by
Jaffna District
Beautician Association

President :- Mrs.N.Vithya - 077 771 2604
Secretary :- Mrs. T.Nitharshana - 077 224 2749


## ஞானசார தேரருக்கு உதவுவோர் குறித்து தகவல் தாருங்கள்

*பொலிஸார் கோரிக்கை*

கொழும்பு, ஜூன் 18

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் மறைந்திருப்பதற்கு உதவுவதும் குறித்த தேரருக்கு பாதுகாப்பு வழங்குவதும் சட்டப்படி குற்றமாகும். அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுவோர் எந்தவித தராதரமும் பார்க்காமல் கைது செய்யப்பட்டுச் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த ஜயகொடி அறிவித்துள்ளார். ஞானசார தேரரைப் பிடிப்பதற்குப் பல பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், இன்னும் சில நாள்களுக்குள் அவரைக் கைது செய்து, நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டுத் தொடர்பிலான வழக்கில் முன்னிலையாகாமை குறித்து கொழும்பு கோட்டை நீதிமன்றம் தேரருக்குப் பிடியாணை பிறப்பித்து தீர்ப்பளித்துள்ளது. ஞானசார தேரர் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் பொலிஸ் தலைமையகத்துக்கோ அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கோ அறிவிக்குமாறும் பொது மக்களைப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் கேட்டுள்ளார். அதே போன்று, ஞானசார தேரருக்குப் பாதுகாப்பு வழங்குவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலசேனா அலுவலகத்தில் முக்கிய ஆவணங்கள் மீட்பு

## இனப் பிரச்சினையைத் தூண்டும் வகையிலானவை என்கிறது பொலிஸ்

கொழும்பு, ஜூன் 18

குருநாகல் பள்ளிவாசல் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபருக்குச் சொந்தமான அறையொன்றிலிருந்து இனப்பிரச்சினையை ஏற்படுத்தும் வகையிலான 486 பதாகைகளும், பத்திரிகைகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குருநாகல் மல்லவபிட்டிய முஸ்லிம் பள்ளிவாசல் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பொதுபல சேனா அமைப்பின் உறுப்பினர் எனத் தெரிவிக்கப்படும் இருவரில் ஒருவருக்குச் சொந்தமானதென வெல்லவ வீதியிலுள்ள கடையொன்று சோதனைக்குட்படுத்தப்பட்டது.

இதன்போது பத்திரிகைகள், சுவரொட்டிகள், ஆவணங்கள், இறுவட்டுக்கள் உள்ளிட்ட 486 பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. இவற்றில் இனங்கள் மற்றும் மதங்களுக்கு இடையில் விரிசலை ஏற்படுத்தும் வகையிலான சுலோகங்கள் எழுதப்பட்டிருப்ப தாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த)

# இடர் உதவிகளுக்கு சமுர்த்தி அதிகாரிகள் படை

இயற்கை இடர்களின்போது உடனடி உதவிகளை வழங்கும் நடவடிக்கைகளுக்குச் சமுர்த்தி அதிகாரிகளை ஈடுபடுத்த அரசு தீர்மானித்துள்ளது.

இதற்காக, சமுர்த்தி அதிகாரிகளுக்கு சிறப்பு இடர் முகாமைத்துவப் பயிற்சியொன்றை வழங்கவுள்ளதாகச் சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

இயற்கை இடர்கள் ஏற்படுவதற்கு முன்னர் அறிந்து கொள்வதற்கான நவீன தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தல் மற்றும் அந்த அறிவித்தலுக்கு ஏற்ப உடனடியாகப் பதிலளித்தல், உயிர் ஆபத்துக்களைக் குறைத்தல், பாதிக்கப்பட்ட வர்களுக்கு தேவையான உதவிகளை வழங்கு தல் என்பன இவ்வாறு வழங்கப்படவுள்ள பயிற்சியின் உள்ளடக்கமாகும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித் துள்ளார். (த)


## வீடு வாடகைக்கு

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் கண்டி வீதி (ஏ-9) அருகில் டச்சு வீதியில் டிறிபேக் கல்லூரிக்கு முன்பாக

9 அறைகள்
2 பெரிய வரவேற்பறைகள்
3 இணைந்த குளியல் அறை

வாகன தரிப்பிடம் உள்ளிட்ட வசதிகளுடன் அலுவலகங்கள், நிறுவனங்கள் என்பனவற்றுக்கு வாடகைக்கு விடப்படும்.

**தொடர்பு: 077 255 4327/077 784 9369**

காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரையும் 52, டச்சு வீதி, சாவகச்சேரி என்னும் முகவரியில் நேரிலும் தொடர்பு கொள்ளலாம்.

## விரிவுரையாளர்கள் தேவை

**Apss - International (College of engineering study)**
**City and Guilds Approved center**

நிறுவனத்தின் கிளை அலுவலகம் யாழ். நகரில் தொடங்க இருப்பதால் Civil Engineering, Electrical Engineering, Telecommunication, Mechanical Engineering விரிவுரையாளர்கள் தேவை. City and Guilds அனுபவம் விரும்பத்தக்கது.

**தொடர்பு: 077 386 7695**
**Email: apssengineering@yahoo.com**

## JOB DUBAI வேலை வாய்ப்பு
## DUBAI யில் வேலை வாய்ப்பு

♦ Hotel ♦ Ariport ♦ Car Wash
♦ Cooking helper ♦ Cook

மற்றும் அனைத்து விதமான கல்வித் தகைமைக்கும் ஏற்ப வேலைகள் பெற்றுத்தரப்படும்
உடனடி தொடர்புகளுக்கு அழைக்கவும்

Srilanka - 075 283 8430, 076 431 6299
Dubai - 00971 5564 62404 (imo.what's app)
009715 826 51043

Mail id Jobdubai 301@gamil.com
Web id www.jobdubai.lk

## பண உதவிகோரல்

சுப்பையா மகேஸ்வரி ஆகிய நான் இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றேன். சிறுநீரகங்கள் மாற்றப்பட வேண்டுமென வைத்தியர்கள் கூறுவதால் பண வசதியின்றி கஷ்ரப்படுகின்றேன். எனவே பரோபகாரிகளிடமிருந்து நிதியுதவியை வேண்டி நிற்கின்றேன்.

**தே.அ.அட்டை இல** - 685594218X
**வங்கி க/கு இல. இலங்கை வங்கி** - 76898798
**தொலைபேசி இல.** -076 692 6803

## வேலைவாய்ப்பு

கட்டட நிர்மாணத்துறையில் *CIDA* தரம் *C4* இல் உள்ள நிறுவனத்துடன் சேர்ந்து இயங்குவதற்கு துடிப்பும் ஆர்வமும் உள்ளவர்களுக்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் காத்திருக்கின்றன.

1. **Technical Officers** (NDES, HND(Civil), NCT (Civil) with or without Experience) willing to work any where is Northern Province
2. **Quantity Surveyor** (HND (QS), NCT (QS) or Equivalent with Experience)
3. **Electrician** (NCT (Elect), or Equivalent)
4. **Draughts man** - Certificate in Draughtsman and Auto CAD 2D, 3D with experience.
5. **Driver** (சாரதி)

திறமை, அனுபவம், வேலை செய்யும் ஆற்றல் என்பவற்றுக்கு ஏற்ப வேதனம் வழங்கப்படும். வேலை செய்யும் போது Technical Officer, Quantity Surveyor இற்கு அவர்களின் தகுதியை வளர்த்துக் கொள்ளும் விதத்தில் பயிற்சிகள் வழங்கப்படும். தகுதியானவர்கள், ஆர்வமுள்ளவர்கள் பின்வரும் தினங்களில் நேரில் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கவும்.

திங்கட்கிழமை (19.06.2017) - 4.00 PM
செவ்வாய்க்கிழமை (20.06.2017) - 8.30 AM

**077 712 0945, 021 221 3663**
**இல.207, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

ஸ்ரீ காளியம்மன் துணை
**பண்டித் - குமார் சாஸ்த்திரி**
**ஸ்ரீ காளியம்மன் ஜோதிட நிலையம்**

தொடர்புகளுக்கு
**077 251 8305 / 077 467 0325**

இந்தியாவின் புகழ்பெற்ற மாந்திரீக ஜோதிடர். இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. ஜாதகம், கைரேகை பார்த்துப்பலன் சொல்லுவார். கணவன், மனைவி சண்டை பிரிவு, காதல் திருமண தடை, இதுவரை திருமணமே ஆகாதவர்கள் வேலை, தொழில், உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார். கண்திருஸ்டி, செய்வினை கோளாறு (Black Magoe) போன்றவற்றுக்கும் தீர்வு கிடைக்கும்.

**நாதன் இன், 394 1/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.**
(வெலின்ரன் சந்தியில் இருந்து 100 மீ. பெருமாள் கோயில் போகும் பாதையில்)

## CANADA , USA
## study & work visa

**Minimum Qualification O/L**

- VISA Consulting and Online from filling.
- குறைந்த செலவில், விரைவில் பயணம்.
- Bank Balance 100%
- குறைந்த தகைமை O/L

**Swiss, France**
செல்ல வழிகாட்டல்

**Royal Visa Consultants & Education Service**

No.128, Jampettah Street,
Colombo -13
Email: rvces_consultants@yahoo.com

Haarini : 0777 493 436
Office : 0113 020 892

## இசை நிகழ்ச்சி

**தெல்லிப்பழையில் உள்ள புற்றுநோய் காப்பக கட்டட நிதிக்காக நடத்தப்படும் இசை நிகழ்ச்சி**

காலம் : 18/06/2017 (ஞாயிறு)
நேரம் : மாலை 5.30 Pm
இடம் : யாழ். வீரசிங்க மண்டபம்

பிரதம விருந்தினர்
**லயன். பேராசிரியர் இரட்ணம் விக்கினேஸ்வரன்**
(துணைவேந்தர் - யாழ் பல்கலைக்கழகம்)

கௌரவ விருந்தினர்
**திரு.நா.வேதநாயகன்**
(அரசாங்க அதிபர் - யாழ் மாவட்டம்)



**திரு.A.நடராஜன்**
(இந்திய துணைத் தூதுவர்)

**திரு.C.V.K.சிவஞானம்**
(அவைத் தலைவர் - மாகாணசபை)

இப் புற்று நோய் காப்பக நிதிக்காக அனைத்து அன்பு உள்ளங்களும் உதவி செய்யும் முகமாக இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

Dr.K.M. பத்மநாதன் PMJF, MAF (தலைவர்)
மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள்,
வடமாகாண புற்றுநோய் - எயிட்ஸ் நோய்த் தடுப்பு சங்கம்.

## VACANCIES
## SALES EXECUTIVE (Male & Female)

We are a company dealing with Children educational programme and there is an exciting & excellent opportunity for Self - motivated, committed indivduals to take up the responsibility as

**Requirements**
- GCE (A/L) Qualified
- Below 35 years old (School leavers may apply for trainee position)
- Good communication skill in English & Tamil

**If you believe that you are the right cantidate,**
Please e-mail or contact immediately
Branch Manager: G.Anthany
Phon No: 077 356 6835, 021 567 1130

**Benifits**
- An attractive salary
- Travelling allowances
- Commissions payments
- Telephone facilities
- Motorbike allowances
- Incentive & Overseas trips for target achievers
- Career development (Management position)

Marketing Executive 25,000/-+++ → After 3 months Management Executive 42,500/-



Pioneer House (PVT) Ltd.
No.100, 2nd Floor, Manipay Road, Jaffna.
E-mail: jaffnapioneerthouse@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரியின் கிரக நிலை பலம் சூனியங்கள் ஏதும் ஜெயிக்காது

## ஜோதிடர் தேவானந்த தேரர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 18
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் கிரக நிலை இப்போது பலமாக இருப்பதால் அவருக்கு எதிராகச் செய்யப்படும் பில்லி, சூனியம், மாய மந்திரவேலைகள் பலிக்கப்போவதில்லை என ஜோதிடரான லியங்கஸ் வகுரே தேவானந்த தேரர் தெரிவித்தார்.

கிரக நிலை சிறப்பாக இருந்தபடியாலேயே அவர் அரச தலைவர் ஆனார். அன்று தொடக்கம் இன்றுவரை. அவரது கிரக நிலை எவ்வித குறைபாடுகளுமின்றிப் பலமாகவே இருக்கிறது. எனக்குத் தெரிந்தவரையில் மைத்திரிக்கு இந்த மாய மந்திரவேலைகளில் நம்பிக்கை கிடையாது. ஆனால், அவருக்கு அதீதமான தெய்வநம்பிக்கை உள்ளது. அதனால் அவரை இவ்வாறான துஷ்டச்செயல்கள் மூலம் வீழ்த்த முடியாது எனவும் தேரர் கூறினார். (த)

# அமெரிக்கக் கடற்படைக்கு நன்றி கூறிய அமைச்சர் ரவி

கொழும்பு, ஜூன் 18
இடர் உதவிப் பணிகளில் அமெரிக்கக்கடற்படையினர் வழங்கிய ஒத்துழைப்புக்கு இலங்கை அரசின் சார்பில் அயலுறவுத்துறை அமைச்சர் ரவி கருணாநாயக்க நன்றி தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு வார காலப் பகுதியில் அமெரிக்கப் படையினர் குடிதண்ணீர் சுத்தம் செய்தல், பாடசாலைகளைமீண்டும்இயங்க வைக்கும் பணிகள் உட்பட்ட பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

அத்துடன் யு.எஸ். எய்ட் நிறுவனம் 2.3மில்லியன் டொலர்களை உதவிப் பணிகளுக்காக வழங்கியுள்ளது. இந்த நிலையில் நேற்று முன்தினம் அயலுறவுத்துறை அமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் கடற்படை தளபதி ரவீந்திர விஜேரத்ன ஆகியோர், அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப்புடன் யு.எஸ்.எஸ். லேக் எரி கப்பலுக்குப் பயணம் செய்தனர். இதன்போது கருத்துரைத்த அமரிக்கத் தூதுவர்



கெசாப், வெள்ள இடரின் போது இரண்டு நாட்டுப் படையினரும் இணைந்து செயற்பட்ட விதம் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேலும் மேம்படுத்தும் என்று நம்பிக்கை வெளியிட்டார். (த)

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து விநாயகரத்தினம்

(ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்)

பிறப்பு 01.08.1937 | இறப்பு 17.06.2017



தெல்லிப்பழை, பன்னாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து விநாயகரத்தினம் நேற்று (17.06.2017) சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - தையல்நாயகம் தம்பதிகளின் அருமைப் புத்திரனும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - மணிமேகலை தம்பதிகளின் அன்பு மருமகனும், மகாலக்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுப்பிரமணிய சுவாமியின் சகோதரனும்,சிவசுதன், சிவநாயகி ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், உதயகுமாரி, தேவராசா ஆகியோரின் அன்பு மாமனாரும், தவக்குமரன், தவப்பிரியன் ஆகியோரின் பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பன்னாலை, தெல்லிப்பழை.

தகவல்: வி.சிவசுதன் (மகன்)

## மரண அறிவித்தல்கள்

### இளையதம்பி தங்கராசா



தோற்றம் 17.04.1934 | மறைவு 16.06.2017

கணுக்கேணி கிழக்கு, முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும், 2ஆம் கட்டை, மன்னார் வீதி, நெளுக்குளம், வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி தங்கராசா 16.06.2017 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - பாறுவதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவசுந்தரம் -- மீனாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், திலகவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நற்குணம் (புதுக்குடியிருப்பு), காலஞ்சென்ற மங்கையர்க்கரசி (கேப்பாபுலவு), சுபத்திரை (கணுக்கேணி),காலஞ்சென்ற நடராசா (கணுக்கேணி கிழக்கு),இராசசேகரம் (ஊஞ்சல் கட்டி), கணேசபிள்ளை (சமளங்குளம்), சிவசேகரம் (ஊஞ்சல்கட்டி), திலகராணி (திருநாவற்குளம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெயந்தன் (பண்டாரிக்குளம்), மகிந்தன் (ஆஸ்திரேலியா), சுகந்தன் (லண்டன்), வசந்தன் (வடக்கு வலய ஆசிரியர்), துஷ்யந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்பு தகப்பனாரும், சுகந்தினி (திருஞானசம்பந்தர் வித்தியாலயம் - ஸ்ரீராமபுரம் ஆசிரியர்), காந்தினி (ஆஸ்திரேலியா), பிரேமராணி (ஜெயா - லண்டன்), சசிகலா (விநாயகர் வித்தியாலயம் - கணேசபுரம் ஆசிரியர்), சுபாசினி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், அபிநயா, தேனுஜா, சதுர்ஜா, துவாசகி, சிவேஷ், சயானி, அபினாசி, வேனுஜன், நிகர்ஜா, சுருதி, பூர்வி, ஹரின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் நாளை (19.06.2017) திங்கட்கிழமை வேப்பங்குளத்தில் முற்பகல் 11 மணிக்கு இடம்பெற்று நெளுக்குளம் இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

077 617 8199 - வசந்தன் ஆசிரியர்

## பிறந்தநாள் நினைவலைகள்

மலர்வு 18.06.1964 | உதிர்வு 23.01.2017



### அமரர் திரு.E.S.P. கணேசலிங்கம்

(Proprietor E.S.P. & Company Jaffna,
E.S.P. Trading Company, Colombo)

ஆண்டு தோறும் கொண்டாடுவோமே அப்பா உங்கள் பிறந்தநாளை
இந்த வருடமும் பிறந்தநாள் வந்தது கொண்டாட நீங்கள் இல்லை.
காட்சி தந்து எம்முடனே காலமெல்லாம் இருந்தீர்கள்
காலனுடன் கைகோர்த்து காணாவரம் பெற்றதேனோ

ஊரிழந்து தவிக்கிறது கணேசலிங்கம் எனும் கர்மவீரனை
ஊனுருகி வாடுகின்றோம் உங்கள் அரவணைப்பின்றி
உங்களுடன் கழித்த பாசமுள்ள தருணங்களுடன் மட்டும்
நீங்கள் எமக் கூட்டிய உண்மையுடனும் நேர்மையுடனும்

கொழுகொம்பின்றி வாழ்கிறோம். பிரிவெனும் வலி கனக்கிறது
ஒவ்வொரு தடவையும் எம் கரம் பற்றி கோயில் சென்ற நாள்கள்
இம்முறையும் நம் வரவெண்ணி காத்திருப்பான் ஆண்டவன்
காலமெல்லாம் பிறந்தநாள் கொண்டாட கொடுத்து வைக்கவில்லை.

காலங்கள் கரைந்தோடினாலும் உங்கள் நினைவுகளுடன்
எந்நாளும் கொண்டாடுவோம் உங்கள் பிறந்தநாளை

மனைவி - க.சுமதி,
மக்கள் - க.அபிராமி

அன்னையின் மடியில் 24 . 11 . 1949 | ஆண்டவன் அடியில் 14 . 06 . 2017



### பிலிப்பையா முடியப்பு

(ஜெயக்கொடி)

அல்லைப்பிட்டி 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப்பையா முடியப்பு (ஜெயக்கொடி) 14.06.2017 புதன்கிழமை அல்லைப்பிட்டியில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப்பையா - லில்லியம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான அருளப்பா - கிறிஸ் ரீனா தம்பதிகளின் பாசமிகு மருமகனும் றஞ்சிதமலரின் (மலர்) அன்பு கணவரும் காலஞ்சென்ற ஜெயரஞ்சன் மற்றும் ஜெயரூபன்(சுவிஸ்), ஜெயயாழினி, ஜெயநளினி (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு அன்புத் தந்தையும் தர்சினி, எமில் சுரேந்திரன், Dr. ஜெவ்றி அலன் (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ராஜேந்திரம், காலஞ்சென்றவர்களான கிளி, இரட்ணம் மற்றும் மனோன், செல்வரட்ணம், காலஞ்சென்றவர்களான பவளம் , ஜீவா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் றெஜீனா, நேசன், வசந்தன், ஈஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் மிறோசன், கார்மேலிசன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அல்லைப்பிட்டி புனித கார்மேல் அன்னை ஆலயத்தில் நாளை (19.06.2017) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அல்லைப்பிட்டி பொது சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

அல்லைப்பிட்டி

தகவல்:
குடும்பத்தினர்.
077 469 6612

Suren : 077 6109695 , Jeya : 0041764 23 4924

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் சீருடையை மாற்றத் தீர்மானிக்கவில்லை

## அரச தலைவர் மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 18

பாடசாலை மாணவர்களின் சீருடையை மாற்றியமைப்பது தொடர்பில் அரசு எந்தவிதமான தீர்மானத்தையும் மேற்கொள்ளவில்லை என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கண்டி, அஸ்கிரிய் ரீ சந்ரானந்த பௌத்த வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் நேற்றுமுன்தினம் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"பிரிவெனாக்கள் மற்றும் விகாரைகளை மையமாகக் கொண்ட கல்வி முறையானது, தியாகம், கருணை மற்றும் மனிதாபிமானத்தினால் அன்று இலங்கை நாட்டைப் போசித்தது. சமய வழிபாடுகளுடன் ஒன்றிய சமூகத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக அனைத்துச் சமயத் தலைவர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

புதிய தொழில்நுட்பங்களுடன் சமூகம் தழுவிக்கொண்டுள்ள இணையம் மற்றும் பேஸ்புக் என்பவை இன்று மாணவர்களது விழுமியப் பண்புகள் மற்றும் நற்குணங்களை அழித்துக் கொண்டிருக்கின்றன. கல்வியுடன் பிள்ளைகளின் அறிவையும், ஒழுக்கத்தையும் கட்டியெழுப்ப வேண்டும்.

இணையம் மற்றும் சில ஊடகங்களினூடாக இன்று இனவாதத்தைத் தூண்டி, இனங்களுக்கிடையே வேற்றுமையை விதைத்து, நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எந்தவொரு தனி நபரோ அல்லது அமைப்போ மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படும் வகையில் நடந்து கொள்வார்களாயின் அவர்கள் எந்த சமயத்தவராகவோ அல்லது இனத்தவராக இருப்பினும் அது அவர்களது நாகரிகம் மற்றும் கல்வி தொடர்பான பிரச்சினையாகும்.



அண்மையில் ஒரு தனியார் தொலைக்காட்சி அலைவரிசையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது 166 கிறிஸ்தவ தேவாலயங்கள் கடந்த சில மாதங்களுக்குள் தாக்கப்பட்டதாக நபர் ஒருவர் தெரிவித்தமை தொடர்பாக நான் பல விடயங்களையும் நன்கறிந்த அதிவண. பேராயர் மல்கம் ரஞ்சித் அவர்களிடம் வினவியபோது, அத்தகைய சம்பங்கள் எதுவும் பதிவாகவில்லையென அவர் தெரிவித்தார். மக்களைத் திசை திருப்புவதற்காக இவ்வாறான பொய் பிரசாரங்கள் வெளியிடப்படுவதை நான் கண்டிக்கிறேன்"- என்றார். (த)

# 2020 வரை கூட்டு அரசு தொடராது

## அதற்கு முன்னரே ஆட்சி கவிழும் என்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஜூன் 18

மகிந்த அரசுக்கு ஏற்பட்ட கதி இந்த அரசுக்கும் விரைவில் ஏற்படும். 2020வரை இந்த அரசு தொடர்வதற்கு நாம் விடமாட்டோம். அதற்கு முன்பே ஆட்சியைக் கவிழ்த்துவிடுவோம் என்று மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் தென் மாகாண சபை உறுப்பினர் நளின் ஹேவகே இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

ஜப்பானுக்கு அமெரிக்கா குண்டு போட்டதும் அந்த மக்கள் அமெரிக்கா மீது பழியைப் போட்டுக்கொண்டு அழுதுகொண்டு இருக்கவில்லை. அழிவில் இருந்து முன்னேறுவதற்கு முயற்சி செய்து அவர்கள் முன்னேறி இருக்கின்றனர். அதேபோல் நாமும் அழிவில் இருந்து முன்னேற்றப் பாதையை நோக்கி நகர வேண்டும். ஆனால், நாம் அப்படிச் செய்வதாக இல்லை.

உள்ளூர் உற்பத்தியை நாம் ஊக்குவிப்பதில்லை. வரி என்ற பெயரில் மக்களிடம் அநியாயமாகப் பணம் அறவிட்டே அரசு இயக்கப்படுகின்றது. அப்பாவிக் குழந்தைகள் குடிக்கின்ற பால்மா பக்கட் ஒன்றுக்கு 140 ரூபா வரி அறவிடப்படுகின்றது. வெங்காயம் ஒரு கிலோவுக்கு 25ரூபா வரி அறவிடப்படுகின்றது. சீனி ஒரு கிலோவுக்கு 23ரூபா வரி அறவிடப்படுகின்றது. கொத்தமல்லி ஒரு கிலோவுக்கு 202ரூபா வரி அறவிடப்படுகின்றது.

இவர்கள் நாட்டை முன்னேற்றும் விதம் இதுதான். வெளிநாட்டுப் பயணத்தின்போது மகிந்த முன்னூறு நானூறு பேரை அழைத்துச் செல்கிறார் என்று இந்த அரசு 2015இற்கு முன் கூறியது. இந்த அரசும் அதையேதான் இப்போது செய்கின்றது. மழை பெய்தால் வெள்ளம் வருமா இல்லையா என்று சொல்ல முடியாத அளவுக்கு எமது நாட்டின் தொழில்நுட்பம் இருக்கின்றது.

முன்பு அரச வருமானத்தில் 30வீதம் திறைசேரிக்கு வரும். அதைக் கொண்டு கல்விக்கும் சுகாதாரத்திற்கும் ஒதுக்கினோம். அரச நிறுவனங்களை ஐக்கிய தேசிய கட்சியினர் பிரித்து எடுத்துக்கொண்டதால் இப்போது அரச வருமானம் திறைசேரிக்கு வருவதில்லை. இதனால் கல்வியும் சுகாதாரமும் வீழ்ச்சியடைந்துவிட்டன.

அரசு முழுக்க முழுக்க மக்கள் விரோத செயற்பாடுகளிலேயே ஈடுபட்டுள்ளது. இவ்வாறான ஓர் ஆட்சியை மக்கள் விரும்பவில்லை. மகிந்த அரசுக்கு ஏற்பட்ட கதி இந்த அரசுக்கும் விரைவில் ஏற்படும். 2020 வரை இந்த அரசு தொடர்வதற்கு நாம் விடமாட்டோம். அதற்கு முன்பே ஆட்சியைக் கவிழ்த்து விடுவோம் அது குறித்து மக்கள் முடிவெடுத்து விட்டார்கள் - என்றார். (த-3)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு

# இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை

# NVQ

## தொழிற் பயிற்சி கற்கை நெறிகளுக்கான பயிலுனர்களை இணைத்துக்கொள்ளல்

## பாடநெறி ஆரம்பம் 2017 ஜூலை

# VTA

வாழ்க்கைக்கு ஆற்றல் ஆற்றலுக்கு தொழில்

**மோட்டார் வாகன பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு**

01. மோட்டார் வாகன வாயு பொருத்துனர் - தேசியசான்றிதழ்
02. சாரதிப்பயிற்சி (பார வாகன )
03. சாரதிப்பயிற்சி (இலகுரக வாகன)
04. தன்னியக்கவாகனவர்ணம் பூசுபவர்-தேசிய சான்றிதழ்
05. தன்னியக்க வாகன தகர வேலைசெய்பவர்-தேசிய சான்றிதழ்
06. மோட்டார் சைக்கிள் தொழிற்நுட்பம் - தேசியசான்றிதழ்
07. முச்சக்கரவண்டிதொழில்நுட்பவியலாளர் - தேசியசான்றிதழ்
08. கட்டிடஇயந்திரஇயக்குனர் பகுதி நேரம்(ஸ்காவேட்டர்,பெகோலோடர்,மோட்டர் கிரைண்டர்)
09. மோட்டார் வாகன மின்னியல் தொழிற்நுட்பம் - தேசியசான்றிதழ்
10. மோட்டார் வாகன தொழிற்நுட்பம் -தேசிய சான்றிதழ்
11. Wheel Alignment

**மின்னியல்,இலத்திரனியல்,தொலைத்தொடர்புகள்**

12. மின்னிணைப்பாளர் -தேசிய சான்றிதழ்
13. மோட்டார் வாகன மின்னியலாளர் - தேசியசான்றிதழ்
14. வானொலி,தொலைக்காட்சி மற்றும் அதனோடு இணைந்த தொழிற்நுட்பம் - தேசியசான்றிதழ்
15. கையடக்க தொலைபேசி பழுதுபார்த்தல் -தேசிய சான்றிதழ்
16. வீட்டுமின் உபகரணங்கள் திருத்துனர் - தேசிய சான்றிதழ்

16.1 Peneumatic technician

**தகவல் தொடர்பாடல் மற்றும் மல்டி மீடியா தொழில்நுட்பம்**

17. கணினி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர் உடன் CISCO IT Essential +A+ - தேசிய சான்றிதழ்
18. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிற்நுபவியலாளர் - (NVQ Level 4 in ICT)
19. தகவல் தொடர்பாடல் மற்றும் தொழிற்நுட்பம் - (NVQ 5 in ICT Additional Oracle Academy Java programming and base certification training)
20. தகவல் தொடர்பாடல் மற்றும் தொழிற்நுட்பம் சான்றிதழ் பாடநெறி (NVQ level 4in ICT)

20.1 ICT for Beginners (NVQ Level 3)

21. CISCO Cerfified Network Associate (CCNA +NVA Level 4)
22. கணினிவடிவமைப்பாளர் - தேசிய சான்றிதழ்
23. கணினிவடிவமைப்பாளர்(வலது குறைந்தோருக்கான) - நாராஹேன்பிட
24. Web Designing and development - தேசிய சான்றிதழ் (NVQ level 4)(கட்டுஹஸ்தொட்டை)



**ஹோட்டல் மற்றும் சுற்றுலாத்துறை**

25. சமையலாளர் - தேசிய சான்றிதழ்
26. அறை பராமரிப்பாளர் தேசிய சான்றிதழ்
27. உணவு மற்றும் குடிபான சேவகர்/உபசாரகர் - தேசிய சான்றிதழ்
28. வரவேற்பாளர் - தேசிய சான்றிதழ்

**இரத்தினக்கற்கள் பதித்தல்**

29. இரத்தினக்கற்கள் பதித்தல் - தேசிய சான்றிதழ்
30. இரத்தினக்கற்கள் தொழிற்நுட்பம் - தேசிய சான்றிதழ

**தனிநபர் மற்றும் சமூக அபிவிருத்தி**

31. அழகுக்கலைகைவினைஞர்-தேசியசான்றிதழ்/டிப்ளோமா (நாராஹேன்பிட)
32. அழகுக்கலைநிபுணர் - தேசிய சான்றிதழ்
33. சிகை அலங்கரிப்பாளர் - தேசியசான்றிதழ்/டிப்ளோமா (நாராஹேன்பிட)
34. சிகை அலங்கரிப்பாளர் - தேசிய சான்றிதழ்
35. முன்பள்ளி ஆசிரிய பயிற்சிநெறி - தேசிய சான்றிதழ்
36. குழந்தை பராமரிப்பு - தேசிய சான்றிதழ்

36.1 Elder Care - தேசியசான்றிதழ்

36.2 தொடர்பாடல் முறைமை பாடநெறி

**உணவு தொழில்நுட்பவியல்**

37. வெதுப்பக உற்பத்தி - தேசிய சான்றிதழ்
38. பழங்கள் மற்றும் மரக்கறி வடிவமைப்பாளர்

**மரத்தளப்பாடம் தொடர்பாண்**

39. மரவேலை கைவினைஞர் - தேசிய சான்றிதழ்
40. மரவேலை கைவினைஞர் (தளபாடம்) - தேசிய சான்றிதழ்
41. மரவேலை கைவினைஞர் (கட்டிடம்)- தேசிய சான்றிதழ்

**புடவை மற்றும் ஆடைகள்**

42. ஆடை வடிவமைப்பாளர் - தேசிய சான்றிதழ்
43. அதிவேக தையல் இயந்திர தொழிற்நுட்பம் - தேசிய சான்றிதழ்
44. அதிவேக தையல் இயந்திர இயக்குனர் - தேசிய சான்றிதழ்
45. தையல் (பெண்கள் மற்றும் சிறுவர்கள்) - தேசிய சான்றிதழ்
46. திரைச்சீலை வடிவ்மைப்பாளா - தேசிய சான்றிதழ்
47. தையல் (ஆண்கள்) - தேசிய சான்றிதழ்
48. ஆடைத்தயாரிப்பு தரக்கட்டுபாட்டாளர் - தேசிய சான்றிதழ்
49. ஆடைத்தயாரிப்பு தரக்கட்டுபாட்டாளர் - தேசிய சான்றிதழ்
50. ஆடைத்தயாரிப்பு தரக்கட்டுபாட்டாளர்-தேசிய சான்றிதழ் (Koggala)
51. மேற்பார்வையாளர்

**குளிரூட்டி மற்றும் வாயு சீராக்கி**

52. குளிரூட்டி மற்றும் வாயு சீராக்கி திருத்துனர் தொழிற்நுட்பம்-தேசிய சான்றிதழ்

**உலோக மற்றும் மென் பொருளியல்**

53. இயந்திரவியலாளர்
54. இயந்திரவியலாளர் (CNC Milling) - தேசிய சான்றிதழ் நாராஹேன்பிட
55. இயந்திரவியலாளர்-தேசிய சான்றிதழ்
56. இயந்திரவியலாளர் (CNC Milling&Lathe Machine Operator ) - நியாகம,வந்தாறுமூலை
57. வெல்டர் - தேசிய சான்றிதழ்
58. வெல்டர்
59. காய்ச்சி இணைப்பாளர் - தேசிய சான்றிதழ்

**கட்டிடம் மற்றும் நிர்மாணம்**

60. அலுமினியம் பொருத்துனர் - தேசிய சான்றிதழ்
61. கட்டிட நிர்மாண கைவினைஞர் -(மேசன்) - தேசிய சான்றிதழ்
62. கட்டிட நிர்மாண கைவினைஞர் -(நீர்க்குழாய் பொருத்துனர்) - தேசிய சான்றிதழ்
63. நீர்க்குழாய் பொருத்துனர்-தேசிய சான்றிதழ்
64. உதவிக்கணிய அளவையாளர்(QS) தேசிய சான்றிதழ்
65. சூழல் அழங்கரிப்பாளர் தேசிய சான்றிதழ்
66. கட்டிட தொழிற்நுட்பம் - தேசிய சான்றிதழ்
67. கணிய அளவையாளர்(QS) - டிப்ளோமா சான்றிதழ்

**குளிராக்கி மற்றும் வாயுசீராக்கி**

68. குளிரூட்டி மற்றும் வளி சீராக்கி திருத்துனர் - சிங்களம் (S) தமிழ்(T)

**அச்சிடல் மற்றும் பொதிசெய்தல்**

69. லித்தோ இயந்திர இயக்குனா.தேசிய சான்றிதழ்

69.1 **Book Binder** - தேசிய சான்றிதழ்

**விவசாயம் மற்றும் கால்நடை**

70. செடிகள் மற்றும் கன்றுகள் நாட்டுதல் - தேசிய சான்றிதழ்
71. மரக்கறி மற்றும் பழவகைகளை உற்பத்தி - தேசிய சான்றிதழ்

**தோற் பொருள் மற்றும் காலணி உற்பத்தி**

72. தோற் பொருள் உற்பத்தியாளர் (பாதணி,பைகள்)-தேசிய சான்றிதழ்
73. பாதணி உற்பத்தியாளர் (பாதணி,பைகள்) - தேசிய சான்றிதழ

**அலுவலக முகாமைத்துவம்**

74. செயலாண்மை பயிற்சி நெறி
75. தொழிற்நுட்ப முகாமைத்துவம் டிப்ளோமா பாடநெறி (நாராஹேன்பிட)

**வேறு**

77. ஆங்கிலம் மற்றும் மென்திறனபிவிருத்தி - தேசிய சான்றிதழ்

**தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சியின் பின்னர் மேலதிக பயிற்சி வழங்கப்படும்**

**NVQ 3 = G.C.E O/L**
**NVQ 4 = G.C.E A/L**

## அனைத்து பாடநெறிகளும் இலவசம்

**தகவல்களை பெற்றுக்கொள்ள**

அம்பாறை - [illegible]
உதவிப்பணிப்பாளர், மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம், நிந்தவூர், அம்பாறை

அநுராதபுரம் - [illegible]
உதவிப்பணிப்பாளர், மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம், நுவரவெவ, அநுராதபுரம்

பதுளை - [illegible]
உதவிப்பணிப்பாளர், மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம், அம்பேகொட, பண்டாரவளை

மட்டக்களப்பு - [illegible]
உதவிப்பணிப்பாளர், மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம், APC வீதி, மட்டக்களப்பு

கொழும்பு - [illegible]
உதவிப்பணிப்பாளர், மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம், மஹாமேக வீதி, மஹரகம

காலி - [illegible]
உதவிப்பணிப்பாளர், மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம், டெல்டா டவுண், காலி

[illegible]

**தகவல்களை பெற்றுக்கொள்ள**

மாத்தளை - [illegible]
உதவிப்பணிப்பாளர், மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம், இனாமலுவ, தம்புள்ளை

மாத்தறை - [illegible]
உதவிப்பணிப்பாளர், மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம், இல.32, வில்பட பாலசூரிய மாவத்தை, மாத்தறை

மொனராகலை - [illegible]
உதவிப்பணிப்பாளர், மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம், குமாரதாச மாவத்தை, வெல்லவாய

[illegible]

**தமிழ் மொழி மூலமான கற்கை நெறிகள்**

| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| [illegible] | 1,3,4,9,17,18,20,22,23,25,27,31,33,35,36.1,37, 54,60,69,77 | [illegible] | 6,7,9,10,12,13,15,17,20,22,25,32,34,37,40,42,43,45,47,57,65, 77 | [illegible] | 12,20,25,26,27,32,34,37,40,45,57,60,62,77 | [illegible] | 7,12,13,17,20,32,34,37,40,42,44,45,58,60,62,77 |
| [illegible] | 4,9,14,17,20,22,57,60,62,65,77 | [illegible] | 4,5,6,7,8,9,12,13,15,17,20,22,26,32,34,36,36.1,38,40,42,43,44,45,46,49,50,51,57,60,62,63,65,69,69.1,70,71,77 | [illegible] | 4,7,12,13,17,20,25,27,32,34,37,45,49,53,57,60,61,62,63,77 | [illegible] | 3,7,12,13,17,20,20.1,22,25,26,27,32,34,37,44,45,47,49,57,60,61,63,64,77 |
| [illegible] | 3,9,12,17,20,32,34,65,77 | [illegible] | 1,7,12,13,17,20,22,25,26,32,34,36,37,38,40,42,44,45,46,47,48,49,50,52,57,60,62,70,71,77 | [illegible] | 7,9,12,13,17,20,25,32,34,40,45,52,57,60,77 | [illegible] | 7,12,20,22,25,26,32,34,40,45,47,57,60,62,77 |
| [illegible] | 13,14,17,20,22,24,25,27,35,37,60,77 | [illegible] | 7,9,12,13,14,17,20,24,25,27,32,34,36,37,40,45,57,60,62,65,77 | [illegible] | [illegible] | [illegible] | 7,9,12,17,20,25,26,27,32,34,35,45,49,60,77 |
| [illegible] | [illegible] | [illegible] | 7,12,17,20,25,27,32,34,37,40,42,45,46,57,60,62,65,77 | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | 7,12,17,20,32,45,60,77 | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | 17,20,22,32,34,40,57,60,73,77 |

**உங்களுக்கு**
- மேலதிக பயிற்சி
- உள்நாட்டு,வெளிநாட்டு வேலைவாய்ப்பு
- தொழில் முயற்சியாண்மை பயிற்சிநெறி
- தொழில் முனைவோருக்கான மேம்பாட்டுத்திட்டம்
- சுயதொழில் கடன் வசதி
- உங்கள் முன்னேற்றத்திற்கான எங்கள் உதவிகள்
- தனிநபர் ஆளுமைவிருத்தி

**பயிற்சியுடன்**
- தேசிய தொழிற்தகைமை மட்டம் (NVQ) சான்றிதழ்
- தொழில்நுட்ப கல்வியில் பட்டதாரி ஆகுவதற்கான சந்தர்ப்பம்
- தேர்ச்சி அடிப்படையிலான பயிற்சி (CBT)
- தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை சேவைகள்
- தொழில் முறை ஆங்கில அறிவு
- இலகு தொடுப்பவு முறையிலான வாகன பயணச்சீட்டு

பணிப்பாளர்,
தொழில் வழிகாட்டல் தொழில் அமர்த்தல் மற்றும் ஊக்குவிப்பு பிரிவு
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை
இல.354/2 நிபுணதா பியச
எலிவிட்கல் மாவத்தை
நாராஹேன்பிட,கொழும்பு 05

HOTLINE
011-7277888
011-7270270

Web - www.vtasl.gov.lk
Email - cgjp@vtasl.gov.lk
Tel:011-2352165,011-2352160. Fax:011-2502342
Facebook : www.facebook.com/vtasl

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Abans SOLAR

## மின்சார செலவுக்கு முழுமையான தீர்வு

LG NeON™ 2
MOST EFFICIENT SOLAR PANELS IN THE MARKET

25 வருட
உத்தரவாதம்





விலை
ரூ. 419,000/- இலிருந்து

370W

5 வருட
இலவச காப்புறுதி

SMA WORLD'S NO.1 INVERTER BRAND
Made in Germany

இலவச மேற்பார்வை மற்றும் ஆலோசனைகளுக்கு
இப்பொழுதே அழையுங்கள்.

# 011 5 999000

அல்லது உங்கள் அருகாமையிலுள்ள அபான்ஸ் கிளைக்கு வாருங்கள்.

Fronius | LG NeON™ 2 MOST EFFICIENT SOLAR PANELS IN THE MARKET | SMA WORLD'S NO.1 | Abans


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா!

வடக்கு மாகாணசபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் சபையின் உறுப்பினர்களுக்கும் இடையிலான குழப்பத்தைப் பயன்படுத்தி குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடும் முயற்சி செய்வது தெளிவாகவே தெரிகின்றது.

தமிழ் மக்கள் பேரவையின் ஊடாகச் செய்ய முயன்று முடியாமல்போனதை இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நிறைவேற்றிவிடலாம் என்று தலைகீழாக நிற்கிறார்கள். முதலமைச்சருக்கு ஆதரவாக நடத்தப்பட்ட ஊர்வலங்கள் ஆர்ப்பாட்டங்களின் பின்னணியில் அவர்களே பெருமளவில் இருந்தார்கள். அதற்கான காரணத்தை முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேரடியாகவே நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி தமது அணிக்குத் தலைமை தாங்க வரவேண்டும் என்று அவர் அழைப்பு விடுத்திருந்தார். முதலமைச்சரை ஆதரித்து அவர்கள் நடத்தும் போராட்டங்களின் பின்னாலும், எழுப்பும் முழக்கங்களின் பின்னாலும் அவரைத் தமது பக்கம் இழுத்து, எப்படியாவது ஒரு நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப்பெற்றுவிடுவதே அவர்களின் ஆசை, அவா எல்லாமே.

அதற்காகவே முதலமைச்சருக்கும் மாகாண சபை உறுப்பினர்களுக்கும் இடையே எந்தவோர் இணக்கமும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கிறார்கள். அதற்கான கருத்துக்களைத் தெரிந்தெடுத்து வெளிப்படுத்துவதில் மும்முரமாக இருக்கிறார்கள். ஆனால், இந்த அவசரத்தில் அவர்கள் சில தர்க்க நியாயங்களை மறந்துவிடுகிறார்கள் என்பதுதான் வேடிக்கை.

நேற்றைய தினம் செய்தியாளர்களைச் சந்தித்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ''திருடர்களின் குகையாகத் தமிழ் அரசுக் கட்சி மாறிவிட்டது'' என்று தெரிவித்திருக்கிறார். வடக்கு மாகாணசபையில் திருடர்களைக் காப்பாற்றுவதற்காக தமிழ் அரசுக்கட்சி செயற்பட்டுவருகின்றது என்றும் குற்றஞ்சாட்டினார். அதேசமயம், தான் அங்கம் வகிக்கும் தமிழ் மக்கள் பேரவையில் சிலர் நிதி மோசடியில் ஈடுபட்டனர் என்று உள்ளக விசாரணையில் உறுதிப்படுத்தப்பட்டபோது பேரவை ஒரு திருடர்களின் குகை என்று அவர் கூறவில்லை. ஏன், அப்படியொரு திருட்டு இடம்பெற்றது என்பதைக்கூட அவர்கள் மக்களுக்கு வெளிப்படையாகத் தெரிவிக்கவேயில்லை. மூடி மறைத்து உண்மையைப் புதைத்துவிட்டார்கள்.

ஆக, அவர்களுடைய உண்மையான நோக்கம் அரசியலுக்காக விமர்சனம் செய்வதும் குட்டையை மேலும் குழப்பி விக்னேஸ்வரன் என்கிற மீனைப் பிடிக்க முடியுமா என்று பார்ப்பதுமே தவிர, மக்கள் மீதான அக்கறையல்ல.

அதுபோன்றே விக்னேஸ்வரனைத் தோற்கடிப்பதற்காக தமிழ் அரசுக் கட்சி அரசுடனும், ஈபிடிபியுடனும், தமிழ் மக்களைக்காட்டிக்கொடுத்த தரப்புகளுடனும் சேர்ந்துகொண்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார். இப்படித்தான் கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது முன்னாள் ஒட்டுக் குழுக்களும், தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்த அமைப்புகளுமான ஈபிஆர்எல்எவ், புளொட், ரெலோ போன்றவற்றுடன் தமிழ் அரசுக் கட்சி வைத்துக்கொண்டுள்ள கூட்டுத்தான் கூட்டமைப்பு என்று மேடை மேடையாக முழங்கினார்கள். ஆனால், தேர்தலில் தோற்ற கையோடு அதே புளொட், ஈபிஆர்எல்எவ் என்பவற்றுடன் கைகோர்த்துக்கொண்டு தமிழ் மக்கள் பேரவையை உருவாக்கினார்கள்.


தாங்கள் அணிசேர்ந்தபோது, முன்னாள் ஒட்டுக்குழுக்களாகவும் தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்த அமைப்புகளாகவும் புளொட், ஈபிஆர்எல்எவ் அமைப்புகள் அவர்களுக்குத் தெரியவில்லை. இப்போது மீண்டும் அதேபோன்று ஈபிடிபி, அரசு, மக்களைக் காட்டிக்கொடுத்த தரப்புகளுடன் தமிழ் அரசுக் கட்சி கூட்டுச் சேர்ந்துவிட்டதாகக் குற்றஞ்சாட்டுகிறார்கள். அதேநேரத்தில் முதலமைச்சருக்குத்தான் தாம் ஆதரவு என்ற ரீதியில் சுதந்திரக்கட்சியின் (கொழும்பு அரசின் முக்கிய பங்காளி) யாழ்.மாவட்ட அமைப்பாளர் இ.அங்கஜன் விடுத்த அறிக்கையைப்பற்றி அவர் மூச்சும் விடவில்லை. அரைவாசிக் கொழும்பு அரசான சுதந்திரக்கட்சியின் ஆதரவு தனக்குத் தேவையில்லை என்று முதலமைச்சர் அறிக்கையேதும் விட்டு அதனை நிராகரிக்காதது குறித்தும் அவர் அக்கறைகொள்ளவில்லை.

ஆக, தத்தம் கட்சி நலன்களுக்காக, சுய நலன்களுக்காக ஏதாவது விமர்சனங்களை வைத்து ஆதாயம் அடைவதுதான் இவர்களின் நோக்கம். ''அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா'' என்பது மக்களுக்கும் புரியாதது அல்லவே!

# அரசின் செயற்பாட்டுத் தாமதம் அரசுக்கே ஆபத்தை விளைவிக்கும்

சிங்கள மூலம் -
வழக்கறிஞர் ஜாவிட் யூசுப்
தமிழில் வீ.எஸ்.ரீ

இன்றைய நல்லாட்சி அரசு பதவியேற்ற ஆரம்ப காலகட்டத்தில், தேர்தல் வேளையில் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கமைய தனது செயற்பாடுகளை முன்னெடுக்க முயன்றதை அவதானிக்க முடிந்தது. பொதுமக்கள் தமது எத்தகைய கருத்தை வெளிப்படுத்தவும், அச்சம் எதுவுமின்றி அரசின் செயற்பாடுகளை விமர்சிக்கவும் வாய்ப்புக்கிட்டியதோடு அத்தகைய சுதந்திரம் தற்போதும் தொடர்கிறது என்பது முக்கியத்துவம் மிக்கதாகும். அத்தகைய பின்னணியில் கருத்து வெளிப்படுத்தும் சுதந்திர கலாசாரமொன்று நாட்டில் உருவானது என்பதையும் மறுப்பதற்கில்லை.



ஆனாலும் ஆட்சியைக் கைப்பற்றுமுன்னர் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் பலவும் ஆட்சியைப் பொறுப்பேற்ற அரசால் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. அல்லது காலம் தாழ்த்தப்படுவதாகவும் கொள்ளலாம். மாதுளுவேவ சோபித தேரரது, நியாயமான சமூதாயத்தை உருவாக்குவதற்கான, தேசிய வேலைத்திட்டத்தின் மூலம் நிறைவேற்று அரச தலைவர் நடைமுறையை ஒழித்தல், மற்றும் தேர்தல் நடைமுறையில் மாற்றங்களை ஏற்படுத்தல் என்ற கொள்கைத் திட்டங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டன. புதிய அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சரை நியமிப்பது மட்டுமே நாட்டு மக்களது விருப்பமாக அமைந்திருக்கவில்லை. அவர்கள் நிர்வாக நடைமுறையில் ஒரு மாற்றத்தை எதிர்பார்த்தனர்.

### சில விடயங்களில் முன்னேற்றம் ஏற்படாது

இவற்றில் ஒரு சில விடயங்களில் முன்னேற்றம் ஏற்பட்டதென்னமோ உண்மைதான், அரசமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தின் மூலம் நிறைவேற்று அரச தலைவருக்கான அதிகாரங்கள் குறைக்கப்பட்டமை இதற்குப் பொருத்தமானதொரு உதாரணமாகும். நல்லாட்சி அரசின் இரண்டரை ஆண்டுகள் கால நிர்வாகத்தில் சுயாதீன ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டமை மற்றும் தகவல் அறியும் சட்டம் நிறைவேற்றப்பட்டமை சிறப்பான செயற்பாடுகளேயாயினும், நிறைவேற்று அரசதலைவர் பதவியை ஒழித்துவிடும் செயற்பாட்டில் சிறிதளவேனும் முன்னேற்றம் ஏற்படவில்லை.

ஜனநாயக அடிப்படையில் அரசமைப்பில் மாற்றம் ஏற்படுத்துதல் என்பது இலேசானதொரு விடயமல்ல. இதற்குப் பொது மக்களது அபிப்பிராயம் பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகும். இது விடயத்தில் ஏதோவொரு வகையில் பொதுமக்களது அபிப்பிராயம் பெறப்பட்டதாயினும் இவற்றின் முடிவு தாமதிக்கப்பட்டது. எனவே அத்தகைய செயற்பாடுகள் விரைவுபடுத்தப்பட்டாக வேண்டும். இந்த ஆண்டின் இறுதிக்குள் அது முன்னெடுக்கப்படாவிட்டால், பொது மக்கள் மத்தியில் சந்தேகம் ஏற்படுவதைத் தவிர்க்க இயலாது. ஏனெனில் புதிய அரசமைப்பை நிறைவேற்றிக் கொள்வதில் பொது மக்களது ஆதரவும் அவசியமாகிறது.

### பொது வாக்கெடுப்பொன்று அவசியம்

அந்த வகையில் பொது மக்கள் மத்தியில் பொது வாக்கெடுப்பொன்று நடத்தப்பட்டாக வேண்டும். அவ்வேளை பொது மக்கள் தமது ஏனைய பிரச்சினைக்ளுக்கும் இந்த மாற்றத்தின் மூலம் தீர்வு கிடைக்குமா என அறிய ஆவல் கொள்வர். கால தாமதங்கள் பொதுமக்கள் மத்தியில் குழப்பங்களுக்கு வழி சமைப்பது வழமையானதே. பொது வாக்கெடுப்பு விடயத்திலும் இத்தகைய குழப்பம் மக்கள் மத்தியில் ஏற்படுமானால், அதிகார மாற்றத்தால் எதிர்பார்க்கப்பட்ட பயன் ஏற்படப் போவதில்லை எனவே இப்போதாவது அரசு இது விடயத்தில் கவனம் செலுத்தி எதிர்பார்க்கப்பட்ட மாற்றத்தை எற்படுத்த வேண்டியது அவசியம்.

நிறைவேற்று அரச தலைவர் நடைமுறையை ஒழிக்குமாறு மகிந்தவிடம் கூட முன்னர் கோரப்பட்டது. பின்னர் ஐ.தே.கட்சியும் சுதந்திரக்கட்சியின் மைத்திரிபால தரப்பும் அதனை நிறைவேற்றுவதாக வாக்குறுதி வழங்கியிருந்தன. மைத்திரிபாலவின் நிலைப்பாட்டுக்கு எதிரான கருத்துக்கொண்ட அமைச்சர்களும் அரசில் இருக்கின்றனர். அவர்கள் நிறைவேற்று அரச தலைவர் நடைமுறையை ஒழுப்பதை எதிர்க்கின்றனர். அவர்களது எண்ணத்துக்கு இயைந்து மைத்திரிபால செயற்பட்டால் அது அவரது அரசியல் நற்பெயருக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே இது விடயத்தில் தாம் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றியே ஆவேன் என அரச தலைவர் நாட்டு மக்களுக்கு நம்பிக்கை ஊட்டவேண்டும். மைத்திரிபால அதில் உறுதியாக இருப்பினும், அவர் சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழுவின் முடிவுக்கமையவே செயற்பட்டாக வேண்டுமென அவருக்கு எதிரான அந்த அமைச்சர்கள் கூறி வருகின்றனர்.

### முன்னரெல்லாம் மகிந்தவின் முடிவே முடிந்த முடிவு

முன்னரெல்லாம் சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவின் முடிவை மகிந்த கணக்கில் எடுக்காது மகீந்தவின் முடிவையே அந்தச் செயற்குழு ஏற்றுச் செயற்பட்டது. எது எவ்வாறாயினும் நிறைவேற்று அரச தலைவர் பதவியை ஒழித்து விடுவதாக மைத்திரிபால நாட்டு மக்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உறுதிவழங்கியுள்ளதை மறக்கவோ, மறுக்கவோ இயலாது. அதனை எவராலும் புறந்தள்ளி விட இயலாதென்பதால் குறித்த அந்த செயற்பாடு தீவிரமாக முன்னெடுக்கப்பட்டாக வேண்டியுள்ளது. அரசின் எந்தச் செயற்பாட்டையும் சரி எதிர்த்து விமர்சிக்கும் கூட்டு எதிரணித் தரப்புக்கு உரிய பதிலளிக்கவல்ல வலுவான கட்டமைப்பொன்றை அரசு கொண்டிருக்கவில்லை. அரசின் புதிய அரசமைப்பை அறிமுகப்படுத்தும் யோசனை குறித்த கூட்டு எதிரணியின் விமர்சனங்களுக்குப் பதில் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொண்டதாக இல்லை. போர் காரணமாக இனங்கள் மத்தியிலான நல்லிணக்கம் அற்றுப்போய் இனங்கள் மத்தியில் சந்தேகம் விரிவு கண்டுள்ளது. அதனை வாய்ப்பாகக் கருதி கூட்டு எதிரணியின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசின் காலைவாரிவிட முயன்று வருகின்றனர். இருந்தபோதிலும் நாட்டின் இனங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும், அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளவும் அரசு அக்கறை காட்டிச் செயற்பட்டு வருகிறது. அதிகாரப் பகிர்வு தொடர்பாக இதுவரை உறுதியான முடிவுகள் எதுவும் எட்டப்படாத போதிலும் , அது குறித்து பொய்யான பரப்புரைகளை மேற்கொண்டு சிங்கள மக்கள் மத்தியில் குழப்பத்தையும் சந்தேகத்தையும் தூண்டிவிட சில தரப்பினர்கள் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றனர். புதிய அரசமைப்புச் சட்ட மூலத்தில், பௌத்த மதத்துக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள முன்னுரிமை எந்த விதத்திலும் குறைக்கப்படவில்லை என அரசு கூறி வரும் நிலையில், அதனை வைத்து சிங்கள மக்களுக்கு தவறான கருத்தை வழங்க கூட்டு எதிரணியினர் முயன்று வருகின்றனர். அதனை அரசு நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்த முனைவதாகத் தோன்றவில்லை.

**அதிகாரப் பகிர்வு தொடர்பான முக்கிய கட்டத்தில் நாம்**

அதிகாரப் பகிர்வு தொடர்பாக முக்கிய கட்டத்தை நாம் அடைந்திருக்கிறோம். முழு நாடுமே ஏற்றுக் கொள்ளத்தக்க வகையிலான தீர்வொன்றே அவசியமென எதிர்க்கட்சித்தலைவர் சம்பந்தன் தெரிவித்துள்ளார். இது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு முன்னர் கொண்டிருந்த நிலைப்பாட்டுக்கு பெருமளவில் மாறுபட்ட ஒன்றாகும். புதிய அரசமைப்பு வரைவும் பெருமளவில் இத்தகைய நிலைப்பாட்டை நெருங்கிய ஒன்றாகவே காணப்படுகிறது. அந்த வகையில் தற்போதைய நிலைப்பாட்டைச் சாதகமானதொன்றாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும். தமிழர் தரப்புக்குச் சம்பந்தனின் தலைமைத்துவம் அமைந்திருக்கும்வரை புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சியைக் குறுக்கீடின்றி முன்னெடுக்க இயலும். சம்பந்தனது தலைமைத்துவம் இல்லாது போகும் நிலையில் நிலைமை எவ்வாறு அமையும் என இப்போது கணிப்பிட இயலாது. தமிழர் தரப்பிலும் கடும் கோட்பாட்டுத் தரப்பினர்கள் இருப்பதே இதற்குக் காரணம். ஆதலால் புதிய அரசமைப்புக் குறித்த செயற்பாடுகள் முடிந்தவரை துரிதப்படுத்தப்படல் வேண்டும்.

இனங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தை உருவாக்குதலும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகிறது. முஸ்லீம் இனத்தவர்களக்கு எதிரான செயற்பாடுகள் 2012 ஆம் ஆண்டளவில் தீவிரம்கண்டன. பொதுபலசேனா, ராவணபலய போன்ற அமைப்புக்கள் மீது இது விடயத்தில் குற்றம் சாட்டப்படுகிறது. இத்தகைய முஸ்லீம் விரோதப் போக்குக் குறித்து மகிந்த அரசு அக்கறை காட்டிச் செயற்படவில்லை. மாறாக இத்தகைய போக்கை வளர்ப்பதற்கு மகிந்த அரசு தூண்டுதல் கொடுத்து வந்ததாகவும் நம்பப்பட்டது. இதனாலேயே நாட்டின் முஸ்லிம் இனத்தவர்கள் அரச தலைவர் தேர்தலில் மைத்திரிபாலவுக்கு ஆதரவளித்தனர். மேற்குறிப்பிட்ட இனவாதத் தரப்புக்களது செயற்பாடுகள் காரணமாகவே தாம் முஸ்லீம்களது ஆதரவை இழக்க நேர்ந்ததென்பதை மகிந்த காலந்தாழ்த்தி உணர்ந்து கொண்டார். நல்லாட்சி அரசு பதவி ஏற்ற பின்னர் இந்த நிலைமையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டபோதிலும், அண்மைக்காலமாக குறித்த, இனவாதத் தரப்புக்கள் மீண்டும் முஸ்லீம் மக்களுக்கெதிரான நிலைப்பாட்டை தீவிரமாக்கியுள்ளதை காண முடிகிறது.

> “இனங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தை உருவாக்குதலும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகிறது. முஸ்லீம் இனத்தவர்களக்கு எதிரான செயற்பாடுகள் 2012 ஆம் ஆண்டளவில் தீவிரம் கண்டன. பொது பலசேனா, ராவணபலய போன்ற அமைப்புக்கள் மீது இது விடயத்தில் குற்றம் சாட்டப்படுகிறது. இத்தகைய முஸ்லீம் விரோதப் போக்குக் குறித்து மகிந்த அரசு அக்கறை காட்டிச் செயற்படவில்லை. மாறாக இத்தகைய போக்கை வளர்ப்பதற்கு மகிந்த அரசு தூண்டுதல் கொடுத்து வந்ததாகவும் நம்பப்பட்டது. இதனாலேயே நாட்டின் முஸ்லிம் இனத்தவர்கள் அரச தலைவர் தேர்தலில் மைத்திரிபாலவுக்கு ஆதரவளித்தனர்.

**புதிது புதிதாக இனவாதக் குழுக்கள்**

தற்போதைய அரசின் மென்போக்கை வாய்ப்பாகக் கொண்டு குறித்த இனவாதத் தரப்புக்களுடன் மேலும் சில இனவதத்தரப்புக்கள் உருவாகியுள்ளன. இனக்குழுமமொன்றுக்குப் பிரச்சினை ஏதாவது இருக்குமானால், அது குறித்து அரசுடன் தொடர்பாடல் மேற்கொண்டு, பேச்சுக்கள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக்கொள்வதே ஜனநாயகநடைமுறை. ஆனால் வீதியில் இறங்கி மற்றொரு இனத்தவர்களை நிந்தித்து, மதத் தலைவர்களைக் கேலிசெய்வதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள இயலாது. இத்தகைய போக்கு இன நல்லிணக்க முயற்சிக்குப் பாதகமானதொன்று.

அந்த வகையில் அண்மைக்காலமாக முஸ்லீம் மக்கள் மத்தியில் நிலவும் குழப்பத்தையும் அச்சத்தையும் போக்க அரசு நடவடிக்க மேற்கொள்ளல் அவசியமாகும். அரசின் அசமந்தமும் தாமதப் போக்கும் புதுப்புதுப் பிரச்சின்னைகள் உருவாக வழிவகுக்கும். அது எதிர்காலத்து அரசின் இருப்புக்கும் பாதகம் ஏற்படுத்தவல்லது. எனவே இவற்றுக்கெல்லாம் விரைவான நடவடிக்கை அவசியமாகும்.

எனவே நிறைவேற்று அரச தலைவர் நடைமுறையை மாற்றியமைத்து, புதிய அரசமைப்பொன்றை உருவாக்குவது தொடர்பாக பொது வாக்கெடுப்பொன்றை நடத்தி மக்கள் ஆணையைப் பெற்றுக் கொள்ள அரசு விரைந்து செயற்பட்டாக வேண்டும். இதில் தாமதமோ, தயக்கமோ இருத்தலாகாது.

உண்மையில் இன்று சில அமைப்புக்கள் இதுவரை இல்லாத பிரச்சினையை அல்லது பிரச்சினைகளைப் புதிதாக உருவாக்க முயல்கின்றன. இது இனவாத அரசியல் செயற்பாட்டின் விளைவாகும். இதனால் கடைசியில் நாட்டின் ஸ்திரத்தன்மை கேள்விக் குறியாகிவிடும் இருப்பு நலிவு நிலைககாண நேரிடும்.

அந்த வகையில் இன்று அரசுக்கு எதிரான பல தரப்புக்களும் அரசின் காலைவாரிவிடவே முனைகின்றன. அதேவேளை அரசின் செயற்பாடுகளில் நிலவும் தாமதம் கூட்டு எதிரணியின் முயற்சிகளுக்கு எழுச்சியை ஏற்படுத்தக் காரணமாகின்றது என்பது கவலை தருமொன்று.



## ஆசிரியருக்கான கடிதம்

# உள்ளதைச் சொன்னால் உடம்பெல்லாம் நோவதேன்?

'ஆட்டைக் கடிச்சு மாட்டைக்கடிச்சு கடைசியிலை மனிசரைக் கடிச்சதாம்' என்றொரு முதுமொழி தமிழில் வழக்கில் உள்ளது. ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசைன் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்கிறார் என குற்றச்சாட்டி அவருக்கு எதிராக ஐ.நா.மனித உரிமைகள் சபையின் தலைவரிடம் முன்னாள் அரச தலைவர் மகிந்தவின் தலைமையிலான அணியினர் முறைப்பாடு செய்யவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் முன்னைய அமர்வுகளில் இலங்கை அரசு மீதான போர்க்குற்றச்சாட்டுக்கள் பன்னாட்டு நீதிபதிகள் அடங்கிய குழுவினால் விசாரணை செய்யப்படவேண்டுமென்பதை வலியுறுத்தி வந்தவர் என்பதால் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மீது மகிந்த அணியினர் உட்பட சிங்கள பேரினவாத அரசியல் தலைவர்கள் பலரும் கடும் வைராக்கியம் பாராட்டி விமர்சித்து வந்துள்ளனர்.

கலப்பு நீதிமன்ற விசாரணையை வற்புறுத்துவதன் மூலம் ஆணையாளர் சையிட் அல்ஹுசைன் இறைமையுள்ள இந்த நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடுகிறார் என தற்போது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். மொத்தத்தில் பேரினவாத கடும் நிலைப்பாட்டில் ஊறிப் போய்விட்ட இலங்கையின் சிங்கள அரசியலாளர்கள் தம்மைக் கண்டித்து விமர்சிக்கும் எவரைத்தானும் கண்டித்துக் குரலெழுப்பாமல் விட்டதில்லை. அது உள்நாட்டுத் தரப்புக்களாக இருப்பினும் சரி, வெளிநாட்டுத் தரப்புக்களாக இருப்பினும் சரி சிங்களப் பேரினவாதிகளது கோபத்துக்கு ஆளாகாது.


விமர்சனத்துக்கு உட்படாது எவருமே தப்பித்ததாக வரலாறு இல்லை. அந்த வகையில் இதனையும் கணக்கில் சேர்த்துப் பார்க்கும் போது ஒன்று மட்டும் தெளிவாகப் புலப்படு கிறது. எவர்தான், எப்படித்தான் தலைகீழாக நின்றாலும் சிங்களப் பேரினவாதம் ஈழத்தமிழ் மக்களுக்கு அவர்களுக்குரிய உரிமைகள், கௌரவம் என்பவற்றை ஒருபோதுமே வழங்க முன்வரப் போவதில்லை என்பதே அதுவாகும். அந்தவகையில் தந்தை செல்வா அன்று கூறி வைத்த "தமிழ் மக்களை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்" என்ற கூற்றே நிதர்சனமானதொன்றாகும்.

பொ.பாலசுப்பிரமணியம்
நாவற்குழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

மருத்துவர் இ.சுரேந்திரகுமார்




# நீரிழிவு நோயை கட்டுப்படுத்த ஒன்றிணைவோம்

இன்று நீரிழிவு நோயானது உலகை ஆட்டிப்படைக்கும் சவால் மிக்க நோயாக மாறிவருகின்றது. நீரிழிவிற்கான உலக கூட்டமைப்பானது தற்போது உலகில் 415 மில்லியன் மக்கள் நீரிழிவால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இந்தத் தொகையானது 2040ஆம் ஆண்டளவில் 640 மில்லியனாக இருக்கும் என்றும் கணிப்பிட்டுள்ளது. இதில் தென்கிழக்கு ஆசியாவில் மட்டும் 78.3 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர் என்றும் இந்தத் தொகை 2040 இல் 140.2 மில்லியனாக இருக்கும் என்றும் குறிப்பிடுகிறது. ஆக, இந்த நோயின் தாக்கம் என்பது எவ்வளவு பாரதூரமான விளைவுகளையும் ஏற்படுத்தக்கூடியது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இன்று எம்மிடம் காணப்படும் மிகப் பெரிய கேள்வி என்னவெனில் எவ்வாறு நோயைக் கட்டுப்படுத்தலாம் என்பதே உலகில் இது போன்ற பல நோய்கள் தாக்கத்தை ஏற்படுத்திய போது அதனை எம்மால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரக்கூடியதாக இருந்தது. எனவே அவை போன்று இதனையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியுமா? அவ்வாறு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு எவ்வாறான விடயங்கள் சவாலாக அமையப் போகின்றன என்பது பற்றி ஆராய்தல் மிகவும் பொருத்தமானது. ஏற்கனவே குறிப்பிட்டது போன்று கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட நோய்களான அம்மை, இளம்பிள்ளை வாதம், மலேரியா, போன்றவை தொற்று நோய்கள் ஆகும். தொற்று நோய்களைக் கட்டுப்படுத்த தடுப்பூசி மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு அவற்றை மக்கள் எல்லோருக்கும் உள்ளீடாகக் கொடுத்ததன் மூலம் பெரும்பாலான நோய்த்தடுப்புச் செயன்முறைகள் வெற்றிகரமாகச் செய்து முடிக்கப்பட்டுள்ளது. ஆனால் நீரிழிவு நோயை அவ்வாறு கட்டுப்படுத்த முடியாது. இது பல்வேறு காரணிகளால் ஏற்படுத்தப்படுகின்ற ஒருதொற்று அல்லாத நீண்டகால நோயாகும். இந்த நோயானது தொற்று நோய் போன்று உடனடியாக ஏற்படுவதில்லை. எனவே இதனை கட்டுப்படுத்த வாழ்நாள் முழுவதும் அதற்குரிய கட்டுப்பாட்டு முறைகளைக் கடைப்பிடித்தல் என்பது மிகவும் அவசியமாகின்றது.

கட்டுப்பாட்டு முறைகளைக் கடைப்பிடிப்பதற்கு முன்பாக நோய்க்காரணிகள் எவ்வாறு நோயுருவாக்குகின்றன என்பதை அறிதல் பொருத்தமானது. ஒருவருக்கு நீரிழிவு நோயானது பல்வேறு படிமுறைகளினூடாக ஏற்பட்டு உடலில் பல்வேறு வகையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எனவே இந்த நோயைத் தடுக்க வேண்டுமெனின் அதனைப் பிறப்பில் இருந்து கைக்கொள்ளுதல் மிகவும் முக்கியமானது. இனி நோயை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்ற காரணிகள் எவை என்பதை அறிந்து கொள்ளுதல் மிகவும் அவசியமானது. எமது உணவுப் பழக்க வழக்கங்கள். நாம் உணவை உட்கொள்வதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று உணவாகும். நாம் உணவை உட்கொள்வதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று எமது இயக்கத்திற்கும், உடற் தொழிற்பாட்டிற்குமான சக்தியை பெற்றுக் கொள்வதே. இந்தச் சக்தியை உணவிலுள்ள காபோவைதரேற்றுக்கள் மற்றும் இலிப்பிட்டுக்கள் மூலம் பெற்றுக் கொள்கிறோம். இந்த உணவுப் பதார்த்தங்களை உடலில் பல்வேறு உறுப்புகளிற்கு அனுப்பி வைக்கும் பணியை உடலும், குருதிச் சுற்றோட்டத் தொகுதியும் மேற்கொள்கின்றன. உடலில் உள்ள பெரும்பாலான கலங்கள் குருதிக்கோளங்களை தமது சக்தித் தேவைக்கு பயன்படுத்துகின்றன. எனவே கலங்களிற்குக் குருதிக் குளுக்கோசை கிரமமாக வழங்கும் பணியை ஈரலும் குருதிச் சுற்றோட்டத் தொகுதியும் செயற்படுத்துகின்றன. அகநீர் சுரப்பிகளில் இருந்து சுரக்கப்படும் ஓமோன்கள் இன்சுலின் மற்றும் குளுக்கோசின் அளவைக் கட்டுப்படுத்த உதவுகின்றது. இந்தக் கட்டுப்பாடானது இன்சுலின் சுரப்பான் அளவிலோ அல்லது அதன் செயற்படுதிறனிலோ தங்கியுள்ளது.

எனவே இன்சுலின் சுரப்பில் ஏற்படும் குறைபாடோ அல்லது இன்சுலின் செயற்படு நிலையிலுள்ள குறைபாடுகளோ ஒருவரில் நீரிழிவு நோய் ஏற்படுவதற்கு காரணம் ஆகின்றது. எனவே இன்சுலின் சுரப்பு மற்றும் அதன் செயற்படுநிலையைப் பேணக்கூடிய வகையில் எமது வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்வதுடன் அவற்றில் பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகளைத் தடுத்தலே ஒருவர் தன்னை நீரிழிவு நோயில் இருந்து பாதுகாப்பதற்கான வழிவகையாகும்.

இனி நீரிழிவை ஏற்படுத்தும் பிரதான காரணிகளை எவையெனப் பார்ப்போம். பின்வரும் காரணிகளை பன்னாட்டு நீரிழிவிற்கான கூட்டமைப்பு (IDF) பிரதான காரணிகளாகப் பட்டியலிட்டுள்ளது.

1. அதிகூடிய உடற்பருமன்
2. ஆரோக்கியமற்ற உணவு
3. உடல் உழைப்பு குறைவு
4. குடும்பத்தில் நீரிழிவு காணப்படுதல்

இவற்றுடன்

1. உயர்குருதியமுக்கம்
2. வயோதிபம்
3. குளுக்கோசின் சகிப்புத்தன்மை குறைதல்
4. கர்ப்பகால நீரிழிவு நோய்
5. கர்ப்பகாலத்தில் சரியாக உணவு உண்ணாது போதல் போன்ற காரணிகளையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.

எனவே ஒருவர் நீரிழிவு நோய் ஏற்படுவதை தடுக்க வேண்டின் அவரின் வாழ்க்கை முறையைச் சரியாக அமைத்தல் என்பது இன்றியமையாததாகும்.

> ❝ இன்றைய அவசர உலகில் நாம் எமது தேவைகளை அதிகரிக்கச் செய்வதன் ஊடாக மன அழுத்தத்திற்கு உட்படுகின்றோம். எனவே மன அழுத்தத்தைத் தடுக்கக் கூடிய வகையில் எமது வாழ்க்கையை அமைத்தல் என்பது இன்றியமையாதது. பல நீரிழிவு நோயாளிகள் மன அழுத்தம் காரணமாகவும் நோயின் பக்கவிளைவு காரணமாகவும் குருதியில் குளுக்கோசின் அளவைக் கட்டுப்படுத்த முடியாமல் கட்டுப்பாடற்ற நீரிழிவினால் ஏற்படும் விளைவுகளால் அவஸ்தைப்படுவதை அவதானிக்க முடிகிறது. எனவே தான் உலக நீரிழிவுக்கான கூட்டமைப்பு ஒருவர் குறைந்தது ஒரு நாளைக்கு 6 தொடக்கம் 8 மணித்தியாலங்கள் நித்திரை செய்வது அவசியம் என அறிவுறுத்துகிறது.

இதனைச் சுருக்கமாகக் கூற வேண்டுமாயின் ஆரோக்கியமான உடல்நிறையைப் பேணுவதும், மிதமான உடல் உழைப்பை ஏற்படுத்தலும் நீரிழிவில் இருந்து எம்மை பாதுகாப்பதற்கான வழிமுறைகளாகும்.

எவ்வாறு இந்த ஆரோக்கியமான உடல்நிறையை அடைய வேண்டுமெனில், ஆரோக்கியமான உணவுகளை உடலின் சக்தித் தேவைக்கு ஏற்ப உள்ளெடுத்தல் என்பது மிகவும் அவசியமானது. ஒவ்வொருவருக்கும் தேவைப்படும் சக்தியானது அவர்களின் பால்நிலை. வயது மற்றும் உடல் உழைப்பு என்பவற்றில் பிரதானமாகத் தங்கியுள்ளது. எனவே ஒருவர் தனக்கு சாதாரணமாக எவ்வளவு அளவு சக்தி தேவைப்படுகிறது என்பதை அறிந்திருத்தல் அவசியமாகின்றது. இதன்பின்னர் தான் உள்ளெடுக்கும் உணவுப் பொருள்களை கருத்திற்கொண்டு அவற்றின் அமைப்பு, அளவு என்பவற்றின் மூலம் அன்றாடம் உள்ளெடுக்கும் உணவால் கிடைக்கப்பெறும் சக்தியின் அளவைக் கணிப்பிடுதல் அவசியமானது. இந்த அளவானது தேவைக்கு அதிகமாக இருப்பின் அவை கொழுப்பாக உடலில் சேமிக்கப்படுகின்றன. உடல் அங்கங்களில் கொழுப்பு படிவடைதலே இந்த நோயின் உருவாக்கத்திற்கான ஆரம்ப காரணங்களாகச் சொல்லப்படுகின்றன. இந்தக் கொழுப்பு படிவதைத் தடுப்பதனூடாகவோ அல்லது அகற்றுவதனூடாகவோ நீரிழிவு நோய் ஏற்படுவதைத் தடுப்பது மட்டுமல்லாது நீரிழிவு நோய் ஏற்பட்டவர்களில் அந்தநோயால் ஏற்படும் தாக்கத்தை இயன்றளவு வினைத்திறனுடன் கட்டுப்படுத்த முடியும் என அண்மைய ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

இந்தக் கொழுப்புப் படிதலைக் கட்டுப்படுத்த கிரமமாக உடல் இழைப்பை ஏற்படுத்தக்கூடிய உடல் உழைப்பு அல்லது கிரமமாக உடற்பயிற்சி மிகவும் அவசியமாகின்றன. இதனை நாம் திட்டமிட்டு செயற்படுத்தல் வேண்டும். மேலும் உடலில் கொழுப்புப் படிவதானது மதுப்பானப் பழக்கவழக்கம், புகைத்தல் மற்றும் வாழ்வில் ஏற்படும் மன அழுத்தம் போன்றன காரணமாகவும் ஏற்படுகின்றன. எனவே ஒருவர் மதுபான பழக்கத்தை அல்லது புகைத்தலை கைவிடுதன் மூலமும் நீரிழிவு நோயில் இருந்து எமைப் பாதுகாத்துக் கொள்ளலாம். இன்றைய அவசர உலகில் நாம் எமது தேவைகளை அதிகரிக்கச் செய்வதன் ஊடாக மன அழுத்தத்திற்கு உட்படுகின்றோம். எனவே மன அழுத்தத்தைத் தடுக்கக்கூடிய வகையில் எமது வாழ்க்கையை அமைத்தல் என்பது இன்றியமையாததாகும். பல நீரிழிவு நோயாளிகள் மன அழுத்தம் காரணமாகவும் நோயின் பக்கவிளைவு காரணமாகவும், குருதியில் குளுக்கோஸின் அளவைக் கட்டுப்படுத்த முடியாமல் கட்டுப்பாடற்ற நீரிழிவினால் ஏற்படும் விளைவுகளால் அவஸ்தைப்படுவதை அவதானிக்க முடிகிறது. எனவே தான் உலக நீரிழிவுக்கான கூட்டமைப்பு ஒருவர் குறைந்தது ஒரு நாளைக்கு 6 தொடக்கம் 8 மணித்தியாலங்கள் நித்திரை செய்வது அவசியம் என அறிவுறுத்துகிறது.

எனவே எமது வாழ்க்கையை ஆரோக்கியமான முறையில் வாழ்வதே நீரிழிவு நோயில் இருந்து விடுபடுவதற்கான சிறந்த வழியாகும். நீரிழிவைக் கட்டுப்படுத்த வேண்டுமெனில் மக்களுக்குச் சரியான ஆரோக்கிய வாழ்வு முறைகளை செயற்படுத்த வழி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அவர்களிடம் சரியான தகவல்கள் சென்றடைவதை உறுதிப்படுத்த வேண்டும். ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பின்பற்றச் சொல்லித் தர வேண்டும். அதற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும்.

சமூக மருத்துவ நிபுணர்,
மூத்த விரிவுரையாளர், தலைவர்
சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறை
மருத்துவ பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் 18.06.2017



# ‘பூத்துச் சிரிக்கின்றது’ வறட்சி

தவபாரதி

காலமை ஆறுமணிக்குத் தண்ணி வரும். எட்டு மணி வரைக்கும் ஓடும். அதுக்குள்ள இந்த பைப்புக்குரிய அம்பது, அறுவது குடும்பங்களும் தங்களுக்குத் தங்களுக்குத் தண்ணி எடுத்திர வேணும்.

ஆளாளுக்கு நம்பர் படிதான் தண்ணி. ஒண்டிரெண்டு பெரிய குடும்பகாரர், கூட்டுக்குடும்பகாரருக்கு ரெண்டு, நம்பர் இருக்கு. மிச்ச முழுப் பேருக்கும் ஒரு நம்பர்தான்... இண்டைக்கு இரு பத்தஞ்சாம் நம்பர்காரர் வரைக்கும் தண்ணி ஓடிச்சென்டால், நாளைக்கு இருபத்தாறாம் நம்பரிலயிருந்து எடுப்பினம். மழை பெய்ஞ்ச கொஞ்சக் காலத்துக்கு எல்லாரும் எடுக்கிற அளவுக்கு வேகமா ஓடுற தண்ணி, வெயில் காலம் வந்தால் குறையுறது வழமைதான்... ஆனா இந்த முறை என்னடா எண்டால் தண்ணிக்குச் சரியான தட்டுப்பாடாக் கிடக்கு...”

யாழ்ப்பாணம் தீவுப்பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கையில் வறட்சி தாண்டவமாடுவது வழமைதான். ஆனாலும் இந்த வருடம் அது கொஞ்சம் அதிகமாகவே அங்கு தலைவிரித்தாடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்திலிருந்து தென்மேற்காகக் கடல் - உவர் சூழ்ந்திருக்கும் சிறிய சிறிய தீவுகளுள்ளன. அவற்றில் மண்டைதீவு, வேலணைத் தீவு, புங்குடுதீவு உள்ளடங்கிய ஒரு தொகுதியும் காரைநகரும் மாத்திரமே யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் தரைவழியாக இணைக்கப்பட்டுள்ளன. ஏனைய தீவுகளான நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு போன்றன கடல் நீரால் பிரிக்கப்பட்டேயிருக்கின்றன. தரைக்கீழ் நீர் வளத்தையுடைய யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் ஒப்பிடுகையில், இவை கடலால் சூழப்பட்ட குறைந்த தரைப் பரப்புக்கள் ஆதலால் இந்தத் தீவுகளில் இயல்பாகவே தரைக்கீழ் நீர் உவர் கொண்டு காணப்படும். அதைக் குடிக்கவோ, குளிக்கவோ, சமைக்கவோ வேறு தேவைக்கோ பயன்படுத்த முடியாது. கடல் நீருக்குச் சற்றும் சளைக்காமல் அது இருக்கும்.

மாரி காலங்களில் ஓரளவாவது அத் தன்மை குறைந்திருக்கும் நீர் நிலைகள் அதன்பின்னர் உவராகி விடுகின்றன. உள்நாட்டு நீர் நிலைகள் இவ்வாறிருப்பதால் வருடம் முழுவதுமான தமது நீர்த் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு இவர்கள் அன்றாடம் அல்லல் பட்டுக் கொண்டே இருக்கின்றார்கள். இந்த நிலையில் தான் இப்போது தீவிரம் பெற்றிருக்கும் வறட்சியும் அவர்களின் வாழ்வை அழித்துக் கொண்டிருக்கிறது.

### மண்டை தீவு - வேலணையூடான பயணம்

கடந்த வாரங்களில், தற்போதைய வறட்சி பற்றியும், வறட்சி நிவாரணம் பற்றியுமான செய்திகள் பலவும் பத்திரிகைகளில் பிரபல்யமாகின. அத்தகைய செய்திகளில் ஒன்று தந்த ஈர்ப்பே அது பற்றி ஆரய்ந்தறிய என்னையும் உந்தியது. யாழ்ப்பாண நகரிலிருந்து மேற்குப் புறமாகக் கடலை ஊடறுத்து அமைக்கப்பட்டிருக்கும் காப்பெற் வீதியூடாகத் தீவுகளில் மிகப் பெரிய தீவு என்று அறியப்பட்ட வேலணைத் தீவு ஊடாகப் புங்குடுதீவை அடையும் எனது பயணம் ஆரம்பமாயிற்று. வீதியின் இரண்டு பக்கங்களிலும் கடல் ஆர்ப்பரித்துக் கொண்டிருக்க காற்றைக் கிழித்தவாறு எனது மோட்டார் சைக்கிள் விரைந்தது. ஐந்தாறு கிலோமீற்றர்கள் வரை சென்றதும் பிரதான வீதியிலிருந்து இடது புறமாகக் கிளை வீதி ஒன்று பிரிந்து சென்றது. அவ்விடத்தில் குறிக்கப்பட்டிருந்தபடி இன்னும் ஐந்தாறு கிலோ மீற்றர்களில் மண்டைதீவு அமைந்திருக்கின்றது என்று புரிந்தது. தீவுகளில் யாழ்ப்பாணத்துக்கு மிகவும் அண்மையாகவுள்ள தீவு அது. இங்கே உள்ளூர் நீர் நிலைகள் வற்றி மூச்சிழுத்துக் கொண்டிருக்கின்றன.



ஒன்றிரண்டு டிரக்ரர்கள் நீர்தாங்கிய கொள்கலன்களுடன் அப்பகுதியில் உருண்டு திரிகின்றன. வேலணை - சாட்டிப் பகுதியிலுள்ள கிணறுகளில் இருந்தும், சில வேளைகளில் யாழ்ப்பாணத்திலிருந்தும் குடிநீர் தருவிக்கப்படுவதாகத் தகவல்கள்.

### அல்லல்படும் அல்லைப்பிட்டி

மண்டைதீவுக்கு அடுத்ததாக வேலணை எனும் பெரிய தீவுடன் ஒட்டியதாகக் காணப்படுகின்றது அல்லைப்பிட்டி. அல்லைப்பிட்டியை அண்மித்திருக்கும் மண்கும்பான் மற்றும் சாட்டிப் பகுதிகளில் மாத்திரமே தீவுகளில் நன்னீர் வளம் காணப்படுகின்றது. அந்த வளம் அருகிலிருந்தும் அல்லைப்பிட்டி வாழ் மக்களுக்கு அது எட்டுவதாயில்லை. குழாய் நீர் வசதிகள் இல்லை. இருக்கும் கிணறுகளும் வற்றிக் கொண்டிருக்கின்றன. குடிக்கத் தண்ணீர் இன்றித் தவிக்கின்றன குடிகள். அத்துடன் முருங்கை உட்பட சில மரக்கறிப் பயிர்களின் விளை நிலமாகவுள்ள அங்கு இப்போது தரிசு பூக்கத் தொடங்கியுள்ளது.

### வீதிக்கு வந்த வேலணைப் பெண்கள்

அல்லைப்பிட்டியையும் தாண்டி வேலணைப் பகுதிக்குச் சென்றாயிற்று. வீதி ஓரங்களில், இடைப்பட்ட சில தூரங்களில் குழாய் நீர் எடுப்பதற்காகக் குவிந்து நிற்கின்றனர் பெண்கள். அதிகாலைத் தூக்கம் கலைந்த முகங்களுடன். அவர்களிடம் ஒரு அவசரமிருந்தது. ஒருவருடன் பேசியதில் அது பற்றிய தெளிவும் பிறந்தது.

"தம்பி எங்களுக்கு ஆறு மணிக்குத் தண்ணி வருது. எட்டு மணி வரைக்கும் ஓடும். அந்த நேரத்துக்க நாங்கள் காலமைச் சாப்பாடு செய்திர வேணும், பிள்ளையளைப் பள்ளிக்குடத்துக்கு வெளிக்கிடுத்த வேணும், கூலி வேலைக்குப்போக வீட்டுக்காரரும் அந்த நேரம் வெளிக்கிடுவார். சாப்பாடு செய்யாட்டியும் அதுகளுக்குத் தண்ணி வென்னியாவது வைச்சுக்குடுக்க வேணாமா...? அந்த நேரம் பாத்துத் தண்ணியும் எடுக்க வரவேணும்.... எங்கட பகுதி மட்டுமில்ல எங்களுக்கு அங்கால கண்ணபுரம், அம்பிகை நகர் எண்டும் இடங்களிருக்கு. அவைக்கு மத்தியானம்... பன்ரெண்டு மணி... அப்பிடித்தான் தண்ணி. வேலைக்குப் போனவை மத்தியானச் சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வரக்கிடையில தண்ணி எடுத்து முடிச்சு அவை சமைச்சிர வேணும். இப்ப வர வரத் தண்ணியும் வேகமா ஓடுறதில்ல. அது ஓடுற வேகத்துக்குப் பாத்துக் கொண்டு றோட்டுக் கரையில காவல் கிடக்க வேண்டியிருக்கு. இஞ்ச விவசாயத்துக்கோ, கட்டிடங்கட்டவோ, கால் நடையளுக்கோ நாங்க இந்தத் தண்ணியப் பாவிக்கிறது இல்ல. குடிக்கிறதுக்கு மட்டும்தான்"

மரக்கறியும் கீரை வகை ஒன்றும் வாங்கிக் கொண்டு குடத்துக்குள் குழாய் நீர் பிடிக்க வந்திருந்த குமுதம் அக்கா இவ்வாறாகச் சொல்லிக் கொண்டு வீடு நோக்கி விரைகின்றார்.



### வறட்சியின் உச்சத்தில் புங்குடுதீவு

வேலணையையும் தாண்டிச் சென்றதில் கடலை ஊடறுத்து மறுபடியும் நீண்ட வீதி. ஆனால் அது காபெற் வீதி அல்ல. மலையும் மடுவும் போன்ற குன்றும் குழியுமான வீதி. வேகத்தைத் தணித்ததில் ஊர்ந்து கொண்டிருந்தது மோட்டார் சைக்கிள்...

நீர் நிரப்பியபடி அடுத்தடுத்து வந்துகொண்டிருக்கும் டிரக்ரர்கள் சிலவும் என்னைத் தாண்டிச் சென்றன வேகமாக. எதிர்ப்புறமிருந்து வெறுமையான கலன்களுடனும் அவற்றில் சில இன்னும் வேகமாக. இந்தக் கரடுமுரடான வீதியில் எவ்வாறுதான் இவர்களால் பயணிக்க முடிகின்றதோ...? புங்குடுதீவை அடைந்தாயிற்று. அடிக்கும் காற்றில் பயங்கர வெம்மை. தரையெங்கும் வெயிலின் ஆலகால ஆட்சி. ஒவ்வொரு வீட்டுக்கும் முன்புறத்தில் நீர்த்தாங்கிகள் காத்துக்கிடக்கின்றன. வீதி ஓரங்களில் நீர் ஏந்திக் கொள்ளும் கலன்களுடன் மக்களும் காத்து நிற்கின்றனர். ஓகோ... இதற்கு முதல் நான் கண்டுவந்த வேலணை போன்று இங்கு குழாய் நீர் வசதி இல்லைப்போலும்...! சரிதான். அத்துடன் தரைக்கீழ் உவர்நீரும் மூச்சடங்கிக் கிடக்கின்றது. பிரதேச சபை, சர்வோதயம், தனியார் எனப் பலதரப்பட்டவர்களும் அங்குள்ள மக்களுக்குத் தண்ணீர் தருவதில் அல்லோல கல்லோலப் படுகின்றார்கள். அத்தனை பேர்களின் டிரக்ரர்களும் பதறியடித்து ஓடித்திரிகின்றன.

ஒழுங்கைக்குள் ஒரு பெண்மணி. இரண்டு பிளாஸ்ரிக் கலன்களை வீதிக்கு அப்பால் தெரியும் வண்ணம் வைத்தபடி காத்திருக்கின்றார்...

"நான் யாழ்ப்பாணம் வெளிக்கிட்டு நிற்கிறன் தம்பி. தண்ணி டிரக்ரரை இன்னும் காணவில்லை. இஞ்ச ஒரு லீற்றர் தண்ணி ரெண்டுருபா அம்பேசம். இந்த மஞ்சள் பைவருக்க(தான் வைத்திருக்கும் கலன்களைக் காட்டுகிறார்) அடிக்கிறதுக்கு 20 ரூபாயும் இந்த நீல பைவருக்க அடிக்கிறதுக்கு 60 ரூபாயும் எடுப்பினம் ஒவ்வொரு நாளும் இந்தளவு தண்ணி எங்கட குடும்பத்துக்குக் குடிக்கிறதுக்குத் தேவை. ஆயிரம் லீற்றர் கான் வைச்சிருக்கிறவயும் இருக்கினம். அதுக்க அடிக்கிறதுக்கு அறுநூறு ரூபா எடுக்கினம். உள்ளூருக்க இருக்கிற கோவில் கிணத்துத் தண்ணியள் ஓரளவுக்குப் பருவாயில்லை. குளிக்கக் கழுவப் பாவிக்கலாம். உவர் எண்டாலும் இப்ப அதுகளும் வத்திக்கிடக்கு. உவர்த் தண்ணீல குளிச்சாலும் உடுப்புத் தோய்ச்சாலும் கடைசியா இந்த நல்ல தண்ணீல கொஞ்சம் எடுத்துக் கழுவிக் கொள்ளுவம். தண்ணிக்குத் தவம் கிடக்கிறது எண்டது வருசம் முழுக்க எங்களுக்கு வேலைதான். அன்றாடச் சாப்பாட்டுக்குக் காசிருக்கோ, இல்லையோ ஒவ்வொரு நாளும் தண்ணிக்குக் காசு வைச்சிருக்க வேணும். காசிருந்தாலும், இந்த முறை தண்ணிக்குத் தட்டுப்பாடாய்க் கிடக்குது". ஆதங்கப்பட்டுக் கொள்கின்றார் அவர். இவ்விடம் புங்குடுதீவு பத்தாம் வட்டாரமாக இருக்க வேண்டும்...!

### அதையும் தாண்டினால் நிலமை ஏதோ...?

புங்குடுதீவு நீளம் சென்றதில் குறிகாட்டுவான் துறை வந்தடைந்தது. அதுவரைக்கும் அவ்வூர் மக்களும் கால்நடைகளும் பயிர்களும் பட்டு நின்ற பரிதவிப்புக்களை மாத்திரமே பார்த்துச் செல்ல முடிந்தது. இந்த வறட்சி இவ்வாறே நீண்டு சென்றால், இவை தாண்டி அமைந்திருக்கும் நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு, எழுவை தீவு போன்றவற்றின் நிலை எவ்வாறாகவிருக்குமோ...? அவைகூட நன்னீரற்ற நிலங்கள்தானே? இவ்வாறு நீரின்றித் தவிக்கும் மக்களின் நிரந்தரமான தாகத்துக்கு என்னதான் தீர்வு...? இல்லையேல் இது தொடர்கதையாக நீளத்தான் போகின்றதா...? பதில் தருவதற்குப்பொறுப்பாளிகள் இனியாவது விழிப்பார்களா...?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு தரப்பு மோதலுக்கு வித்திடுகிறது வளைகுடா



பிரகாஸ்

வளைகுடாவில்ஏற்பட்ட பிரிவினைகள் தற்போது இரண்டு தரப்புகள் உருவாகக் காரணமாகியுள்ளன. ஏற்கனவே சவூதியை வைத்துத் தனது எண்ணத்தை நிறைவேற்றிவருகின்றது அமெரிக்கா. இந்த நிலையில் தற்போது கட்டாரை வைத்துத் தனது எண்ணங்களை நிறைவேற்ற எத்தனிக்கின்றது ரஷ்யா.

**பதற்றத்தின் பின்னணி**

ஈரானை, சவூதி உள்ளிட்ட அரபு நாடுகள் தற்போது தம்து எதிரியாகக் கொண்டுள்ளன. அங்கிருக்கும் ஆயுதக் குழுக்களுக்குக் கட்டார் இராணுவ உதவிகளையும், நிதி உதவிகளையும்வழங்குகின்றது என்று சவூதி, பஹ்ரைன், எகிப்து, ஐக்கிய அரபு இராச்சியம் என்பன குற்றம் சாட்டின. குறிப்பாக, தமது நாட்டில் குழப்பம் மற்றும் நாச வேலைகளைச்செய்யக்கட்டார்திட்டமிட்டுள்ளது என்று பஹ்ரைன் குற்றம் சுமத்துகிறது. இந்தப் பின்னணியிலேயே இந்த நாடுகளுக்கு இடையில்மோதல்கள் வெடித்துள்ளன.

தன்னை ஒதுக்கி வைத்த நாடுகளுக்குத் தனது வானூர்திச் சேவையை கட்டார் நிறுத்தியுள்ளது. மற்றைய நாடுகளும் கட்டாருக்குத் தமது வான், கடல், தரை பரப்புக்களில் முழுவதுமாகத் தடை விதித்துள்ளன. சவூதி ஒரு படி மேலே சென்று கட்டாரின் ஊடகமான அல் ஜசீராவை முடக்கியது.

தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கும் தடை விதித்தது. கட்டார் விதித்த தனித் தடையை அடுத்து ஐக்கிய அரசு இராச்சியம் களத்தில் இறங்கியது. அந்த நாடு தனது எல்லைக்குள் இருந்த கட்டார் நாட்டவர்களையும், கட்டார் தூதரக அதிகாரிகளையும் வெளியேற்றியது.

**அமெரிக்கா ஆதிக்கம்**

வளைகுடாவைப்பொறுத்தவரை அங்குள்ள மிகப் பெரும்செல்வந்த நாடான சவூதியை அமெரிக்கா தனது பிடிக்குள் வைத்துள்ளது. ட்ரம்ப் அதிபரானதும் தனது முதலாவது வெளிநாட்டுப் பயணத்தைச் சவூதிக்கே மேற்கொண்டிருந்தார். பல இலட்சம் கோடிகள் பெறுமதியான இராணுவத் தளபாடங்களைச் சவூதிக்கு அமெரிக்கா விற்கவுள்ளது. மொத்தத்தில் வளைகுடாவில் அமெரிக்காவின் செல்லப்பிள்ளையாகச் சவூதி இருக்கின்றது. அமெரிக்காவுக்கு எதிரான போக்கை ஈரான் கொண்டிருந்தது. ஈரான் கட்டாரின் நட்பு நாடு. எனவே ஈரானுடன் கட்டார் கொண்டுள்ள உறவைத் துண்டிக்கச் செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் அமெரிக்கா தனது செல்லப்பிள்ளையான சவூதியையும், சவூதியின் பேச்சைத் தட்டாத மாலைதீவுகள், ஐக்கிய அரபு இராச்சியம், ஏமன் ஆகிய நாடுகளையும் வைத்துக் காய்நகர்த்துகின்றது என்ற எண்ணமும் இல்லாமல் இல்லை.

**ரஷ்யாவும் வந்தது**

உலக வல்லரசு, மூன்றாவது விடயத்தில் மூக்கை நுழைக்கும் திறன் இவற்றை அமெரிக்காவுக்குச்சொல்லிக் கொடுக்க வேண்டும் என்ற தேவை இல்லை. அமெரிக்காவுக்குச் சவால் விடக்கூடிய ஒரு நாடாக ரஷ்யா உள்ளது. ஆனால் வளைகுடாவில்ரஷ்யாஎந்தநாட்டையும்தனது கைக்குள் வைத்திருக்கவில்லை. இந்த விவகாரத்தை ரஷ்யா மிகச் சாதகமாகப் பயன்படுத்தியுள்ளது. சவூதி விதித்த தடையால் கட்டாருக்கு ஒரு பின்னடைவு உண்டென்றால் அது காய்கறிகள், பழங்கள், பால் வகைகள் போன்றவற்றுக்குத் ஏற்படும் தட்டுப்பாடே. அவற்றை வழங்க ரஷ்யா முன்வந்துள்ளது. தேவையான நேரத்தில் தேவையானதைக் கொடுத்துக் கட்டாரை வளைத்துப் போட்டுள்ளது ரஷ்யா. இனி சவூதிக்கு அமெரிக்கா என்றால், கட்டாருக்கு ரஷ்யா.

**அமெரிக்காவுக்கு எதிராக ஈரான் மற்றும் துருக்கி**

வளைகுடாப் பிரச்சினை தோற்றம் பெறுவதற்கு முன்னரே ஈரான் மற்றும் துருக்கி ஆகியன அமெரிக்காவுக்கு எதிரான போக்கைக் கொண்டிருந்தன. ஈரானின் அணுவாயுதத் திட்டங்களை அமெரிக்கா கடுமையாக எதிர்த்தது. அதன் திட்டங்களுக்கு அமெரிக்கா அனுமதி வழங்காது என்று ட்ரம்ப் இந்த வருடத்தின் தொடக்கத்தில் தெரிவித்திருந்தார். இதற்கு, "எமது சொந்த விடயங்களுக்கு அமெரிக்காவின் அனுமதி தேவையில்லை. அமெரிக்கா தனது வேலையை மட்டும் பார்ப்பது சிறந்தது" என்று ஈரான் அதிபர் ரவுஹானி தெரிவித்திருந்தார். இந்த விவகாரம் தற்போது மேலும் உருப்பெற்றுள்ளதால்அமெரிக்காவின் நகர்வுகளை எதிர்க்கும் மனோநிலை ஈரானுக்கு இயல்பாகாவே ஏற்பட்டுள்ளது.


சிரியாவில் துருக்கியின் படைகளும் முகாமிட்டுள்ளன. அமெரிக்காவும் அங்கு முகாமிட்டுள்ளது. குர்தீஸ் படைகளைத் துருக்கி தனது எதிரியாகக் கருதுகிறது. ஆனால் அவற்றுடன் அமெரிக்கா நட்புப் பாராட்டுகிறது. துருக்கியிடம் இருந்து குர்திஸ் படைகளுக்குப் பாதுகாப்பு கொடுப்பதே அமெரிக்காதான். இதனால் தீர்க்கப்பட வேண்டிய பல கணக்குகள் துருக்கிக்கும் உள்ளன. எனவே வளைகுடா விவகாரத்தில் சவூதிக்கு அமெரிக்கா ஆதரவு கொடுத்தால் துருக்கியும், ஈரானும் கட்டாருக்கு ஆதரவு கொடுக்கும். ஆதரவு கொடுக்கவும் ஆரம்பித்துள்ளன. இதற்கு தக்க சான்றாகத் துருக்கி, கப்பல்கள் மற்றும் விமானங்களில் காய்கறி, பழ வகைகளைக் கட்டாருக்கு அனுப்பி[illegible]யைக் குறிப்பிடலாம்.

> வளைகுடா மற்றும் அரபு நாடுகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினையானது கடந்த காலப் பகைமைகள் மற்றும் கசப்புணர்வுகளை வைத்து நடந்துகொண்டிருக்கும் ஒரு நாடகம் என்று திட்டவட்டமாகத் தெரிகின்ற போதிலும் ஒரு விடயம் மட்டும் புரியாத புதிராகவே உள்ளது. அதாவது 12பில்லியன் அமெரிக்க டொலர்களுக்குப் போர் விமானங்களைக் கட்டாருக்கு விற்பனை செய்ய அமெரிக்கா சம்மதித்துள்ளது!

**புரியாத புதிர்**

வளைகுடா மற்றும் அரபு நாடுகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினையானது கடந்த காலப் பகைமைகள் மற்றும் கசப்புணர்வுகளை வைத்து நடந்து கொண்டிருக்கும் நகர்வுகள் என்று திட்டவட்டமாகத் தெரிகின்ற போதிலும் ஒரு விடயம் மட்டும் புரியாத புதிராக்வே உள்ளது. அதாவது 12பில்லியன் அமெரிக்க டொலர்களுக்குப் போர் விமானங்களை கட்டாருக்கு விற்பனை செய்ய அமெரிக்கா சம்மதித்துள்ளது! கட்டார் ஆயுதக் குழுக்களுக்கு உதவி செய்கிறது என்று தெரிவித்த அமெரிக்கா எவ்வாறு கட்டாருக்கான இத்தகைய மிகப் பெரும் ஒப்பந்தத்துக்குச் சம்மதித்தது? அதுவும் சவூதிக்கு எதிராக, சவூதியின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் கொடுக்கும் வகையில் கட்டார் இந்த விமானங்களைப் பயன்படுத்த வாய்ப்புள்ளது. அப்படியிருந்தும் எந்த அடிப்படையில் அமெரிக்கா இத்தகைய ஒப்பந்தத்துக்கு இணங்கியது என்பது மட்டும் குழப்பமான விடயமாகவே நீடிக்கின்றது.

எது எப்படியோ வளைகுடா விவகாரத்தில் இப்போதைக்கு இரு குழுக்கள் உருவாகியுள்ளன. அமெரிக்கா, சவூதி அரேபியா, ஏமன், மாலைதீவு, பஹ்ரைன், ஐக்கிய அரபு இராச்சியம் என்று ஒரு தரப்பும் ரஷ்யா, கட்டார், துருக்கி, ஈரான் என்று மற்றொரு தரப்பும் உள்ளன. கடந்த மாதத்தில் கொரியத் தீபகற்பத்தில் இருந்த போர்ப்பதற்றம் இந்த மாதம் வளைகுடாவுக்கு மாறியுள்ளது. இனி அது எங்கெங்கோ...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றமும் தண்டனையும்

குணசேகரன் சக்தீனா





வெளியில் இருந்து பார்த்தால் சிறிய விடயமாக இருக்கும் ஒரு பிரச்சினை மன்றுக்கு வந்து விட்டால் பெரிய பிரச்சினை யாகத் தெரிகின்றது. இதில் அந்தப் பிரச்சினை வென்றுவிடுகின்றது என்பதும் உண்மைதான். அவ்வாறான ஒரு பிரச்சினை மல்லாகம் மன்றுக்கு வந்து தீர்ப்பு முற்றாயிற்று. ஆனால் அந்தப் பிரச்சினை அடங்காமல் இருக்கின்றது என்பது இன்னும் வேடிக்கையாகவே இருக்கின்றது.

மல்லாகம் நீதவான் மன்று வழங்கிய தீர்ப்புக்குத் தடையுத்தரவு வழங்கக் கோரி புத்தூர் மேற்கு கலைமதி கிராம சங்க அங்கத்தவர்களால் யாழ்ப்பாணம் மேல் மன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது என்பது ஒரு கதை.

"'என்னய்யா சுடலைப்பிரச்சினையும் மன்றுக்கு வந்துவிட்டதா?"

சிறுப்பிட்டி மேற்கு கிராமம் மற்றும் புத்தூர் மேற்கு கலைமதி கிராமத்தினருக்கும் இடையில் சுடலைப் பிரச்சினை ஏற்பட்டு. அதுவே வன்முறையாகி. பின்பு மல்லாகம் நீதவான் மன்றால் விசாரிக்கப்பட்டு விசாரணை முடிவில் தீர்ப்பும் வழங்கப்பட்டது.

இதற்குத் தான் அந்த ஐயா சொன்னார், "'இரு சமூகங்கள் இணைந்து தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை அனைவருக்கும் சென்றுவிட்டது. என்னவென்று சொல்வது இந்த மனிதர்களை? தாம் வாழும் கொஞ்ச நாட்களுக்குள் பலவற்றை மூட்டை கட்டிக்கொண்டு வாழுகின்றார்கள். நாளை அனைவரும் இந்தச்சுடலைக்குள் தான் என்பதை மறந்து விட்டார்களோ..." என்றவர் சலித்துக்கொண்டார். அவரைச் சுட்டிக்காட்ட முடியவில்லை. அவரின் இளமையும் இனித் திரும்ப வரப்போவதில்லை.

அந்தத் தீர்ப்பில் மூன்று உத்தரவுகள் மன்றால் பிறப்பிக்கப்பட்டிருந்தன. ஒன்று, சுடலை யைச்சுற்றி, தீர்ப்பு வழங்கப்பட்ட நாளில் இருந்து சரியாக ஒருமாதகாலத்துக்குள் சுற்றுமதில் கட்டப்பட வேண்டும். இரண்டாவது, இன்னும் சில மாதங்களுக்குள் மின்சாரம்மூலம் சடலத்தை எரியூட்டுவதற்கான நடவடிக்கைகள் செய்யப்பட வேண்டும் மூன்றாவது இந்த விடயத்துக்கு எதிராகச் செயற்படுபவர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுமன்றில் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவு பிறப்பித்திருந்தார்.

அண்மைய காலங்களில் புத்தூர் கலைமதிக்கிராம மக்கள் தமது குடியிருப்புக்கள் மத்தியில் இருந்து வரும் சுடலையை அகற்றக்கோரி பல்வேறு கவனவீர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்து வருகிறார்கள். என்பதை நான் அறிந்திருக்கிறேன். ஆனால் அவை அகற்றப்படுவதால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றியதான எந்தவொரு முனைப்பும் இன்றித்தான் அவை முன்னெ டுக்கப்படுகின்றன போலும். மிகத் தெளிவாகத் தான் அவர் கூறினார். இப்பொழுது பலர் காதுகள் செவிடாகியிருக்கின்றன.

இங்கு வழங்கப்பட்டிருக்கும் தீர்ப்பும் சட்டத்தின் எடுகோளுக்கிணங்கத்தான் வழங்கப்பட்டிருக்கின்றது. இங்கு பிரச்சினையைக் கிளறிவிட்டிருப்ப வர்கள் தமது தனி விருப்பைத் தான் இதில் திணித்திருக்கிறார்கள் என்பது தான் கவலையாக இருக்கின்றது. வழக்கென்று வந்துவிட்டால் எதிர் மனுதாரர், மனுதாரர் என்ற இரண்டு பிரிவினர் இருப்பார்கள். இதில் சட்டத்தின்படி தீர்ப்பு வழங்கப்படும் அதை உரியவர்கள் எடுத்துக்கொள்ளும் விதத்தில் தான் இருக்கின்றது. ஒருவனுக்கு மகிழ்ச்சி, ஒருவனுக்குக் கவலை இது தான் முடிவு.

ஆனால் இவ்வாறான விடயம் ஒரு பொது விடயம். ஒரு சமூக நலன் சார்ந்த விடயம். ஆகவே அனைவரும் ஒற்றுமையாக இருந்துகொள்ள வேண்டும் என்ற பாடத்தையும்

> வாழுகின்ற அனைவரும் சுடலைக்குத்தான் இறுதியில் போய்க்கொள்ள வேண்டும். ஆனால் இங்கு சுடலைக்காகச் சண்டை பிடிக்கின்றார்கள் என்பது எவ்வளவு கவலை யான விடயம். சட்டத்தின் மூலம் தீர்க்கப்படும் பிரச்சினைகள் இன்னொரு பிரச்சினைக்கு வித்திடாமல் இருக்கவேண்டும்.

## வேடிக்கை என்னவெனில்....

றது. "'சுடலையில் சடலத்தை எரியூட்டுவது தானே முறை. அதில் என்ன மின்சாரத்தில் எரியூட்டுவதும் விறகுகளால் எரியூட்டுவதும்...? இந்துக்களின் முறைப்படி உடலத்தை எரியூட்டுவது அவர்களின் சம்பிரதாயங்களில் ஒன்று. அதை யாரும் இல்லாது செய்ய முடியாது. ஆனால் அந்த உடலத்தை மின்சாரத்தில் எரியூட்டக் கூடாது என்பதும் விறகின் மூலம் எரியூட்ட வேண்டும் என்பதும்...?" வார்த்தைகள் ஸ்தம்பித்தன. நிச்சயமாக இனி காதுகொடுத்துக் கேட்க முடியாத வார்த்தைகள் வரும் என்று நினைத்தேன். மிகக் கஸ்ரப்பட்டுத்தான் அவரும் அடக்கிக்கொண்டார் போலும்...!

வாழுகின்ற அனைவரும் சுடலைக்குத் தான் இறுதியில் போய்க்கொள்ள வேண்டும். ஆனால் இங்கு சுடலைக்காகச் சண்டை பிடிக்கின்றார்கள் என்பது எவ்வளவு கவலையான விடயம்.

சட்டத்தின் மூலம் தீர்க்கப்படும் பிரச்சினைகள் இன்னொரு பிரச்சினைக்கு வித்திடாமல் இருக்கவேண்டும். மக்கள் தங்கள் இடங்களில் நிம்மதி யுடன் ஒற்றுமையாக வாழவேண்டும். சட்டம் விரும்புவதும் அதுவே.



# காதலோடு...

நான் உன்னைக் காதலிக்கும்போது
காயங்களை மட்டுமே தந்துகொண்டாய்
நீ என்னைக் காதலிக்கும்போது
பட்ட காயங்கள் எல்லாம்
மறைந்து போகின்றன...

காலங்கள் தொலைத்து
நம் இந்தக் காயங்களும்
தொலைவது தான் காதல் என்றால்
காயங்களை இணைத்து
ஒரு சரித்திரம் படைப்போம்
நமக்காகக் காத்திருக்கின்றன
கனவுகளும் காலங்களும்....

காலங்களின் கையில் நம்
காதல் தங்கியிருக்கின்றது
உன்னைச் சுமந்தபடியே
எத்தனை ஜென்மங்கள்
வேண்டுமானாலும்
என் பயணமும்
உன்னோடு
சாத்தியப்படக்
காத்திருக்கிறது!

நீ தந்த
துன்பங்கள்,
கவலைகளை
உன்னோடு சேர்ந்து
ஒன்றாக வெல்லக்
காத்திருக்கிறேன்
நீ தந்த காதலோடு.

# கனவுகளோடு...

பூட்டிய கதவுக்குள்,
அலங்தோலமாய் உள்ள படுக்கையில்,
முகட்டு வெளியை வெறித்துக் கொண்டு,
மதியம் தாண்டிய இரவு வரை,
கனவுகளை வைத்துக் கொண்டிருந்தேன்

எப்போதும்போல அதுவுமொரு
அடக்கு முறைக் காலம் தான்...
காற்றும் இல்லாத அறையில்
மூடச் சொல்லி விழிகள் கெஞ்சவும்
மூச்சற்றுக் கிடந்தேன் கன்னங்கள் நனைந்தபடி...

இன்று நீ விலகிப்போகிறாய் என்று
தெரிந்தும் நான் நீயாக முடியாமலும் நான்
நானாகப் பிரிய இயலாமலும்
நடுவில் அவஸ்தையுடன் நான் மட்டுமே...



எஸ்.தர்சி கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பத்தாயம்

ஒவ்வொரு மாதத்திலும், அதன் மூன்றாவது வாரத்தில், ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை உலகுக்கு வளம்சேர்த்து மறைந்த சிறுகதையாசிரியர் ஒருவரின் சிறுகதை மறுபிரசுரம் செய்யப்படும். அந்த வகையில் இந்த வாரம் அமரர் இரசிகமணி கனக செந்திநாதன் அவர்களின் 'செம்மண்' எனும் சிறுகதை பிரசுரமாகின்றது.



இரசிகமணி கனக செந்திநாதன் ஈழத்தின் முன்னோடிப் புனைகதை ஆசிரியர்களில் ஒருவர். யாழ்ப்பாணம் குரும்பசிட்டியில் 1916இல் பிறந்த இவருடைய இயற்பெயர் செவ்வேழ். 'வெண்சங்கு' இவரது சிறுகதைத் தொகுதி. 'வெறும்பானை', 'விதியின் கை' என்பன இவரது நாவல்கள். 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' என்பது இவரது ஆய்வு நூல். சிறுகதைகள், நாவல்கள், நாடகம், விமர்சனம், கட்டுரை முதலான பல துறைகளில் எழுதியவர். யாழ். இலக்கிய வட்டத்தை உருவாக்கி, வளர்ப்பதிலும் பெரும் பங்காற்றினார். ஈழகேசரி பத்திரிகையில் இவரது ஆக்கங்கள் பல வெளிவந்தன. 'ஒரு பிடி சோறு' என்ற இவரது சிறுகதை ரஷ்ய மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டது. யாழ்பாடி, உபகுப்தன், கரைக்கவி கந்தப்பனார் போன்றன இவரது புனைபெயர்கள். 'நடமாடும் நூல் நிலையம்' எனப் பிற்காலங்களில் இலக்கிய உலகில் பேசப்பட்டவர். 'இரசிகமணி', 'இலக்கியச் செல்வர்' என்பன இவருக்களிக்கப்பட்ட பட்டங்கள்.

கனக செந்திநாதன்




கைதேர்ந்த ஓவியன் ஒருவன், தூரிகையிலே அகப்பட்ட வர்ணத்தை அங்குமிங்கும் அள்ளித் தெளித்தாற்போல அந்தி வானம் காட்சியளித்தது. பூவக்கல்லித் தோட்டத்தின் தென்னை மர உச்சியின் மீது தோன்றும் மஞ்சள் நிறத்தின் காந்தி அடுத்து வரும் கருக்கல் இருளில் கரைய ஆரம்பித்தது...

பூவக்கல்லி, குட்டியப்புலம் என்ற கிராமத்தின் மத்தியில் பார்ப்போர் மனதைப் பறித்திழுக்கும் செம்மண் செறிந்த தோட்டம். சில வருடங்களாகத்தான் அத்தோட்டம் இளங்குமரி போல மேனி மினுக்கிக் கொண்டிருக்கின்றது. வானம் பார்த்த பூமியாகிய குட்டியப்புலத்தில் ஆளப் பதிந்த இருபத்தைந்து முழக் கிணற்று நீரினால் அதை வளப்படுத்தியவன் பசுபதி.

'இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின் நிலம் என்னும் நல்லாள் நகும்' என்பதற்குப் படித்தவர்கள் வியாக்கியானம் செய்ய, சோம்பேறிகள் திண்ணை தூங்க, பசுபதி மாத்திரம் வாயல் பேசாது கையால் உழைத்துப் பூமித் தாயின் கடைக்கண் பார்வையைப் பெற்றான்.

எதிரே வரும் குரக்கன் நடுகைக்காக அந்தச் செம்மண் நிலம் உழுது பண்படுத்தப்பட்டிருந்தது. அதன் இனிய வாசனை, நிலத்தின் சுகந்தம் போவோர் வருவோரைப் புளகாங்கிதம் அடையச் செய்தது. பூவக்கல்லி தன் செந்நிற வாயால் சிரித்துக் கொண்டிருந்தாள்.

கண்ணுக்கு இனிமையும் கருத்துக்குப் புதுமையும் ஊட்டும் அந்தச் சூழலை இரசிக்கத் திரணி யற்றவராய் தன் நிலத்தில் உண்டாக்கிய 'தட்டையன்' புகையிலையை நடுங்கும் கைக ளாலே சுருட்டிக் கொண்டிருந்தார் பசுபதி. இன்று அவர் கிழவனாகி விட்டார். அவரது விழி வட்டத்தின் அந்தத்திலே நிலைத்து நிற்கும் நினைவலைகள் மனத்திலே சுருள் அவிழ, அவர் தன் கைகளை ஒரு முறை வருடிக் கொண்டார்.

இரண்டு கைகள் இருபது பரப்பு நிலத்தைக் கொத்தியும், உழுதும், கிண்டியும் பொன் கொழிக்கச் செய்து விட்டனர். பாட்டன், முப்பாட்டன் காலத்தில் அம்மை வடுக்கள் உள்ள முகம்போல குண்டும் குழியுமாக ஒப்பமற்றுக்கிடந்த பூவக்கல்லி தன் கைவண்ணத்தின் செயலிலே, உழைப்பின் சக்தியிலே மெருகு பெற்றுக் காட்சியளிப்பதை நிமிர்ந்து பார்த்தார். கிணற்றடியில் துலா நீண்டு நிமிர்ந்து வானத்தை முட்டுவதைப்போலத் தெரிந்தது.

வாலிப வயதிலே, நடுச்சாமத்தில், அந்தத் துலாவில் தான் பாடிய, 'தேடி வந்தேனே வள்ளி மானே' என்ற நாடகப்பாட்டு நினைவுக்கு வந்தது. ஒரு முறை தன்னை அறியாமலே சிரித்துக் கொண்டார். முதுமையிலே இளமைக்கால நினைவு தரும் இன்பம் இழையோடியது.

காகங்கள் கூடுகளை நோக்கித் திரும்பின. பசுக் கூட்டங்கள் பட்டிகளை நோக்கி விரைந்தன. கிளித்தட்டு விளையாடிய மொட்டைத் தலைச் சிறாரும் பெருஞ் சத்தமிட்டபடி வீடுகளுக்குச் சென்றனர். கோவில் மணி 'டாண் டாண் என ஒலித்தது. 'முருகா' என்றது அவர் வாய். கடைசி முறையாகத் தனது தோற்றத்தை ஆவலோடு பார்த்தார் அவர். பக்கத்திலே நின்ற கதலி வழைக்குட்டியின் குருத்தைத் தன் கையால் வருடினார். பேரக் குழந்தையின் அன்புடன் தரும் இதத்தைக் கண்ட அவர் கண்களில் நீர் முத்துக்கள் சுரந்தன.

பசுபதிக் கிழவனார் 'முரட்டுப் பசுபதி' என்ற பெயர் கேட்ட காலத்தில் அதாவது ஐம்பது வருடங்களுக்கு முன் பூவக்கல்லித் தரையில் கிணறு வெட்டுவித்துப் பொங்கல் பொங்கிய அன்று நட்ட ஞாபகச்சின்னமான வாழை குலை தந்து வீழ, அதன் அடியிலே முளைத்த வாழையடி வாழையாக வந்த சந்த்தியின் குட்டி அது. அதனைத் தடவும்போது தன் சந்ததியின் பிள்ளைகளின் நினைவு எழவே அவரது கண்கள் கண்ணீர் உகுத்தன.

அவருக்கென்று ஆண் குழந்தைகள் பிறக்கவில்லை. பிறந்தவை இரண்டும் பெண்கள். 'மங்கையாகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும் அம்மா' என்று யாரும் பாடலாம். ஆனால், நிதர்சன வாழ்க்கையில்... கணவன் என்ற காவற்காரனின் அடிமை அவள். பெண் வி[illegible] அவனால் ஆட்டப்படும் சூத்திரப் பாவை. பசுபதிக் கிழவனாரின் பெண்களும் ஆடினார்கள், ஆட்டப்பட்டார்கள். வகுப்புக்கலவரத்தின் பின் ஆட்டம் பேயாட்டமாக மாறியது.

புழுதி மண் புரள மண் கிண்டும் வேலையை ஏளனமாக உதறித்தள்ளி, கண்டிப்பகுதியில் சுருட்டுக்கடை வைத்துப் பிழைக்கப் போன மூத்த மருமகன் கணபதிப்பிள்ளை, 'பெட்டிக் கடை' யிலிருந்து 'இரும்புக்'கடை' முதலாளியாக விலாசம் போட ஆரம்பமாகும்போது, வகுப்புக் கலவரம் வந்து அனைவரையும் வாரிச் சுருட்டிக் கொண்டு போய்விட்டது.

இளைய மருமகன் இளையதம்பி, 'நானேன்ன மூத்த மருமகனுக்குக் குறைந்தவனா' என்ற இறுமாப்பில் களுத்துறைப் பகுதியைச் சரணடைந்து, 'வழி வியாபாரஞ்' செய்து – சுருட்டு விற்று இனி ஒரு கடை எடுத்து நடத்தலாம் என்ற நம்பிக்கை துளிர்க்கும்போது அவன் பிழைப்பிலும் மண் விழுந்தது. பிறந்த ஊரே சதம் என எண்ணி வந்தும் நிலத்தை நாடவில்லை. 'டிறைவர்' வேலை பழகி வருகிறான்.

பசுபதிக் கிழவனாருக்கு இவையெல்லாம் வேதனையை விளைவித்த சங்கதிகள் தாம். நிலத்தாயை ஏளனம் செய்ததால் வந்த வினை என்ற எண்ணம் மிக மிக, அதுவே அவரைப் படுக்கையில் விழச் செய்துவிட்டது. உள்நாட்டு வைத்தியர்களின் குடிநீரும் குளிகைகளும் பழைய காலத்துப் பெட்டகத்தின் மீது அவரை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றன.

வாழ்க்கையோடு இணைந்து – கண்கள் இரண்டும் ஒன்றுபோலக் கண்டு இன்று அவர் போலாகிவிட்ட கண்ணாத்தைக் கிழவி உரைத்துச் சிரட்டையிலூற்றிய மருந்தைக்கூட இன்று சாயந்தரம் அவர் குடிக்கவில்லை. அவரைக் குடிக்க விடாமல் வெளியே விரட்டியடித்த அந்தக் காரசாரமான பேச்சுக்கள்...

"சரி சரி... உன்னால் முடியுமானால் பூவக்கல்லிக்குள் காலை வை பார்ப்போம்" இது மூதத மருமகனின் சவால்.

"என்ன இப்பவும் முதலாளி என்ற எண்ணமோ? நான் வைக்கத்தான் போறன் எனக்குத் தான் தருவதாகக் கலியாணக் காலத்தில சொன்னார்கள்... நீயும் கூடத்தானே ஓம் என்று தலையாட்டினாய்! இப்ப உன்ர கடையெல்லாம் அடிபட்டதற்காக என்ர காணியைப் பிடுங்கப் பார்க்கிறியோ? இது இவரிட்டை முடியாது" இளைய மருமகனின் எதிர்பார்ப்பு. அவர்கள் தான் அப்படிக் கதைத்துக் கொண்டார்கள், அதற்குப் பெண்களும் ஒத்தூதினார்கள். அக்கா, தங்கை என்ற உறவு நீரில் எழுதிய எழுத்தாய்ப் போய்விட்டது. சண்டை பிடிக்கும் சேவல்களாய் அல்லவா மாறிவிட்டார்கள்.?

கண்ணுக்கு இனிமையும் கருத்துக்குப் புதுமையும் ஊட்டும் அந்தச் சூழலை இரசிக்கத் திராணி யற்றவராய் தன் நிலத்தில் உண் டக்கிய 'தட்டையன்' புகையிலையை நடுங்கும் கைகளாலே சுருட்டிக் கொண்டிருந்தார் பசுபதி. இன்று அவர் கிழவனாகி விட்டார்.

கண்ணாத்தைக் கிழவி, "அடியே, நீ கொஞ்சம் பொறு. ஏனடி சண்டை? பூவக்கல்லியை இப்ப யாருக்குக் கொடுத்துவிட்டம்? இருங்களேன் ஆறுதலாய்ப் பார்ப்பம்" என்று சமாதானப் படுத்தினாள்.

கிழவியின் எண்ணம் எதுவென்று பசுபதிக்குப் புரிந்து விட்டது. அந்தச் செம்மண் தரையைத் துண்டாடிப் போட்டு இரண்டு மருமக்களுக்கும் பங்கிடுவதுதான். பிள்ளை போல் வளர்த்துப் பாதுகாத்துப் பண்படுத்திய அந்த நிலத்தை இரண்டு துண்டாக்குவதற்கு, பெற்ற பிள்ளையை வெட்டிப் புதைப்பதற்கும் வித்தியாசம் இருப்பதாக அவருக்குப் படவில்லை. காலக் கண்ணில் அவர் கருத்தோடு கண்காணித்து வந்த நிலம் முடிவில் துண்டாடப் படுவதை அவரால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை நினைவு கூடத் தொடர முடியாத வேதனை.

அந்தக் கிராமத்தின் விவசாயிகளுக்கே அவர் ஒரு முன்னோடி. தொட்டதெல்லாம் பொன்னாக விளையும் என்ற ஐதீகம் வேறு. அதை உறுதிப்படுத்துவதுபோல பூவக்கல்லி பசுமை கொழித்துச் சாட்சியாய் நின்றது. ஆயுள்வரை அதிலே பாடுபட வேண்டும் என்று இலட்சியக் கோட்டில் நின்ற அவரை அந்த நோய் இப்படிக் கண் முன்னாலே கருகவிடச் செய்வதாகத் தோன்றியது. பழுத்த இலை மரத்தில் ஒட்டிக் கொண்டிருந்தாலும், காலக் காற்றுக்கு முன் எம்மாத்திரம்?

" அப்பு, நீங்கள் தான் இப்ப ஒண்டும் செய்ய முடியாமல் இருக்கிறியளே, அவர் கொஞ்ச நாளைக்குத் தோட்டத்தைப் பார்க்கட்டும்" என்றாள் மூத்த மகள். "சரி" என்றதின் பலன் எப்படிப்பட்ட காரசாரமான வாக்குவாதம்?

அந்திச் சூரியன் இருள் என்ற கருந்துணியால் தன்னை மூட முயன்று கொண்டிருந்தான். கிழவர் மெதுவாகப் பொல்லை ஊன்றிக் கொண்டு நடந்தார்.

கோவில் மணி மறுபடியும் ஒலித்தது. "முருகா இதுக்கொரு வழி காட்டு" என்று கன்னத்தில் போட்டுக் கொண்டார். கோவிலைத் தாண்டி நடந்துகொண்டிருக்கும்போது 'கணிங்... கணிங்' என்ற வெண்டைய ஒலி பின்னே கேட்கத் திரும்பிப் பார்த்தார்.

43

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லும் வழியின் தூரம்.. 6



ப்ரியமதா பயஸ்

இன்று காலையும் எங்கோ கிபிர்கள் குண்டுகளைப் போடுகின்றன. அவலச்சத்தங்கள் காதுகளை நிரப்புகின்றன. இவற்றுக்கிடையே குழந்தைகள் பயத்தாலும் பசியாலும் அழுகின்றன. அவர்களுக்குச் சாப்பாடு கொடுத்தாக வேண்டும். மரக்கறிகள் உட்பட்ட சமையல் பொருட்கள் எவற்றையும் பெற்றுக்கொள்ள முடியாத சூழல். வீதியின் அடுத்த பக்கத்தில் இருக்கும் எங்கள் வீட்டில் பெருவாரியான மரக்கறி வகைகள் காய்த்திருக்கின்றன. போய்ப் பிடுங்கிவருவதாயின் வழிவிடுமளவுக்குக் குண்டுமழை இன்னமும் ஓயவில்லை.

### உணவுப் பொருள்களுக்கு அல்லாட்டம்

தேவிபுரம் கடற்கரைப் பகுதியில் கறிசமைப்பதற்கு இறால் பிடித்துவருகின்றோம் என்று கூறிவிட்டு எமது காணியில் இருந்த சில குடும்பங்களின் ஆண்கள் கடற்கரை நோக்கிப் போனார்கள். எட்டுப் பேர் போன இடத்தில் நான்கு பேரைப் பிணமாகச் சுமந்துகொண்டு மீதி நான்கு பேரும் உயிரோடு வந்திருந்தனர். ஒரு வீட்டில் தந்தையும் மகனும், அடுத்த இருவரும் தனித் தனிக் குடும்பத் தலைவர்கள். எங்கள் காணி சாவு ஓலங்களின் இருப்பிடமானது. பத்து நிமிடத்துக்குள் அந்த நால்வரையும் அடக்கம் செய்துவிட்டனர். காரணம், நாம் அடுத்த கட்டத்துக்கு நகரவேண்டும்.

இத்தனைக்கு மத்தியிலும் எனது தந்தைக்கு எமது பசியைப் பொறுத்துக்கொண்டு அமைதி காக்கும் வல்லமை இருக்கவில்லை.

“காணிப்பக்கம் போய் மரக்கறியளையும் கொஞ்சம் ஆய்ஞ்சு கொண்டு, ரெண்டு, மூண்டு கோழியளையும் பிடிச்சுக்கொண்டு வாறன், சமைச்சுச் சாப்பிடுவம்”

என்று கூறிவிட்டு காஞ்சனா அக்காவின் சைக்கிளை வாங்கிக்கொண்டு புறப்படுகின்றார். அவருக்குப் பின்னால் நான் ஆசையாக வளர்த்த நாய் ‘லைக்கா’வும் புறப்படுகின்றது. எத்தனை தடவை போகவேண்டாம் என் மறித்தும் ‘லைக்கா’ நிற்க மறுத்துவிட்டு அப்பாவின் பின் துள்ளிக் குதித்து ஓடியது.


“சரி வரட்டும் விடு…” என அப்பாவும் கூட்டிக் கொண்டு போகின்றார். அப்பா வரும் வரைக்கும் நான் வாசலிலும், பங்கருக்குள்ளுமாக மாறி மாறி அங்கலாய்த்துத் திரிகின்றேன்.

‘படக் படக்’ என வித்தியாசமான சத்தத்தோடு வெடிக்கும் கொத்துக்குண்டுகள் பரவலாகவே அப்பா சென்ற திசையில் விழுந்து வெடிக்கின்றன. நெஞ்சு படபடத்துப் போகிறது. ஓடிச் சென்று பார்க்கவும் முடியாமல், நிலைமை என்னவென்று அறியவும் முடியாமல் நாம் தவித்துப் போகின்றோம்.

“அங்கை போகவேண்டாம் என்று எத்தனை தடவை சொன்னேன்” பயஸ் என்னைக் கடிந்து கொள்கிறார்.

### அப்பா எனும் ஆளுமை

அப்பா பெரும் துணிச்சல்காரன். சாவை எப்போதுமே ஒரு பொருட்டாக மதித்தவர் இல்லை. சாவு என்பது தவிர்க்க முடியாத ஒரு கட்டாயமான நிகழ்வு என்பது அப்பாவின் நெடுங்கால அபிப்பிராயம். தான் உயிரோடு இருக்கும் வரைக்கும் தனது பிள்ளைகளை நல்லபடியாக வளர்க்கவேண்டும் என்பதுதான் அவரது இலக்கு. எந்தப் பஞ்சத்திலும் அப்பா எம்மையோ எம்மைச் சார்ந்தவர்களையோ பசி, பட்டினியோடு இருக்க விட்டதில்லை. யாழ்ப்பாணத்தில், இந்திய இராணுவ ஒடுக்குமுறையின் போது, எம்மைக் காப்பாற்றுவதற்காக அப்பாவுடைய கார் எத்தனை, எத்தனையோ குறுக்கு வீதிகளூடாகவும், ஒழுங்கைகளூடாகவும் இந்திய இராணுவத்தின் ‘சினைப்பர்’ தாக்குதல்களையும் தாண்டி ஓடியிருக்கும். சிறுவராக நாம் இருந்த காலத்திலேயே போரின் சுமைகளைத் தாங்கும் தைரியத்தை எமக்குள் ஊட்டியவர் அப்பா. ஒரு தைரியசாலியாக எதையும் தாங்கும் பெண்ணாக என்னையும் அப்பாவே உருவாக்கினார். எங்கே நான் போகவேண்டும் என்றாலும் அப்பா தடைவிதிக்க மாட்டார். பெரும்பாலான தந்தையர்கள்போல் அப்பா எனக்குக் கட்டுப்பாடுகள் போட்டதில்லை. வாழ்க்கையை வெல்லும் சூட்சுமத்தை அப்பா தனது வாழ்க்கை மூலம் உணர்த்தினார். இருத்திவைத்து ஒருபோதும் அப்பா எனக்குப் புத்திமதி சொல்லியதில்லை. ஒவ்வொரு விடயத்தையும் நாமாக உணர எமக்குப் பூரண சுதந்திரம் தந்து வளர்த்தார். ஒவ்வொரு உயிரையும் அப்பா ஆழமாக நேசிப்பவர். எறும்பைக்கூட அப்பா நசித்துக் கொன்றிருக்க மாட்டார். அப்படியான எனது அப்பா சென்ற திசையில் பொழிந்த குண்டுகள் நெஞ்சை உறைய வைத்தன.



### ‘லைக்கா’வை இழந்த சோகம்

மூச்சு நின்று தவித்துக்கொண்டிருந்தது. நான் அங்கலாய்த்து அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருந்தேன். “பயப்படாத புள்ள, அவர் வந்திடுவார்” அம்மா சொன்னார். அந்த வார்த்தை ஆறுதலையும் திருப்தியையும் தந்தது. சற்றும் தாமதிக்காது அப்பாவும் வந்துவிட்டார். அவர் உடல் முழுவதும் குருதி. நான் வளர்த்த இரண்டு சேவல்கள், இரண்டு கோழிகள், கொஞ்சப் பூசணிக்காய்கள், செழித்து வளர்ந்த கீரைகள் கொஞ்சம், பாகற்காய் இப்படியாகக் கிட்டத்தட்டப் பத்துபேருக்குச் சாப்பாடு போடும் அளவுக்கு மரக்கறிகளை எனது வீட்டிலிருந்து பிடுங்கிக் கொண்டு வந்திருந்தார். ஆனால் அப்பாவின் உடல் முழுவதும் இருந்த குருதி எம்மைத் திகிலடைய வைத்தது.

“என்னப்பா நடந்தது…?” என்றபடி நான் அப்பாவின் உடலைத் தொட்டுத் தொட்டுப் பார்க்கின்றேன். அப்பா சோர்ந்துபோய் இருந்தார்.

“காயம்பட்டுவிட்டதா…?” என்று கேட்கின்றேன்.

“லைக்கா என்னை அணைத்தபடி எனது தலைமாட்டில் குண்டுச் சிதறல்பட்டு உடல் சிதறி இறந்துவிட்டது” என்று அப்பா சொன்னதும் அதிர்ந்து போனோம். ஆனாலும் அதன் இழப்பை வெளிப்படுத்திக் கொள்ள அது தகுந்த சந்தர்ப்பமாக இருக்கவில்லை. பக்கத்தில், அன்றுதான் நான்கு உறவுகளைப் புதைத்துவிட்டு இருக்கின்றார்கள். ‘குண்டுகளுக்குப் பதுங்கிக் கொண்டதும், எனக்குப் பக்கத்தில் நாய் படுத்துக்கொள்ளாவிட்டால், அந்தக் குண்டுச்சிதறல்கள் எனது தலையில் பட்டு நான் போயிருப்பேன்…’ என்று சொல்லி அப்பா ‘லைக்கா’வை நினைத்து மனம் தளர்ந்தார். எல்லாமே உயிர்தானே. இதற்காகவா ‘லைக்கா’ அடம்பிடித்துக்கொண்டு அப்பாவோடு போனது என நான் நினைத்துக் கொண்டேன்.

### தீர்ந்து விட்டது கண்ணீர்

அன்றும் ஆங்காங்கே விழும் குண்டுகள் அறிந்தவர், தெரிந்தவர்களை அவ்வப்போது காவுகொண்ட வண்ணமே இருந்தன. அப்போது கொல்லப்படுபவர்களை நாம் புதைத்துக் கொண்டிருந்தோம். அழுவதற்குக் கண்களில் நீர் இருக்கவில்லை. அங்கிருந்த எல்லோருக்கும் மனது நிறைந்த தைரியம் இருந்தது. இறப்பு என்பது அப்போது ஒரு நிகழ்வாகவே அரங்கேறிக் கொண்டிருந்தது. ஒவ்வொரு வீட்டிலும் சாவுகள். யாருக்கு? யார்? ஆறுதல் சொல்வதென்று தெரியாத நிலைமை. இந்த நேரத்தில்தான் தேவிபுரம் பகுதியைப் பாதுகாப்பு வலயமாக இத்தனைக்கும் காரணமான அரசு அறிவித்தது.

(தொடரும்)

“தேவிபுரம் கடற்கரைப் பகுதியில் கறிசமைப்பதற்கு இறால் பிடித்துவருகின்றோம் என்று கூறிவிட்டு எமது காணியில் இருந்த சில குடும்பங்களின் ஆண்கள் கடற்கரை நோக்கிப் போனார்கள். எட்டுப் பேர் போன இடத்தில் நான்கு பேரைப் பிணமாகச் சுமந்துகொண்டு மீதி நான்கு பேரும் உயிரோடு வந்திருந்தனர். ஒரு வீட்டில் தந்தையும் மகனும், அடுத்த இருவரும் தனித் தனிக் குடும்பத் தலைவர்கள். எங்கள் காணி சாவு ஓலங்களின் இருப்பிடமானது. பத்து நிமிடத்துக்குள் அந்த நால்வரையும் அடக்கம் செய்துவிட்டனர். காரணம், நாம் அடுத்த கட்டத்துக்கு நகரவேண்டும்.”

## தற்கொலைதான் வ(ய)ழியோ…!



பிரச்சினைக்கோர் வழியது
தற்கொலை என்ற எண்ணம் நமக்கிருந்தால்
இன்று உயிரோடிருப்பவர் யாரென்றறிவீர்…?

தோல்வியைக் கண்ட எம்மனம்
தரைவிழ்ந்த மீனாகத் துவண்டிடலாமோ?
தூக்கில் தான் தொங்கிடலாமோ?
தோல்வியதைத் தோழனாக்கித் தோள்கொடு
பட்டறிவால் பக்குவமாய் உனை
வழிநடத்தும் வெற்றிப் பாதையில்…

ஏமாற்றமென்றதும் ஏன் தடுமாற்றம்
ஏய்த்துப் பிளைப்பவர்முன் வாழமுடியாமல்
மாய்த்திடல் முறையோ?
ஏமாற்றம் எம்மையென்றும்
ஏற்றிடும் ஏணியென்றறிந்தால்
ஏமாற்றம் உண்டாக்கும் நேர்மாற்றம்



இழப்புகள் வருகையில்
மனதுடைந்தன்றே
உயிர்துறந்திடலாமோ?
இழப்பின் துயர்தனைப் பகிர்ந்து,
உளத்துணையதை நாடி
ஏற்றதைக் கொண்டு மனம் தேற்றிடலாமே…

பரீட்சைத் தோல்வியது
வாழ்வின் தோல்வியன்று
முயன்று, உணர்ந்து மீண்டும் எழுவாய்
விதைகள் மண்ணுள் உக்குவதில்லை
முயற்சியென்றும் தோற்பதில்லை…

தடைகளை முட்டியுடை, எட்டி முளை
இங்கு பிறப்பது ஒருமுறை.
இறப்பு என்பது முடிவுரை.
இடையினில் ஏனிந்தத் தற்கொலை…?

கந்தர்மடம்
அ.அஜந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவசி...

மிருசுவில் தமிழ்தாசன்

கடை எரிந்து கொண்டிருக்க, கைகளில் அகப்பட்ட பாரம் குறைந்த சிறிய பெட்டிகளையும் பொதிகளையுமே எல்லோரும் சூறையாடிக் கொண்டிருக்க, ஓவசி மட்டும் எப்படியோ இரண்டு பெரும் சீனி மூட்டைகளின் மீது கவனத்தைச் செலுத்திக் கொண்டான்.

சைக்கிளை மெதுவாய்... மெ.. ல்..ல.. மெ...ல்...ல உருட்டத் தொடங்கினான். மயில்வாகனத்தாரின் பழைய சைக்கிளால் ஓவசி ஏற்றிக்கொண்ட அந்த 'ஓவர் லோட்டைத்' தாங்கிக் கொள்ள முடியவில்லை. கத்திக்குளறியது. பின் சில்லின் இரண்டொரு கம்பிகள் உடைந்த சத்தம் ஓவசியின் செவிகளுக்கும் கேட்காமலில்லை.

"உடைஞ்சால் உடையட்டும். மயிலருக்கு எவ்வளவு நட்டமெண்டாலும் சீனியை வித்துக் கட்டலாம். இனியொண்டும் யோசிக்கேலாது நடக்கிறது நடக்கட்டும், மெல்ல மெல்ல உறுட்டிக் கொண்டுபோவம். அது சரி! இதென்னடா இது! மேலை கிடக்கிற சீனி மூட்டை சாடையாய் வழுக்குது போலை...! என்ன விழப் போகுதோ! ஓவசி நினைப்பதற்கிடையில் அது விழுந்து தொலைத்துத் தான் விட்டது. இன்னும் கொஞ்சம் உருட்டி மெல்ல அந்தப் பனை மரத்தில் சைக்கிளைச் சாத்திவிட்டு வந்துகீழே வீழ்ந்த சீனி மூட்டையைத் தூக்க வேண்டியது தான். அப்படியே பனை மீது சைக்கிளைச் சாத்திவிட்டு இதை எடுக்க ஓடோடி வந்தான். மேல் மூச்சுக் கீழ் மூச்சுவாங்கியவாறு. பின்னே இருக்காதா! களையென்றால் அப்படியொரு களை!

சடன் பிறேக்கில் மோட்டார் சைக்கிளொன்று வந்து நிறுத்தப்பட்டது. அதிலிருந்து இறங்கிய வாலிபன் ஓடோடிவந்து அந்தச் சீனி மூடையைத் தூக்கித் தனது மோட்டார் சைக்கிளில் ஏற்றி விட்டான். ஓவசிக்கு மனம் பகீரென்றது, விடுவானா!

"தம்பி! தம்பி! உதைத் தந்திட்டுப் போதம்பி! இஞ்சை ! இஞ்சை! எவ்வளவு கஷ்டப்பட்டு நான் கொண்டு வர... தம்பி... தம்பி... உனக்குப் புண்ணியம் கிடைக்கும்!"

கெஞ்சிக் கூத்தாடிய படி அந்தமோட்டார் சைக்கிளுக்குப் பின்னால் ஓடியும் ஒரு பயனுமில்லை. வெறுங்கையுடன் சைக்கிள் நிறுத்திய இடத்துக்கு வேதனையுடன் வந்த ஓவசிக்கு மீண்டுமொரு அதிர்ச்சி.

இரண்டு வாலிபர்கள் ஓவசியின் சைக்கிளைத் தள்ளி வீழ்த்திப்போட்டு அதிலிருந்த மற்றைய மூடையைத் தூக்கித் தங்கள் சைக்கிளில் ஏற்றியபடி காற்றாக விரைந்தார்கள். ஓவசியும் காற்றாகத் துரத்தினான். அவர்கள் 'நிசா'ப்புயலின் வேகத்தில் விரைய இவன் 'வர்தா'ப்புயலாக ஓடினான். இருந்தும் நிசா வென்றுவிட 'வர்தா' வாடிய முகத்துடன் நிறுத்தி விட்டசைக்கிளை எடுப்பதற்காக வந்தது.

"எட இதிலை தானே சைக்கிள் விட்டனான். மருந்துப்பை கிடக்குது சைக்கிள்! ஐயோ இரவல் சைக்கிள் ஆரடா சைக்கிளை எடுத்தது."

பரிதாபமாகக் கத்தினான் ஓவசி. அடுத்தவனுடைய சீனிக்கு ஆசைப்பட்டு இரவல் எடுத்த சைக்கிளும் இப்போ போச்சுது.

ஏனோ! அந்த மருந்துப்பையை விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். அதை எடுத்துக்கொண்டு வெறுப்புடன் வீட்டை நோக்கி நடந்தான். அதுசரி பச்சை மூடிப்போத்தல் சித்திரனுக்கா? ஆட்டுக்கா? இந்த அக்கப்பாடுகளுக்குள் அதையும் அடியோடு மறந்து தொலைத்து விட்டான்.

போதிய படிப்பறிவின்மையும், ஆசையும் அவசர புத்தியும் ஓவசியைக் கேலிக்குரியவனாக ஆக்கி விட்டன. இதற்குமுழுப்பொறுப்பும் அவனே தான்.

(முடிந்தது- யாவும் கற்பனையே)




> "வெறுங்கையுடன் சைக்கிள் நிறுத்திய இடத்துக்கு வேதனையுடன் வந்த ஓவசிக்கு மீண்டுமொரு அதிர்ச்சி. இரண்டு வாலிபர்கள் ஓவசியின் சைக்கிளைத் தள்ளி வீழ்த்திப்போட்டு அதிலிருந்த மற்றைய மூடையைத் தூக்கித் தங்கள் சைக்கிலில் ஏற்றியபடி காற்றாக விரைந்தார்கள். ஓவசியும் காற்றாகத் துரத்தினான். அவர்கள் நிசாப்புயலின் வேகத்தில் விரைய இவன் வர்தாப்புயலாக ஓடினான். இருந்தும் நிசா வென்றுவிட வர்தா வாடிய முகத்துடன் நிறுத்தி விட்டசைக்கிளை எடுப்பதற்காக வந்தது."

## பஞ்சதந்திரக் க(வி)தைகள்

# ஆமையும் (ஓடிட) முயலும்...

அக்கால வழக்கம்
முயலிங்கு தோற்றது ஆமையால் என்பது
கருத்தில் வரும் மயக்கம் மனம்
முயலாமை யாலிங்கு தோற்றது என்பதே
பொருத்தமான விளக்கம்

டே.த.எட்வின்

ஆணவம் கொண்ட முயலொன்று அப்பாவி
ஆமையிடம் வந்து
"நானொரு ஓட்ட வீரன் என்னுடன்
போட்டிக்கு வா" என்று
வீணாய் வம்புக்கு இழுத்தது, முயலின்
வேகத்தை அறிந்தும்
ஆணாய்ப் பிறந்த ஆமைக்கு உடனே
ரோசம் மிக வந்து

ஆரம்ப இடத்துக்குச் சென்று முயலுடன்
ஓட்டத்தை ஆரம்பித்தது.
வீரமுடன் முயல் வேகமாய்ச் சென்று
பின்னாலே பார்த்தது
தூரத்திலே ஆமை ஆடி அசைந்து
வருவதை உணர்ந்தது
நேரம் எடுக்கும் ஆமை வந்திட
அதற்குள் நான்சிறிது


ஓய்வு எடுத்துப் பின்னர் எழுந்து
ஓடுவோம் என நினைத்து
சாய்ந்து சற்றுப் படுத்ததும் உடனே
உறங்கிப் போய்விட்டது
தேய்ந்து அரைந்து வந்த ஆமையும்
முயலைக் கடந்து

போய்முடி வடையும் இடத்தை அடைந்தது
வெற்றியும் ஈட்டியது.

தூக்கம் கலைந்த முயலும் விழித்துத்
துடித்துப் பதைத்தெழுந்து
பார்க்கையில் ஆமை பந்தய முடிவில்
நின்றே நகைத்தது
வெட்கம் மிகக் கொண்ட முயலும் எங்கோ
ஓடி ஒளித்தது திறமை
மிக்க முயலின் ஆணவம், கர்வம்
அடியோ டொழிந்தது

ஆமையும் முயலும் ஓடிய தென்பது
அல்ல இங்கு உண்மை
ஆமையும் ஓடிட முயன்றது என்ற
கருப்பெருளே முதன்மை.
ஆமையும் ஓடிட முயலும் என்பது
இந்தக்க(வி)தையின் தன்மை
'ஆமையும் முயலும்' என்கின்ற தலைப்பை
இட்டதுவே உண்மை

முயலொன்று ஆமையிடம் தோற்றது என்பர்
அக்காலம் தொடக்கம்
முயலொன்று தோற்றது ஆமையால் என்பதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





உளறி

"ஹலோ... யாழ்ப்பாணத்தில யிருந்து நான்தான் கதைக்கிறன்... நான் உளறி தான் கதைக்கிறன்... உங்கட ஊரில அரிசி எப்பிடி...? பாகிஸ்தானில இருந்து 'பாஸ்மதி' வந்திருக்காம். பொடியள் பந்துபோல அடிச்சு விளையாடுறாங்கள். அதுவும் 'பம்' பண்ணுதடாப்பா...! கவனமாயிருங்கோ..."

வளமான மண்ணையும் மரத்தையும் அழிச்சுப் போட்டியள்... கட்டிடங்களுக்கும் ஏ.சிக்குள்ளயும் கொம்பியூட்டருக்குள்ளயும் தான் இனி நீங்கள் விவசாயம் செய்ய வேணும். அதுக்க அரிசி விளையுமோ என்ன...? இப்பதானே தொடங்குது அமளியெல்லாம். இன்னுங்கொஞ்சக் காலத்தில பாருங்கோவன். எல்லாரும் திண்ண வழியில்லாமத் திண்டாடப் போயினம்.

# என்ன சொல்லுறீங்க...?

# பிளாஸ்ரிக் பூதங்களா...!

"உங்க எல்லாரும் உப்ப உதத்தான் பரவலாக் கதைக்கினம். இந்தியாவில இருந்துதான் இந்தக் காய்ச்சலும் வந்திருக்குப்போல. அரிசி மட்டுமில்ல முட்டையும் 'பம்' பண்ணுதாமடாப்பா. இறப்பரோ. பிளாஸ்ரிக்கோ, என்ன நாசமறுப்போ தெரியேல்ல. படத்தில மட்டும்தான் காட்டுறாங்கள் கண்ணால கண்டதா ஒருத்தரும் இன்னும் ஆதாரத்தோட முன்னுக்கு வரேல்லக் கண்டியே. எண்டாலும் கொஞ்சம் உசாராத்தான் இருக்க வேணும் இல்லாட்டிக்குக் கண்டைதையும் பிளாஸ்ரிக்கில செய்து போடுவாங்கள்"

"உது சீனாக்காரன்ர விளையாட்ட இருக்கும் எண்டுதான் எல்லாரும் சொல்லீனம் ஆனாப் பகிஸ்தான் தயாரிப்பெண்டல்லோ அந்த அரிசிப் பையில அடிச்சு வருகுது... அதில சிரிப்பு என்னவெண்டா, அந்தப் பிளாஸ்ரிக் அரிசிக்கும் அரிசிப் பையில காலாவதித் திகதியெல்லாம் அடிச்சிருக்கடாப்பா..."

கடந்த வாரம் தொடக்கம் இதுபோன்ற பகீர் செய்திகளும் விடயங்களுமாகவே நிரம்பி வழிகின்றன சமூக வலைத்தளங்கள். சமூக வலைத்தளங்களில் காணேலிகளாகச் சூடு பிடித்திருக்கும் இந்தப் பிளாஸ்ரிக் அரிசி, நமது நாட்டுச் சதொசாக்களில் மூடை, மூடைகளாகக் குவிந்து கிடப்பதாகவும் செய்திகள். அவை பறிமுதல் செய்யப்பட்டன என்று ஒருபுறமும் அவ்வாறான பிளாஸ்ரிக் அரிசி எம்மிடம் இல்லை, இது எமது வர்த்தகத்தைக் குழப்பும் புரளி என்று மறுபுறமும் திடமற்ற செய்திகள் பலவும் காதுகளுக்குக் கிடைக்கின்றன.

"பிளாஸ்ரிக் அரிசி, பிளாஸ்ரிக் முட்டை எல்லாத்தையும் வீடியோக்களிலதான் காட்டுறாங்கள்... அந்த அரிசி செய்யுறதையும் மிசினறியலோட காட்டுறாங்கள். சரி உதுகளை எல்லாம் விடுவம். உதைச் செய்யுறவங்களுக்கு என்ன இலாபம் கிடைக்கப்போகுது...?"

"அரிசி ஒரு கிலோ 100ரூபா எண்டு வைச்சுக் கொள்ளுவம்... அரிசியைப் போலவே வெள்ளையும் சொள்ளையுமாக இருக்கிற அந்தப் பிளாஸ்ரிக் அரிசியக் கண்ட கண்ட பிளாஸ்ரிக்கிலயும் செய்யேலாது போல கிடக்கு...! தூய்மையான ஒரு கிலோ பிளாஸ்ரிக்குக்கும் அதை அரிசி மாதிரி வார்க்கிற மிசினெறியளுக்கும் போற செலவுகளைப் பார்த்தா அதுகள் எல்லாம் சேர்ந்து அரிசி விலையைவிட உதைச் செய்யிறவங்களுக்கு அதிக செலவாய் எல்லோ போயிடும்....! அப்ப உதில அவங்களுக்கு என்ன இலாபம்...?"

"சரி எல்லாத்தையும் விடுத்து உதில கொள்ளை இலாபம் அவங்களுக்குக் கிடைக்குதெண்டே வைப்பம்... ஒரு வழிப்பட்டு அந்த அரிசியச் செய்து முடிச்சிற்றாங்கள்... அவங்களுக்குக் கிடைக்கிற ஒண்டு, ரெண்டு வழியலால சந்தைக்கும் அனுப்பீற்றாங்கள்... சனம் வாங்கிக் கொண்டு போய்ச் சமைக்குது.... அரிசி வெந்திற்றுதா(அவிந்து விட்டதா) எண்டு பார்த்தா... என்ன நிலமை? அந்தப் பிளாஸ்ரிக் எவ்வளவு கொதி நிலையைத்தான் தாங்கும்...? உருகிக் கரைந்து விடாதா...? அது அவியாமல் அம்மா மார் எப்பிடி அடுப்பை விட்டு இறக்குவர்...? அதிலும் தப்பி அரிசியை அடுப்பை விட்டு இறக்கியாச்சுது...சாப்பிட ஆயத்தம்... எவ்வளவு தான் சப்பினாலும் அரிசி அரைக்கப்படுமா...? மணம் இருக்குமா? சுவை கிடைக்குமா? சரி... ஒருவாறு உள்ளே அனுப்பினாலும் அது எப்பிடிச் சேமிபாடடையும்...? இத்தனையையும் தாண்டி ஒரு தடவைக்கும் பிறகு அந்த அரிசியைச் சனங்கள் எப்பிடித் தொடந்தும் வாங்குங்கள்...? ஒரு முறையோடயே உசாரகி விடாதுகளா...? உந்தக் கதையைக் கேள்விப்படுறதுகளும் பிறகு அலேட்டாகி விடாதுகளா...? ஒருக்கா மாத்திரம், ஒரு சிலருக்கு விற்கிறதால உதைச் செய்யுறவங்களுக்கு எப்பிடி இலாபம் கிடைக்கும். ஒருக்காச் செய்ததோட பொலிஸ் எல்லோ அவங்களத் தேட ஆரம்பிச்சிரும்...? முடிவா என்னதான் சொல்லுறது...

கண்ணால காணுறதும் பொய் தீர்வை விசாரிப்பதே மெய் எண்டு சும்மாவே சொல்லி வைச்சாங்கள்."

அரிசி என்பது ஆசிய நாட்டு மக்களின் பிரதான உணவாகும். நம்மில் ஒருவர் கூட ஒரு வேளையாவது சோறு சாப்பிடாமல் இருப்பதில்லை. நெல் அரிசிச் சோறு நமது பாரம்பரிய உணவு. அது எந்தத் தானியத்துக்கும் குறையாத சத்துக்களைக் கொண்டுள்ளது. 70% காபோவைதரேற்று, 67% புரதம், 12மூ நார்ச்சத்து, 1213% நீர் மற்றும் குறைந்த அளவில் கால்சியம், மக்னீசியம் முதலானவற்றையும் கொண்டிருக்கின்றது. இதற்குப் பதிலீடான இயற்கை உணவுப் பொருளைக்கூடக் கண்டறிய முடியாமலிருக்கும் இன்றைய சூழலில் மக்கள்நுகரும்பலபொருள்களிலும் கலப்படங்கள் அதிகிரித்திருக்கின்றன. அரிசியிலும் கல், மண் கலத்தல் இருந்து வருகின்றது. இதற்கிடையில் தான் இப்போது புறப்பட்டிருக்கின்றது இந்தப் பிளாஸ்ரிக் பூதம்.

பிளாஸ்ரிக் அரிசி விவகாரம் இன்று சாத்தியமற்றதாகப் பார்க்கப் பட்டாலும் மனிதன் இந்த யுகத்தில் எதைத் தான் செயற்கையாகச் செய்யவில்லை. ஆகையால் இதுவும் அத்தகைய ஒன்றே என்று சிலர் ஆச்சரியம் கொள்ளாமலும் இருக்கலாம். இது இன்று சாத்தியமற்றதாகி விட்டாலும் இன்னும் கொஞ்சக் காலத்தில இதைச் சரியாகக் கண்டு பிடிச்சிருவாங்கள் எண்டும் ஒரு பகுதி புலம்பிக் கொள்ளும். இந்தப் பிளாஸ்ரிக் அரிசி, முட்டை போன்றன வதந்தியாகவோ அல்லது உண்மையாகவே இருந்தாலும் அவை சட்டவிரோதமாகவே பார்க்கப்படுகின்றன.

"நீங்கள் செய்யிற வேலையளுக்கு இனிப் பிளாஸ்ரிக்கத் தானே திங்க வேணும்... பிறகென்ற என்ன வளமான மண்ணையும் மரத்தையும் அழிச்சுப் போட்டியள்... கட்டிடங்களுக்கயும் ஏ.சிக்குள்ளயும் கொம்பியூட்டருக்குள்ளயும் தான் இனி நீங்கள் விவசாயம் செய்ய வேணும். அதுக்க அரிசி விளையுமோ என்ன...?"

"இப்பதானே தொடங்குது அமளியெல்லாம். இன்னுங்கொஞ்சக் காலத்தில பாருங்கோவன். எல்லாரும் திண்ண வழியில்லாமத் திண்டாடப் போயினம். இனிச் சோக்காத்தான் இருக்கப்போகுது எல்லாற்ற பாடும்... உப்ப வந்திருக்கிற உந்தப் பிளாஸ்ரிக் பூதங்களைக் கண்ட பயத்திலயாவது சனத்துக்குக் கொஞ்சம் விளக்கம் வருதோ எண்டு பார்ப்பம்...?"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# அடங்காப்பற்று - வன்னியில் 2000 வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்ட சிவன் கோவில்

அருணா செல்லத்துரை

அண்மைக்காலத்தில் வட இலங்கையிலும் கிழக்கு மாகாணத்திலும் அடையாளம் காணப்பட்ட தமிழ்க் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்ட தொல்பொருட் சின்னங்கள், இலங்கையின் சமூக, சமய, பண்பாட்டு வரலாறுகளை மீள்பரிசீலனை செய்வதற்கும், மீள் உருவாக்கம் செய்வதற்கும் ஏதுவான அடிப்படைச் சான்றுகளாகும். இவ்வகையான பொருட்கள் நாட்டின் பல பாகங்களிலும் பரவலாகக் காணப்படுகின்றன. ஆதிகாலம் முதலாகவே இலங்கை பல்வேறு சமய நெறிகளைப் பின்பற்றும் பல சமூகங்கள் வாழும் நாடு என்பதை இவை உறுதி செய்கின்றன. இலங்கையில் வழங்கும் மொழிகளிலே தமிழ் மொழியே மிகத்தொன்மையானது என்பதும் இன்றுவரை அவற்றின் மூலம் தெளிவாகின்றது. கி.மு. 8ஆம் நூற்றாண்டளவில் அது இங்கு பரவத் தொடங்கி விட்டது. அதன் வளர்ச்சி சிங்கள மொழி உருவாகுவதற்கு ஏறக்குறைய பத்து நூற்றாண்டுகளுக்கு முற்பட்டது என்பதும் முடிபு.

**சைவத்தையும் தமிழையும் தோற்றுவித்த நாகர்**

இங்கு நிலைபெற்றுள்ள சைவ சமயத்தின் வரலாற்றைப் புதிதாக எழுத வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. வட மாகாணத்தில் இருந்த பௌத்த பள்ளிகள் பலவும் நாகர்களால் அமைக்கப்பட்டவை. தமிழ் மொழியை இங்கு அறிமுகம் செய்த நாகரே, சைவசமயத்தையும் பரப்பினார்கள். இலங்கையில் அகழ்வாய்வுகளின் மூலமும் வெவ்வேறு வழிகளாலும் அறியப்படும் பெருங்கல் பண்பாட்டுக்குரிய சின்னங்களும் நாகரோடு தொடர்புடையவை. திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம், முன்னேச்சரம் ஆகியனவே இங்குள்ள மிகவும் தொன்மையான கோயில்கள் என்று கருதப்பட்டன. இவை நாக மன்னர்களால் அமைக்கப்பட்டவை என்ற கருத்தை அண்மைக்காலத்தில் ஆய்வாளர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.



படம் – 1

இவற்றோடு வேறும் பல கோயில்களை நாகர்குல வேளீர் அமைத்துள்ளனர். அவை யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை முதலிய மாவட்டங்களுக்குள் உட்பட்டிருக்கும் ஊர்களில் உருவாக்கப்பட்டவை. அவற்றில் ஒன்று வவுனிக்குளத்து (பாலிக்குளம்) அணைக்கட்டின் அருகிலுள்ள சிவன் கோவிலாகும்.



படம் – 3

**வவுனிக்குளம் சிவன்கோவில்**

வவுனிக்குளம் (பாலிக்குளம்): வடமாகாணத்திலுள்ள பெரிய குளங்களில் ஒன்று. அது வவுனியா மாவட்டத்திலுள்ளது. இலங்கையின் குளங்களைப் பற்றி ஆய்வு செய்த ஹென்றி இ. பார்க்கர் இது கி.மு. இரண்டாம் நூற்றண்டளவில் உருவாக்கப்பட்டது என்று கருதினார். இதனை அண்மையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள தமிழ் பிராமிக் கல்வெட்டின் மூலம் உறுதிப்படுத்தலாம். பாலி ஆற்றைமறித்துக்கட்டியபெரிய அணையின் மூலம் இந்தக் குளத்தைக் கட்டியுள்ளனர்.

வடமாகாணத்தில் இருந்த பௌத்த பள்ளிகள் பலவும் நாகர்களால் அமைக்கப்பட்டவை. தமிழ் மொழியை இங்கு அறிமுகம் செய்த நாகரே, சைவசமயத்தையும் பரப்பினார்கள். இலங்கையில் அகழ்வாய்வுகளின் மூலமும் வெவ்வேறு வழிகளாலும் அறியப்படும் பெருங்கல் பண்பாட்டுக்குரிய சின்னங்களும் நாகரோடு தொடர்புடையவை.

**1.படம் : பாலிக்குளம் (வவுனிக்குளம்)**

ஆற்றுப் படுக்கையின் கீழ் அமைந்த விசாலமாகப் பரந்த விளைநிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்வதற்கென்று இது அமைக்கப்பட்டது. இந்தக் குளத்தை நாகரே கட்டியிருக்க வேண்டும். என்று 'பார்க்கர்' குறிப்பிடுகின்றமை ((Ancient Ceylon H.Parker.p.367) இங்கு கவனித்தற்குரியது. நாகர், தமிழர் என்பதும் அவரது கருத்தாகும். மண்ணாலான கட்டுமானங்களைச் செய்வதில் பயிற்சி பெற்றோர் பல நூற்றுக்கணக்கானோர் அங்கு வாழ்ந்தமைக்கும், குளத்தைச் சுற்றியுள்ள நிலத்திலே செறிவான குடித்தொகை பெருகியிருந்தமைக்கும் வவுனிக்குளத்தின் அளவுப் பிரமாணங்களுக்கும், அதிலே தேங்கும் நீரின் கனஅளவும் அடையாளமாகும் என்பது 'பார்க்கரின்' கருத்தாகும். நவீன காலத்தில் அமைக்கப்பட்ட சிவன் கோவிலை குளக்கட்டில் இருந்து பார்த்தால் முதலில் காணலாம். இது அளவில் பெரியது



படம் – 4



படம் – 2

**2. படம் : குளக்கட்டில் இருந்து சிவன் கோவில்**

குளத்துக்கு அண்மையில் காணப்படும் நவீன காலத்துச் சிவன் கோயிலுக்குப் பின்னால் மிகப் புராதனமான கோயிலின் அடையாளங்கள் உள்ளன.

**3. படம் : புராதன இலிங்கக் கோவில்**

வவுனியாவுக்கு வந்திருந்த பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களை 2017ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் திகதி வவுனிக்குளத்துக்கு அழைத்துச் சென்றிருந்தோம்.

**4. படம் : பேராசிரியர் தொல்லியல் சின்னங்களைப் பார்வையிடல்**

அங்குபண்டைக்காலத்தில் சிவன் கோயில் இருந்த இடத்தில் அண்மைக் காலத்தில் கர்ப்பக்கிருகம், மண்டபம் ஆகியவற்றைக் கட்டியுள்ளனர். புராதனமான கோயிலின் அடையாளங்களான [illegible] தொல்பொருட்கள் அங்குள்ளன. சிவலி[illegible], ஆதாரக்[illegible]. பெருந்தூண்களின் [illegible] அளவில் பெரிய கோமுகைக்கல் ஆகிய[illegible]னலாம்.

(தொடரும்)

திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம், முன்னேச்சரம் ஆகியனவே இங்குள்ள மிகவும் தொன்மையான கோயில்கள் என்று கருதப்பட்டன. இவை நாக மன்னர்களால் அமைக்கப்பட்டவை என்ற கருத்தை அண்மைக்காலத்தில் ஆய்வாளர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். இவற்றோடு வேறும் பல கோயில்களை நாகர்குல வேளீர் அமைத்துள்ளனர். அவை யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, திருகோண மலை, மட்டக்களப்பு, அம்பாறை முதலிய மாவட்டங்களுக்குள் உட்பட்டிருக்கும் ஊர்களில் உருவாக்கப்பட்டவை. அவற்றில் ஒன்று வவுனிக்குளத்து (பாலிக்குளம்) அணைக்கட்டின் அருகிலுள்ள சிவன் கோவிலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT




# தேற்றிக் கொள்ள நல்ல நண்பி...

அன்று பௌர்ணமி தினம். பாடசாலைக்கு விடுமுறை. சந்திராவின் பெற்றோர்கள் ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி, பக்கத்து வீட்டுக்காரரையும் அழைத்துக்கொண்டு கடலுக்குக் குளிக்கச் சென்றனர். பக்கத்து வீட்டு நண்பி கௌதமியும் சந்திராவும் கடலோரம் விளையாடிக்கொண்டிருந்தனர். அவர்களின் பெற்றோர்கள் குளிப்பதற்காகக் கடலில் இறங்கினர்.

கடல் நீரில் விளையாடுவதென்றால் சந்திராவுக்குக் கொள்ளைப் பிரியம். அவள் நன்றாக நீச்சலடிப்பாள். இதற்கு மாறானவள் கௌதமி. கடல்நீர் என்றால் அவளுக்குப் பயம். ஆனால், அன்றைய தினம் அவளை எப்படியாவது கடலில் குளிக்க வைக்க வேண்டும் என்பதில் குறியாக இருந்த சந்திரா, "கௌதமி, என்னுடன் வா. உனக்கு நான் நீச்சல் சொல்லித் தருகிறேன்" என்றாள். கௌதமியோ கடலில் குளிப்பதற்குச் சம்மதிக்கவே இல்லை.



கௌதமி மட்டும் கரையில் இருக்க, அனைவரும் கடலுக்குள் குளித்துக்கொண்டிருந்தனர். நீண்ட நேரமாகியும் அவர்கள் கரைக்கு வரவில்லை. அந்த நேரம் பார்த்து கடலிலிருந்து ஒரு பொருள் மிதந்து கரையை அடைந்தது. அதனை ஆவலுடன் எடுத்த கௌதமி, அருகே இருந்த கல்லை எடுத்து அதை உடைக்கத் தயாரானாள். இந்தக் காட்சியைத் தூரத்தே இருந்து பார்த்துக் கொண்டிருந்த சந்திரா, "ஏய்...கௌதமி...அதனைத் திறக்காதே" என்று கத்தியவாறு விரைவாக நீச்சலடித்துக் கரையை அடைந்தாள். அவளுடைய கையில் இருந்த அந்தப் பொருளைப் பறித்துக் கடலுக்குள் வீசி எறிந்தாள். அது பயங்கர சத்தத்துடன் வெடித்தது. கரையில் நின்றவர்கள் அவர்களை நெருங்கினர். சிறிது நேரத்தில் அங்கே பெரிய கூட்டம் கூடியது.

இந்தக் காட்சியைக் கண்ட அவர்களுடைய பெற்றோர்களும் கரையை அடைந்தனர். தான் கையில் வைத்திருந்தது பயங்கர வெடிபொருள் என்பது கௌதமிக்குப் பின்னர்தான் தெரிய வந்தது. அதிர்ச்சி மாறாத மன நிலையுடன், "சந்திரா மட்டும் தக்க சமயத்தில் அந்தப் பொருளைப் பறித்து எறியாதுவிட்டால், கௌதமியுடைய உயிர் இந்நேரம் பிரிந்திருக்கும். சந்திராவுக்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை" என்று அழுதார் கௌதமியின் அப்பா. "ஆபத்தான பொருள்களைக் கண்டால், அவற்றை எடுக்கக்கூடாது என்று பள்ளிக்கூடத்தில் சொல்லித் தந்திருக்கினம். இனிமேல் கௌதமியும் இந்த விடயத்தில் கவனமாக இருப்பாள்" என்று கௌதமியின் தோளில் தட்டினாள் சந்திரா.

கூட்டத்தில் இருந்த அத்தனை பேரும் சந்திராவைப் பாராட்டிய வண்ணம் கலைந்தனர். அலைக்கரங்கள் முண்டியடித்துக் கரைக்கு வந்து அவளை ஆசீர்வதிக்கின்றன. அவரவர் தத்தம் வேலையில் மீண்டும் மூழ்கிவிட்டனர்.

**நீதி : ஆபத்தான பொருள்களை எடுப்பது அபாயம்.**



# இயற்கை

பூமி இயற்கை.
பூமிக்குள் இருக்கும் தண்ணீர் இயற்கை.
வானம் இயற்கை.
வானில் தோன்றும் நட்சத்திரங்கள் இயற்கை.
மலை இயற்கை.
மலையில் தெரியும் பசுமை இயற்கை.
கடல் இயற்கை.
கடலில் தோன்றும் அலைகள் இயற்கை.
காற்று இயற்கை.
காற்றால் வாழும் உயிர்கள் இயற்கை.
சூரியன் இயற்கை.
சூரியனால் ஏற்படும் ஒளி இயற்கை.
மேகம் இயற்கை.
மேகம் பொழியும் மழை இயற்கை.
வானவில் இயற்கை.
வானவில்லில் உள்ள நிறங்கள் இயற்கை.
பூ இயற்கை.
பூ வீசும் வாசம் இயற்கை.
இயற்கையே அழகு.
அது என்றென்றும் குறைவின்றி இருப்பதும்.
வாழ்க்கை இயற்கை.
வாழ்க்கையில் தோன்றும் இன்பமும் துன்பமும்
இயற்கை.

ஞா.கார்த்திகா,
வட்டு. மத்திய கல்லூரி.



# பூனைப்பாட்டு

சின்னச் சின்னப்
பூனையாம்
சீறிப் பாயும்
பூனையாம்
கன்னங்கரிய
பூனையாம்
கறுப்பு மீசைப்
பூனையாம்
இரவில் சுற்றும்
பூனையாம்
எலியைப் பிடிக்கும்
பூனையாம்
புலியைப் போன்ற
பூனையாம்
புத்திசாலிப்
பூனையாம்

# பொன் மொழிகள்

1. பேசும்முன் கேளுங்கள், எழுதும் முன் யோசியுங்கள், செலவு செய்யும் முன் சம்பாதியுங்கள்.
2. சில சமயங்களில் இழப்புத்தான் பெரிய ஆதாயமாக இருக்கும்.
3. யாரிடம் கற்கிறோமோ அவரே ஆசிரியர். கற்றுக் கொடுப்பவரெல்லாம் ஆசிரியர் அல்லர்.
4. நான் மாறும்போது தானும் மாறியும், நான் தலையசைக்கும் போது தானும் தலையசைத்துக் கொள்ளும் நண்பன் எனக்குத் தேவையில்லை. அதற்கு என் நிழலே போதும்.
5. நோயை விட அச்சமே அதிகம் கொல்லும்.
6. நான் குறித்த நேரத்துக்குக் கால்மணி நேரம் முன்பே சென்று விடுவது வழக்கம். அதுதான் என்னை மனிதனாக்கியது.
7. எம்மிடம் பெரிய தவறுகள் இல்லை எனக் குறிப்பிடுவதற்கே, சிறிய தவறுகளை ஒப்புக்கொள்கிறோம்.
8. வாழ்க்கை என்பது குறைவான தகவல்களை வைத்துக்கொண்டு சரியான முடிவுக்கு வரும் ஒரு கலை.

09. ஓடுவதில் பயனில்லை. நேரத்துக்குப் புறப்படுங்கள்.
10. எல்லோரையும் நேசிப்பது சிரமம். ஆனாலும், பழகிக்கொள்ளுங்கள்.
11. நல்லவர்களோடு நட்பாயிரு. நீயும் நல்லவனாவாய் இரு.
12. காரணமே இல்லாமல் கோபம் தோன்றுவதில்லை. ஆனால், காரணம் நல்லதாய் இருப்பதில்லை.
13. பலமுறை சிந்தியுங்கள். ஒருமுறை முடிவெடுங்கள்.
14. செய்வதற்கு எப்போதும் வேலை இருக்க வேண்டும். அப்போதுதான் முன்னேற முடியும்.
15. வெற்றி பெற்றபின் தன்னை அடக்கி வைத்துக்கொள்பவன், இரண்டாவது தடவையும் வென்ற மனிதனாவான்.




**சிந்தனைக்கு**

எந்த விடயத்திலும் முன்னெச்சரிக்கையாக இருப்பது அவசியம்.

முதுமொழி

# வெண்சங்கு



சங்குகள் கூட்டம் கூட்டமாக வாழும் தன்மை கொண்டவை. கடலின் அடி மட்டத்தில் அண்ணளவாக 20 தொடக்கம் 25 அடி ஆழமுள்ள பகுதிகளில் வாழ்கின்றன. இந்த இடங்கள் சங்குப் படுகைகள் என்று அழைக்கப்படுகின்றன.

# உங்களுக்குத் தெரியுமா?

01. அத்திலாந்திக் பகுதியில் ஆண்டுக்கு ஒரு முறைதான் சூரியன் உதயமாகிறது.
02. முதன் முதலில் கேள்விக்குறியைப் பயன்படுத்திய மொழி இலத்தீன் மொழி ஆகும்
03. கைரேகையை வைத்து குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முறையைக் கண்டறிந்தவர் எட்வர்ட் ஹென்றி.
04. உலகத்திலே மிகவும் வேகமாக வளரக் கூடிய மரம் யூக்கலிப்டஸ்.
05. 'ஸ்பெர்ம் வேல்' என்ற திமிங்கலத்தின் மூளை அதிக நிறை உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

ர.டுசாந்தன்,
அராலி வள்ளியம்மை ஞா.வி.


# புரட்சிகள்

01. பசுமைப்புரட்சி என்பது, மரம் மற்றும் இயற்கைவேளாண்மைஉற்பத்தியைப் பெருக்குவது.
02. இளஞ்சிவப்புப் புரட்சி என்பது, மருந்து வகையிலான உற்பத்தியைப் பெருக்குவது.
03. நீலப்புரட்சிஎன்பது, மீன்உற்பத்தியைப் பெருக்குவது.
04. வெண்மைப் புரட்சி என்பது, பால் உற்பத்தியைப் பெருக்குவது.
05. மஞ்சள் புரட்சி என்பது, எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியைப் பெருக்குவது.

என்.கவிப்பிரியா,
வட்டு. இந்து கல்லூரி.



சிவகுகன் பிருத்வி,
தரம் - 2,
கொக்குவில் இந்து ஆரம்ப பாட



ந.யோகப்பிரியா,
தரம் 7,
[illegible] பாடசாலை



# சிரி... சிரி...

ஆசிரியர் : திரும்பத் திரும்ப எங்கள் வீட்டில் களவு போகின்றது. என்ன செய்யலாம் பிள்ளைகளே?

ஒரு மாணவன் : நீங்கள் திரும்பாமல் ஒரே பக்கமாக இருந்துவிட வேண்டியதுதானே சேர்?

ஆசிரியர் : ஙொங்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கதைப் பார்வை**

பர்மாவிலிருந்து (மியன்மார்) புலம்பெயர்ந்து வரும் தமிழ்க் குடும்பத்தில் எட்டு வயதுச் சிறுவன் வெங்கட் (கௌதம் கார்த்திக்). வட சென்னையின் சவுக்கார் பேட்டையில் குடியேறும் அந்தக் குடும்பம் எதிர்பாராமல் குடும் பத் தலைவரை இழக்கின்றது. தாயின் அரவணைப்பில் வளர்ந்து ஆளாகும் வெங்கட், நகைக் கடை வைத்திருக்கும் குணசீலனிடம் (சித்திக்) வேலைக்குச் சேர்கிறான். சில காலங்களுக்கு முன்பு அவரோ முறைகேடான வழியில் வெளிநாட்டிலிருந்து தங்க பிஸ்கட்டுக்களை வரவழைத்துக் கறுப்புச் சந்தையில் விற்று வந்த வியாபாரி. வெங்கட்டின் துறுதுறுப்பைப் பார்க்கும் அவர், அந்தத் தவறான தொழிலை மீண்டும் கையில் எடுக்கின்றார்.

தங்கக் கடத்தல்காரர்களைப் பிடிக்கப் பொலிஸ் வலை விரிக்கின்றது. கடைசியாக ஒருமுறை சென்னையிலிருந்து ரங்கூனுக்குத் தங்கத்தைக் கடத்தி, கிடைக்கும் பெரிய தொகையோடு தொழிலை விட்டுவிட முடிவெடுக்கிறார்கள் வெங்கட்டும் முதலாளி குணசீலனும்.

ரங்கூன் செல்ல அவர்கள் தெரிவு செய்யும் வழி, அங்கே நடக்கும் சம்பவங்கள், சென்னை திரும்பியதும் காத்திருக்கும் திருப்பம் என விரைகிறது கதை.

**தவறு தண்டனையையே தரும்**

திறமை, உழைப்பு இருந்தாலும் தவறான வழியில் செல்வது பல இழப்புக்களை உண்டாக்கும் என்று கூற வருகிறது கதை. கமராவைப் பார்த்து வசனமாக அதை வகுப்பு எடுக்காமல், கதா பாத்திரங்களின் வாழ்க்கையில் நிகழும் சம்பவங்கள் வழியாகச் சொல்லி முதல் முயற்சியிலேயே கவனிக்க வைத்திருக்கின்றார் இயக்குநர் ராஜ்குமார் பெரியசாமி. விறு விறுப்பாகவே விரிகின்றது திரைக்கதை.

கைது செய்யப்படும் நாயகன், "பிறக்குறது ஈசி, சாகுறது அதை விட ஈசி, வாழ்றது தான் கஷ்டம்" என்று பேசும் வசனத்திலிருந்து பின்னோக்கி விரிகின்றது படம்.

**ஈர்த்திழுக்கும் சிற்சில...**

பர்மாவிலிருந்து சென்னை வரும்போது "யாத்ரிகா நீ போய் வா மகனே...!" என்று பிரிவின் துயரைக் கூறும் மறைந்த பாடலாசிரியர் நா.முத்துக்குமாரின் வரிகளுக்கு வலிமிகுந்த கவிதையாய் காட்சியை நிறுத்துகின்றது படப்பிடிப்பு. மொழியும் மண்ணும் தாய்வீடாக இருந்தாலும் புது ஊர், புது மக்கள் என்ற மலைப்பு அடங்குவதற்குள், ஓடிவந்து சிறுவன் வெங்கட்டை விளையாட அழைக்கும் சிறுவன் குமாரும் நண்பர்களாகி உறவுகளாகவும் மாறும் கட்டம் 'பொற்காலம்' படக் காட்சியை நினைவூட்டினாலும் நெகிழ்வு. விஜய், அஜித் ரசிகர் குழுக்களைக் காட்சிப்படுத்திய விதமும், ரஜினி படச் சுவரொட்டி, பீடி விளம்பரம் கொண்டு 1990களின் கால கட்டத்தை நினைவூட்டும் கலை, இயக்கமும் நேர்த்தி.


**பாத்திர வார்ப்புக்கள்**

வெங்கட், குமார் கூட்டணியில் மற்றொரு நண்பனாக இடம்பிடிக்கும் 'ரப்ரொப்'பின் (டேனியல் பாப்) நகைச்சுவை உணர்வை மீறி, அவரது கதா பாத்திரம் வார்க்கப்பட்டிருக்கும் விதம் விறுவிறுப்பைக் கூட்டியிருக்கின்றது. இரண்டாம் பாதியில் மூன்று நண்பர்களை மட்டுமே வைத்து அடுத்தடுத்துத் திருப்பங்களைக் கொடுத்திருக்கிறார் இயக்குநர். வெங்கட்டாக வரும் கௌதம் கார்த்தி முதல்முறையாக அர்ப்பணிப்புடன் நடித்திருக்கிறார். சண்டைக் காட்சிகளில் வேகம், சாதுரியம் என ஈர்க்கின்றார். இவர் தவறான பாதையில் பயணிப்பதை அறிந்தும் கோபப்படாத காதலியாக, கவர்கிறார் அறிமுக நாயகி சானா.

கதையுடன் ஒட்டி நிகழக் கூடிய இயல்பான நகைச்சுவைக்கு நல்ல வாய்ப்பிருந்தும் அதில் கோட்டை விட்டிருக்கிறார் இயக்குநர்.

பாசம், நட்பு, காதல், பொறாமை, துரோகம், இழப்பு எனக் கதாபாத்திரங்கள் எதிர்கொள்ளும் பல உணர்வுகளை முடிந்தவரை வலுவான காட்சிகள், வேகமான திரைக்கதைப் பின்னலுடன் பயணித்து ஓரளவாவது ரசிகர்களை ஈர்க்கின்றது ரங்கூன்.



# 'வோர் பார் த பிளானட் ஒவ் த ஏப்ஸ்'

## குரங்குகளின் எந்திரன்

சங்கரின் எந்திரன். மனிதனால் உருவாக்கப்பட்ட இயந்திர மனிதனுக்கு மனித உணர்ச்சிகள் கிட்டினால் விளைவு என்னவாகும் என்பதைப் படமாக்கியது. அதோ போன்றே மேட் ரீவ்ஸ் எனும் ஹொலிவூட் இயக்குநரின் 'வார் பார் த பிளானட் ஒவ் த ஏப்ஸ்' எனும் படம் மனிதனால் உணர்ச்சி விருத்தி செய்யப்பட்ட குரங்குகளால் அதே மனிதர்களுக்கு ஏற்படும் விளைவுகளைப் படமாக்கியுள்ளது.

**மூன்றாம் பாகம்**

அறிவியல் புனைவுக் கதைகளுக்கு ஹொலிவூட்டில் எப்போதுமே வரவேற்பு அதிகம். அதுவும் வித்தியாசமான அறிவியல் புனைவுக் கதை என்றால் கேட்கவே வேண்டாம். அமோகமான வரவேற்புக்கள் இருக்கும். 2011, 2014ஆம் ஆண்டுகளில் வெளியான 'த பிளானட் ஒவ் த ஏப்ஸ்', 'டான் ஒவ் த பிளானட் ஒவ் த ஏப்ஸ்' ஆகிய படங்கள் அந்த ரகத்தைச் சேர்ந்தவைதான். இவை பெற்ற வெற்றியின் விளைவாகவே தற்போது 'வோர் பார் த பிளானட் ஒவ் த ஏப்ஸ்' என்பதாக அதன் மூன்றாவது பாகமாக ஜூலை மாதம் வெளியாகவிருக்கின்றது.

**கதை எப்படி...?**

மனித மூப்பு நோய்களை எதிர்த்துப் போராடும் மருந்தைக் கண்டுபிடிக்க முயலும் நாயகன் குரங்கு ஒன்றை வைத்து ஆராய்ச்சி செய்கின்றான். அவனால் பரிசோதனை நிமித்தம் மருந்து செலுத்தப்பட்ட ஒரு குட்டிக் குரங்கு வளர வளர மனிதரைப் போல் சிந்திக்கும் ஆற்றல் தொடக்கம் பேசும் ஆற்றல்வரை அனைத்தையும் பெறுகின்றது. பின்னர் அது காட்டிலிருக்கும் தனது குரங்கு இனத்தைத் திரட்டி மனித இனத்துடன் மோதத் தொடங்குகின்றது.

இது குறித்த தொடரின் மூன்றாவது பாகம். வெளியாகவிருக்கும் இந்தப் பாகத்தில் இராணுவத்துடன் மோதிச் சண்டையில் தோற்றுப்போன முந்தைய பாகக் குரங்குகள் பழிதீர்ப்பதற்காக மீண்டும் போர் புரிய வருகின்றன.

குரங்குகள்தானே என்ற அலட்சியத்துடன் துப்பாக்கிகள் கொண்டும் நவீன ஆயுதங்கள் கொண்டும் எதிர்த்துச் சண்டையிடும் மனிதர்களுடன் அதே சம பலத்துடன் நேருக்கு நேராக மோதுகின்றன குரங்குகள். இதன் முடிவு என்ன? என்பதுதான் இந்தப் புதிய பாகத்தின் கதை.

நவீன ஆயுதங்களுடன் களமிறங்கும் மனிதர்களைப் பழங்கால ஆயுதங்களுடன் குரங்குகள் எதிர்கொள்வது போன்ற கிராபிக்ஸ் காட்சிகள் மெய் சிலிர்க்க வைக்கின்றன. சுமார் இரண்டு மணி நேர நீளமுள்ள இந்தப் படம் தனது முழு வேலைகளையும் முடித்துக் கொண்டு இன்னும் [illegible] களில் [illegible] ருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருகலை 'வை-வ்பை'

சி.சிவபாலன்

இணைய இணைப்புக்களைக் கையாள்பவர்களுக்குச் சாதாரணமாகத் தெரிந்த ஒரு விடயமே இந்த 'வை—வ்பை'(WiFi). இது இவர்களுக்கு மத்தியில் அன்றாடப் பாவனையில் இருக்கும் ஒரு விடய மாயினும், இணைய இணைப்பைப் பெறும்போது 'வை-வ்பை' பயன்படுத்தும் வசதியும் அவர்களுக்குக் கிடைப்பதால் அதற்கு என்னென்ன சாதனங்கள் தேவைப்படும் என்பதையும் அவை பற்றிய விளக்கங்களையும் அவர்கள் தெரிந்து வைப்பதில்லை.

**'வை - வ்பை' என்பது வணிகக் குறியீடு**

முதலில் 'வை-வ்பை' என்றால் என்ன? நாம் கணினிகளை ஒன்றுடன் ஒன்று இணைக்கும்போதும் இணைய இணைப்பைக் கணினிகளுக்கு ஏற்படுத்தும்போதும் வடங்களைப் (cables) பயன்படுத்துகின்றோம். மேற்கூறிய தேவைகளுக்கு வடங்களைப் பயன்படுத்தாமல் இணைய இணைப்பை ஏற்படுத்தும் தொழில் நுட்பமே'வை—வ்பை' தொழில் நுட்பமாகும். Wireless Fidelity எனும் இரண்டு ஆங்கிலச் சொற்களின் சுருக்கமே WiFi. இதையே தமிழில் அருகலை என்பர். கம்பியில்லாத் தொடர்புவசதி கொண்டகருவியின் வணிக் குறியீடாக அது அமைந்துள்ளது. உள்ளிடத்துக்கான கம்பியில்லாத மின்காந்தத் தொடர்புத் தொழில் நுட்பத்தில் இயங்கும் கருவிகளுக்கு 'வை- வ்பை அலியன்ஸ்' (WiFi Alliance) நிறுவனம் வழங்கிய வணிகக் குறியீடே பிற்காலத்தில் 'வை-வ்பை' ஆனது.

இன்றைய மிகப்பெரும்பாலான கணினிகள், மடிக்கணினிகள், பல்வேறு கணினித்துணைக் கருவிகள், அலைபேசிகள், அச்சியந்திரங்கள் போன்றவை இந்த அருகலையைப் பயன்படுத்தும் தொழில் நுட்பத்து டனேயே உருவாக்கப்படுகின்றன. WiFi எனும் குறியீடு(பெயர்) முதன்முதலாக 1999களில் இருந்து பயன்பாட்டிலுள்ளது.

**அனுசரிக்கும் திறனுடைய அருகலை**

'வை - பை' பொருத்தப்பட்ட கருவிகளைப் பயன்படுத்தி இணையத் தொடர்பைப் பெற்றுக்கொள்ளலாம். அது குறித்த அளவான எல்லைக்குள்ளே தான் சாத்தியமாகும். இதன் பரப்பளவு ஒரு சிறிய அறையில் இருந்து சில சதுர மைல்கள் வரை இருக்கும். இந்தத் துழவு எல்லையின் பரப்பானது எத்தனை அணுக்கப் புள்ளிகளைக் கொண்டது என்பதைப் பொறுத்தும், அவை எவ்வாறு மேற்பொருந்துகின்றன என்பதைப் பொறுத்தும் பரந்து விரிந்து செயல்படும்.

இது நாம் பாவிக்கின்ற வானொலி அலைகள் மூலமே தகவல்களை அனுப்புகின்றபோதும் மிகக் குறைந்த அதிர்வெண்ணில் தகவல்களை அனுப்புகிறது. அத்துடன் இந்த அலைகள் குறிப்பிட்ட சிறிய சுற்றாடலுக்கே தகல்களைப் பரிமாற்றம் செய்கின்றன. இந்தச் சூழலை 'ஹொட் ஸ்பொட்ஸ்' (Hotspots) என்று அழைப்பர். வீடுகள், நூலகங்கள், அலுவலகங்கள், விமான நிலையங்கள், தொழில் ஸ்தானங்கள், தொடருந்து நிலையங்கள் போன்ற மட்டுப்படுத்தப்பட்ட இடங்களுக்குள் இதனால் கம்பியில்லாமல் வலையமைப்புத் தொடர்பை ஏற்படுத்த முடிகிறது. இந்த வசதியைப் பயன்படுத்தி இணையத் தளங்களைப் பார்வையிடமுடியும். அத்துடன் இவை இருவழித் தொடர்பாடலை ஏற்படுத்துகின்றன. அதாவது இதன் மூலம் தகவல்களை அனுப்பவும் தகவல்களைப் பெறவும் முடி கின்றது. அத்துடன் இந்தத் தொழில் நுட்பமானது எவ்வகைப் பணிச்செயல்முறைமையுடனும், கணினி விளையாட்டுச் சாதனங்களுடனும், நவீன அச்சுப் பொறிகளுடனும் (modern printers) இணங்கிச் செயற்படுவதும் இதன் பயன்பாட்டை அதிகரிக்கச் செய்கின்றது.

**தனி நபருக்கேற்ப கடவுச்சொல் வசதி**

தற்போதைய கணினிகள், திறன் பேசிகள் என்பன இந்தத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தக்கூடிய வகையில் உள்ளகமாகவே கருவிகள் இணைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. அவ்வாறு இல்லாத கணினிகளுக்கு மாத்திரம் 'வயர்லஸ் அடப்ரர்'களை வாங்கி இணைக்க வேண்டியிருக்கும். இணைய இணைப்பை ஏற்படுத்தி கம்பியில்லாத திசைவி ஊடாக (wireless router) 'வைவ்பை' இணைப்பைப் பெற்றுக்கொள்ள முடியும். தரவுகளை வானொலி அலைகளாக்கி அனுப்பும் செயற்பாட்டை இந்தத் திசைவி செய்கின்றது. இதன் மூலம் ஒரே நேரத்தில் கைபேசிகள், கணினிகள் என்பவற்றைப் பலர் பாவிக்கக்



கூடியதாக இருக்கும். ஆகையால் இந்தத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும்போது கடவுச்சொற்களைப் பயன்படுத்தவேண்டியது அவசியமாகும். அதாவது குறிப்பிட்ட வலையமைப்பை அதற்கு உரியவர்கள் மட்டும் பயன்படுத்துவதை உறுதிசெய்துகொள்ளக் கடவுச் சொற்கள் பயன்படுகின்றன. 'வை - வ்பை' வசதியுள்ள இடங்களை இனங்கண்டு பாவனையாளர்களுக்கு வெளிப்படுத்தும் அமைப்பு (Setting) அடங்கிய நவீன கைபேசிகளும் உண்டு. எனினும் கடவுச்சொற்களால் பாதுகாக்கப்படும் போது உரிய பயனர்களைத் தவிர ஏனையவர்கள் இந்த வசதியைப் பயன்படுத்த முடியாது.

'வை - வ்பை' யானது குறிப்பிட்ட இடத்துக்குள் வடங்களின் துணையில்லாது வலையமைப்பை உருவாக்கும் வசதியைக் கொண்டிருப்பதால், திறன்பேசிகள் கணினிகள் கொண்டு அதைப் பயன்படுத்தி, மிகச்சிறப்பானவலையமைப்பை உருவாக்கி, தகவல்களைப் பெறுவதையும் அனுப்புவதையும் நிகழ்த்தி, இணையப் பாவனையைப் பலமடங்கு இலகுவாக்கியிருக்க உதவுகின்றது.



> "இன்றைய மிகப்பெரும்பாலான கணினிகள், மடிக்கணினிகள், பல்வேறு கணினித் துணைக் கருவிகள், அலைபேசிகள், அச்சியந்திரங்கள் போன்றவை இந்த அருகலையைப் பயன்படுத்தும் தொழில் நுட்பத்து டனேயே உருவாக்கப்படுகின்றன. WiFi எனும் குறியீடு(பெயர்) முதன் முதலாக 1999களில் இருந்து பயன்பாட்டிலுள்ளது."



## கல்லாகிய கடவுள்

கடவுள்
கல்லை உடைத்து
வெளியே எடுக்கப்பட்டார்.

எடுக்கப்பட்ட கடவுள்
கல்லடுக்கினுள்
காற்றுப் புகா இருள்கூடத்தில்
அடைக்கப்பட்டார்.

அடைக்கப்பட்டவர்
இருட்டோடு
புலம்பியிருந்தார்.

திறபடும் வேளைகளில்
கண்களை வறுத்தன
பேரொளிப் பிழம்புகள்.
பேரொளி பாய்ச்சி

அருளொளி
பெறவிளையும்
புத்திசாலித்தனம்
மனிதனுக்குரியது.

மனிதன்
கல்லைப்
பாதுகாப்பாகப் பூட்டி,

பூட்டின் நம்பிக்கையில்
திறப்புக்காக
அடியுதை படுகிறான்.

அடிபாடு
உச்சமாகி, உச்சமாகி
அச்சத்திலுறைந்த
கடவுள்
விறைத்து அப்படியே
கல்லாயே இருந்து
விட்டார்.

வானவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘பிஞ்சுத்தடம்’

## பேசாமல் பேசும் சினிமா

சி.ப.வேந்தன்

“உலகெங்கும் சினிமா விற்பன்னர்கள், சினிமா வரலாற்றாசிரியர்கள்இலக்கணம். தொடரியல் என்பன எல்லா சினிமாவுக்கும்பொதுவானவைஎன்கின்றனர். இந்த இலக்கணம் ஏறக்குறைய முப்பதாண்டுகள் நீடித்த மௌன சகாப்தத்தில் உருவானது. சினிமா.இலக்கணம், கோட்பாடுகள் அப்போதே ஏறக்குறைய முழு உருக்கொண்டு விட்டன எனலாம். பின் ஒலி, பேச்சு, மொழி, வண்ணம் இவை வந்தபிறகும் இந்தக்கோட்பாடுகளில் அடிப்படை மாற்றம் ஏதும் இல்லை. ஒவ்வொருமொழி சார்ந்த கலாச்சாரம் அதனதன் திரைப்படங்களில். வெளிப்படலாம். அந்தச்சினிமாவுக்கென்று தனிக் குணாதிசயங்களும் இருக்கலாம். ஆயினும்அடிப்படை இலக்கணம்பொதுவானது என்கின்றார்” எஸ். தியடோர்பாஸ்கரன் (தமிழ்திரைப்படங்களும் சினிமா இலக்கணமும் மிகை நாடும் கலை)

மேற்குறிப்பிட்டதுபோன்றுமுப்பதாண்டுகளுக்கு மேற்பட்ட மௌன சகாப்தத்தில் இருந்து பின்னாட்களில் மாற்றங்களோடு வந்த சினிமா அவ்வப்போது சில பரீட்சார்த்தங்களையும்நிகழ்த்திவருவது வழமை.

**புது முயற்சியை நோக்கிய நகர்வு**

சினிமா என்பது காட்சி ஊடகம். அதற்கு உரையாடல் தேவையில்லை என்பது சினிமா அறிவாளர்களின் கருத்தாக இருந்தாலும் ஆரம்பகால தமிழ்சினிமாக்கள் உரையாடல்களுக்காகவே வருடக்கணக்கில்ஓடியவரலாறும் உண்டு. பின்னாட்களில் வெளிவந்த தமிழ்சினிமாக்களில் ஒன்றிரண்டு பேர் வசனங்களைக் குறைத்து சினிமாக்களை தயாரித்தார்கள். எப்போதும் புதுமைகளை நோக்கி சிந்திக்கும் கமல்ஹாசன் ‘பேசும்படம்’ எனும் திரைப்படத்தைவசனங்களே இன்றி எடுத்தார். ஆங்கிலப் படங்களில் பல உரையாடலற்ற (மௌனப்படம் அல்ல) படங்கள்வெளிவந்துமிகப்பெரும்வெற்றி பெற்றன என்பது யாவரும் அறிந்ததே. ஈழத்தமிழ் சினிமா தனக்கான ஒரு இடத்தைப்பெற்றுவிட்டது எனப் பலர் நம்பினாலும்அல்லது அதைஏற்றுக்கொண்டாலும் அல்லது கூறித்திரிந்தாலும் அது எந்தச் சினிமா என்பதை ஒருவராலும் சரியாகக் கூறமுடியாதுள்ளது. ஈழத்தமிழ் சினிமா, தன்னுடன் ஒப்பிடுகையில் பல தளங்களிலும் வளர்ந்துவிட்டதாகக் கருதப்படும் தென்னிந்திய தமிழ்சினிமாவின் ஒவ்வொரு அசைவையும் கவனித்துப் பின்பற்றி அதேபோலவும் அதையொட்டியும் சினிமாக்களை உருவாக்கிவருகிறது. அந்த வரிசையில் உரையாடலின்றி ஒரு சினிமாவை உருவாக்கிவிடுவோமென்ற எண்ணத்துடன் உருவாக்கப்பட்ட ஈழத்தமிழ்க் குறும்படம்தான் ‘பிஞ்சுத்தடம்’.

உரையாடல் இல்லாமல் படம் எடுக்கவேண்டும் எனும் ஒரே காரணத்துக்காக எந்தவிதத் திருப்பமோ, புதுமையோ இல்லாமல் வழமையான ஒரு கதையைப் படமாக்கியிருக்கிறார்கள். ஆனாலும், தாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சியில் கூடியளவு வெற்றிபெற்றிருக்கிறார்கள்என்றேசொல்லலாம். வெறும் காட்சிகளுடே கதையை நகர்த்துதல்என்பது மிகமிகக் கடினமான ஒரு விடயம் அதைப் புரிந்து கொண்டு தம்முடைய உழைப்பைச் சரியான முறையில் வழங்கியிருக்கிறார்கள்.

**கனமில்லாத கதையும் கவனத்தை ஈர்க்கும் காட்சிகளும்**

ஒருஏழைக்குடும்பம். வயதாகி, நோயாளியானதந்தைவிறகுவெட்டிவிற்பதால்தான் குடும்பம் ஓடுகின்றது. 12வயது மதிக்கத்தக்க மகன் 10 வயதுடைய மகள், தாய். இவர்களுடைய வறுமையாலும், தகப்பனுடைய இயலாமையினாலும்(நோய் காரணமாக) ஒருவேளை உணவுக்கு வழிதேடி, படித்துக் கொண்டிருக்கும் சிறுவன், தகப்பனுடைய விறகுவெட்டும் தொழிலைச் செய்ய நேர்கிறது. அவனுடையவயதுக்குமீறியவேலைப்பழுவால் இயலாமைஏற்படவிறகுவெட்டிக்கொண்டு வரும்போது வீதியில் ஏற்படும் விபத்தில் சாவடைகிறான். அத்தோடுமுடிந்துபோய் விடுகிறதுபடம். க.விதுசன், க.தமிழ்மணி, மு.கமலேஸ்வரி, அ.யோகராஜா ஆகியோர் நடித்திருக்கிறார்கள். படத்தொகுப்பு செய்திருக்கிறார் ஸ்ரீ.துசிகரன். த.மதீசனின்இசையமைத்திருக்கிறார்.ஒளிப்பதிவு றொசான் நிறோஸ். கவனிக்க படத்தை எழுதி இயக்கியிருக்கிறார் ப.சுதேஸ்.

வறுமை, கல்விகற்கும் சிறுவர்களை இடையில்நிறுத்திஎப்படிஉழைப்பாளிகள் ஆக்குகின்றது என்பதை மாத்திரம் ஒருவரிக்கதையாக எடுத்துக்கொண்டுசிலசம்பவங்களையும்சேர்த்துக்கொண்டும்படமாகியிருக்கிறதுபிஞ்சுத்தடம்’கதையில்கோட்டைவிட்டாலும் தாம்சொல்ல நினைத்த விடயத்தை காட்சிகளோடு நகர்த்தியிருப்பது இந்தப்படக்குழுவின் வெற்றி எனலாம். க.விதுசன், க.தழிழ்மணி, மு.கமலேஸ்வரி, அ.யோகராஜா ஆகிய நான்கு பாத்திரங்களும்சம்பவங்களிலிருந்துதம்மைப் பிரித்துவிடாதபடி நடித்திருப்பது பாராட்ட வேண்டிய ஒன்றெனலாம். சிலசமயம் உரையாடல் இருந்திருந்தால், இந்த உணர்ச்சியானநடிப்புஇருந்திருக்குமோ! என்பதும்சந்தேகம்தான். பாத்திரங்களின் செயல்களும் முகபாவனைகளும் பார்வையாளனைக் கட்டிப்போட்டு வைத்திருக்கும் ஆயுதங்களெனலாம். உணவகத்தை ஏக்கத்துடன் பார்க்கும்போது தமிழ்மணியும், மகன் விறகுவெட்டும் தொழிலுக்குப் போவதை கண்ணீரோடு பார்க்கும் கமலேஸ்வரியும் படம் முடிந்த பின்னரும் மனதில் ஒட்டிவிடுகிறார்கள். கதையில் கூடுதலாகக் கவனம் எடுக்காத இயக்குநர் சின்னச்சின்ன காட்சிகளில் அக்கறைகாட்டிக் கவனத்தை ஈர்க்கிறார். கரித்துண்டால் பல்விளக்குதல், சேட்டுக்கு(மேலாடை) ஊசியை செத்தையிலிருந்து(பின்னியதென்னோலை)எடுக்கும் குடிசைவீட்டின்வழமைகள். வகுப்பறைக் காட்சிகள், வீட்டை வடிவமைத்திருப்பது என மிக அழகாக காட்சிகளால் நிகழ்களத்தை எந்தவித சந்தேகங்களும் எழாதவாறு பார்வையாளனுக்குக்காட்டிவிடுகிறார். அதற்கு தன்னாலான முழு ஒத்துழைப்பையும் திறனையும் வழங்கியிருக்கிறது ஒளிப்பதிவு.

கதைநிகழும் இடத்துக்குப் பார்வையாளனை மிகஅருகில்கொண்டு செல்ல தனது முழு உழைப்பையும் வழங்கியிருக்கும் ஒளிப்பதிவுக்காக மீண்டும்ஒருதடவை பார்க்கத்தூண்டுகிறது படம். கமரா சட்டகத்தின் மூலம் படத்தை அழகாக்கியிருக்கிறார் ஒளிப்பதிவாளர். வீடு அமைந்திருக்கும் சூழல், இரவுக்காட்சி, மழைக்காட்சி, பாடல் காட்சி, வாளித்தண்ணீரில் முகத்தைக் காட்டுவது என ஒவ்வொரு காட்சியையும் அருமையாகப் படம்பிடித்திருக்கிறார்.





**சறுக்கல் உண்டாக்கிய தவறுகள்**

உரையாடல் இல்லாத படத்துக்குப் பிரதானமானதே இசைதான் இங்கேஇசையில் இயக்குநரும் சரி இசையமைப்பாளரும் சரி முழுவதுமாகத் தமது பொறுப்பைத் தவறவிட்டிருக்கிறார்கள். நாராசமானஒரு தொடரிசை மீண்டும் மீண்டும் வந்து படத்தோடு ஒட்டமறுக்கிறது. கனமான காட்சிகளில்கூட இசை ஈர்க்கவில்லை. ஒலியின்றிகாட்சிப்படுத்தக்கூடிய இடங்களில்கூட இசைவந்துபோவதுசலிக்கவைக்கிறது. மிகஅருமையானகாட்சிகளுக்குகூட இசைமூலம்உயிர்கொடுக்க தவறியிருக்கிறார் இசையமைப்பாளர். குறும்படத்துக்குப் பாடல் சேர்த்திருப்பது பொருத்தமாயில்லை. உரையாடலின்றி எப்படியாவது காட்சிகளை அமைத்துவிடவேண்டுமென்பதற்காய் பாடலோடு சமரசம் செய்திருக்கிறார் இயக்குநர். தேவையற்ற பாடலானாலும் ‘பச்சைத் தண்ணியில் மிச்ச உடல் வாழுமா?’வரிகள் கவனிக்க வைக்கிறது. மிக அழகானரூபவ் மென்மையான உணர்வுபூர்வமான ஒரு படத்துக்குச் சாகசப்படங்களுக்கானமினக்கெடலோடு இடம்பெற்றிருக்கிறது படத்தொகுப்பு. தேவையில்லாத கிரபிக்ஸ் காட்சிகளும்(மேகம் அலைவது) அவ்வப்போது வருவது நெருடல்.

**தனித்துவம் நோக்கிய நகர்வு**

எதிரிகள் பட்டினி கிடப்பதைக் கண்டாலே பதறிவிடும் சக மனிதர்களுக்கு இரண்டு சிறுவர்களும் அவர்களது குடும்பமும் உணவின்றி இருப்பதை காணும்போது அவர்களையறியாமலேயேதவிப்பும்கவலையும் தொற்றிவிடும். அத்தோடு வறுமை சிறிய வயதில் குமடும்பச் சுமையைசிறுவர்தலையில்ஏற்றிவிடுவதும் அநியாயமாக அவன் இறந்துபோவதும்எனபடம்முழுக்கஒருஏழ்மைக்குடும்பத்தின் அவலத்தைப்பேசுகிறது. ஈரானிய சினிமாக்களைப் போன்று சிறுவர்களின் உலகை, அவர்களது வாழ்வை, அவர்களது இயலாமைகளைப் படமாக்கியிருக்கும்‘பிஞ்சுத்தடம்’நூறில்சிலவீதத்தையாவது எட்டியிருக்கின்றது என்றே சொல்லலாம். கதாநாயகத்தனங்களும் நமக்கு ஒவ்வாதகதைகளையும்படமாக்குவதிலிருந்து விலகி யதார்த்த வாழ்வின் வலிகளைப்பேசும் இந்தப் படத்தில் இருக்கும் ஒன்றிரண்டுபோதாமைகளைக்கவனித்திருந்தால் ஈழசினிமா வரிசையில் குறிப்பிட்டுமுன்வைக்கும்படமாகப்பிஞ்சுத்தடம்’ இருந்திருக்கும்.

“உரையாடல் இல்லாமல் படம் எடுக்கவேண்டும் எனும் ஒரே காரணத்துக்காக எந்தவிதத் திருப்பமோ, புதுமையோ இல்லாமல்வழமையான ஒரு கதையைப் படமாக்கியிருக்கிறார்கள். ஆனாலும் தாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சியில் கூடியளவு வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்றே சொல்லலாம். வெறும் காட்சிகளூடே கதையை நகர்த்துதல் என்பது மிகமிகக் கடினமான ஒரு விடயம் அதைப் புரிந்து கொண்டு தம்முடைய உழைப்பைச்சரியான முறையில்வழங்கியிருக்கிறார்கள்.”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்குத் திசையில் இருந்து...

அனார்கலி








## பேராளர் மாநாடு இன்று!

தேசிய காங்கிரஸின் 13ஆவது ஆண்டுப் பேராளர் மாநாடு இன்று 18ஆம் திகதி அக்கரைப்பற்று அதா உல்லா அரங்கில் நடைபெறவிருக்கின்றது.
தேசிய காங்கிரஸின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம். அதாவுல்லா தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த மாநாட்டுக்கான ஏற்பாடுகளைக் கட்சியின் மீயுயர் குழு செய்துள்ளது.
அதேவேளை தேசிய காங்கிரஸின் இப்தார் நிகழ்வுகள் இன்றுமாலை, அக்கரைப்பற்று கிழக்கு வாசல் இல்லத்தில் நடைபெறவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## முழு வெற்றி!

25தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்த, தபால் தொழிற் சங்கங்களின் முன்னணி கடந்த 13ஆம் 14ஆம் திகதிகளில் முன்னெடுத்திருந்த இரண்டு நாள்கள் அடையாளப் பணி புறக்கணிப்புப் போராட்டம் கிழக்கு மாகாணத்தில் வெற்றிகரமாக நடந்து முடிந்ததாக அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் யூ.எல்.எம்.பைஸர் தெரிவித்தார்.
மாளிகைக் காட்டிலுள்ள சங்கத் தலைமைப் பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே செயலாளர் பைஸர் இந்தத் தகவலை வெளியிட்டார்.
திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, அக்கரைப்பற்று தபால் அத்தியட்சகர் பிரிவுகளில் 56 பிரதான தபாலகங்களும், 213 உபதபாலகங்களும் இந்தப் பணி புறக்கணிப்பால் குறித்த தினங்களில் முழுமையாகச் செயலிழந்திருந்ததாகவும், ஆயிரத்து 200 ஊழியர்கள் இதில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.
மேற்படி இரண்டு தினங்களும் பொதுமக்கள், தபாலகச் சேவைகளைப் பெறமுடியாது பெரும் சிரமங்களுக் குள்ளாகியிருந்தனர். அதன் பின்னர் இடம்பெற்ற தபால் அமைச்சருடனான பேச்சுவார்த்தை வெற்றியளிக்கவில்லை எனவும், எதிர்வரும் 26ஆம் திகதி தொடக்கம் தொடர்ச்சியான பணிப் புறக்கணிப்பை நாடு தழுவிய ரீதியில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

## வேற்றுமையில் ஒற்றுமையாம்!

நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் இனவாதச் செயற்பாடுகளுக்கு முடிவுகட்டவென முஸ்லிம் அரசியல் தலைமைகள், கட்சிகள் வேற்றுமையிலும் ஒற்றுமை கண்டுள்ளனர் என்று அமைச்சர் ரிஷாத் பதியுதீன் சம்மாந்துறையில் தெரிவித்துள்ளார்.
அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில், சம்மாந்துறையில் நடைபெற்ற மாபெரும் இப்தார் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இந்த இப்தார் நிகழ்வில் ஆறாயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டமை அம்பாறை மாவட்டத்தின் முஸ்லிம் பிரதேசங்களில் சிலாகித்துப் பேசப்படுகின்றது. என்ன தான் வேற்றுமையில் ஒற்றுமை கண்டாலும், ரிஷாத்தின் இப்தார் நிகழ்வுக்கக் கூடியிருந்த சனத்திரள் ஏனைய கட்சிக்காரர்களை வேகப்படுத்தியேயுள்ளது.
முஸ்லிம் காங்கிரசும், தேசிய காங்கிரசும் இப்தார் களத்தில் சாதிக்காமலா இருக்கப் போகின்றன?



## இன நல்லுறவு இப்தார்கள்

கிழக்கின் முஸ்லிம் பிரதேசங்களில் இடம்பெற்று வரும் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வுகள் இன நல்லுறவை வளர்க்கும் வகையில் நடைபெற்று வருகின்றன.
குறிப்பாக பொது அலுவலகங்கள், பொது அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்படும் இப்தார் நிகழ்வுகளில் பெரும்பாலான தமிழ் பிரமுகர்கள், தமிழ் அரச அலுவலர்கள், கனிஷ்ட ஊழியர்கள், முஸ்லிம் மக்களுடன் இணைந்து நோன்பில் பங்கு கொள்வது இன நல்லுறவுக்கும், மேம்பாட்டுக்கும் பெரும் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.



## களை கட்டுகிறது!

தென்கிழக்கு முஸ்லிம் பிரதேசங்களில் நோன்புப் பெருநாளையொட்டிய வியாபாரச் செயற்பாடுகள் களைகட்டி வருகின்றது.
குறிப்பாக மட்டக்களப்பு, காத்தான்குடி, மருதமுனை, கல்முனை, சாய்ந்தமருது, சம்மாந்துறை, அக்கரைப்பற்று போன்ற பிரதான நகர்களிலுள்ள புடவைக் கடைகளில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிவதை அவதானிக்க முடிகின்றது.
அதேவேளைநடைபாதைவியாபாரிகளின் விற்பனைச்செயற்பாடுகளும் அதிகரித்துள்ளது. இதனால் இவர்களிடம் குறைந்த விலையில் உடுபுடைவைகள் மற்றும் பொருள்களைப் [illegible] கொள்ளும் வாய்ப்பு மக்களுக் [illegible] ளது.

## முற்றாக நீக்குக!

கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் நடைமுறைப்படுத்தும் வருடாந்த இடமாற்றப் பட்டியல் வரைவிலிருந்து, இரண்டு வருட, கட்டாய இடமாற்ற விதி முறைமையை முற்றாக நீக்குவதற்கு ஆவண செய்யுமாறு அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.
அந்தச் சங்கம் சார்பில் தலைவர் எஸ். லோகநாதன், பொதுச் செயலாளர் எம்.எம்.ஏ. வகாப் ஆகியோர் ஒப்பமிட்டு, கிழக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ள மனு ஒன்றிலேயே மேற்படி கோரிக்கை வலியுறுத்தப்பட்டுள்ளது.
நாட்டில் எந்தவொரு மாகாணத்திலும் பின்பற்றப்படாத இரண்டு வருட கட்டாய வருடாந்த ஆசிரிய இடமாற்றம் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்கள அதிகாரிகளின் விருப்பின் பிரகாரம் இடம்பெற்றுள்ளதாகவும், இது பொருத்தமற்ற நிர்வாகச் செயற்பாடெனவும் [illegible]

## தனிச் சிங்களத்தில்!

அஞ்சல் தலைமை அலுவலகத்தால் வெளியிடப்படும் அதிகமான சுற்று நிருபங்கள் தனிச்சிங்களத்திலேயே கிடைப்பதாகத் தமிழ்ப் பிரதேச அஞ்சல் அதிபர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.
இது தொடர்பில் அஞ்சல் அதிபர்கள், உப அஞ்சல் அதிபர்கள் தமது சங்கத்துக்கு முறைப்பாடு செய்துள்ளதாகவும், அஞ்சல் மா அதிபருக்கு இது தொடர்பில் தாம் மனு ஒன்றை அனுப்பிவைத்துள்ளதாகவும்அஞ்சல்திணைக்களஉத்தியோகத்தர்கள்சங்கப்பொதுச் செயலாளர் யூ.எல்.எம். பைஸர் தெரிவித்தார். தனிச் சிங்கள மொழியில் வரும் சுற்று நிருபங்களை வாசித்து விளங்குவதில் அஞ்சல் அதிபர்கள் குறிப்பாக உப அஞ்சல் அதிபர்கள் சிரமங்களை எதிர்கொள்வதாக மனுவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் காலங்களில் அஞ்சல் தலைமை அலுவலகத்தின் சகல சுற்று நிருபங்களும், தமிழ் மொழியில் வெளியிடப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.
அசைந்து கொடுக்குமா சிங்களப் பேரினவாதம். பொறுத்திருந்து பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிமூடும் பொழுதெலாம்...



சதிராடும் அன்றாட இரவு நினைவுகளுக்கு
அரிதாரம் தேடத் தெரியவில்லை.
நினைப்பெடுத்துத் தின்றுழலுகின்றன...

கண்களில் மட்டும்
ஏக்கம் பெருமூச்சு விட்டுத் திரும்புகின்றது...

நீ !என்ற ஒற்றைச் சொல்லில்
உயிர் தரித்த பொழுதுகள்
ஓடி மறைந்து தொலைகின்றன.

இருக்கின்றாயா? என்பதும்,
வருவாயா? என்பதும்,
கேள்விகளானாலும்,
எங்கோ ஒரு மூலையில்
உன் உடலம் சிதைவடைந்திருக்குமோ...!
இல்லையெனில் உயிருறைந்திருக்குமோ...!
என்கின்றன ஏக்கங்கள்.

ஏதுவாகிலும் அன்பே !
என் கனவுகளுக்கு,
உன் நினைவுகள்தான் தீனி

விடியாத இரவில் நான்
விழி மூடிக் கிடக்கின்றேன்.
நம்பிக்கைகள் பொய்த்தபடி...

சதீஸனா,
வற்றாப்பளை.

# நற்பண்பு நமக்கிருந்தால் வசமாகும் நல்வாழ்வு

ஏழாலையூர் நிலா

எல்லா மனிதர்களிடத்திலும் நல்ல பண்புகளும் உள்ளன. இருந்த போதிலும் பெரும்பாலானவர்கள் அவற்றைச் சரியான முறையில், பயன்படுத்தத் தவறி விடுகின்றனர். அவசர உலகில் எதையும் நினைத்தவுடன் செய்து முடிக்க வேண்டும் என்பதே எல்லோருடைய விருப்பமும், தேவையும்கூட. ஆனால் எல்லா விடயங்களையும் எடுத்தோம், கவிழ்த்தோம் என்பதாகச் செய்து விட முடியாது.

எந்தவொரு செயலைச் செய்யும்போதும் அதனைச் சரிவரச் செய்தே முற்றுப்பெற வைக்க வேண்டும். அதனால் யாரும் பாதிக்கவும் படக்கூடாது என்றும் திடசங்கற்பம் கொள்ள வேண்டும். அதன் பின்னரே அந்தச் செயலை முழு ஈடுபாட்டுடன் செய்து முடிக்க வேண்டும். அப்போது தான் நாம் அதன் பலனை முழுமையாகப் பெற முடியும். அதற்கு ஒரே வழி அவற்றை நாம் பொறுமையுடன் செய்வது அவசியம்.

**பொறுமை எனும் பெரிய பண்பு**

மனிதனின் நற் பண்புகளில் ஒன்றாக விளங்குவது பொறுமை எனும் பண்பாகும். ஆனால் இன்று இந்த நற்பண்பு அருகி வருவதைப் பல சர்ந்தர்ப்பங்களிலும் உணர்கின்றோம். பூமியானது பொறுமை காப்பதால் தான் தன்னில் நாம் நிகழ்த்தும் நன்மை, தீமைகள் யாவற்றையும் தாங்கி, சகித்து நம்மைப் பாதுகாக்கின்றது.

பொதுவாகப் பார்த்தால் எல்லோருக்குமே நல்ல பண்புகளை மாத்திரம் வெளிப்படுத்துபவர்களையே அதிகம் பிடிக்கின்றது. அகங்காரம் கொண்டவர்களை மதிப்பதையோ, அவர்களுடன் பழகுவதையோ, யாரும் விரும்ப மாட்டார்கள். இது தான் யதார்த்தம். வீட்டிலும் சரி, பெர்து இடத்திலும் சரி நடைமுறை வாழ்க்கையில் நாம் அனுபவிக்கும் விடயங்கள் யாவும் நல்லதாக நடக்க வேண்டும் என்று நாம் ஒவ்வொருவரும் எதிர்பார்க்கிறோம். ஆனால் அதை நடைமுறைப்படுத்துவதைச் சில நேரங்களில் மறந்து விடுகின்றோம். இதனால் சிலர் பொறுமையைக் கடைப்பிடிப்பவர்களை, நிதானித்துச் சிந்திக்கும் திறன் கொண்டவர்களைத் தரம் தாழ்த்தி விடுகின்றனர். எதிலும் வேகம் காட்டுபவர்களை உயர்வாக எண்ணுகின்றனர். பொறுமையாளர்களைக் குறைவாக மதிப்பீடும் செய்கிறார்கள்.


**இன்னும் சில இயற்பண்புகள்**

ஒவ்வொரு மனிதனுக்கும் இயல்பாகச் சில பண்புகள் உள்ளன. ஆனால் சிலரின் ஆளுமைப் பண்பு, வாழும் குடும்பச் சூழல், நட்பு என்பவை அவரவருக்கு ஏற்ப மாற்றம் பெறுகின்றன. அதேவேளை பொறுமை உள்ளவர்களிடத்தில் பணிவு எனும் நற்பண்பும் அதிகம் குடிகொண்டிருக்கும். கண்களில் கனிவும், செய்யும் தொழிலில் நேர்மையும், உண்மையும் கலந்திருக்கும். இதனால் பொறுமை உள்ளவர்களால் தாமதமாகத்தன்னும் நிறைந்த காரியங்களைச் சாதித்துக் கொள்ள இயலும். ஆனாலும் மனிதர்கள் எல்லோருக்குமே பொறுமை எனும் பண்பு அவசியமாகின்றது.

ஒவ்வொருவருக்கும் வெவ்வேறுபட்ட திறமைகள் உள்ளன. எனவே தான் ஒவ்வொருவரும் தனித்துவமானவர்களாக வாழ்கின்றோம். ஆனால் ஏதோவொரு பிணைப்பில் தான் வாழ்கின்றோம் என்பது மறுக்க முடியாத உண்மை. யாரும் தனித்து வாழ்வதில்லை. உறவு எனும் பிணைப்புடன் வாழ்ந்து வருகின்றோம். எந்தவொரு செயலைச் செய்யும்போதும் எனக்கு மட்டும் என்று சொல்வதைவிட நமக்கு எனச் சொல்வதில் ஆத்ம திருப்தி அடைகின்றோம். எதையுமே எனக்குரியது என்று நினைக்க ஆரம்பித்து விட்டாலே நம்மில் ஆணவம் எனும் அரக்கன் குடிகொண்டுவிட்டான் என்பதில் எந்த ஐயமுமில்லை.

எனவே நம்மை நாம் மாற்றிக் கொள்ள வேண்டும். அத்தகைய மாற்றத்தை நாமே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். எல்லா நேரங்களிலும் சின்னக் குழந்தை மாதிரி அடம்பிடிப்பது , நான் சொல்வது தான் சரி என வாதிடுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். நீங்கள் நினைக்கும் கருத்தை வெளிப்படுத்துங்கள், அதே நேரம் மற்றவர் வார்த்தைக்கும் மதிப்பளிக்கப் பழகுங்கள். ஒவ்வொரு மனிதனுக்கும் ஆசைகள், உணர்வுகள் உள்ளன என்பதை மறந்து விடாதீர்கள்.

பிடிவாதத்தை விட்டுவிடுங்கள். சில நேரங்களில் நமக்குப் பிடித்த விடயம் இன்னொருவருக்குப் பிடிக்காத வேளைகளில் அதனை மற்றவர்களிடத்தில் திணிக்காதீர்கள். மற்றவர்களை எப்போதும் உயர்வாக எண்ணுங்கள்.



**திடமும் உறுதியும் உங்களை உயர்த்தும்**

எந்தச் செயலைச் செய்யும்போதும் முழுமனதுடன் செய்யுங்கள். மற்றவர் குறை கூறுகின்றார் என்றில்லாமல் அது தவறு என்பதை உறுதிசெய்தால் மட்டும் அதைத் திருத்திக் கொள்ளுங்கள். இயன்றவரை அனுசரித்து நடவுங்கள். மறறவர்களைக் குறை கூறுவது , விமர்சிப்பது போன்ற விடயங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். ஒருவரைப் பற்றிக் மற்றவருடன் கதைப்பதை விடுத்து, அவரைப் பற்றி அவருடனேயே கதைப்பதே உயர்ந்த பண்பு. எந்தவொரு செயலைச் செய்யும்போதும் உங்களைச் சார்ந்திருப்பவர்களையும் ஒரு கணம் சிந்தியுங்கள். மற்றவர்களிடத்தில் பேசும் போது இனிமையாகப் பேசுங்கள், மனக் கவலை ஏற்படும் நேரங்களில் அதனுடன் சம்பந்தப்பட்டவர்களுடன் மனம் விட்டுப் பேசுங்கள். அல்லது உங்கள்மீது அக்கறையும் நேசமும் உள்ள ஒருவருடன் அந்த பிரச்சினை பற்றி கதையுங்கள். சின்ன விடயங்களுக்கெல்லாம் கவலைப்பட்டு அலட்டிக் கொள்ளாதீர்கள். எதையும் ஆழச் சிந்தித்து முடிவெடுங்கள்.




**வாழ்க்கை உங்கள் வசப்படும்**

இத்தனை பண்புகளையும் கொண்டு வாழப் பழகிக் கொண்டால் , நற்பண்புகளுக்கு முன்னுதார ணமாகச் செயல்படுவீர்கள். அது மட்டுமல்ல இன்றைய அவசர உலகில் சில விடயங்களைக் கணினி போல் மிக வேகமாகச் செயற்படுத்த வேண்டிய கட்டாயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தேவை ஏற்படும் போது விரைவாகச் செயற்பட வேண்டியது அவசியமே . அதனை உரிய முறையில் பக்குவமாகச் செய்து முடிப்பது கட்டாயமானது.

மனிதன் தனது அனுபவ அறிவாலும் பல நற்பண்புகளைக் கற்றுக் கொள்கிறான். அத்தகைய நற்பண்புகளின் கூட்டே அவனை உயர்த்த உதவுகின்றது. இவை அனைத்தையும் கடைப்பிடிக்கும் போது மனிதர் நீங்கள் மாமனிதர் ஆவீர். அப்போது வாழ்க்கையும் வரலாறும் உங்கள் வசப்படும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மரங்களை வெட்டி காப்பெற் வீதிகளை வளர்ப்போம்...!

ஜோதா

> அரசு, சண்டைய முடிச்ச கையோட, ரோட்டுகளை எல்லாம் பெருப்பிச்சுக் கட்டடங்களையும் கனதியாக்கி, தான் ஏற்படுத்திவிட்ட தழும்புகளை மறைக்கின்ற வேலைத்திட்டங்களை அவசர அவசரமாகச் செய்து முடிச்சுது. அதை ஒப்பேத்தின நம்மட கைப்பிள்ளைகளும் கண், மண் தெரியாமல் எல்லாத்தையும் அழிச்சு அவை சொன்னதை நல்லபடியாகச் செய்து முடிச்சினம்... இப்ப என்ன என்றால் வறட்சி...? செய்யிற கொடுமைக்கு வெயில் கூடாதோ... என்ன...?

**2009** வரைக்கும் இந்தா.. அந்தா... என்றிருந்த அந்தப் பிரச்சினை. அந்த வருசத்துக்குப் பிறகு எடுத்த வேகம் என்பது வேகத்திலும் வேகமே. அதாவது படுவேகம்.
நீங்கள் அனைவரும் இப்போது மனதில் நினைத்திருக்கலாம் இங்கு நான் குறிப்பிட வருவது இயக்கப் பிரச்சினை என்று. அதுவல்ல இது. அதிலிருந்து சற்று வித்தியாசம். அதாவது இது இயற்கைப் பிரச்சினை...!
இயற்கை என்றாலே மனிதருக்கு எப்போதுமே பிரச்சினைதானே...? பத்திரிகைகள், கட்டுரைகள் எல்லாவற்றிலும் அது பற்றித்தானே அதிக பேச்சு...!
ஆம்...! இயற்கை காப்போம். இயற்றை வளர்ப்போம். சூழல் மாசடைதலைக் கட்டுப்படுத்துவோம்... இவ்வாறு பற்பல. வகை தொகையாகக் கட்டுரைகளை எழுதி விழிப்புணர்வுகளை ஏற்படுத்தினாலும் அவற்றால் என்ன பயன்...?
அவற்றைப் படிப்பவர்கள் படித்துக் கொண்டேயிருக்கிறார்கள். அதைப் படிப்பவர்களும் படிக்காதவர்களும் 'படித்தவர்களு'மாகச் சேர்ந்து இயற்கையை அழிக்கத்தானே செய்கின்றார்கள்...?

— — — — — —

'அந்த' அரசு, சண்டைய முடிச்ச கையோட, ரோட்டுகளை எல்லாம் பெருப்பிச்சுக் கட்டடங்களையும் கனதியாக்கி, தான் ஏற்படுத்திவிட்ட தழும்புகளை மறைக்கின்ற வேலைத்திட்டங்களை அவசர அவசரமாகச் செய்து முடிச்சுது. அதை ஒப்பேத்தின நம்மட கைப்பிள்ளைகளும் கண், மண் தெரியாமல் எல்லாத்தையும் அழிச்சு அவை சொன்னதை நல்லபடியாகச் செய்து முடிச்சினம்... இப்ப என்ன என்றால் வறட்சி...? செய்யிற கொடுமைக்கு வெயில் கூடாதோ... என்ன...?



ஜப்பானின் ஓசாகா நகரத்தில், உள்ள கயாஷிமா தொடருந்து நிலையத்தில், 700 வயதுடைய மரம்.

ரோட்டில வாகனத்தை விட்டிறங்கித் தரையில கால் வைக்க ஏலாது. ஒரு கரையில ஒதுங்குவம் என்றால், அதில நின்ற மரம், தடி, கொடி எல்லாத்தையும் அடியோட பிடுங்கி அகத்தியாச்சு. உடனடியாகக் காப்பெற், கட்டடம். அதுபோல உடனடியாக மரம் ஒன்றை வளர்க்க முடியுமா இவர்களால்...?

— — — — — —

வெளிநாடுகளிலேயும் வீதிகள் அகலிக்கப்படுகின்றனதான். புதிதாகவும் போடுகின்றார்கள். நேர்வே நாட்டில் ஒரு இடத்தில் நெடுஞ்சாலை ஒன்றைப் புதிதாக அமைத்துக் கொண்டிருக்கும் ஊழியர்கள், அந்தப் பனி நிறைந்த தரையிலும் ஏராளம் இடர்களை எதிர்கொண்டு, அவ்வளவு சாத்தியமாக ஓங்கி உயர்ந்து வளர்ந்திருக்கும் அந்தப் பெரிய மரத்தைத் தறித்துவிடாமல் தாம் இட்டுச் சென்ற நீண்ட அந்தச் சாலையை அந்த மரத்தைத் தவிர்த்து ஓரமாக, வளைத்து எடுக்கின்றார்கள்...! இதுவே நம்மவர்கள் என்றால் அந்த மரத்தின் கதி என்னவாகி இருக்கும்...?
ஆதாரத்தோடு உங்களுக்கு விடை வேண்டும் என்றால், யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதி நீளம் சென்று பாருங்கள். கூடவே 2009 களுக்கு முன்னரும் இப்போதும் அது கொண்டிருக்கும் நிலைமையை ஒப்பிட்டும் பாருங்கள். அதிலும் மருதனார் மடச் சந்தியைப் பாருங்கள். இயற்கை அழிப்பு மட்டுமா...? ஏராளம் பழமைகளையும் அல்லவா அடியோடு ஆதாரமில்லாமல் ஆக்கி விட்டிருக்கின்றார்கள்.

— — — —

அண்மையில் கட்டுரை ஒன்றில் படித்திருந்தேன். பாலைவனத் தேசமாகவிருக்கும் கட்டார் நாடு தன்னுடைய வெந்த தரையில் மரங்களை உண்டாக்குவதில் பெரும் சிரமப்பட்டு... முடிவாக, வளர்க்கப்பட்ட பெரு மரங்களை இறக்குமதி செய்து தனது தரையில் நாட்டி வருகின்றதாம்!
அதை விடா... முயற்சியோடு மேற்கொண்டதில் இப்போது அந்தப் பாலைவனத் தேசத்தின் ஒரு பகுதி பசுமை கொழிக்கின்றதாம்!



எமது நாட்டுடன் ஒப்பிடுகையில் எத்தனையோ அபிவிருத்திகளைக் கண்டுவிட்ட கட்டார், தன்னிடம் இயற்கை இல்லாத குறையை உணர்ந்து அதை நிவர்த்தி செய்து வருகின்றது. ஆனால் இயற்கை தாராளமாக அமையப் பெற்ற நம்மவர்களோ... அதன் அருமை அறியாமல், அவற்றை அலட்சியமாக அழித்து வருகின்றனர்.

அண்மையில் ஒரு செய்தி. அது ஜப்பான் பற்றி இருந்தது. உலகப் போரில் பல அழிவுகளைச் சந்தித்த நாடான அதுகூட இயற்கையைப் பாதுகாப்பதில் இவ்வளவு தூரம் கவனம் கொள்கின்றதே...!

ஒரு தொடருந்து நிலையத்தில் 700 வருட வயதைக் கொண்ட பெருமரம் ஒன்று நிற்கின்றது. அதுவும் தண்டவாளப் பாதைகளுக்கு நட்டநடுவில். அதை இடையூறாகஎண்ணித்தறித்துவிடவில்லை ஜப்பானியர்கள். அது அப்படியே தன்பாட்டில் நின்றுகொண்டிருக்க அந்த இயற்கை நிழலின் கீழ் பயணிகள் இளைப்பாறும் சுகத்துடன் நகர்கின்றன தொடருந்துகள்.

சீனாவில் பீஜிங்கில் இடத்தில் மைதானத்துக்கு நடுவில் பெரும் இடைஞ்சல் தரக் கூடிய வகையில் தனியொரு பெரு மரம். அதைக்கூட அப்புறப்படுத்தாமல் அந்த மைதானத்தில் அவர்கள் விளையாடிக் கொண்டே இருக்கின்றார்கள். இதுவே நம்மவர்களாக இருந்தால், இந்த மரங்களின் நிலை என்னவாகவிருக்கும்...? கற்பனை பண்ணிப் பாருங்கள்...! வருங்காலப் பாலைவனம் இப்போதே உங்கள் கண்களுக்குத் தெரியும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதாவின் போயஸ்த் தோட்டம்:

## ஒரு அதிகாரத்தின் கதை



வேதா நிலையம், இலக்கம்-81, போயஸ்த் தோட்டம், சென்னை- 600086. இதுதான், மறைந்த முன்னாள் முதல்வர் செல்வி. ஜெயலலிதாவின் அதிகாரபூர்வ முகவரி. கடந்த 30ஆண்டுகால அ.தி.மு.க.வின் அரசியல் முகவரியும் அதுதான். கடந்த 30ஆண்டுகாலத் தமிழக அரசியல் சக்கரத்தின் மையப்புள்ளி. சில தருணங்களில் இந்திய அரசியலைத் தீர்மானித்த புள்ளி என்றும் சொல்லலாம். 1967இல் சென்னையில் வீடு வாங்கினார் ஜெயலலிதாவின் தாயும் பிரபல நடிகையுமான சந்தியா. அதனை அவரும் ஜெயலலிதாவும் தங்கள் இரசனைக்கு ஏற்ப செதுக்கி, பிரம்மாண்ட இல்லமாக்கினர். புதுமனைப் புகுவிழா நெருங்கும் சமயத்தில், திடீரென உடல்நிலை பாதிக்கப்பட்டு சாவடைந்தார் சந்தியா. ஆகவே, தாயின் நினைவாகத் தனது வீட்டுக்கு வேதா நிலையம் என்று பெயர் வைத்தார் ஜெயலலிதா. சந்தியாவின் இயற்பெயர் வேதவல்லி.

### அரசியல் அஸ்திவாரம்

80களின் தொடக்கத்தில் ஜெயலலிதாவுக்கு அறிமுகமானார் சசிகலா. தொடக்கத்திலிருந்தே போயஸ்த் தோட்ட இல்லத்துக்கு வருபவர்களில் முக்கியமான நபராக மாறினார் சசிகலா. அ.தி.மு.கவில் சேர்ந்ததும் சத்துணவுத் திட்ட உயர்மட்டக் குழு உறுப்பினர், கொள்கைப் பரப்புச் செயலாளர், மாநிலங்களவை உறுப்பினர் என்று பல பதவிகள் ஜெயலலிதாவுக்குக் கிடைத்தன.

கட்சியின் மூத்த தலைவர்கள் முதல் முக்கிய நிர்வாகிகள் வரை பலரையும் போயஸ்த் தோட்டத்து இல்லத்தில் வைத்துச் சந்திப்பதையும் உத்தரவுகள் பிறப்பிப்பதையும் வழக்கமாக்கிக் கொண்டார் ஜெயலலிதா. எம்.ஜி.ஆரின் இறுதி ஊர்வலத்தில் நடந்த சில ஏற்றத்தாழ்வான சம்பவங்கள் தொடர்பாகச் செய்தியாளர் சந்திப்பொன்றை நடாத்த ஜெயலலிதா தெரிவுசெய்த இடம், போயஸ் தோட்டத்து வேதா நிலையம். அவருடைய அடுத்தகட்ட அரசியல் பாதையைத் தெளிவுபடுத்தியதும் அங்கு, அன்று அவர் வெளியிட்ட அறிக்கைதான்.

எம்.ஜி.ஆர் மறைவுக்குப் பிறகு கட்சி உடைந்தபோது, ஜெயலலிதாவுக்கு ஆதரவாக நெடுஞ்செழியன் உள்ளிட்ட பல மூத்த தலைவர்கள் இருந்தனர். ஒருகாலத்தில் அண்ணாவையே வீடு தேடிச் சென்று சந்தித்த அமைச்சர்கள் எல்லாம், இப்போது 'வேதா' நிலையத்துக்குச் சென்று காத்திருக்கத் தொடங்கினார்.

எம்.ஜி.ஆருக்கு ராமாவரம் தோட்டம் போல், ஜெயலலிதாவுக்குப் போயஸ் தோட்டம் என்றானது. 1989 சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு, அ.தி.மு.க (ஜெ) சார்பில் எதிர்க்கட்சித் தலைவராக யாரை அனுப்புவது என்ற முக்கியத்துவம் வாய்ந்த விவாதம் முதன்முதலில் நடைபெற்றது இங்குதான்!

1991 சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று ஜெயலலிதா முதல்வராகியதும் அவருக்கென்று அரசால் உத்தியோக பூர்வ இல்லம் ஒன்று ஒதுக்கப்பட்டது. ஆனால், அதைத் தவிர்த்துவிட்டு போயஸ் தோட்ட இல்லத்தையே தனது அதிகார பூர்வ இல்லமாக வைத்துக்கொண்டார் முதல்வர் ஜெயலலிதா.

### சோதனைகள், சந்திப்புகள்

தி.மு.க ஆட்சிக்காலத்தில் ஜெயலலிதா உள்ளிட்டோர் மீது பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டன. ஜெயலலிதாவைக் கைது செய்யப் போயஸ் தோட்ட இல்லத்துக்கு வந்தது சி.பி.சி.ஐ.டி பொலிஸ். அப்போது அவர் பூஜையில் இருந்தார். சில மணி நேரக் காத்திருப்புக்குப் பிறகுதான் அவரைக் கைதுசெய்ய முடிந்தது. அந்தக் காலகட்டத்தில் போயஸ் தோட்டத்து இல்லம் பல்வேறு சோதனைகளுக்கு உள்ளானது. அந்தச் சோதனைகளின் ஒரு பகுதியாக, வீட்டின் மழைநீர்க் குழாய்களுக்குள் உயர் அழுத்தக் காற்று செலுத்தப்பட்டு, அதற்குள் ஆவணங்கள், நகைகள் ஏதேனும் ஒளித்து வைக்கப்பட்டுள்ளனவா? என்று ஆராயப்பட்டது. சொத்துக் குவிப்பு வழக்கின் சொத்துக்கள் பட்டியலில் போயஸ் தோட்டமும் அடக்கம்!

1998 மக்களவைத் தேர்தலின்போது ராமதாஸ், வைகோ உள்ளிட்ட மாநிலத் தலைவர்கள் தொடங்கி பிரமோத் மஹாஜன், ஜஸ்வந்த் சிங் உள்ளிட்ட அகில இந்திய அரசியல் கட்சித் தலைவர்கள் வரை பலரும் கூட்டணி குறித்துப் பேசுவதற்குப் போயஸ் தோட்டத்துக்கு வந்து செல்லத் தொடங்கினர். பிறகு, வாஜ்பாய் பிரதமரானதும், அமைச்சர்கள் இலாகா தொடங்கி ஒவ்வொரு பிரச்சினைக்கும் பிரதமரின் தூதுவர்களாக மூத்த அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் உள்ளிட்டோர் போயஸ் தோட்டத்துக்கு அடிக்கடி வரத் தொடங்கினர்.

2002இல் நீதிமன்றத் தீர்ப்பின் காரணமாக ஜெயலலிதா முதல்வர் பதவியிலிருந்து விலகியபோது, அவருக்குப் பதிலாக ஓ. பன்னீர்செல்வம் முதல்வரானார். அப்போது ஜெயலலிதாவைப் போயஸ் தோட்ட இல்லத்துக்கு வந்து சந்தித்து, ஆலோசனை பெற்றுச் செல்வதை வழக்கமாகக்கொண்டார் பன்னீர்ச்செல்வம்.

### 'மர்ம மாளிகை!'

2006 சட்ட மன்றத் தேர்தலில் தி.மு.க கூட்டணியில் இடம்பெற்றிருந்தது ம.தி.மு.க. கடைசி நேரத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாகக் கூட்டணியிலிருந்து வெளியேறிய வைகோ, நேராகச் சென்ற இடம் வேதா நிலையம். ஜெயலலிதா - வைகோ இடையிலான போயஸ் தோட்டச் சந்திப்பு கூட்டணியாக மாறியது. அதேபோல, மிகுந்த உற்சாகத்துடன் அ.தி.மு.க அணியில் இணைந்த திருமாவளவன், தேர்தல் தோல்விக்குப் பிறகு 'போயஸ் தோட்டம் ஒரு மர்ம மாளிகை' என்று சொல்லி, கூட்டணியிலிருந்து வெளியேறினார்.

2014 மக்களவைத் தேர்தலுக்குப் பிறகு, நரேந்திர மோடி பிரதமரானார். அப்போது அவருடைய அரசுக்கு அ.தி.மு.கவின் ஆதரவு தேவையில்லை என்றபோதும், மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி, மத்திய சட்டஅமைச்சர் ரவிசங்கர் பிரசாத் போன்றோர் முதல்வர் ஜெயலலிதாவைக் காண்பதற்கு அவரது இல்லத்துக்கே நேரில் சென்று சந்தித்துப் பேசினர்.

திடீரென ஒருநாள் முதல்வர் ஜெயலலிதாவின் வீட்டுக்கு வந்தார் பிரதமர் மோடி. அரச சம்பிரதாய நடைமுறையின்படி நாட்டின் பிரதமர் ஒரு மாநில முதல்வரை அவருடைய இல்லத்துக்கே வந்து சந்திப்பது வழக்கமில்லை. ஆனால், பிரதமர் மோடி முதல்வர் ஜெயலலிதாவின் போயஸ் தோட்ட இல்லத்துக்கே வந்து, விருந்து உண்டு, தமிழக அரசின் சார்பில் முதல்வர் ஜெயலலிதா கொடுத்த கோரிக்கைப் பட்டியலைப் பெற்றுக் கொண்டமை ஜெயலலிதாவின் அரசியல் முக்கியத்துவத்தை உணர்த்தியது.

### தனித்துக் கிடக்கின்றது ஆட்சிப்பீடம்

2016, செம்ரெம்பர் 22 இரவு உடல்நிலைப் பாதிப்புக் காரணமாகத் தனது இல்லத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்டு அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் ஜெயலலிதா. அந்த நாளின் பின்னர், அவரது உடலைத்தான் போயஸ் தோட்டத்துக்கு எடுத்துவந்தனர். ஜெயலலிதா மறைந்த பிறகு, போயஸ் தோட்ட இல்லத்திலேயே தங்கினார் சசிகலா. அதற்குப் பின்னர், மீண்டும் பதில் முதல்வரான பன்னீர்செல்வம் அடிக்கடி அங்கு சென்று சசிகலாவிடம் ஆலோசனைகள் பெற்றுச் சென்றார். சசிகலாவின் முதல் செய்தியாளர் சந்திப்பு நடந்ததும் அங்குதான். ஜெயலலிதா சமாதியில் வைத்து சசிகலாவை விமர்சித்த பன்னீர்செல்வத்துக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் செய்தியாளர்களைச் சந்தித்தார் சசிகலா. இன்றைக்கு வேதா நிலையத்துக்குச் சொந்தம் கொண்டாடி, அதன் வாசலில் சண்டையிட்டுக்கொள்கிறார்கள் ஜெயலலிதாவுடைய சகோதரரின் பிள்ளைகள்.

அரசியல் பரபரப்பின் ஆ[illegible]வராக இருந்த போயஸ்த் தோட்டம், இன்றைக்குச் சொத்துப் பிரச்சினையின் மையமாகச் சுருங்கிவிட்டது. அத்துடன் அதிகார பீடம் ஒன்று யாருமற்றுத் தனித்தும் விட்டது.

1967இல் சென்னையில் வீடு வாங்கினார் ஜெயலலிதாவின் தாயும் பிரபல நடிகையுமான சந்தியா. அதனை அவரும் ஜெயலலிதாவும் தங்கள் இரசனைக்கு ஏற்பச் செதுக்கி, பிரம்மாண்ட இல்லமாக்கினர். புதுமனைப் புகுவிழா நெருங்கும் சமயத்தில், திடீரென உடல்நிலை பாதிக்கப்பட்டு சாவடைந்தார் சந்தியா. ஆகவே, தாயின் நினைவாகத் தனது வீட்டுக்கு வேதா நிலையம் என்று பெயர் வைத்தார் ஜெயலலிதா.



■ நன்றி - தி ஹிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களும் ஆண்களுக்கு நிகரானவர்களே!

அல்லிதேவி

பொதுவெளிகளில் நாம் நடந்து கொள்ளும் எத்தகைய நடத்தைகளாலும் பிறிதொருவர் பாதிப்படையக்கூடாது. பொது இடங்கள் என்பவை அனைவருக்கும் பொதுவானவை. அவ்விடங்களில் அகங்காரம் பூண்டு, அதிகாரம் செலுத்தி மற்றவர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அதில் தொனிக்கும் ஆண் - பெண் என்ற பாரபட்சங்களும் அடியோடு தவிர்க்கப்பட வேண்டும்.

• • •

கடந்த வாரம், விடுமுறை நாளன்று நெடுநாள்களாகக் காணாதிருந்த உறவினர் ஒருவரிடம் சென்று வர எத்தனித்தேன். எனது இருப்பிடத்திலிருந்து இருபது, இருபத்தைந்து கிலோமீற்றர்கள் தொலைவிலிருக்கும் அவர்களின் வீட்டுக்குச் சென்று திரும்புவது ஒரு நாள் பயணமாக அமையும் என்பதால், அதற்குப் பொருத்தமாக அந்த விடுமுறை தினத்தைப் பயன்படுத்திக் கொண்டேன். கனத்த வெயிலும் பலத்த காற்றுமடித்துக் கொண்டிருக்கும் காலநிலை மாற்றத்தைக் கருத்திலேடுத்தவளாய் பஸ்சில் பயணிப்பதே உசிதமானதுஎன்றும்தீர்மானித்தேன்.

• • •

அன்றைய விடுமுறை தினத்தில் பஸ் நிலையமும் சன நடமாட்டம் அதிகம் இல்லாமல் இருந்தது. ஆனால் பஸ்களில் இருக்கைகள் மீதமில்லாத அளவுக்குப் பயணிகள் பூரணப்படுத்திக் கொண்டிருந்தனர். நான் காணவிருக்கும் அந்த உறவினரின் ஊர் வழி செல்லும் பஸ்சை இனங்கண்டு அதில் ஏறினேன். அந்த பஸ், தான் புறப்பட வேண்டிய நேரத்தை நெருங்கிக் கொண்டிருந்ததால் அதன் இருக்கைகள் ஓரளவாகப் பயணிகளால் நிரம்பிக் கொண்டிருந்தன.



பஸ்களில் முதலில் ஏறிக் கொள்ளும் பயணிகள் யன்னல் ஓரமாகவுள்ள ஆசனத்தையே கைப்பற்றிக் கொள்வார்கள். இந்தக் கலாசாரத்தைச் சிறு வயது முதலே அறிந்தவளாதலால் அந்த எதிர்பார்ப்பு அற்றவளாய் ஏலவே அமர்ந்து விட்டவர்களருகில் எங்காவது இருக்கைகள் இருக்கின்றனவா என்று கண்களைக் கொண்டு துலாவினேன்.

• • •

இரண்டு பேர் இருக்கக் கூடிய அந்த இருக்கைகள் அனைத்தும் கூடியளவில் பயணிகளால் நிரப்பப்பட்டே விட்டன. எதிர் எதிராக இருந்த இரண்டு இருக்கைகளில் மாத்திரம் ஒவ்வொருவர் வீதம் அமர்ந்திருந்தனர். அருகில் சென்று இருக்க எத்தனித்தால், ஒருவர், தான் அமர்ந்திருந்த இருக்கையில் இன்னொருவர் அமரும் இடத்தில் ஒரு பொதியை வைத்திருந்தார்.
அவ்விடத்தில் அமர்வதற்குத் தனது நண்பர் ஒருவர் வரவிருப்பதாகச் சொன்னார். அவரின் எதிரே உள்ள இருக்கையில் அமர்ந்திருந்த மற்றையவரை அணுகியதில், அவர் அருகான இருக்கை வெறுமனே கிடந்தது. அதில் நான் அமர்ந்துகொள்ளவும் அந்த பஸ் புறப்படவும் நேரம் சம காலமாக இருந்தது.

• • •

இருக்கையில் அமர்ந்துவிட்ட பின்பு தான் எனக்குப் புரிந்தது இருவர் அமருவதற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் அந்த இருக்கையின் முழுப்பகுதியையும் யன்னல் ஓரமாக அமர்ந்து கொண்டிருக்கும் அந்த ஆண்மகன் தானே முழுமையாக ஆக்கிரமித்துக் கொண்டபடி இருக்கின்றார். அவருக்கு ஓரமாக, பெண்மகளான நான் கூனிக் குறுகி இருக்க வேண்டியதாயிற்று...
அவர் தனது இரண்டு கால்களையும் அகல விரித்து, இருக்கையின் முழுப்பகுதியையும் ஆக்கிரமித்துக் கொண்டு சிம்மாசனமிட்டி ருந்தார். அவரருகில் இருக்கும் நான் எஞ்சிய சிறு பகுதியில் இருக்க முடியாமல் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருப்பது அவருக்குப் புரிவதாயில்லை. நானே வாய்விட்டு...
“கொஞ்சம் அரக்கி இருப்பீங்களே...” என்று தயவாகக் கேட்டதில், சிறிய இடம் வெளித்தது. ஆனாலும் அவரது அகலக்கால் இன்னமும் அப்படியேதான்.
சிறிது நேரம்போக அது மீண்டும் வழமைக்கு வந்து என்னை ஓரங்கட்டிவிட்டது. அது அவருடைய இயல்பாகவும் இருக்கலாம். ஆனால் அவரருகே எனக்குப் பதிலாக ஒரு ஆண்மகன் அமர்ந்திருந்தால் நிச்சயமாக அவரால் அந்த இருக்கையில் தனக்குரியளவான பகுதியில் மாத்திரம் அமர்ந்தவாறு பயணம் செய்திருக்க முடியும். பெண்ணவள் ஆதலால் தானோ எனக்கிந்த நிலமை...?
நான் இத்தகைய அனுபவத்திலிருந்து மீண்டு கொண்டிருக்கும் ஓரிரு வாரங்களில் தான் எனக்குப் புரிந்தது. இது என்னை மாத்திரம் பாதித்த விடயம் அல்ல. உலக அளவில் பல பெண்களையும் இதுபோன்ற விடயங்கள் பலவும் பாதித்திருக்கின்றன. அண்மையில் நான் அறிந்த அந்தச் செய்தியின்படி இதற்கு ஒரு உலக நாடு தகுந்த சட்ட நடவடிக்கையையும் கையிலெடுத்துள்ளதாம்...!

• • •

பஸ்சில் புகைபிடிப்பதற்கு விதிக்கப்பட்ட தடையுடன் ஸ்பெயினின் தலைநகர் மட்ரிட்டில் இப்போது புதிய தடை ஒன்றும் விதிக்கப்பட் டுள்ள தாம்...!
பொதுமக்களுக்கான போக்குவரத்து வாகனங்களில் கை, கால்களைக் கண்டபடி பரத்தியபடி அமர்ந்து, அடுத்தவர்இடத்தையும்ஆக்கிர மிக்கும் போக்கு அந்த நாட்டில் அதிகரித்து வந்ததையடுத்தே பஸ் இருக்கைகளில் அவ்வாறு அமர்ந்து கொள்வதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாம்...
“அடுத்தவர் இருக்கையை இடத்தை மதியுங்கள்” என்ற வாசகங்களைப் பஸ்களில் காட்சிப்படுத்தி அதை மீறும் பட்சத்தில் அது தண்டனைக்குரிய குற்றமாக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளார்களாம்...! இங்கு, நமது ஊரில், நான் அனுபவித்ததைப் போன்று அடுத்தவருடைய இடம், இருக்கை என்று பாராமல் கை, கால்களைப் அகலித்து அமருவதை அங்கு ‘மேன்ஸ்பி ரெடிங்’ (Mansp reading) என்று அழைக்கின்றார்களாம்...!

• • •

அந்த நாட்டில் இப்படியாகக் கொண்டுவரப்பட்டிருக்கும் புதிய சட்ட நடவடிக்கைகளின் அடிநாதமும் பெண்மையை மதிக்காமல் நடந்து கொண்டதன் வெளிப்பாடாகவே அமைகின்றது. இன்று எனக்குப் புரிகின்றது என்று எமது நாட்டில்தான் பெண்களுக்கு இந்த நிலமை என்றால் விருத்தி கண்ட மேலைத் தேசத்திலும் அவர்களுக்கு இந்த நிலைமையா...? ஏனெனில், ஸ்பெயின் நாட்டில் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்தப் புதிய கட்டுப்பாடு பற்றி அந்த நாட்டுப் பொண் ஒருவர் இவ்வாறு கூறியிருக்கின்றார்,
“இவ்வாறு உட்காருவது கல்வியறிவின்மையால் அல்ல, பெண்கள் கால்களை அடக்கி ஒடுக்கி உட்கார வேண்டும் என்பது இயல்பாகவே எதிர்பார்க்கப்படுகின்றது. அதாவது பெண்கள் மட்டும் முழங்கால்களுக்குள் எதையோ வைத்திருப்பவர்கள்போல் உட்கார வேண்டுமாம். ஆனால் ஆண்களோ கை கால்களைப் பரத்திக்கொண்டு கண்டபடிக்கு உட்காரலாமாம், இது என்ன விதி? எனவே இந்த தடை உத்தரவை வரவேற்கிறேன்”

அவர் தனது இரண்டு கால்களையும் அகல விரித்து, இருக்கையின் முழுப்பகுதியையும் ஆக்கிரமித்துக் கொண்டு சிம்மாசன மிட்டி ருந்தார். அவரருகில் இருக்கும் நான் எஞ்சிய சிறு பகுதியில் இருக்க முடியாமல் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருப்பது அவருக்குப் புரிவதாயில்லை. நானே வாய் விட்டு... ‘‘கொஞ்சம் அரக்கி இருப்பீங்களே...’’ என்று தயவாகக் கேட்டதில், சிறிய இடம் வெளித்தது. ஆனாலும் அவரது அகலக்கால் இன்னமும் அப்படியே தான்.



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# இந்தவார முகநூலில்...



உசிலமணி

வடமாகாண சபைக் குழப்பங்கள் சூடுபிடிக்கிறதால அங்காலப் பக்கம் நடக்கிற 'மினிவேள்ட் கப்' பலருக்கு மறந்தே போச்சு. இந்தியாவுக்கு, இலங்கை சாத்தின தோட போன இந்தியப் பெடியள், தென்ஆபிரிக்கா வுக்கு இந்தியா திருப்பியடிச்ச தோட்தான் உசார எழும்பி வந்தாங்கள். பாவம் இலங்கைப் பெடியள், பாகிஸ்தானிட்ட அடிவாங்க, இந்தியப் பெடியள் எகத்தாளத்தோட வசனங்களைப் போட்டுத் தள்ளினாங்கள். இதில 'செமி பைனலு'க்கு, இங்கிலாந்து, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் வந்தது. பிரிஞ்சு போனவையும், பிரிச்சுக் கொடுத்தவனும் 'செமி பைனலுக்கு' வந்திட்டாங்கள் என்று அதுக்கும் பொரிஞ்சு தள்ளினாங்கள். எது எப்படியோ ஆசிய அணியில, ஒண்டுதான் 'மினி வேள்ட் கப்' அடிக்கப் போகுது எண்டு, இலங்கைப் பெடியள் தங்களைத் தாங்களே தேத்திக் கொண்டாங்கள்.




முகப்புத்தகம் முழுவதும் வடக்கு மாகாண சபை மயம் தான். விசாரணை அறிக்கையில சொன்ன மாதிரி ரெண்டு அமைச்சர்களையும், முதலமைச்சர் பதவியை விலகச் சொன்னதும் ஒரு கூட்டம் முதலமைச்சருக்கு எதிராப் பொங்கிச்சுது. அவரைத் திட்டித் தீர்த்துது. அன்றிரவே, முதல மைச்சரைப் பதவியிலிருந்து நீக்கக்கோரி தமிழரசுக் கட்சி ஆளுநரிட்டக் கடிதம் கொடுத்ததும், அந்தக் கூட்டம் அந்தர்பல்டி அடிச்சு முதலமைச்சருக்குச் சப்போர்ட் பண்ணிச்சுது.

ஆளுநரையே நீக்க வேண்டும் எண்டு சொன்னவங்கள், கடைசிய ஆளுநரைக் கொண்டு முதலமைச்சரை நீக்கிற துக்கு முயற்சிக்கிறாங்கள் என்று ஒரு 'குறூப்' இந்த நடவடிக்கையை எதிர்த்துது. முதலமைச்சரும், தமிழரசுக் கட்சியும் எப்பயடா முட்டிமோதும் என்று பார்த்துக் கொண்டிருந்த கூட்டம் இதுக்குள்ள புகுந்து தங்கட அரசியலைக் காட்டத் தொடங்கிட்டுது. இந்தப் பிளவை இன்னும் சூடாக்கிற பதிவுகள் முகப்புத்தகத்தில கடுமையாக உலாவிச்சுது. பிரச்சினையைச் சுமுகமாக முடிக்க முற்பட்ட குறூப்பை ஒருபகுதி திட்டித் தீர்த்திச்சுது. முடிவில இளசுகள் முதலமைச்சரோட நிக்கிறதைக் காட்டி அவரைப் பலப்படுத்திப் போட்டுதுகள். தாங்கள் முகநூலில மட்டுமில்ல, களத்திலையும் போராளிகள்தான் என்று ஒரு, கொஞ்சம் நிரூபிச்சுப் போட்டுதுகள்.

Like Comment Share

# தெருக்கூத்து

சாரா

யாழ்ப்பாண வீதிகளின் மஞ்சள் கடவைகளில் சில வெள்ளைக் கடவைகள் ஆகிவிட்டன. மங்கி மறைந்து அறவே தெரியாதிருந்த அவற்றிலும் பார்க்க இப்போதைக்குச் செம்மைப்படுத்தப்பட்டிருக்கும் அந்த வெள்ளைக் கடவைகள் பரவாயில்லை என்று மனதைத் தேற்றிக் கொள்ளலாம். வீதிகளைப் பராமரிப்பதில் அரச பகுதி அக்கறையில்லாமல் இருக்கின்றதோ அல்லது அதை ஒரு பொருட்டாக மதிக்க மறுக்கின்றதோ எனும் சந்தேகங்களுக்கு விடைகள் இவைபோன்ற செயல்களில் இருந்து கிடைக்கலாம். இப்போதெல்லாம் வீதி விபத்துக்கள் என்பன சாதாரண விடயமாகி நாள்தோறும் பல உயிர்களைக் காவுகொள்கின்றன. இயல்பாகவே நிலைமை இப்படியிருக்க வீதிகளுக்குரிய இது போன்ற சில கட்டாயச் சமிக்ஞைகள், குறியீடுகள் பலவும் மறுவழுமாக ஒழுங்கு பேணப்படாமலிருக்கின்றன.

• • •

யாழ்ப்பாணத்தின் ஒன்றிரண்டு நாற் சந்திகளுக்கு மாத்திரம் கடந்த காலங்களில் வீதி விளக்குகள்(சமிக்ஞைகள்) பொருத்தப்பட்டன. அத்துடன் சரி. அதற்குப் பின்னர் ஏனைய வீதிகளுக்கும் அந்தச் சமிக்ஞைகள் பொருத்தப்படும் என்ற எதிர்பார்ப்புகளுக்கு முன்னர் ஏற்கனவே பொருத்தப்பட்டவை ஒழுங்காகச் செயல்படுகின்றனவா? என்று கவனிப்பதோ, அதைப் பராமரிப்பதோ இல்லாமலிருந்தது. அதை ஓரளவுக்கு நிவர்த்தி செய்துகொண்டாலும், அந்தக் குறித்த சில சந்திகளில் நிறுவப்பட்டிருக்கும் ஒளிச் சமிக்ஞைகள் நடந்து பயணிப்பவர்களுக்கு - பாதாசாரிகளுக்கு எவ்விதத்திலும் பயன்தராதவையாக உள்ளன. உதவாத விதத்தில் தொடர்ந்தும் செயல்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இதுவரை அந்த ஒளிச் சமிக்ஞைகளைப் பயனுள்ள விதத்தில் மாற்றியமைக்கவோ அல்லது வீதியில் அது சார்ந்த வசதிகளைப் பேணிக்கொள்ளவோ எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

• • •





நாற்சந்திகளிலும் வாகனங்கள் 25நிமிட இடைவெளிகளில் பயணிக்கின்றன. சந்திகளில் வாகன நிறுத்தல்களுக்கு முன்பிருக்கும் பாதசாரிகள் கடவைக்குரிய ஒளிச் சமிக்ஞைக்கும் வாகனங்களை நகர்த்தும்ஒளிச்சமிக்ஞைக்கும்இடையே நிலவிக் கொண்டிருக்கும் நேர ஒவ்வாமை ஒருபோதும் அதன் வழி பாதாசாரிகளை வீதியின் மறுபக்கம் செல்வதற்கு உதவும்படி செயற்படவில்லை. பாதாசாரிகள் சமிக்ஞையில் பச்சை விளக்கெரியும்போது அவர்கள் வீதியைக்கடந்தால்வாகனத்தில்மோதுண்டு போகும் நிலை அங்கு.

• • •

இது யாழ்ப்பாணத்தின் சத்திரச்சந்தியில் பொருத்தப்பட்டிருக்கும் வீதிச் சமிக்ஞை முன்பாக நிகழ்ந்தது. தமக்கு ஒதுக்கப்பட் நேர இடைவெளிகளுக்குள் நாலபுற வாகனங்களும் வேகமெடுக்கின்றன. அந்தப்பகுதியில் கருவாட்டுக் கடைகள் இருப்பதால் சிங்கள மக்கள் பலரும் அதன்வழி படையெடுத்தனர். அத்துடன் ஒன்றிரண்டு ஐரோப்பியச் சுற்றுலாப் பயணிகளும் நம்மவர்களும் வீதியைக் கடக்கக் காத்திருந்தனர். அவர்களுக்குரிய பச்சைச் சமிக்ஞை ஒளிர்ந்தும் வீதியைக் கடப்பதற்கு வாகனங்கள் இடம் விடுவதாயில்லை. நம்மவர்கள் இருபகுதியும் இடையிடையே பார்த்து வீதியைக் கடந்துகொள்ள, நாடியில் கைகொடுத்தவர்களாய்ப் பார்த்தவாறு தொடர்ந்தும் காத்துக்கொண்டிருந்தனர் அந்த ஐரோப்பியர்கள்... மென் சிரிப்புடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆச்சரியம் ஊட்டும் பயிர் வட்டங்கள்

நிஷா

பரந்தளவு பரப்புக்களில் விளைந்திருக்கும் பயிரில், ஒரே இரவில், அறியப்படாத ஏதோவொரு செயற்பாட்டால், அந்தப் பயிர்களில் விளங்கிக் கொள்ள முடியாத பலவித உருவங்கள் உருவாக்கப்படுகின்றன. அவற்றையே பயிர் வட்டங்கள் என்று அழைக்கின்றனர். உலகின் பல நாடுகளிலும் இந்தப் பயிர் வட்டங்கள் தோன்றியிருக்கின்றன. அவை அதிகம் உருவாக்கப்பட்டிருப்பது பிரித்தானியாவில்தான். உலகில் கண்டறியப்பட்டுள்ள பயிர் வட்டங்களில் 80சதவீதத்துக்கும் அதிகமானவை அங்கே உள்ளன.

## பயிர்வட்டங்களைச் சுற்றிப் புனையப்படும் கதைகள்

இவை யாரால், எப்படி உருவாக்கப்படுகின்றன என்ற கேள்விகளுக்கு இன்றுவரை விடைகள் கிடைக்காமல் உள்ளன. வழக்கம்போல அதைச்சுற்றிப் புனையப்பட்ட கதைகள் பலவுமே உலா வருகின்றன. இந்தப் பயிர் வட்டங்கள் மனிதனால் உருவக்கப்பட்டவை என்று ஒரு தரப்பினரும், மனிதருக்கு அப்பாற்பட்ட அமானுஷ்யங்களால் உருவாக்கப்பட்டவை என்று ஒரு சிலரும், இல்லை இவை வேற்றுக்கிரக வாசிகளால் உருகவாக்கப்பட்டவை என்றும், வேற்றுக்கிரக வாசிகளின் பறக்கும் தட்டுகள் வந்து இறங்கிய அடையாளங்கள் அவை என்றும் பல கதைகள்.

1970 ஆண்டுக்குப் பின்னர் ஒவ்வொரு வருடமும் பல நாடுகளிலும் நூற்றுக்கணக்கில் பயிர் வட்டங்கள் தோன்றத் தொடங்கின. உலகளவில் இதுவரை 10 ஆயிரத்துக்கும் அதிகமான பயிர்வட்டங்கள் தோன்றியிருக்கின்றன. இருப்பினும் 6 ஆயிரம் பயிர்வட்டங்களே முழுமையாக ஆராயப்பட்டு ஆவணப்படுத்தப் பட்டிருக்கின்றன. பயிர்வட்டங்களின் வடிவம், தன்மை, அர்த்தம், நம்பகத்தன்மை போன்றவை அனைத்தும் முழுமையாகப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு ஆவணங்களாகக் காக்கப்படுகின்றன.

இவற்றை ஆராய்வதற்காக 'பயிர்வட்ட ஆய்வாளர்கள்' எனும் ஆராய்ச்சியாளர்களைக் கொண்ட குழுவொன்றும் நியமிக்கப்பட்டி ருக்கின்றது. பயிர்வட்டங்கள் உருவாகும்போது, தாங்கள் நேரிலேயே கண்டதாகப் பலர் இந்தக் குழுவுக்குச் சொல்லியிருக்கின்றனர்.

## மனிதர்களால் உருவாக்கும் சாத்தியம் இல்லை!

பயிர்வட்டங்கள் கண்டறியப்பட்ட ஆரம்பகாலத்தில் உலகம் முழுவதும் அந்தச் செய்தி மிகப்பிரபலமாகப் பேசப் படத் தொடங்கியது. அவை ஆச்சரியமான, அதிசயமான, மர்மமானவையாகப் பார்க்கப்படத் தொடங்கின. தொடர்ந்து உருவான பயிர்வட்டங்கள் வடிவங்களில் சிக்கலான கணித அமைப்புகளும் தோன்ற ஆரம்பித்தன. இதனால் பயிர்வட்டங்களை உருவாக்குபவர்கள் மிகுந்த அறிவாளிகள், சக்தி வாய்ந்தவர்கள் என்ற பேச்சும் வளர ஆரம்பித்தது.

பிரித்தானியாவைச் சேர்ந்த இருவர் தாங்கள்தான் அனைத்துப் பயிர்வட்டங்களையும் உருவாக்கியவர்கள் என்பதாக ஊடகங்களுக்குக் கூறினர். அவர்கள் இருவரும் 1978ஆம் ஆண்டிலிருந்தே பயிர்வட்டங்களை உருவாக்க ஆரம்பித்ததாகவும், பலகைத் துண்டைக் ஒருகாலில் வைத்துக்கொண்டு பயிர்களை அழுத்துவதன் மூலம், பயிர்வட்டங்களை உருவாக்கியதாகவும் சொன்னார்கள்.

இவ்வளவு நாள் விடை கிடைக்காத ஒரு கேள்விக்கு விடை கிடைத்ததாகப் பலரும் நம்பினார்கள். அனால் அவர்கள் கூறியவற்றில் பல முரண்பாடுகள் இருந்தன. அவர்கள் பயிர்வட்டங்களைப் பல பகுதிகளில் உருவக்கியதாகக் கூறினர். ஆனால் ஒரே இரவில் பல கிலோமீற்றர்கள் தூரம் பயணம் செய்து அவற்றை உருவக்குவது சாத்தியம் இல்லையென்றே தோன்றியது. பின்னர் அதனை உறுதிப்படுத்த முனைந்த ஆராய்ச்சிக் குழுவினர் அவர்களிடம் உருவாக்கும்படி கொடுத்த உருவத்தையும் அவர்கள் துல்லியமாக உருவாக்கவில்லை. இதன் மூலம் இவற்றை அவர்கள் உருவாக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. அவர்கள் மட்டுமல்ல ஏனைய எந்த மனிதர்களாலும் அந்த வேலையைச் செய்யமுடியாது என்பதும் வெளிப்பட்டது. இருப்பினும் அவர்களின் இந்த யோசனையை வைத்து பயிர்வட்டங்களை இளைஞர்கள் சிலரும் உருவாக்கத் தொடங்கினர். பிறகு அது விளம்பர ரீதியில் பெருகியது. பல நிறுவனங்கள் தங்கள் விளம்பரங்க ளைப் பயிர்வட்டங்களில் வரைந்தனர். இருப்பினும் அவர்களால் சில சிக்கலான உருவங்களை வரைய முடியவில்லை. இதற்கு முன்னர் வரையப்பட்ட சில உருவங்களில் சில கணித அமைப்புக்கள், குறியீடுகளே இருந்தன.





## சிக்கலான உருவங்கள் நேர்த்தியாக ஒரு இரவுக்குள்!

2009ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் கொட்லாந்து நாட்டில் ஒரு மிகப்பெரிய பயிர்வட்டம் தோன்றியது. இதுவரை தோன்றியிருந்த பயிர்வட்டங்களிலேயே மிகவும் பெரியது அது. அரைக் கிலோமீற்றருக்கும் (530 X450 மீற்றர்) அதிகமான அளவுடையதாக இருந்தது. ஓவியர் டாவின்சியின் 'Vitruvian Man' எனும் அடையாளம் போல, இரண்டு கைகளையும் ஒரு மனிதன் விரித்தபடி, வண்ணத்துப்பூச்சியாக மாறுவது போன்ற பயிர்வட்டம் அது. ஆராய்ச்சியாளர்களின் கணிப்புப் படி, மனிதர்களால் அது செய்யப்பட்டிருக்க முடியாது என்று சொல்லப்படுகின்றது.

அரைக் கிலோமீற்றர் நீளமான இந்த வடிவத்தை இவ்வளவு நேர்த்தியாக ஒரே இரவில் உருவாக்க நூற்றுக்கும் அதிகமானவர்கள் இங்கே வேலை செய்திருக்க வேண்டும்என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். ஒரு வேளை இந்தப் பயிர்வட்டம் வேற்றுக்கிரகவாசிகளால் செய்யப்படாததாக இருந்தால், மனிதன் பற்றிய அனைத்துத் தகவல்களும் அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். டாவின்சியின் இந்த அடையாளத்தை அவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். அத்துடன் உயிரினங்களின் பரிணாம வளர்ச்சி பற்றியும் தெரிந்து வைத்திருக்க வேண்டும்! இவற்றின் மூலம் மனிதர்களுக்கு அவர்கள் ஏதாவது செய்திகளைச் சொல்ல முயற்சிக்கவும் கூடும்என்று கூறுகின்றனர். இருப்பினும் அவற்றை உருவாக்குவது யார்? எதற்காக உருவாக்குகின்றனர் என்பது போன்ற பல கேள்விகளுக்கு ஆதாரத்துடன் விடை கிடைக்காமலேயே உள்ளது. ஆனால் அநேகமானவர்களால் இது வேற்றுக்கிரகவாசிகளின் வேலையாக இருக்கலாம் என்றே நம்பப்படுகின்றது.

## வேற்றுக்கிரகவாசிகளால் எதற்குப் பயிர்களில் குறியீடுகள்...?

வேற்றுக்கிரகவாசிகள் தான் பயிர் வட்டங்களை உருவாக்கினார்களா? இல்லை வேறு யாராவது அவற்றை உருவாக்கினார்களா? என்பது பற்றிச் சொல்வதற்கு முன்னர், சில விடயங்களை நாம் ஊகித்துக் கொள்ள முடியும். "இதையெல்லாம் நாம் எப்படி நம்புவது?" என்ற கேள்வியே உங்களுக்குள் இப்வபோதுவரை ஓடிக் கொண்டிருக்கும். உங்களுக்கும், உலகில் உள்ள பலருக்கும், ஏன், எனக்கும்கூட இவைநம்பமுடியாதவைதான். நம்ப வேண்டிய அளவுக்கு ஆதாரங்களையும், சாட்சிகளையும் முன் வைத்தாலும், மனம் ஏனோ நம்ப மறுக்கின்றது. காரணம், இவற்றைநம்பினால் நாம் எடுக்கும் முடிவு ஒன்றே ஒன்றாகத்தான் இருக்க முடியும். அந்த முடிவு, 'வேற்றுக்கிரக வாசிகள் பூமிக்கு வந்து போகின்றனர்' என்பதுதான்.

வேற்றுக்கிரகவாசிகள் பற்றிய எண்ணப்பாடு நமக்குள் இருந்தாலும், முழுமையாக அதை நம்மால் நம்ப முடிவதில்லை. அதற்கிடையில்தான் அவர்களால் தான் இந்தப் பயிர் வட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கலாம் என்ற இன்னுமொரு எண்ணப்பாடும் முன்வைக்கப்படுகின்றது. சரி அப்படி இருப்பினும் அவர்கள் ஏன் இப்படியான பயிர் வட்டங்களை அமைக்கின்றனர்? என்பதுவும் நீளும் கேள்வியே.

2000ஆம் ஆண்டு ஒகஸ்ட் 13ஆம் திகதி ஒரு பயிர் வட்டம் தோன்றியது. அது 'ப்ராக்டல்' (Fractal) என்று சொல்லப்படும் வடிவமைப்பைக் கொண்டது. கணிதத்தில் மிகவும் சிக்கலான அமைப்பு அது. ஒரு குறிப்பிட்ட வடிவம் பல அடுக்குகளாகப் பெருகி உருவாகும் சித்திரத்தை 'ப்ராக்டல் வரைவு' (Fractal art) என்று சொல்வார்கள். கணனிகளால்; உருவாக்கக் கூடிய இந்த வடிவங்களைப் பயிர்களில் உருவாக்குவதென்பது சாத்தியமற்ற ஒரு விடயம்.

அப்படி உருவாக்க முடியுமென்றாலும் அதற்குப் பல பேர் சேர்ந்து, பல நாள்கள் உழைக்க வேண்டும். ஆனால் ஒரே இரவில், சில மணித்தியாலங்களுக்குள் இவை உருவாக்கப்படுகின்றன. 2001ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 13ஆம் திகதி இரவு மனித முகத்துடனும், அதைத் தொடர்ந்து ஒரு வாரத்தில் இன்னுமொரு சிக்கலான வடிவத்துடனும் இரண்டு பயிர் வட்டங்கள், அதே இடத்தில் தோன்றியுள்ளன.

வழமையான பயிர் வட்டங்கள் போல இவை காணப்படவில்லை. மனிதனின் முகத்தைக் கணனியில் வரையும்போது, எப்படிக் கறுப்பு- வெள்ளை ஒளி மாற்றங்கள் (Shading) இருக்குமோ அப்படியாக அவை அமைக்கப்பட்டிருந்தன. அது மட்டுமல்லாமல், முப்பரிமான அமைப்புடன் அந்த முகம் உருவாக்கப்பட்டிருந்தது. முப்பரிமாணத் தோற்றம் உருவாவதற்காக, பயிர்கள் சிறியதும், பெரியதுமாகவும், அடர்த்தி கூடியதும், அடர்த்தி குறைந்ததுமாகவும் வட்டவடிவப் புள்ளிகள் போல (Pixel) மிக நேர்த்தியுடன் அழுத்தப்பட்டு உருவாக்கப்பட்டிருந்தன. ஒரே இரவுக்குள் அவை எப்படி உருவாக்கப்பட்டன என்று தெரியாதிருப்பதால் பயிர் வட்டங்கள் அவை ஆச்சரியம்தரும் விடயங்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







**மேடம்:** சொந்த பணியில் மட்டும் கவனம் செலுத்தவும். தொழில், வியாபாரத்தில்இலாபம் சுமாராக இருக்கும். உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும். இல்லறத் துணையின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.



**இடபம்:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். நண்பர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். தொழில், வியாபாரத்தில் போட்டி பெருமளவில் குறையும். பணியாளர்கள் பாராட்டு வெகுமதி பெறுவர்.



**மிதுனம்:** சமயோசிதமாக முக்கிய பணிகளை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை திருப்தியளிக்கும். வருமானம் அதிகரிக்கும். உறவினர் வருகையால் மகிழ்ச்சி காண்பீர்கள்.



**கடகம்:** சிலர் உங்களை ஏளனமாக பேசும் சூழ்நிலை உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். இலாபமும் கூடும். பெண்கள் செலவுக்காக கடன் வாங்க நேரும்.



**சிங்கம்:** முக்கியப் பணிகளில் மட்டும் கவனம் செலுத்தவும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாகலாம். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.



**கன்னி:** பெருந்தன்மையுடன் பிறருக்கு உதவி செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு பதவி கிடைக்கும்.



**துலாம்:** மனதில் நல்லெண்ணம் உண்டாகும். அன்றாடப் பணிகளில் புத்துணர்வுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். இலாபம் உயரும்.



**விருச்சிகம்:** சங்கடமான சூழ்நிலை ஏற்படலாம். பொறுமையுடன் செயல்படுவது நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் சுமாரான வருமானம் கிடைக்கும். பெண்கள் சிக்கனத்தை கடைப்பிடிப்பர்.



**தனுசு:** உங்களின் பிரச்சினையை பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரம் மந்த கதியில் இயங்கும். சேமிப்பு பணம் செலவுக்கு பயன்படும். உடல் நலனில் அக்கறை காட்டுவது நல்லது.



**மகரம்:** உங்கள் நலம் விரும்புபவரைச் சந்திப்பீர்கள். அன்றாட பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் தாராள பணவரவு கிடைக்கும். கூடுதல் சொத்து வாங்க அனுகூலம் ஏற்படும்.



**கும்பம்:** எவருக்கும் தகுதி மீறிய வாக்குறுதி அளிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உருவாகும் குறுக்கீடுகளை, உரிய வகையில் சரி செய்வது நல்லது. சுமாரான இலாபம் கிடைக்கும்.



**மீனம்:** மனதில் உற்சாகம் ஊற்றெடுக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பணி எளிதாக நிறைவேறும். ஆதாயம் அதிகரிக்கும். நீண்டநாள் விருப்பம் நிறைவேறும். மாணவர்களுக்கு படிப்பில் ஞாபகத்திறன் வளரும்.

ஒரு பெண் சொன்னாள்,"என் கணவன் குடித்து விட்டு வந்தால் என்னைத் தூங்கவே விட மாட்டார்"; அடுத்தவள் சொன்னாள், "பரவாயில்லையே,என் கணவன் குடித்துவிட்டு வந்தால் எங்கள் தெருவில் எவரையும் தூங்க விடமாட்டார்".



என் மனைவி என்னைக் கஷ்டப்படுத்திய போதெல்லாம் பல்லைக் கடிச்சிக்கிட்டு தாங்கிக்கிட்டேன். இனிமேல் அது முடியாது, என்றார் ஒருவர். நண்பர் கேட்டார், உங்களுக்கு அவ்வளவு தைரியம் வந்திருச்சா? அவர் சொன்னார், அட நீங்க வேற, என் பல்லெல்லாம் உதிர்ந்து போச்சு. அதைச் சொல்ல வந்தா..

**மருந்துக்கடையில ஒருவர் சுகர் மாத்திரை வாங்கிறாரு.. மீதி 5 ரூபாய்க்கு சொக்லட் குடுக்கிறான்...**



**அடேய் ஏண்டா வெந்த புண்ணில வேல பாய்ச்சுற...**

**மகன்: நாளையிலிருந்து நாம பணக்காரர் ஆகிடலாம் அப்பா!**
**அப்பா: எப்படிடா?**



**மகன்: நாளைக்கு எங்க கணக்கு டீச்சர், பைசாவ ரூபாயா மாத்தறது எப்படின்னு சொல்லித் தரப் போறாங்களாம்.**

**மருத்துவரின் மகன் மருத்துவரானால் அவருக்குப் பெருமை, பொறியியலாளரின் மகன் பொறியியலாளரானால் அவருக்குப் பெருமை...**



**விவசாயியின் மகன் விவசாயியானால் அது "வறுமை"**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 800 | 800 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 300 | 600 | 500 |
| கணவாய் | 800 | 700 | 1000 | 1000 |
| பாரை | 600 | 700 | 700 | 800 |
| சுறா | 500 | 700 | 1000 | 1000 |
| சீலா | 400 | 500 | 600 | 800 |
| விளை | 500 | 500 | 600 | 800 |
| முரல் | 400 | 500 | 500 | 600 |
| கும்பிளா | 400 | 600 | 400 | 800 |
| கிளாக்கன் | 800 | – | 600 | 600 |
| ஓரா | 400 | 400 | 600 | 500 |
| திரளி | 250 | 300 | 300 | 300 |
| நகரை | 300 | 200 | 400 | 300 |
| சூடை | 200 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 200 | 300 | 300 | 400 |
| திருக்கை | 350 | – | 400 | 400 |
| மதனம் | 250 | 150 | 300 | – |
| கொய் | 200 | 70 | 100 | 100 |
| பாலை | 250 | 250 | 600 | 500 |
| வாளை | 200 | – | 500 | 400 |

# கத்தரிக்காய் பற்றிய சில உண்மைகள்



மனிதனின் ஆரோக்கியமான வாழ்விற்கு காய்கறிகளும், பழங்களும் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன.

காய்கறி வகையை சேர்ந்த கத்தரிக்காய் தக்காளிக்கு நிகரான சத்துக்களை கொண்டுள்ளது என்பது சில பேருக்கு தெரியாததால், அதை சாப்பிடாமல் ஒதுக்கி வைக்கின்றனர்.

நீங்கள் நினைக்காத அளவுக்கு இந்த கத்தரிக்காயில் சிறந்த மருத்துவ குணங்கள் ஏராளமாய் உள்ளன. நீல நிறமுள்ள பிஞ்சு கத்தரிக்காய் உடலுக்கு நல்ல வளத்தையும், சத்துக்களையும் தருகிறது.

நீர்ச்சத்து, இரும்புச்சத்து, நார்ச்சத்து, புரதம், காபோவைதரேற், பொஸ்பரஸ், கல்சியம், விற்றமின்கள் - A,C,B1,B2 போன்ற சத்துகள் கத்தரிக்காயில் நிறைந்து காணப்படுகிறது.

மேலும் தக்காளியை போலவே எடை, புரதம் கலோரி அளவு தாது உப்புகள் போன்றவை உள்ளன.

மருத்துவ பயன்கள்:

நாக்கில் ஏற்படும் ஒவ்வாமையை போக்குவதில் முக்கிய பங்காற்றுகிறது.

வாதநோய், ஆஸ்துமா, ஈரல்நோய்கள், கீல்வாதம், சளி, பித்தம், தொண்டைக்கட்டு, மலச்சிக்கல், கரகரப்பானகுரல் மற்றும் உடல்பருமன் போன்ற நோய்களை குணமாக்குகிறது.

கண் பார்வைத் திறனை அதிகரிக்கச் செய்கிறது, குருதி அழுத்தத்தை குறைக்கிறது.

பெருங்குடல் புற்று நோயிலிருந்து பாதுகாக்கும், நீரிழிவு நோயை கட்டுப்படுத்துகிறது.

குறிப்பு

கத்திரிக்காய் உடலுக்கு சூடு தரும் காய்கறி வகையை சார்ந்தது, எனவே உடம்பில் சொறி சிரங்கு, புண் உள்ளவர்கள் கத்திரிக்காய் சாப்பிடுவதை தவிர்ப்பது நல்லது.

அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்கள் முதல் மூன்று மாதங்களுக்கு கத்தரிக்காயை சாப்பிடக்கூடாது.

## நாளை

**ஆனி-05**

திங்கட்கிழமை -19.06.2017

திதி: தசமி மு.இ.08.47

நட்சத்திரம்: ரேவதி பி.ப. 01.27

சுபநேரம்:11.54-01.24 வரை

ராகுகாலம்:07.24-08.54 வரை

# மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 80 | 60 |
| கத்தரி | 120 | 80 | 100 | 140 | 140 |
| கரட் | 300 | 300 | 300 | 250 | 300 |
| மரவள்ளி | 60 | 80 | 80 | 60 | 70 |
| பயிற்றை | 80 | 80 | 60 | 100 | 120 |
| பாகல் | 100 | 200 | 120 | 140 | 180 |
| கருணைக்கிழங்கு | 120 | | 100 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 85 | 100 | 100 |
| சி.வெங்காயம் | 250 | 350 | 250 | 300 | 160 |
| பூசணி | 80 | 100 | 60 | 80 | 80 |
| தக்காளி | 160 | 160 | 100 | 150 | 160 |
| வாழைக்காய் | 60 | 80 | 30 | 40 | 70 |
| கீரை | 25 | 30 | 20-25 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 30 |
| பச்சை மிளகாய் | 300 | 400 | 320 | 400 | 400 |
| புடோல் | 60 | 100 | 50 | 100 | 60 |
| கோவா | 120 | 200 | 140 | 200 | 160 |
| வெண்டி | 100 | 120 | 80 | 100 | 60 |
| போஞ்சி | 120 | 240 | 140 | 240 | 200 |
| லீக்ஸ் | 120 | 140 | 80 | 140 | 140 |
| தேங்காய் | 70 | 60 | 45-60 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 90 | 100 | 100 |
| தேசிக்காய் | 80 | 80 | 80 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 15 |
| கறிமிளகாய் | 200 | 400 | 300 | 160 | 160 |
| இராசவள்ளி | 200 | - | 320 | 300 | 280 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 200 | 150 | 200 |







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(25ஆம் பக்கத் தொடர்ச்சி)

"கமக்காரன் இன்னும் வீட்டை போகலையா?" என்று கேட்டபடியே மாடுகளை ஒரு பக்கம் ஒதுக்கித் தானும் ஒதுங்கினான் வேலு.

வேலு அவருடன் கூடமாடத் தோட்ட வேலை செய்த குடிமகன். அந்த மம்மல் பொழுதிலும் அவனது பவிசான அடக்க ஒடுக்கம் கிழவனுக்குத் தெரிந்தது.

"இப்பதான் போறன் நீயும் வீட்டைதானே? வாவேன் பேசிக் கொண்டு போவம்" என்று சொல்லிக் கொண்டே நடந்தார். அவரது சிந்தையில் சிறு ஒளி. அது வேலனைப் பற்றி வளைந்தது. விவசாயத்தின் நுட்பங்களை அதன் கடுமைகளை உணர்ந்தவன் இவன். நல்ல உழைப்பாளி. தோட்ட வேலையில் ஊறியவன். இவனுடைய வெயர்வை கூடப் பூவக்கல்லியின் செழுமைக்கு உதவியுள்ளது. ஏன் இவனுக்கே...

" என்ன கமக்காரன் உங்களுக்குள்ளை கதைக்கிறியள்?"

"இல்லை வேலு, என்ரை காணியைப் பற்றித்தான் எனக்குக் கவலை... அதை..."

"அதை என்ன செய்யலாம் என்று பார்க்கிறியள்...?"

"வேலு, உனக்குத்தருவன், உந்தச் செம்பாட்டுக் காணியை உப்பிடிக் கொண்டுவர நான் பட்ட பாட்டை"

"எனக்குத் தெரியாத கமக்காரன்? உந்தக் காணி இருந்த இருப்பு. பசி பாராமல் நித்திரை கொள்ளாமல் இராவாய்ப் பகலாப் பாடுபட்டியள். இனிமேல் காலம் உப்பிடியேல்லாம் பாடுபட யார் இருக்கினம்?"

"ஓமடா மேனை அதுதான் எனக்கும் கவலையாய் இருக்கு. என்ரை மருமக்களிலை எனக்கு நம்பிக்கையில்லை. அதுதான் இதை உன்னட்டைத் தரலாமென்று யோசிக்கிறன். நீ பாடுபட்டுச் செய்து வருசா வருசம் குத்தகைப் பணத்தை மாத்திரம் பாதி பாதியாய் இரண்டு மக்களிடமும் கொடேன்"

"சே, எனக்கேன் கமக்காரன் இந்தச் சங்கடம் எல்லாம்? உங்கடை மருமக்களுக்கிடையிலே போட்டி. அதுக்கிடையில் நான் வந்து..."

"அந்தப் போட்டியால் தான் கேட்கிறேன்"

"நீங்கள் ஒரே குடும்பம் மாமன், மருமக்கள். இண்டைக்குச் சண்டை பிடிப்பியள், நாளைக்கு ஒன்றாக் கூடுவியள். நான் இடையில் வந்தால் கரைச்சல் தானே?"

"வேலு, அவர்களுக்கு உந்தக் காணியைக் கொடுக்கில் இரண்டாகப் பகிர்ந்து கொடுக்க வேணும். பூவக்கல்லியைப் பகிர்ந்து இரண்டாக்குவது என்று நினைக்கவே என்ர உயிர் போகும்போல இருக்கடா. காணிகளைப் பகிர்ந்து சிறு சிறு துண்டுகளாக்கி, பிறகு அதையும், கமம் செய்யாமல் விட்டு அதுக்குள்ளை வீடுகளையும் கட்டித்தான் எங்கட கிராமம் அழிஞ்ச நிலைக்கு வந்திட்டுது...

பூவக்கல்லிக்கு அந்த நிலை வரக்கூடாதப்பா"

"அவையள் முயற்சியை எல்லாம் கைவிட்டு ஓடி வந்து கரைச்சல் பட்டுக் கொண்டு இருக்கையுக்கை. உப்பிடியெல்லாம் பேசப்படாது கமக்காரன்"

"இப்ப அவையள் படுகிற கரைச்சல் எனக்குத் தெரிஞ்ச படியால் தான் சொல்லுறன். மூத்த மருமகனுக்குப் பகிர்ந்து கொடுத்தால் தோட்டம் செய்வான் என்று நினைக்கிறியோ? ஆரேன் பணக்காரனுக்கு கண்ட காசுக்கு வித்துப்போட்டு, நெல்லுக் குத்துகிற மெசின் போட இருக்கிறான். இளைய மருமகன் கார் பழகிறாரல்லே? அவரும் தன்ரை பங்கை வித்துப்போட்டு, கார் வாங்க எண்ணுகிறார். அவையளுக்கு பூவக்கல்லி ஒரு விளையாட்டுப் பண்டம். வித்துச் சுடுகிற பொருள். எனக்கு அது பிள்ளையளிலும் பெரிசடா. அது என்ரை உயிரடா, என்ரை சாம்பலைக்கூட அதுக்குள்ளைதான் புதைக்க வேணும். உதை அவையள் செய்யாயினம். நீயாவது உயிரோடை இருந்தால் செய்"

இருவரும் நடந்தனர். வீட்டு வாசலில் கண்ணாத்தைக் கிழவி, "எங்கை போயிட்டு வாறியள், இவ்வளவு நேரமாக? உங்களுக்கு இந்த வருத்தத்திலும் ஒருக்கா அந்தச் செம்பாட்டுத் தரையை பாராட்டி நித்திரை வராது. மருந்தைக் கூடக் குடிக்காமல் அங்கை என்ன போக்கு?" என்று புறு புறுத்தபடி அவரைக் கூட்டிக் கொண்டு உள் நுழைந்தாள்.

வாழ்வு என்ற மரத்தில் பசுமையாக இருந்து, காலத்தின் செலவினால் பழுத்த இலையின் எண்ணம் எதுவுமே நடக்கும் முன் அது கருகி வீழ்ந்தது. மூன்றாவது நாள் எரிந்த உடலின் சாம்பலை உலக ஒப்பாசாரத்திற்காக எடுத்துச் சென்று கடலில் கரைத்தார்கள் இரு மருமக்களும்.

அந்திவேளை, ஒருவரும் அறியாமல் வேலன் அந்தச் சடலம் எரிந்த இடத்தில் இருந்த துகளில் ஒரு பிடியை அள்ளிச் சென்றான். வளர் கோட்டு இளம்பிறையின் துல்லிய ஒளியில், பூவக்கல்லி எழில் கொண்டு விளங்கியது. கிணற்றடிக்குத் தெற்கே வாழைகளின் இடையே ஒரு குழி. கமக்காரனின் கடைசி வேண்டுகோளைப் பூர்த்தி செய்யச் சாம்பலை இட்டு மூடினான் வேலு. அவனது நெஞ்சிலே முட்டி வந்த வேதனை இப்போதுதான் சாந்தம் அடைந்தது.

---

## சொற்சிலம்பம் போட்டி இல: 476

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | ■ | 4 | 5 |
| | ■ | 6 | | ■ | 7 | | |
| 8 | 9 | | | 10 | | | ■ |
| 11 | | ■ | 12 | | | ■ | 13 |
| | ■ | 14 | | | ■ | 15 | |
| | 16 | | | ■ | 17 | | ■ |
| 18 | | | ■ | 19 | | | 20 |
| 21 | | | | | ■ | 22 | |

**அனுப்புபவர் பெயர்:........................................**
**முழுமையான தபால் விலாசம்: ........................................**
........................................
**கைெயாப்பம்:........................................**

### இடமிருந்து வலம்

1. மிக அருமை
4. பாவம் செய்தவன்
6. நில்
7. இரு மனம் இடையே மலர்வது
8. கெட்டித்தனம் மிக்க தன்மை
11. சிரசு
12. உறுதி
14. வாயால் எழுப்பும் சத்தம்
15. விழி
16. பானை வாத்தியம்
17. பார்க்க
18. இது ஒரு குரங்கு
19. துயிலுமிடம்
21. யானைக்குச் சிறப்பாக உள்ள அங்கம்
22. பாய்

### மேலிருந்து கீழ்

1. சாமிக்குப் படைத்த நைவேத்தியம்
2. பெண்கள்
3. மிடி
4. கால்
5. அருச்சுணன் இந்த ஆயுதத்தைக் கையாள்வதில் நிபுணன்
7. புண்
9. பர்வதம்
10. மேட்டுக்களம்
13. கையால் அளவிடும் அலகு
14. பூச்சிகளின் வாழ்க்கைத் தொகுதியின் ஆரம்பநிலை
15. எண்களுடன் தொடர்புடைய கணிதம்
16. பாரம்
17. வனம்
18. போதை தருவது
19. வெறுப்பால் வருவது
20. சிறையில் அடைக்கப்பட்டிருப்பவன்.

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 474 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) பதவி (4) செய்மதி (7)குந்திதேவி (9)தரி (10)திதி (11)கடுவன் (13)ரசம் (16)அம்மா (17)தடிமன் (19)சகலை (20)கன (21) பதம் (23)விசரன் (25) திண் (26)மதியம்

**மேலிருந்து கீழ்**
(1)பகுதி (2)தந்திரம் (3)விதி (4)செவிடு (5)மதன் (6)திரி (8)தேகம் (12)வண்டி (14) சமாசம் (15)மன்னன் (16)அதிபதி (17)தலைவிதி (18)மகரம் (22) தண் (24) சய
சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 474 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
யசீலன் அஜீஸ்,
உடையாவளவு,
கரணவாய் வடக்கு, கரவெட்டி

**2 ஆம் பரிசு**
ஏ.பெஞ்சமின்,
இல.25, வேளாங்கன்னி வீதி,
சாவல்கட்டு, மன்னார்.

**3 ஆம் பரிசு**
பா.சந்திரகலா,
பொன்னாச்சி பதிப்பகம், முல்லைவீதி,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

**4 ஆம் பரிசு**
ம.கலாவதி,
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

**5 ஆம் பரிசு**
க.சியாமளன்,
மே/பா கண்ணதாசன்,
பறளாய் வீதி; சுழிபுரம்.

**பாராட்டுப் பெறுவோர்**

ஜெ.செந்தூரன்,
இல. 57, 2ஆம் குறுக்குத்தெரு,
வவுனியா.

கோஜியா நவரூபன்,
இல.273/7 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

செ.விசாலன்,
விநாயகர் வீதி,
கற்சிலைமடு,
ஒட்டுசுட்டான்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இல.476 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (28.06.2017 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.476இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 02.07.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 474 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

**18.06.2017 தொடக்கம் 24.06.2017 வரை**

## மேடம்

சுக்கிரன், செவ்வாய், கேதுவால் அளப்பரிய நன்மைகள் உண்டாகும். வசீகரப் பேச்சால் பிறரைக் கவர்வீர்கள். மனதில் தைரியம் நிலைக்கும். வெளியூர்ப் பயணங்கள் மூலம் எதிர்பார்ப்பு நிறைவேறும். புத்திரர்கள் ஆர்வமுடன் நற்செயல்களில் ஈடுபடுவர். உடல்நலனில் அக்கறை தேவை. மனைவியின் அன்பைக் கண்டு மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரம் கடின உழைப்பால் நல்ல வளர்ச்சி பெறும். லாபம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் பணியிடங்களில் நன்மதிப்பை பெறுவர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது.

## இடபம்

சுக்கிரன், குரு, சந்திரன் நற்பலன்களை வாரி வழங்குவர். உறவினர்கள் கேட்ட உதவியைச் செய்வீர்கள். தாயின் அன்பும், ஆசியும் கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர் அறிவு, செயல்திறனில் மேம்பட்டு விளங்குவர். குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சியை நடத்த வாய்ப்புண்டு. ஆரோக்கியம் மேம்படும். சுபசெய்தி வீடு வந்து சேரும். மனைவி விரும்பிக் கேட்ட பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் லாபம் அதிகரிக்கும். சேமிப்பு பன்மடங்கு உயரும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள், உறவினர் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வர். மாணவர்கள் அக்கறையுடன் படித்து முன்னேறுவர்.

## மிதுனம்

ராகு, சனீஸ்வரர், சுக்கிரன் அனுகூலமான அமர்வில் உள்ளனர். புதிய முயற்சியால் எதிர்பார்ப்பு நிறைவேறும். உடன்பிறந்தவர்களின் அன்புக்கு உரியவராகத் திகழ்வீர்கள். அறிமுகமில்லாதவருக்கு வாகனத்தில் இடம் தர வேண்டாம். புத்திரர் மனதில் உருவான அதிருப்தியை சரி செய்வீர்கள். உடல்நிலை சீராக இருக்கும். புதிய சொத்து வாங்க யோகம் உண்டாகும். மனைவியின் நல்ல ஆலோசனையை ஏற்றுக் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த மறைமுகப்போட்டி குறையும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள், தாய் வீட்டினருக்கு உதவி புரிவர். மாணவர்கள் படிப்பிற்கு கூடுதல் நேரம் ஒதுக்குவர்.

## கடகம்

சூரியன், சந்திரனால் நன்மை உண்டாகும். சமயோசிதமாகப் பேசி எதையும் சாதித்துக் கொள்வீர்கள். சிலர் சுய லாபத்திற்காக உங்களைப் புகழ்ந்து பேசலாம் கவனம். புத்திரர்களைக் கண்டிப்பதில் நிதானம் தேவை. ஒவ்வாத உணவால் சமிபாட்டுக் கோளாறுகள் ஏற்படலாம். மனைவியின் நல்ல செயல்களை பாராட்டுவதால் ஒற்றுமை வளரும். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் இடையூறைத் தாமதமின்றி சரிசெய்யவும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். பெண்கள், பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் சாகச விளையாட்டுகளில் ஈடுபடுவதை தவிர்க்கவும்.

## சிங்கம்

பெரும்பாலான கிரகங்களால் நன்மை உண்டாகும். புதியவர்களின் உதவி கிடைக்கும். நீண்ட நாள் பிரச்னை விலகும். வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டாகும். புத்திரர் படிப்பு, வேலைவாய்ப்பில் முன்னேறுவர். பூர்வீகச் சொத்தில் பணவரவு அதிகரிக்கும். வெளியூர் பயணத்தால் இனிய அனுபவம் காண்பீர்கள். சத்தான உணவு வகைகளை விரும்பிச் சாப்பிடுவீர்கள். மனைவி உங்களின் எண்ணங்களை செயல்படுத்துவார். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் எளிதில் பணி இலக்கை நிறைவேற்றுவர். பெண்கள், கணவரின் அன்பை பெற்று சந்தோஷ வாழ்வு நடத்துவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

## கன்னி

புதன், சுக்கிரன், கேது, சனீஸ்வரர் அதிக நற்பலன் தருவர். வாழ்வில் இனிய அனுபவம் உண்டாகும். அன்றாடப் பணியில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். சமூகத்தில் அந்தஸ்து உயரும். உறவினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக்கும். புத்திரர் பொறுப்புணர்வுடன் செயற்படுவர். ஆரோக்கியம் பலம் பெறும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். நண்பரிடம் கடனாக கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும். மனைவியின் அன்பு கிடைக்கப் பெறுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிப்பால் லாபம் உயரும். பணியாளர்கள் விரும்பிய சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர். மாணவர்கள் ஆர்வமுடன் படித்து தரத் தேர்ச்சி காண்பர்.

## துலாம்

ராகு, சந்திரனால் மட்டுமே நன்மை உண்டாகும். வாழ்வில் குறுக்கிடும் சிரமங்களை சமயோசிதமாக சரி செய்வது நல்லது. உடன்பிறந்தவர்களின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். வாகனப் பயணத்தால் ஓரளவு நன்மை ஏற்படும். புத்திரர்களின் மனக்குழப்பம் உங்கள் ஆலோசனையால் சரியாகும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவது நல்லது. ஒவ்வாத உணவுகளைத் தவிர்ப்பது அவசியம். மனைவி வழி சார்ந்த உறவினருடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் ஓரளவு லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பொறுப்புடன் பணிபுரிவது அவசியம். பெண்கள் நகை, இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம். மாணவர்களுக்கு படிப்பில் விடாமுயற்சி தேவை.

## தனுசு

சூரியன், சுக்கிரன், கேது வியத்தகு நற்பலன்களை வழங்குவர். மனதில் புத்துணர்வும், செயலில் உற்சாகமும் நிறைந்திருக்கும். மக்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். வாகனப் பயணத்தால் ஓரளவு நன்மை உண்டாகும். புத்திரரை வழி நடத்துவதில் இதமான அணுகுமுறை பின்பற்றவும். வழக்கு, விவகாரத்தில் சாதகமான முடிவு கிடைக்கும். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு துணை நிற்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் ஓரளவாக இருக்கும். பணியாளர்கள் எதிர்பார்க்கும் கடனுதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். பெண்கள் செலவில் சிக்கனம் பின்பற்றுவது நல்லது. மாணவர்கள் படிப்பிற்கு கூடுதல் நேரம் ஒதுக்கவும்.

## விருச்சிகம்

புதன், குரு, சுக்கிரனால் நன்மை உண்டாகும். உறவினர் மத்தியில் அந்தஸ்து உயரும். உடன்பிறந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு நடவடிக்கை தேவை. புத்திரர் உங்களின் கருத்தை ஏற்பதோடு, படிப்பிலும் சிறந்து விளங்குவர். குடும்பத்தேவை தாராள பணச் செலவில் நிறைவேறும். மனைவியின் அன்பைப் பெற்று மனம் நெகிழ்வீர்கள். விருந்து, விழாவில் அடிக்கடி பங்கேற்பீர்கள். தொழில், வியாபாரத்தில் அமோக லாபம் கிடைக்கும். சேமிக்க வாய்ப்புண்டு. பணியாளர்கள் நிர்வாகத்தின் நன்மதிப்பை பெறுவர். பெண்கள், தாய் வீட்டாரின் உதவி கிடைக்கப் பெறுவர். மாணவர்கள் படிப்புத் தவிர மற்ற விடங்களில் ஈடுபட வேண்டாம்.

## மகரம்

பெரும்பாலான கிரகங்கள் சுப பலன் அளிக்க காத்திருக்கின்றன. கடந்த கால உழைப்பின் பயன் கிடைக்கப் பெறுவீர்கள். தம்பி, தங்கையின் பாசம் கண்டு மனம் நெகிழ்வீர்கள். புதிய வீடு, வாகனம் விரும்பியபடி வாங்க வாய்ப்புண்டு. புத்திரரின் ஆர்வமிகு செயல் நிறைவேறத் துணை நிற்பீர்கள். எதிரிகளால் இருந்த தொல்லை மறையும். மனைவியின் ஆலோசனையால் குடும்பத்தில் நிம்மதி நிலைக்கும். தாமதமான சுப நிகழ்ச்சி இனிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து நிர்வாகத்திடம் நன்மதிப்பு பெறுவர். மாணவர்களுக்குப் படிப்பில் ஞாபகத் திறன் வளரும்.

## மீனம்

சுக்கிரன், சூரியன், ராகு, குருவால் வியத்தகு வளர்ச்சி உண்டாகும். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். குடும்பத்தேவை தாராள பணச் செலவில் நிறைவேறும். புத்திரர் கல்வி, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். ஆரோக்கியம் சீர் பெறும். கடந்த கால உழைப்பின் பயன் கிடைக்கப் பெறுவீர்கள். மனைவி, உறவினர்களை உபசரித்து குடும்பத்திற்கு பெருமை சேர்ப்பார். தொழிலில் அபரிமிதமான வளர்ச்சியும், பணவரவும் உண்டாகும். பணியாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குடன் விளங்குவர். பெண்கள் தாய் வீட்டினரின் உதவியை கேட்டுப் பெறுவர். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

## கும்பம்

சுக்கிரன், சந்திரனால் நன்மை அதிகரிக்கும். எதிர்கால வளர்ச்சி குறித்து திட்டமிடுவீர்கள். பேச்சு, செயலில் நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. தாய் வழி உறவினரால் நன்மை உண்டாகும். புத்திரர் படிப்பு, வேலைவாய்ப்பில் சீரான வளர்ச்சி காண்பர். ஆரோக்கியம் மேம்படும். பிராணிகளிடம் விலகி இருக்கவும். மனைவியின் எண்ணமும், செயலும் வளர்ச்சிக்கு துணை நிற்கும். வெளியூர் பயணத் திட்டத்தில் திடீர் மாற்றம் ஏற்படலாம். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்தித்தாலும் வருமானத்திற்கு குறைவிருக்காது. பெண்கள் குடும்பத்தில் ஒற்றுமையை நிலைநாட்டுவர். மாணவர்களுக்கு நண்பர்களால் நன்மை உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில இதெல்லாம் சாதாரணமப்பா!





எம்.ஐ.முபாறக்

## ஆட்டையப்போட வந்த அமைச்சருக்கு ஆப்பு...!

மழை ஓய்ந்து, தண்ணீர் வற்றி பழைய நிலைக்குத் திரும்பியபோதிலும் மக்கள் இன்னும் நிவாரணத்திலேயே தங்கியிருக்கும் நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். பொது மக்களும், அரசியல்வாதிகளும் நிவாரண பொருள்களை வழங்கிக்கொண்டுதான் இருக்கின்றனர்.

இவ்வாறு நிவாரணப் வேலைகளில் ஈடுபட்டிருக்கும் அரசியல்வாதிகள் எவ்வாறான அசௌகரீகங்களை எதிர்கொண்டார்கள் என்று கடந்த வாரங்களில் தெரியப்படுத்தினேன். இருந்தும், அவர்களின் பரிதாபம் தொடரவே செய்கின்றது...

மாத்தறை மாவட்ட மக்களுக்கு விநியோகிப்பதற்காக மாத்தறை மாவட்டசெயலகத்தால் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியுடைய குடி நீர் போத்தல்கள் கொள்வனவு செய்யப்பட்டதாம். அந்த மாவட்டத்தில் நிவாரண வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அதே மாவட்டத்தைச் சேர்ந்த மகிந்த அணி எம்.பியான முன்னாள் அமைச்சர் மகிந்த யாப்பா அபாயவர்தன இதை அறிந்து அந்தக் கச்சேரிக்குச் சென்று 100 குடி நீர் போத்தல்களைக் கேட்டாராம். செயலக அதிகாரிகள் கொடுக்க மறுத்துவிட்டார்களாம்.

'நான் குடிப்பதற்காக அல்ல மக்களுக்குக் கொடுப்பதற்காகவே கேற்கிறேன் தாருங்கள்' என்றாராம் எம்.பி.

அதிகாரிகளோ ஒரு பெரிய படிவத்தைக் கொடுத்து 'இதைச் சரிவர நிரம்பித் தந்துவிட்டு குடி நீர்ப் போத்தல்களைக் கொண்டு செல்லுங்கள்' என்று கூறினராம்.

'நான் எதிர்க்கட்சி எம்.பி என்பதற்காக என்னை இப்படி அவமதிக்கிறீர்களே. ஆளுங்கட்சியாக இருந்திருந்தால் இப்படி நடந்துகொள்வீர்களா...?' என்று கோபத்தைக் கக்கிவிட்டு, படிவத்தை வீசிவிட்டு நடையைக் கட்டினாராம்.

'எம்.பி சொன்னது உண்மைதானே...! அவர் ஆளுங்கட்சியாக இருந்திருந்தால் இப்படிச் செய்திருக்கமாட்டார்கள் தான். அவருடைய வீட்டுக்கே கொண்டு வந்து கொடுத்திருப்பார்கள். மக்களின் கணக்கில் அவரும் ஆட்டையப் போட்டிருப்பார். அவற்ற ஆட்சியில இப்பிடி எத்தின கூத்தப் பாத்திருப்பம்'



## அரிசி ஊழலில் மாட்டியது எலி...!

ஊழல்வாதிகளைக் கண்டாலே கடித்துக் குதறிவிடுவார்கள் ஜே.வி.பியினர். ஏனைய அரசியல்வாதிகளைப்போல் 'சம்திங்' கொடுத்தெல்லாம் இவர்களைக் 'கரக்ட்' பண்ண முடியாது. ஊழலை அம்பலப்படுத்தியே தீருவர்.

இதை அறிந்தும்கூட அரிசி ஆலை முதலாளி ஒருவர் ஜே.வி.பியை அணுகி மேலும் சிக்கலில் மாட்டிய சம்பவம் ஒன்று அண்மையில் இடம் பெற்றது.

நெல்லைப் பதுக்கி வைத்துக்கொண்டு, அரிசிக்கு செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, அரிசி விலையை உயர்த்தும் மோசடிச் சம்பவத்துக்கு எதிராக ஜே.வி.பியின் வடமேல் மாகாணசபை உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் கருணாரத்ன குரல் எழுப்பி வருகின்றார். ஊடகங்களில் அதை அம்பலப்படுத்தியும் வருகின்றார்.

இதனால் தனக்கு வரப்போகவிருக்கும் தலையிடியை உணர்ந்த மோசடியுடன் தொடர்புபட்ட அரிசி ஆலை முதலாளிமார்களில் ஒருவர் நாமல் கருணாரட்னவைத் தொடர்புகொண்டு அவரைச் சமாளிப்பதற்கு முயற்சி செய்துள்ளார்.

அவர் நாமலுடன் தொலைபேசியில் நீண்ட நேரம் உரையாடினார். நாமலோ இவருடன் தந்திரமாகப் பேசி அவர் வாயாலேயே அவரிடம் இருந்து வேறு சில உண்மைகளையும் கறந்துவிட்டார். இந்த அரிசி ஆலை முதலாளிமார்தான் வேறு பெயர்களில் வெளிநாடுகளில் இருந்து அரிசி இறக்குமதி செய்து உள்நாட்டு அரிசியுடன் கலப்படம் செய்து விற்கின்றார்கள் என்பதுதான் அந்த உண்மை.



## அவருடைய அலுவலகம் சிறிதாம்...!

அண்மையில் இடம்பெற்ற அமைச்சரவை மாற்றத்தால் பல அமைச்சர்கள் அதிருப்திக்கு உள்ளாகி இருக்கின்றனராம். சிலருக்கு வழங்கப்பட்ட அமைச்சுக்களில் திருப்தி இல்லையாம். சிலருக்கு வழங்கப்பட்ட வாகனங்களில் திருப்தி இல்லையாம். சிலருக்கு அலுவலகங்களில் திருப்தி இல்லையாம்.

ரவி கருணாநாயக்கவிடமிருந்து நிதி அமைச்சு பறிக்கப்பட்டதால் கவலையில் உள்ளார் அவர். கயந்த கருணாதிலகவிடம் இருந்து ஊடகத்துறை பறிக்கப்பட்டதால் கவலையில் இருக்கின்றார் அவர். ஆனால், டாக்டர் ஹர்ஸ டி சில்வாவோ அவருக்கு வழங்கப்பட்டுள்ள அலுவலகம் தொடர்பில் அதிருப்தியில் உள்ளாராம்.

அயலுறவுப் பதில் அமைச்சராக இருந்த ஹர்ஸ அமைச்சரவை மாற்றத்தின்போது தேசிய கொள்கை மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால், அவருக்கு வழங்கப்பட்டுள்ள அலுவலகமோ மிகச் சிறியதாம். பெரிதும் குறைபட்டுக் கொள்கிறார். இதை வைத்து என்னதான் பண்ணுவது என்று தெரியாமல் முழுசுகிறாராம் அவர். 'நீங்கள் எல்லாம் அலுவலகத்தில என்னதான் வெட்டிப்புடுங்கிறனிங்களோ தெரியேல்லை...?'

## வெள்ளத்துக்குள் அரசியல்வாதிகள்...

சமீபத்தில் நாட்டில் ஏற்பட்ட இயற்கை இடர் பேரழிவைத் தந்து முடிவுக்கு வந்ததை நாம் அறிவோம். அந்த இடரால் 300இற்கு மேற்பட்டவர்கள் சாவடைந்ததோடு ஆயிரக் கணக்கானோர் அகதிகளாகினர். அவர்களுள் அதிகமானவர்கள் இன்னும் அகதி முகாம்களில்தான் உள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுள் அரசியல்வாதிகளும் அடங்குகின்றனர். இதில் மாத்தறையில் அமைந்துள்ள அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபயவர்தனவின் வீட்டின் கீழ்மாடி முற்றாக நீரில் மூழ்கியதாம்.


நல்லவேளை இரண்டாம்,மூன்றாம் மாடிகளுக்குள் நீர் புகாததால் அந்த மாடிகளில் தஞ்சம் புகுந்த அமைச்சரின் குடும்பம் தப்பித்துக்கொண்டதாம்.

அடுத்து இரத்தினபுரியில் அமைந்துள்ள மகிந்த அணி எம்.பி ஜனக வகும்புரவின் வீடும் முற்றாக மூழ்கி அவரது குடும்பமும் இடம்பெயரும் நிலை ஏற்பட்டதாம். 2003ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ள இடரின்போதும் இவரது வீடு இவ்வாறே மூழ்கியதாம். அப்ப நிறைய வாங்கியிருப்பியள் தானே....! ஓம்... ஓம்... 'வெள்ள நிவாரணம் வாங்காமல் விட்டிருக்கமாட்டீங்களே...?'





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லூர் இராசதானி

சி.சக்திகிரீவன்

கி.பி. 13ஆம் நூற்றாண்டில் இருந்து 17ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாண அரசின் தலைநகராக நல்லூர் இராசதானி விளங்கியது. இதன் நிலப்பரப்பானது வடக்கே கோப்பாயின் வட பகுதியும், கிழக்கே சாலாங்கோட்டை நாவற்குழியும், தெற்கே பண்ணைத் துறையும், மேற்கே ஆனைக்கோட்டை, கொக்குவில், கோண்டாவில் எனவும் வரையறை பெற்றிருந்தன. இவை உள்ளடங்கிய பகுதியில்தான் அரச நிர்வாகிகள், ஊழியர்கள், ஆகியோரின் வதிவிடங்கள், சேவைப்பிரிவுகள், அரச வழிபாட்டிடங்கள், தமிழ்ப் பேரறிஞர் கூடும் தமிழ் சங்கங்கள் என்பனவும் காணப்பட்டன. இந்தப்பகுதியில் ஒரு சந்தையும் காணப்பட்டுள்ளது. இந்தச் சந்தை பற்றியும் நல்லூர் இராசதானி பற்றியும் போர்த்துக்கேய வரலாற்றாசிரியரான 'திரான திரிநிதாதே' கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

*'நல்லூரைத் தவிர வேறு நகரம்*
*ஒருபோதும் இருக்கவில்லை. இது*
*போர்த்துக்கேயருடைய பட்டினமும்*
*அங்காடியும் அமைந்துள்ள*
*இடத்தில் இருந்து ஏறக்குறைய*
*ஒன்றரை மைல் தூரத்தில் அமைந்துள்ளது'*

என்று கூறும் அவர் இராச்சியத்தில் காணப்பெற்ற பல்வேறு சாளரங்கள் மூலமாக இந்தச் சந்தையில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்களை மன்னன் அவதானித்தான் எனவும் கூறுகின்றார். இன்றைக்கு அந்த இராசதானி முன்னர்போல் விரிந்து, பரந்து இல்லாதபோதும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை மையமாகக் கொண்ட பகுதி முக்கியத்துவம் வாய்ந்த இடமாகத் திகழ்கின்றது.

நல்லூர் இராசதானியின் மேன்மையை யாழ்ப்பாண வைபவமாலை பின்வருமாறு குறிப்பிடுகிறது.

"நாலு மதிலும் எழுப்பி வாசலும் ஒழுங்கா விடுவித்து மாடமாளிகையும் கூட கோபுரங்களும் பூங்காவும் பூங்காவன நடுவில் ஸ்தான மண்டபமும் முப்படைக் கூடமும் உண்டாக்கி அந்தக் கூடத்தில் யமுனா நதித் தீர்த்தமும் அழைப்பித்துக் கலந்துவிட்டு நீதிமண்டபம் யானைப்பந்தி, குதிரைலாயம், சேனாவீரர் இருப்பிடம் முதலியன கூடுவித்து, கீழ் திசை வெய்யிலுகந்த பிள்ளையார் கோயிலும், தென்திசைக்கு கைலாய பிள்ளையார் கோயிலும், வடதிசைக்கு தையல்நாயகி சமேத சட்டநாதர் கோயிலும் விநாயகர் கோயிலும் அமைப்பித்தனர்"

### நல்லை மூதூரின் அடையாளமே நல்லூர் இராசதானி

யாழ்ப்பாண வைபவ மாலையின் அடிப்படையில் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த மன்னர்களின் பெயர்களை அறிந்து கொள்ள முடிகிறது. அந்த வகையில் விசய கூழங்கைச் சக்கரவர்த்தி, குலசேகர சிங்கை ஆரியன், விக்கிரம சிங்கை ஆரியன், வரோதய சிங்கையாரியன், மார்த்தாண்டசிங்கையாரியன், குலபூசண சிங்கை ஆரியன் என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

சிங்கை ஆரியச் சக்கரவர்த்தியின் ஆட்சிக்கால நல்லூரைப் பற்றி 'கோகிலசந்தேஸ' என்ற சிங்கள அரசபிரபந்தம் பின்வருமாறு வர்ணிக்கின்றது.

"நல்லூரிலே சிறந்த உயர்ந்த கட்டடங்கள் நிரை நிரையாக உள்ளன. பொன் வர்ணம்கொண்ட கொடிகள் அதனை அலங்கரிக்கின்றன. அவற்றிலே பதிக்கப்பட்ட விலை மதிக்கமுடியாத மணிகளும், இரத்தினக்கற்களும் மிக அதீதமான அழகை ஏற்படுத்துகின்றன. சிறப்பாலும், கவர்ச்சியாலும், அழகாலும் குபேரனின் தலைநகரான அழகாபுரியுடன் ஒப்பிடற்பாலாது"

நல்லூர் இராசதானியின் தொன்மையும் மேன்மையும் வெளிப்படுத்தும் வகையில் வேறுபல சான்றுகளும் காணப்படுகின்றன. அந்த வகையில் சிற்பங்கள், ஓவியங்கள் ஏட்டுச் சுவடிகளாக இருந்த சில நூல்கள், பிற்காலச் சாசனங்கள் எனப் பலதரப்பட்ட பலவினப் பொருள்கள், போர்த்துக்கேய அரச ஆவணங்கள், போர்த்துக்கேய நூலாசிரியர்கள் எழுதிய சில நூல்கள், தமிழ் அரசர்களால் எழுதப்பட்ட நூல்கள் குறிப்பாக இராசமுறை, பரராஜசேகரன் உலா வரலாற்றுச் சார்பான பாடல், கைலாயமாலை போன்ற நூல்களும் சமகாலத்தில் எழுதப்பட்ட சிங்கள நூல்கள் சில பற்றியும் இவை தவிர இலங்கையிலும் தென்இந்தியாவிலும் யாழ்ப்பாண மன்னர்களைப் பற்றிக் கூறும் தாமிரசாசனக் குறிப்புக்களும் அடங்குகின்றன. நல்லூரின் தொன்மையை இலக்கியச் சான்றுகளில் ஒன்றான கைலாய மாலை (191) நல்லூரினை நல்லை மூதூர், எனக் குறிப்பிடுவதிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. இந்தக் கூற்றின் அடையாளமாக இன்று நல்லூர் இராசதானி இன்றும் மிளிர்கிறது. நல்லூர் இராசதானியில் இருந்த ஒல்லாந்தர் காலத்துக்கு முற்பட்ட (கி.பி 1658) முழுமையான கட்டங்கள் எவையும் (மந்திரிமனை தவிர) வட இலங்கையில் இல்லை என்றே குறிப்பிடலாம்.

இங்கிருந்த அரண்மனைகள், கோயில்கள் முதலியவற்றை இடித்தே போர்த்துக்கேயர் யாழ்ப்பாண பிரதான வீதியிலுள்ள (முன்னைய பறங்கித் தெரு) பழைய வீடுகளையும், கோட்டையில் சில பகுதிகளையும் கட்டினர் என்று கூறப்படுகின்றது.



### யாழ்ப்பாண வைபவமாலையில் வரும் கூற்று

'பறங்கியர் ஆட்சியை ஒப்புக் கொண்டு நல்லூருக்குள்ளே குடியிருந்து கொண்டு தங்கள் கருமங்களை நடத்திப் புறக்கோட்டை மதில்களை இடிப்பித்து இந்தக் கற்களைக் கொண்டுபோய் கடல் ஓரத்தில் சங்கிலியரசன் இடிப்பித்துப் பரப்பிவிட்ட தங்கள் கோட்டையை மறுபடி கோட்டையாகக் கட்டி அதன் கீழ்ப்புறத்திலே வீடுகளையும் அரசாட்சி மண்டபங்களையும் கட்டுவித்துக் குடிகளைச் சமீபத்தில் வீடுகட்டி வந்திருக்கும்படி வசதி பண்ணினார்கள்'

இந்தக் கூற்றில் பெருமளவு உண்மை உண்டென்பதை உணரமுடிகிறது. (பறங்கித் தெருவின்) பிரதான வீதியிலும், குறுக்கு வீதியிலும் உள்ள பல வீடுகள் பழைமையான கற்களைக் கொண்டு கட்டப்பட்டதில் இருந்தும் யாழ்ப்பாணச் சரித்திரம் எனும் நூலில் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை கூறியதில் இருந்தும் அண்மைய கோட்டைப் புனருத்தாரன வேலைகளின் போது நல்லூர் இராசதானிக்குரிய கற்தூண்கள் கண்டுபிடிக்கப்பட்டதில் இருந்தும் அறிய முடிகிறது.

### நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

நல்லூர் இராசதானியின் மையக் கோயிலாகவும் , பெருங்கோயிலாகவும் நல்லூர் கந்தசுவாமி கோவில் அமைந்து காணப்படுகின்றது. இதன் எல்லைக் கோயிகளாக வடக்கே சட்டநாதர் கோயிலும், கிழக்கே வெயிலுகந்த பிள்ளையார் கோயிலும் (சங்கிலியன் தோப்பு ஜே/109), தெற்கே கைலாசபிள்ளையார் கோயிலும் (நல்லூர் தெற்கு ஜே/108), மேற்கே வீரமாகாளி அம்மன் கோயிலும் (கந்தர்மடம் தென்கிழக்கு ஜே/105) அமைந்து காணப்படுகின்றன.

சோழ மன்னர்களின் படையெடுப்பின் பின் அந்த அரசின் பிரதிநிதி அல்லது முதல் மந்திரியான புவனேகபாகுவால் இந்த ஆலயம் முதன்முதல் கட்டப்பட்டு ஆகம விதிமுறைகளுக்கமைவாக பூஜாகாரியங்கள் இடம் பெற்றதாக இலக்கியப் படைப்புக்களில் இருந்து அறியக் கிடக்கின்றது. புவனேகபாகு பிராமணராக இருந்தமையால் ஆகமமுறைப்படி நடைபெற்றதாகக் கூறப்படு கின்றது. இதற்கு ஆதாரமாக தற்போதும் கூட நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவகாலக் கட்டியத்தில் புவனேக பாகுவின் பெயர் இடம்பெறுவது கவனிற்கப்பாலது. இந்த ஆலயம் தற்போதைய நல்லூர் இராசதானியில் மந்திரிமனை அமைந்துள்ளது. நல்லூர் பிராந்தியத்தில், வரலாற்றுத் தொன்மையை விளக்கும் யாழ்ப்பாண அரசின் மன்னர்காலக் கட்டடங்கள் எவையும் காணப்படாத போதும் தற்போதும் நல்லூர் இராசதானியில் மந்திரிமனை அமைந்து காணப்படுவதுடன் இதற்கான பல்வேறு சான்றுகளும் இங்கு காணப்படுகின்றன. இந்தப் பிரதேசத்தில் சட்டநாதர் வீதியையும்சங்கிலியன் வீதியையும் இணைக்கும் வீதி இன்றும் அரச வீதி என்றே வழங்கப்பட்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களிமண்தரை ராஜா

பிரகாஸ்



களமண் தரை ஆடுகளத்தில் தான் ராஜா என்பதை மீண்டும் ஒரு தடவை நிரூபித்துள்ளார் ஸ்பெய்ன் வீரர் ரபேல் நடால்.

நடப்பு வருடத்தின் இரண்டாவது பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடராக நடைபெற்று முடிந்துள்ளது பிரான்ஸ் ரென்னிஸ் தொடர். சுவிற்சர்லாந்து வீரர் வாவ்ரிங்காவை வீழ்த்தி கிண்ணம் வென்றார் ரபேல் நடால். இந்தக் கிண்ணம் அவரின் 10ஆவது பிரெஞ்சுக் கிண்ணமாக அமைந்தது. 2005, 2006, 2007, 2008, 2010, 2011, 2012, 2013, 2014ஆம் ஆண்டுகளில் கிண்ணம் வென்று சாதித்திருந்த நடால், நடப்பு வருடத்திலும் கிண்ணம் வென்றதன் மூலம் 10ஆவது பிரெஞ்சுக்கிண்ணத்தைதனது பெயரில்எழுதியுள்ளார். குறிப்பிட்ட ஓர்கிண்ணத்தை அதிக தடவைகள் கைப்பற்றியவரும் நடாலே.

ஒட்டுமொத்தமாக 18 கிண்ணங்களை வென்ற சுவிட்சர்லாந்து வீரர் பெடரர் முதலிடத்தில் உள்ளார். நடால் 15 கிண்ணங்களைக்கைப்பற்றியுள்ளார். கடந்த இரண்டு ஆண்டுகளில் நடால் சில தடுமாற்றங்களை எதிர்கொண்டிருந்தார். காயமும் அவரை ஆட்கொண்டது. தற்போது அதிலிருந்து அவர் மீண்டுள்ளார். நடப்பு வருடத்தில் நடைபெற்ற ஆஸ்திரேலியத் தொடரில் இறுதிக்குத் தகுதி பெற்றிருந்தார். அதன் பின்னரான சில தொடர்களிலும் இறுதிக்குத் தகுதிபெற்றிருந்தார். மொத்தத்தில் தனது பழைய திறனை மீட்டெடுத்துள்ளார் நடால். நடாலின் சகாப்தம் அடுத்த சில ஆண்டுகளுக்கும் நீண்டிருக்கும் என்பது மட்டும் உறுதி.



# உலகக்கிண்ணத்தை எதிர்நோக்குகிறார் லசித் மலிங்க

இலங்கை அணியின் முன்னணி வீரரான லசித் மலிங்க, 2019ஆம் ஆண்டுவரை அதாவது அடுத்த உலகக்கிண்ணம் வரை தொடர்ந்து விளையாடும் நம்பிக்கையை வெளிப்படுத்தினார். 33 வயதில், நான் செய்து பழக்கப்பட்ட விடயங்களை, தற்போது செய்வதற்குக் கடினப்படுகிறேன். பந்துவீசும் போது ஒவ்வொரு தடவையும், இலக்குகளைக் கைப்பற்றுவதற்கான ஆர்வத்தை, நான் கொண்டுள்ளேன். ஆனால், ஆட்டங்களை வென்று கொடுக்கக்கூடிய பந்துவீச்சாளராக, நான் இப்போது இல்லாமல் இருக்கலாம். 19 மாதங்களுக்குப்பின்னர் பன்னாட்டு அரங்கில் மீண்டும் களமிறங்கினேன். என்னால் விளையாட முடிந்தமை குறித்து எனக்கு மகிழ்ச்சி.





ஆனால், எனது பந்துவீச்சுக் குறித்து, எனக்குத் திருப்தி இல்லை ஏனென்றால், அணிக்காக, என்னால் வெற்றியைப் பெற்றுக் கொடுக்க முடியவில்லை என மலிங்க மேலும் குறிப்பிட்டார்.

மலிங்கதனதுதிறமையை தற்போது குறைத்துமதிப்பிடுகிறார் என்றுகூடச் சொல்லிக்கொள்ளலாம். ஏனெனில் பாகிஸ்தானுடனான லீக் ஆட்டத்தில் மலிங்கவின் பந்துவீச்சை நேரெதிர்திசையில் விளையாட முற்பட்டு திரசபெரேராவிடம் வாய்ப்பை வழங்கினார் சர்பிராஸ் அகமட். இந்தப் பிடியெடுப்பு சாத்தியமாகியிருந்தால் இலங்கை அரையிறுதிக்குத் தகுதிபெற்றிருக்கும். எனவே மலிங்க தற்போதும் ஆட்டத்தை வெற்றியுடன் முடித்துக்கொடுப்பதில் வல்லவராகவே உள்ளார் என்பது பலரினதும் கருத்து.





# சொன்னது என்னாச்சு

மினி உலகக்கிண்ணத் தொடரின் அரையிறுதியில் பங்களாதேஷ் இந்தியாவை வீழ்த்தி இறுதிக்குத் தகுதிபெறும் என்றவாறான அறிக்கை ஒன்றை விடுத்திருந்தார் பங்களாதேஷ் அணியின் முன்னாள் வீரர் அஸ்ரபுல். இந்த கருத்தை வெளியிட்டாலும் வெளியிட்டார் அவர்தான் தற்போது இந்திய ரகிசர்களின் பொழுது போக்கு.

லீக் சுற்றில் இந்தியாவை இலங்கை வென்றது. இலங்கையால் இந்தியாவை வீழ்த்த முடிகிறதென்றால் நிச்சயம் பங்களாதேஷாலும் முடியும். இந்தியாவை வீழ்த்தி பங்களாதேஷ் இறுதிக்குத் தகுதிபெறுவதென்பது சாத்தியமில்லாத காரியமல்ல என்பது அஸ்ரபுல்லின் கருத்தாக அமைந்திருந்தது. பங்களாதேஷ் பாராட்டப்பட வேண்டிய அணியென்பதில் சந்தேகம் இல்லை. உலகக்கிண்ணத் தொடரில் இங்கிலாந்தை வீழ்த்தியது. பின்னர் தனது மண்ணில் வைத்து டெஸ்ட் ஆட்டமொன்றிலும் இங்கிலாந்தை வீழ்த்தியது. இலங்கைக்குச் சுற்றுப்பயணம் செய்து இலங்கையையே மிரட்டியெடுத்து இவ்வாறு அந்த அணியின் அண்மைய பெறுபேறுகள் மிகச் சிறப்பானவை. ஆனால் அஸ்ரபுல் கொஞ்சம் அவசரப்பட்டுவிட்டார். பொறுத்திருந்து கருத்துத் தெரிவித்திருக்கலாமே அஸ்ரபுல்.

# டோனியின் கையுறையால் பறிபோனது 5 ஓட்டங்கள்

மினி உலகக்கிண்ணத் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் டோனியின் கையுறை களத்தடுப்புக்கு இடையூறாக இருந்தமை யால் எதிரணிக்கு 5 ஓட்டங்கள் வழங்கப்பட்ட சம்பவம் நடைபெற்றுள்ளது.

இந்தியாவும் பங்களாதேஷும் இந்த ஆட்டத்தில் மோதின. பங்களாதேஷ் துடுப்பெடுத்தாடும் போது ஆட்டத்தின் 40ஆவது பந்துப்பரிமாற்றத்தை அஸ்வின் வீசினார். மகமதுல்லா அடித்துவிட்டு ஓட்டம் எடுக்க முற்பட்டார். அப்போது பந்தைப்பிடித்த யுவராஜ்சிங் இலக்குக் காப்பாளர் டோனியின் வசம் எறிந்தார். பொதுவாக இது போன்ற சமயத்தில் டோனி ஒரு கையுறையை கீழே கழற்றி போட்டுவிட்டு பந்தைப்பிடித்து ரன்அவுட் செய்ய முயற்சிப்பது வழக்கம். அதே போலவே இந்த ஆட்டத்திலும் ஒரு கையுறையை கழற்றி போட்டார். துரதிர்ஷ்டவசமாக, இலக்கை நோக்கி அவர் வீசிய பந்து அருகில் கிடந்த கையுறையில் பட்டுவிட்டது. தலைக்கவசம், கையுறை உள்ளிட்ட உபகரணங்களை களத்தடுப்புக்கு இடையூறு ஏற்படும் வகையில் ஒரு அணி பயன்படுத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும். அதன்படி இந்தியாவை தண்டிக்கும் வகையில் எதிரணிக்கு 5 ஓட்டங்கள் இலவசமாக வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சோந்திகள்



பச்சோந்திகள் தாம் இருக்கும் இடத்திற்கு ஏற்றாற்போல நிறத்தை மாற்றிக்கொள்ளும் ஆற்றல் படைத்தவை. இதற்கான காரணம் அதனுடைய தோலில் உள்ள நிற செல்களுக்கும் அதன் மூளைப் பகுதிகளுக்கும் இடையேயான இடைவிடாத தொடர்புறலே என விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர்.

பச்சோந்திகளுக்கு காகம் மற்றும் கழுகு ஆகியவற்றால் தான் அதிக ஆபத்து ஏற்படுவதாக சொல்லப்படுகிறது. அதேவேளை பச்சோந்தி ஒரு பயந்த பிராணி என சொல்கின்றனர்.

இந்த நிலையிலே ஒரு நிமிடத்திற்கு மேல் பச்சோந்திகள் தங்களுடைய நிறத்தை மாற்றிக்கொளகிறது. அத்துடன் பச்சோந்திக்குரித்தான விசேட குணவியல்பாக அவற்றின் பார்வை ஆய்வாளர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதாவது ஒரு கண்ணால் ஒரு இடத்தையும் மற்றொரு கண்ணால் வேறு இடத்தையும் பார்க்கும் ஆற்றல் பெற்றவை பச்சோந்திகள்!










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எந்த...

மளிக்க நான் தயாராகவே உள்ளேன்.
இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப. சத்தியலிங்கம் தெரிவித்தார். வவுனியாவிலுள்ள பிரத்தியேக அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
முதலமைச்சர் நியமித்த விசாரணைக் குழுவின் அறிக்கையில், இரண்டு அமைச்சர்கள் குற்றவாளிகள், இரண்டு அமைச்சர்கள் நிரபராதிகள் என்று கூறப்பட்டுள்ளது. முதலமைச்சரால் குற்றவாளிக்கும் நிரபராதிக்கும் வழங்கப்பட்ட தண்டனையை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த விசாரணைக் குழு முதலமைச்சரால் அமைக்கப்பட்டது. விசாரணைக்குழு முழுமையான ஒரு அறிக்கையை முதலமைச்சருக்கு வழங்கியுள்ளது. ஆனால் இந்த விசாரணைக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்காமல், அறிக்கையை ஒரு பக்கத்திலே வைத்துவிட்டு, குற்றம் செய்ததாகக் கூறப்படும் இரு அமைச்சர்களுக்குத் தண்டனை வழங்குவதுபோல குற்றவாளிகள் இல்லை என்று அறிவிக்கப்பட்ட இரண்டு அமைச்சர்களுக்கும் என்ன காரணத்தின் அடிப்படையில் அப்படி ஒரு மாதக் கட்டாய லீவு?
அவர் ஒரு நீதியரசர். எங்களை விசாரித்தவர்கள் இரண்டு உயர் நீதிமன்ற நீதிபதிகள். அந்த இரண்டு நீதிபதிகளுடைய அறிக்கையை ஏற்காமல் இப்படி ஒரு மாறான முடிவை முதலமைச்சர் எடுப்பதற்கு, அவரைத் தூண்டியது யார்? அல்லது முதலமைச்சரைப் பிழையாக வழிநடத்தியவர்கள் யார்? என்ற ஒரு சந்தேகம் எனக்கு இருக்கின்றது. ஆகவேதான் அந்த அவையிலிருந்து நான் வெளிநடப்புச் செய்தேன். அதிலிருந்துதான் அனைத்துப் பிரச்சினைகளும் ஆரம்பித்தன. அதைவிட மேலே சென்று, நாங்கள் கொழும்பு அமைச்சர்களிடம் சென்று நெருக்கமான உறவைப் பேணுவதாகவும் ஒரு விடயத்தை முதலமைச்சர் கூறியுள்ளார்.
எங்களுடைய மாகாணசபை அமைப்பிலே 13ஆவது திருத்தச் சட்டத்தில் இருக்கின்ற சொற்ப அதிகாரங்களோடு 30 வருடப் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சேவையை வழங்குவதற்கு நிதிப் பலமோ ஆள்பலமோ இல்லை. கொழும்பு அமைச்சின் உள்ளூராட்சி அமைச்சுக்குக் கீழ் இருக்கின்ற ஒரு சபையே வடக்கு மாகாண சபை. இந்த மாகாண சபை, கொழும்பு அரசின் உறுதுணை இல்லாமல் சுயமாக எழுந்து நிற்கக்கூடிய ஒரு சபை இல்லை. இது ஒரு அரசு அல்ல. ஆகவேதான் கொழும்பு அரசின் சுகாதார அமைச்சரோடு நான் தொடர்புகளை ஏற்படுத்தி எமது மாகாண மக்களுக்குத் தேவையான வேலைத்திட்டங்களைக் கொண்டு வந்தேன். என்னுடைய தனிப்பட்ட தேவைகளைச் செய்யவில்லை. மாகாண சபைச் சட்டத்திலே நாங்கள் நேரடியாக நிதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாது. வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்படும் பெரும் நிதி உதவிகளை நாங்கள் நேரடியாக மாகாண சபைக்குக் கொண்டுவர முடியாது. ஆகவே நாங்கள் கொழும்பு அரசினூடாகத்தான் உதவிகளைக் கொண்டு வரவேண்டும். நாங்கள் கொழும்பு அமைச்சர்களோடு உரையாடுவது தடை செய்யப்பட்ட ஒரு விடயமல்ல-என்றார். (த-4)

## மகிந்தவை...

யின் தலைவர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
உதயங்க வீரதுங்க என்பவர் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் உறவினர். ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவராக இருந்தவர். அவர் ஊழல் திருட்டுகளில் ஈடுபட்ட ஓர் குற்றவாளி. பன்னாட்டுப் பொலிஸாருக்கும் அவர் மீது குற்றச்சாட்டு உள்ளது. இவ்வாறான ஒருவருக்கு இலங்கை அரசு கடவுச்சீட்டும் வழங்கியுள்ளது. இப்போது அவர் மகிந்த செல்லும் இடங்களுக்கு பின்னால் சென்று கொண்டிருக்கிறார்.
அவரைக் காப்பாற்றிக் கொண்டு வருகின்றார் மகிந்த ராஜபக்ச. இலங்கை அரசால் பிடியாணை பிறப்பிக்கப்பட உதயங்க வீரதுங்க பன்னாடுகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு ஊழல் செய்த ஒருவர். அவருடன் இணைந்து மகிந்த ராஜபக்ச செயற்பட்டுக் கொண்டு வருகின்றார். முதலில் மகிந்தவைக் கைது செய்ய வேண்டும். அப்போது இந்தப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் - என்றார். (த)

## தவறுகளை...

அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் அமையவுள்ள நீதிமன்றக் கட்டடத்தொகுதிக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
அரசு என்ற வகையில் நீதி அமைச்சர் என்ற வகையில் அந்த பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. அதற்கான காரணம் கடந்த மூன்று தசாப்த காலமாக நடைபெற்ற போரால் அதிகளவிலான மக்கள் பாதிக்கப்பட்ட பிரதேசமாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் காணப்படுகின்றன. நீங்கள் செய்த தவறோ அல்லது நாங்கள் செய்த தவறால் ஏற்படவில்லை யாரோ செய்த தவறால் இந்தத் துன்பகரச் சம்பவம் இடம் பெற்றது.
இரண்டு வருடத்துக்கு முன்னர் எங்கள் நாட்டிலும், வெளிநாட்டிலும் நீதித்துறை தொடர்பாக பொதுமக்களிடம் தவறான எண்ணக்கருவே காணப்பட்டது. நாம் அந்த தவறுகளை தகர்த்தெறிந்ததன் காரணத்தால் நாட்டில் உள்ள பொது மக்களும், பன்னாட்டு மக்களும் எமது நீதிமன்ற துறை தொடர்பில் பெருமைப்படுகின்றனர். அதற்கான முக்கிய ஒரு காரணம் நாம் அரசை பொறுப்பெடுத்து முதலாவது நீதியரசாக கௌரவ சிறிபவன் ஐயாவை நியமித்ததே. நீதிச் சேவையின் ஆணைக்குழுவின் தலைவராக அவர் பொறுப்பேற்றதுடன் பொதுமக்களிடையே நீதிச்சேவை தொடர்பில் நம்பிக்கை ஒன்று ஏற்பட்டது. அந்த நற்சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவதற்கான அரசு என்ற வகையில் எமது கடமையை நாம் செய்தோம்.
அரசியல் அமைப்பில் 19ஆவது திருத்தம் கொண்டுவந்தன் மூலம் சுயாதீன ஆணைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. சுயாதீன ஆணைக் குழுக்கள் சரியான முறையில் இயங்குகின்றன. அதில் சில தவறுகள் சில குறைபாடுகள் காணப்படுகின்றன என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
உலகிலே எந்தவொரு நாடும் அபிவிருத்தி அடைந்து காணப்பட்டால் அந்த அபிவிருதிதிக்கான காரணம் அந்த நாட்டு மக்களின் சமாதானமும், ஒருமைப்பாடும் ஆகும். அந்த நாடுகளில் சமாதானத்தை பாதுகாப்பதற்கு இரண்டு நிறுவனங்கள் காணப்படுகின்றன. கோயில்கள், பௌத்தவிகாரைகள், பள்ளிகள், தேவாலயங்கள் அமைக்கப்பட்டிருப்பது நாட்டின் பொது மக்களிடையே தேசிய ஒருமைப்பாட்டை பேணுவதற்காகவே. நாம் ஒரு பௌத்த விகாரைக்கு சென்றோமானால் நாம் எந்த மதத்தை சேர்ந்தவர் என்று அந்த மதகுருமார் பார்ப்பதில்லை எமக்கு ஆசிர்வாதங்களை வழங்குவர். இந்துக்கோயிலுக்கு செல்வோமானால் கடவுளும் பார்ப்பதில்லை, பூசாரியும் பார்ப்பதில்லை. அவர் எமக்கான ஆசிர்வாதத்தை வழங்குவார்.
எமது சமுகத்தில் பல மதங்களும், கலாசாரங்களும் காணப்படுகின்றன. அது பொதுமக்களிடையே பிரிவை ஏற்படுத்துவதற்காக அல்ல சமுகத்தை வடிவமைப்பதற்காகவே அவை உள்ளன. எமக்கு இந்த நீதித்துறை தேவைப்படுவதற்கான காரணம் தர்மத்தை பின்பற்றாத ஐந்து வீதத்துக்கும் குறைவான மக்கள் காணப்படுவதன் காரணமே. அவர்களுக்காகவே நீதிமன்றங்களும், சிறைச்சாலைகளும், பொலிஸ்நிலையங்களும் அமைப்பதற்கு பெரும் அளவிலான நிதி ஒதுக்கப்பட வேண்டியுள்ளது. குற்றத்தை புரியும் நபருக்கு சட்டத்தில் தமிழ், சிங்களம், முஸ்லிம், பறங்கி, மலே என்ற பாகுபாடு இன்றி தண்டனை வழங்கப்படும் - என்றார். (ற-7)

## மூதூர்...

மான குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் நேற்று யாழ்ப்பாணம், உடுவிலில் கண்டன ஊர்வலம் நடத்தப்பட்டது. உடுவில் அறநெறிப் பாடசாலை மற்றும் உடுவில் பிரதேச செயலக இந்து சமய அபிவிருத்திக் குழு என்பன இணைந்து ஊர்வலத்தை ஏற்பாடு செய்தனர்.
மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயத்தில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் உடுவில் பிரதேச செயலகம் வரை சென்றது. பாதிக்கப்பட்ட சிறுமிகளுக்கு நீதி வழங்க வேண்டும், குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கான மனுக்கள் பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டன. மனுவை வடக்கு ஆளுநர் ஊடாக உரியவர்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதேச செயலர் தெரிவித்தார்.
கொழும்பு மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனை மனுக்களைப் பெற்றுக் கொள்ள வர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது என்றும், அவரோ அல்லது அவரது பிரதிநிதியோ வரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ற-8)

## 3 மாகாண...

எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் நடத்துவதற்கு தயாராகவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.
கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வட மத்திய மாகாண சபைகளே இவ்வாறு ஆட்சிக் காலம் நிறைவடையவுள்ளன.
கிழக்கு மாகாணத்தின் ஆட்சிக் காலம் எதிர்வரும் செப்ரெம்பர் 8 ஆம் திகதியும், சப்ரகமுவ மாகாண சபையின் ஆட்சிக் காலம் செப்ரெம்பர் 28 ஆம் திகதியும், வட மத்திய மாகாணத்தின் ஆட்சிக் காலம் ஒக்ரோபர் முதலாம் திகதியும் நிறைவடையவுள்ளன.
மாகாண சபைகள் தொடர்பான தேர்தலைச் சட்டப்படி ஒத்திவைப்பதற்கு வாய்ப்பு இல்லையெனவும் தேர்தல்கள் ஆணைக்குழு கூறியுள்ளது. (த)

## மதத்...

மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் நேற்று நேரில் சென்று சந்தித்து உரையாடினார்.
வடக்கு மாகாணசபையில் தற்போது ஏற்பட்டுள்ள நிலமை தொடர்பில், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று முன்தினம் மதத் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார். யாழ்ப்பாண ஆயர் மற்றும் நல்லை ஆதீன குரு முதல்வர் ஆகியோருடன் பேச்சுக்கள் நடத்தியிருந்தார். தற்போதுள்ள கொந்தளிப்பான நிலமையை இல்லாமல் செய்வதற்கு, தனக்கு எதிராக கொடுக்கப்பட்ட மனுவை மீளப் பெறுவதே வழி என்றும் குறிப்பிட்டிருந்தார்.
இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், யாழ்ப்பாண ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை மற்றும் நல்லை ஆதீன குரு முதல்வர் ஆகியோரை நேற்றுச் சந்தித்தார். இந்தச் சந்திப்பின்போது, ஒற்றுமையாகச் செயற்படுமாறு கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரியவருகின்றது. (த-5)

## சீனி...

சீனியின் மொத்த விற்பனை விலை 96 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளதாகச் சீனி இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.
நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த விலைக் குறைப்பு செய்யப்பட்டுள்ளதெனவும் சங்கம் கூறியுள்ளது.
உலகசந்தையில் சீனி விலை குறைவடைந்ததைத் தொடர்ந்து இந்த விலைக் குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
சீனி இறக்குமதிக்கான சுங்க வரியை அரசு 10 ரூபாவினால் அதிகரித்த போதிலும், நுகர்வோருக்கு எந்தவித விலை அதிகரிப்பும் இன்றிச் சீனி விற்பனை செய்ய முடிந்ததாக சங்கத்தின் செயலாளர் ஹேமக பெர்னாண்டோ தெரிவித்தார். (த)

## விக்கியுடன்...

மாகாண முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கையளித்த தரப்பினர் நேற்றுத் தெரிவித்தனர்.
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மார்ட்டின் வீதி அலுவலகத்தில் நேற்றுக் காலை பத்திரிகையாளர் சந்திப்பு நடைபெற்றது. இதன்போது, நம்பிக்கையில்லாப் பிரேரணை கையளித்த தரப்பினர் தம்மை வடக்கு மாகாண சபையின் நீதிக்கான அணியாக அடையாளப்படுத்தினர். அதன் ஊடகப் பேச்சாளரான, மாகாண சபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான கேசவன் சயந்தனே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

**ஐங்கரநேசனைப் பாதுகாத்தார்**

வடக்கு மாகாண முதலமைச்சருடன் கடந்த காலங்களில் இணைந்து செயற்பட்டிருந்த போதும், மாகாண சபைச் செயற்பாடுகள் வினைத்திறன் அற்றதாக மாறிக் கொண்டு செல்லுகின்ற நிலையில் அதனை வினைத்திறன் உள்ளதாக மாற்றுவதற்கு நாங்கள் முயற்சிக்கின்றபொழுதுதான் சேர்ந்து இயங்க முடியாத நிலை வந்தது. அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிக்கப் பல முறை அவரை வலியுறுத்தியபோதும் அவர் நடவடிக்கை எடுக்கவில்லை. இதன் பின்னர் தான் விடயம் சபைக்கு வந்தது. இதன்போதும் அவர் அமைச்சர் ஐங்கரநேசனைப் பாதுகாக்கும் விதத்தில், பொது அரங்கில் உரையாற்றியிருந்தார்.
இதன் பின்னர் தொடர்ச்சியான வற்புறுத்தலினால் விசாரணைக்குழு அமைக்க முயற்சித்தார். மாகாணசபை உறுப்பினர்களை உள்ளடக்கிய தெரிவுக் குழுவை அமைக்கக் கோரியபோதும் அவர் அதற்கு உடன்படவில்லை. அவ்வாறு தெரிவுக் குழு அமைக்கப்பட்டால், தானும் விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டி வரும் என்பதால் அவர் அதனைச் செய்யவில்லை.

**தவறான புரிதலை நீக்குங்கள்**

இதன் பின்னர் முதலமைச்சரால் விசாரணைக்குழு அமைக்கப்பட்டு அதன் அறிக்கை வெளிவந்தது. அந்த அறிக்கை, வெறுமனே இரண்டு அமைச்சர்களை அதிலிருந்து விடுவிக்கப்படவில்லை. இந்த விசாரணைக் குழுவின் விசாரணை முறை, தனியே சாட்சிகளை விசாரிப்பதும் குறுக்கு விசாரணை செய்வதுமாக மாத்திரம் இருக்கவில்லை. மரபுக்கு மீறிக் குற்றஞ் சாட்டப்பட்டவர்களையும் குறுக்கு விசாரணை செய்கின்ற ஒரு முறைமையையும் உள்ளடக்கியிருந்த... அந்த வகையில் குற்றம்சாட்டப்பட்ட... கிய 4 அமைச்சர்களும் விசாரிக்கப்ப... கின்றார்கள். அதாவது குற்றவாளிக... காணப்படாத இரு அமைச்ச... விசாரிக்கப்படாமலேயே விடுவிக்கப்ப... கத் தவறான புரிதலை நாங்கள் நீக்கிக்... ளவேண்டும். ஆகையினால் 4 அமைச்... ளும் விசாரிக்கப் பட்டு இந்த அறிக்கை வெ... வந்திருக்கின்றது.
அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இந்த விசா... ணைக் குழுவில் குற்றவாளியாகக் காண... பட்டிருப்பதையடுத்து அவரது நெருங்கிய சகாவுக்கு ஏற்பட்ட நிலமைகளைச் சீர்செய்வதற்காக பொதுமைப்படுத்தலுக்குள் முதலமைச்சர் தள்ளப்பட்டார்.

**நம்பிக்கை இழந்து விட்டோம்**

அப்படிப் பொதுமைப்படுத்தலின் விளைவு இரண்டு மாகாண அமைச்சர்கள் தங்கள் பதவிகளைத் தியாகம் செய்யவேண்டும் என்ற கோரிக்கையும் ஏனைய இரண்டு அமைச்சர்கள் விடுப்பில் செல்ல வேண்டும் என்ற கோரிக்கையும் இருந்தது. குற்றவாளியாக காணப்பட்டவருக்குத் தண்டனை வழங்குவதே தவிர தண்டனையின் பொருட்டு ஒரு விடயத்தை நீங்கள் தியாகம் செய்யுங்கள் என்று கோருவதல்ல. ஒரு கொலைக் குற்றவாளிக்குத் தூக்குதண்டனை விதிக்கப்பட்டால் உயிரைத் தியாகம் செய்யுமாறு கேட்பதில்லை. அவரைத் தூக்கிலிடுமாறே தீர்ப்புக் கூறுவார்கள். முதலமைச்சர், எங்களுக்கு ஆளும் கட்சிக் குழுத் தலைவர் என்ற முறையில் முறையான தலைமைத்துவத்தை வழங்கத் தவறிவிட்டார். அவரது செயற்பாடுகள் நம்பகத்தன்மையாக இல்லை என்ற அடிப்படையில் அவர் மீது நாங்கள் கொண்டிருந்த நம்பிக்கையை இழந்துவிட்டோம். அந்த அடிப்படையில்தான் எங்களுடைய நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்தி உறுப்பினர்கள் சேர்ந்து அதனை இப்பொழுது இருக்கின்ற முறைமையின் படி ஆளுநரிடம்தான் தெரிவிக்கலாம். அவர் பறங்கியரா, முஸ்லிமா, சிங்களவரா என்பதல்ல. அவர் வகிக்கின்ற பதவி ஆளுநர். இப்பொழுது உள்ள சட்டமுறைகளின்படி ஆளுநரிடம்தான் கையளிக்க முடியும். இதனை நாங்கள் செய்திருக்கின்றோம் என்றார். (த-5-26-101)

## யாழ். போதனாவில்...

டில் இளைஞன் கைதாகி விசாரணையில் உள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் தனியார் நடத்திவரும் சிற்றுண்டிச்சாலையில் கடமையாற்றும் ... ரித்த பெண் மலசல கூடத்துக்குச் சென்ற வேளையில் கத்தியால் குத்தப்பட்டார். கையிலும் தலையிலும் காயமடைந்த அவர் கத்திக் கூச்சலிடவே, அந்தப்பகுதியை அண்மித்துக் கடமையிலிருந்த வைத்தியசாலையின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் கத்தியால் குத்தியதாகக் குற்றஞ் சாட்டப்படும் நபரைப் பிடித்தார். பின்னர் அவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4,12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






செல்வையா புவிநாயகம் ஞாபகார்த்த நிதியத்தால் இணுவில் மத்திய கல்லூரி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கல்லூரியின் தலைமை மண்டபத்தில் கல்லூரியின் அதிபர் இ.துரைசிங்கம் தலைமையில் நடைபெற்றது.



கொழும்புத்துத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது பஞ்சமுக விநாயகர் தேரில் எழுந்தருளி வீதிவலம் வந்தார். (ஐ–17)



மட்டக்களப்பு பெரிய போரதீவு சிறிமுத்து விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின் கொடியேற்றம் அண்மையில் நடைபெற்றது. இதன்போது சிவசிறி கு.ல.மு. மேஹன்சிவாச்சாரியர் தலைமையில் கொடியேற்றப்பட்டது. (ஐ–46)

இலங்கையின்
முதல்தர வர்த்தக நாமம்
உங்களை எதிர்பார்க்கின்றது

விற்பனை மேம்பாட்டு அதிகாரி
(யாழ்ப்பாணம் - வவுனியா)

சுறுசுறுப்பும் ஆர்வமும் உள்ளவர்களுக்கு விற்பனை மேம்பாட்டு அதிகாரிகளாக இணைந்து கொள்வதற்கான அரிய வாய்ப்பினை Singer (Sri Lanka) PLC வழங்குகிறது. கொள்வனவு விபரங்களை சேகரித்தல் வெளிக்கள வேலைகள், உற்பத்திகள் தொடர்பாக வாடிக்கையாளருக்கு விபரித்தல், தவனை கட்டண சேகரிப்பு போன்றன இப்பதவியின் பொறுப்புகள் ஆகும்.

பொருத்தமான விண்ணப்பதாரர் 20-28 வயதிற்கு உட்பட்டவராகவும் க.பொ.த சாதாரண தர, உயர் தர பரீட்சைகளில் சிறந்த பெறுபேறு பெற்றவராகவும் ஆங்கில, தமிழ் மொழிகளில் சிறந்த புலமையும் இருக்க வேண்டும். Hardware துறையில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வருட அனுபவம் விரும்பத்தக்கது. வாகனம் அல்லது மோட்டார் சைக்கிள் ஓட்ட செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரமும் இருக்க வேண்டும்.

பொருத்தமான விண்ணப்பதாரருக்கு கவர்ச்சிகரமான சம்பளமும், கம்பனியின் வழமையான ஊக்குவிப்பு கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

தகுதியான விண்ணப்பதாரிகள் சுயவிபரக் கோவையை உறவினரல்லாத 2 சிபாரிசாளர்களின் தொடர்பு விபரங்களுடன் கீழுள்ள முகவரிக்கு அல்லது hr@singersl.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு 7 நாட்களுக்குள் அனுப்பிவைக்கவும்; கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை குறிப்பிடவும். www.singersl.com என்ற எமது இணையத்தளம் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம்.

மனிதவள உதவி முகாமையாளர்
Singer (Sri Lanka) PLC
இல.80, நவம் மாவத்தை,
கொழும்பு 02.

SINGER®
Trusted Excellence

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

# பேராயரை வரவேற்கிறது யாழ். மறை மாவட்டம்

யாழ். பத்திரிசியார் கல்லூரியின் பரிசளிப்பு விழா நிகழ்வுகள் இவ்வாரத்தில் இடம்பெறவுள்ளன. வருகின்ற 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று முதன்மை விருந்தினராக கொழும்பு உயர் மறைமாவட்டப் பேராயர் கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை கலந்து கொள்ள குறித்த விழா மேன்மையோடு சிறப்புற நிகழவிருக்கிறது. அந்தவகையிலே இவ்வார ஆக்கத்துக்கான தகவல்களை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் ம. ஜெறோ செல்வநாயகம் அடிகளாரும், இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவைச் செயலர் ரொணி மாட்டீன் அடிகளாரும் வழங்கியுள்ளனர். அது குறித்து நோக்குவோம்.

**யாழ். மறை மாவட்டத்துக்கு வருகை**

இலங்கையின் இரண்டாவது கர்தினால் மற்றும் இலங்கை கத்தோலிக்கத் திருச்சபையின் இரண்டாவது கர்தினால் என்ற பெயருக்கும் பெருமைக்கும் உரியவராக கொழும்பு உயர் மறை மாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை திகழ்கிறார். இலங்கையின் முதல் கர்தினால் தோமஸ் கூறே ஆண்டகையின் பணிக்காலத்தின் பின்பாக 22 ஆண்டுகள் கடந்து 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ற் அடிகளாரால் கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை கர்தினாலாக நியமிக்கப்பட்டார். இதனால் இலங்கை கத்தோலிக்க திருச்சபை மட்டுமல்லாது நாடு முழுமையுமே மதபேதமின்றி மகிழ்ச்சி கொண்டது. கர்தினால் பட்டம் பெற்று வந்த அவரை விமான நிலையத்தில் இருந்து போராயர் இல்லம்வரை கோலாகலமாக வரவேற்று அழைத்து வந்தனர். கர்தினால் பட்டம் பெற்றதன் பின்பாக பேராயர் யாழ் மறைமாவட்டத்துக்கு வருகை தருவதென்பது இதுதான் முதற் தடவையல்ல. யாழ். ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் ஆயர்த்துவ பட்டமளிப்பின் போதும், வேறும் பல முக்கிய நிகழ்வுகளின் போதும் அவர் யாழ் மறை மாவட்டத்துக்கு வருகை தந்துள்ளார். இங்கு முக்கியத்துவ மான விடயம் ஒன்றை நாம் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. அவர் கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் பேராயராக இருப்பதாலோ அல்லது இலங்கை கத்தோலிக்கதிருச்சபையின் கர்தினாலாக இருப்பதாலோ ஏனைய மறை மாவட்டங்கள் மீது சட்ட பூர்வ அதிகாரங்கள் எதனையும் அவர் கொண்டிருக்கவில்லை என்பதே அந்த முக்கியத்துவமான விடயமாகும். கர்தினால் என்கின்ற வகையில் தனிச் செல்வாக்கையும், அந்தஸ்தையும் பெற்றுக் கொண்டுள்ளார். இலங்கையில் ஒரே ஒரு கத்தோலிக்க ஆயர் பேரவையானது அனைத்து மறைமாவட்டக் கத்தோலிக்க ஆயர்களையும் இணைத்துக் கொண்டு இயங்குநிலை பெற்றிருக்கின்றது. இதனுடன் தொடர்பான விடயங்கள் சிலவற்றை பின்னர் நோக்குவோம்.

> தற்போது போர் முடிவடைந்துள்ளது. இன, மத ரீதியாக அதிக புரிந்துணர்வையும், இணக்கப் பாட்டையும் ஏற்படுத்திக் கொள்ள அதீத முயற்சிகள் என்றுமில்லாத அளவுக்கு மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இலங்கையின் மறைமாவட்டங்கள் அனைத்துமே ஒரு தனி ஆயரின் கீழாக தனித்துவமான அதிகாரங்களையும், வரையறைகளையும், சுதந்திரங்களையும் கொண்டுள்ளன. இவை தலைமைப்பீடமான உரோமாபுரியின் சட்ட ஒழுங்கு விதிமுறைகளின் படியே இயங்குகின்றன. இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையில் ஏனைய மறைமாவட்டங்கள் அங்கம் வகிப்பதாலும், உயர் மறைமாவட்டமாக கொழும்பு இருப்பதாலும் அவற்றின் கீழான அதிகார வரம்பிலுள் ஏனைய மறைமாவட்டங்கள் இயங்கு நிலை பெறுகின்றன எனச் சிலர் கருதுவது தவறானது. அதனைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

**மல்கம் றஞ்சித் அடிகளாரின் வாழ்வும் குருத்துவப் பணியும்**

மல்கம் றஞ்சித் அடிகளார் இலங்கை குருநாகல் பிரதேசத்தில் 1947 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதி பிறந்தார். 1965 ஆம் ஆண்டு பொறளையில் அமையப்பெற்றுள்ள புனித அலோசியுஸ் குருமடத்தில் இணைந்து கொண்டார். 1966 ஆம் ஆண்டு தொடக்கம் 1970 ஆண்டு வரை கண்டி தேசிய குருமடத்தில் மெய்யியலையும், இறையியலையும் பயின்றார். அதன் பின்பாக மல்கம் றஞ்சித் அடிகளார் அப்போது கொழும்பு பேராயராக இருந்த தோமாஸ் கூரே ஆண்டகையின் உதவியோடு மேல் படிப்பை மேற்கொள்வதற்காக உரோம் நகருக்கு பயணமானார். உரோமில் உள்ள ஊர்பன் பல்கலைக்கழகத்தில் பட்டக் கற்கை நெறியைத் தொடர்ந்த மல்கம் றஞ்சித் அடிகளார், இறையியலில் இளங்கலைப் பட்டம் பெற்றார். 1975 ஆம் ஆண்டு திருத்தந்தை ஆறாம் பவுல் மல்கம் றஞ்சித் அடிகளாருக்கு உரோமில் குருப்பட்டம் அளித்தார். அதன் பின்பாக 1978 ஆம் ஆண்டு கலாநிதிப் பட்டத்தையும் அவர் பெற்றார். உரோமில் படிப்பை முடித்தபின் இலங்கை திரும்பினார். கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் பங்குகளில் மறைப்பணி ஆற்றினார். 1983 ஆம் ஆண்டு மறைபரப்பு நிறுவனங்களின் தேசிய இயக்குநராக நியமனத்தைப் பெற்றுக்கொண்டு பணியாற்றினார்.



**கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் அடிகளாரின் பணிகள்**

1991ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17ஆம் திகதி கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயராக நியமனம் பெற்றார். அதே ஆண்டு ஒகஸ்ற் மாதம் 31ஆம் திகதி திருப்பொழிவும் கண்டார். அந்தச் சந்தர்ப்பத்திலே கொழும்பு பேராயராக இருந்த நிக்கிலஸ் மாக்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை, யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை மற்றும் ஒசுவல்ட் கோமஸ் ஆண்டகை ஆகியோர் அடிகளாருக்கான திருப்பொழிவை நிகழ்த்தினர். அதைத் தொடர்ந்து 1995 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 02 ஆம் திகதியன்று புதிதாக ஏற்படுத்தப்பட்ட இரத்தினபுரி மறை மாவட்டத்தின் முதல் ஆயராக கடமைகளைப் பொறுப்பேற்று சிறந்த பணிகளை ஆற்றினார்.

1995 ஆம் ஆண்டு தொடக்கம் 2001 ஆண்டு காலப்பகுதி வரை இரத்தினபுரி மறைமாவட்ட ஆயராகப் பணிபுரிந்த அடிகளார், அடுத்த 2001 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி உரோமின் மறைப்பரப்பு பேராயத்தில் துணைச்செயலராக நியமனத்தைப் பெற்றுக்கொண்டார்.

2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதியிலிருந்த 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் இந்தோனேசியா மற்றும் கிழக்குத் தீமோர் நாடுகளில் திருத்தந்தையின் தூதுவராகப் பணிபுரிந்தார். அப்போது பேராயர் பதவிக்கு உரித்தானவராக உயர்வு பெற்றார். பேராயர் மல்கம் றஞ்சித் ஆண்டகை உரோமில் திருவழிபாடு மற்றும் அருளடையாளங்கள் நெறிமுறைக்கான பேராயத்தின் செயலராக பணி நியமனத்தை 2005 ஆண்டு டிசெம்பர் 10 ஆம் நாள் பெற்றார். அங்கு அவருடைய பணி நான்கு ஆண்டு காலமாக அமைந்திருந்தது. 2009ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16ஆம் நாள் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட், மல்கம் றஞ்சித் அடிகளாரை கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் பேராயராக நியமித்தார். கொழும்பு உயர்மறைமாவட்டப் பொறுப்புகளை அவ்வாண்டு ஓகஸ்ட் மாதம் 05 ஆம் திகதியன்று பொறுப்பேற்றுக்கொண்டார். 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இலங்கை கத்தோலிக்க ஆயர் போவையின் தலைவரானார்.

**கர்தினால் நியமனம்**

1945 ஆம் ஆண்டு தொடக்கம் 1965 ஆம் ஆண்டு வரை கொழும்பு உயர் மறைமாவட்டப் பேராயராக இருந்த ஆயர் தோமாஸ் கூரே ஆண்டகை, அப்போதைய திருத்தந்தை 6 ஆம் சின்னப்பரால் இலங்கையின் முதல் கர்தினாலாக 1965 ஆம் ஆண்டு நியமிக்கப்ட்டார். அவரது கர்தினால் பதவிக் காலம் 1976 ஆம் ஆண்டு வரை நீடித்தது. 1988 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 29 ஆம் திகதியன்று இறைபதம் அடைந்தார். 22 ஆண்டுகள் கடந்த நிலையில் 2010 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆம் திகதியன்று திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ற் அடிகளார், கொழும்பு உயர் மறைமாவட்டப் பேராயராக இருந்த ஆயர் மல்கம் றஞ்சித் ஆண்டகையை இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் இரண்டாவது கர்தினாலாக நியமித்தார். இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டுக்கு ஓர் கர்தினால் கிடைப்ப தென்பது பெரும் பாக்கியமாகும்.

கத்தோலிக்கத் திருச்சபையில் கர்தினால் நிலை என்பது வெறுமனே அதிகாரத்தையும், பதவியையும், பட்டத்தையும் குறித்து நிற்கும் ஒன்றல்ல. மாறாக ஒருவர் கத்தோலிக்க திருச்சபையில் பொறுப்புக்களையும், கடமைகளையும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தான ஒரு தகமையாகும். கர்தினால் நிலையில் இருக்கும் ஒருவரே கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவரான திருத்தந்தைக்கான தெரிவில் வாக்களிக்கும் உரிமையைக் கொண்டிருப்பதுடன், திருத்தந்தையாகும் தகமையையும் பெற்றிருக்கிறார் என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒரு விசேட அம்சமாகும்.

**தமிழ் மறைமாவட்டங்கள் தனி அலகாக இயங்க ஆலோசனை**

இலங்கையில் ஒரேயொரு கத்தோலிக்க ஆயர் பேரவையானது, அனைத்து மறைமாவட்ட கத்தோலிக்க ஆயர்களையும் இணைத்துக் கொண்டு இயங்குநிலை பெறுகிறது. அது குறித்து இப்போது நோக்குவோம்.

இலங்கைத் திருநாடு தமிழ், சிங்களம் என்ற இரு மொழி பேசும் மக்களைக் கொண்ட ஒரு நாடு. கத்தோலிக்கம் இந்த இருமொழிபேசும் மக்களையும் இணைக்கும் ஒரு பாலமாக உள்ளது. அதாவது தமிழ்க் கத்தோலிக்க மக்களும், சிங்களக் கத்தோலிக்க மக்களும் இங்கு வசிக்கின்றனர். இங்கு மொழி மற்றும் கலாசார வேறுபாடுகள் இருப்பதால், அனைத்து விடயங்களையும் எப்போதும் இரண்டு மொழிகளிலும் கவனத்துடன் மொழியாக்கம் செய்திடவோ, கலாசார நிலைகளைக் கவனத்துடன் நோக்குதலுக்கு உள்ளாக்கிடவோ வேண்டிய தேவைகள் அதிகம் உண்டு. 1979 ஆம் ஆண்டு அப்போதைய யாழ் ஆயர் வ. தீயோகுப்பிள்ளை ஆண்டகை காலத்தில் மேற்படி விடயங்கள் அனைத்தையும் கவனத்திற் கொண்டு தமிழ் மறைமாவட்டங்கள் அத்தனையும் ஒன்றிணைந்து கொண்டு ஒரு அலகாக இயங்க வேண்டும் என்ற ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. பின்னர் 1993 ஆம் ஆண்டு அப்போதைய ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை காலத்தில் மீண்டும் இந்த வேண்டுகோள்கள் முன்மொழியப்பட்டது. 1993 ஆம் ஆண்டு இடம்பெற்ற மேய்ப்புப்பணி மாநாட்டிலும் இந்தக் கருத்துகள் வலியுறுத்தப்பட்டன. தற்போதைய யாழ் ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை பதவி ஏற்றதன் பின்பாக கடந்த 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற மேய்ப்புப்பணி மாநாட்டிலும் இந்த விடயங்கள் முன்வைக்கப்பட்டதுடன் முன்னிலை பெற்றிருந்தன.

**தமிழ் மறைமாவட்டங்கள் தனி அலகாக இயங்குவதற்கான சாதகநிலை**

தற்போது போர் முடிவடைந்துள்ளது. இன, மத ரீதியாக அதிக புரிந்துணர்வையும், இணக்கப்பாட்டையும் ஏற்படுத்திக் கொள்ள அதீத முயற்சிகள் என்றுமில்லாத அளவுக்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த சந்தர்ப்பத்திலே தமிழ் மறைமாவட்டங்கள் அனைத்தும் தனி அலகாக இயங்க வேண்டும் என்ற ஆலோசனைகளை முன்வைப்பது பொருத்தப்பாடுடையதாகும். இது பிரிவினையை உருவாக்கும் ஒன்று என்ற நோக்கில் கருதப்படலாகாது.

இந்த விடயங்கள் தொடர்பான விரிவான ஆக்கம் ஒன்றை உதயன் பத்திரிகையின் ஞாயிறு சிறப்பிதழின் கிறிஸ்தவப் பகுதியில் கத்தோலிக்க அன்பு நெஞ்சங்கள் எதிர்பார்க்கலாம்.

புனித பத்திரிசியார் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்ள யாழ்ப்பாணம் வருகை தரவுள்ள கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை இந்த விடயங்களை முதலில் முன்னெடுக்கக் கூடியவர். இது பற்றிய சாதகமான எண்ண வெளிப்பாடுகளை தன்னகத்தே கொண்டவர். இவ் வேண்டுகோளைச் சிபாரிசு செய்யக் கூடியவர். உண்மையிலே இலங்கை கத்தோலிக்க திருச்சபையிலும், சிங்கள கத்தோலிக்க மக்கள் மத்தியிலும், பௌத்த சிங்கள மக்கள் மத்தியிலும், எல்லாவற்றிற்கும் மேலாக கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமைப்பீட வட்டாரங்களிலும் அவருக்கு இருக்கும் செல்வாக்கை இந்தச் சந்தர்ப்பத்திலே பயன்படுத்திக்கொள்வதென்பது சிறப்பானதும், காத்திரமானதுமாகும்.

போர் நடந்தமையால் மேற்படி நிகழ்வுக்கான காலம் என்பது பொருத்தமற்றது எனத் தெரிவிக்கப்பட்டது. இரு இனங்களும் முரண்பாட்டில் இருக்கும்போது தமிழ் மொழி, சிங்கள மொழி என்ற நிலைப்பாட்டில் செயற்படக் கோருவது இனமுறுகலை மேலும் ஏற்படுத்தும் என்ற விமர்சனங்கள் முன்வைக்க ப்பட்டது. அவை அதிக விமர்சனங்களையும் பெற்றிருந்தன. தற்போது யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார் மட்டக்களப்பு என்ற நான்கு தமிழ் மறை மாவட்டங்கள் இயங்கு நிலையில் இருந்து வருகின்றன என்பது இக்கோரிக்கைக்கு மேலும் வலுச்சேர்க்கும் விடயமாக அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடல் எடை குறைய வேண்டுமா ?

*எடை கூடுகிறதா ?
*உடல் எடை கூடி பல்வேறு நோய்களால் அவதிப்படுகிறீர்களா ?
*வயிறு, மார்பு குறைக்க வேண்டுமா ?
*உடல் எடை குறைகிறதேயில்லை என்கிற கவலையா ?
*ஊளைச்சதையா ?
*வயிற்று கோளாறா ?

விலை 3500
5500, 9000

**100% பக்கவிளைவற்ற ஆயுள்வேத ஔடதம் (பால்மா, குளிசை, கிறீம்) 2 வாரங்களில் அற்புதமான மாற்றத்தை உணர்வீர்கள்.**

பதிவு இல : 16168
077 2106 155
221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## தலைமுடி நீளமாக வளரவேண்டுமா ?

*தலைமுடி வளரவேண்டுமா?
*பேன் பொடுகு தொல்லையா?
*முடி கொட்டுகிறதா ?
*இள நரையா ?
*தலையிடியா ?
*முடி அடர்த்தி இல்லையா?

**பொன்னாங்காணி, கரிசலாங்காணி, இலாமிச்சைவேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்து காய்ச்சிய எண்ணெய் 100 % ஆயுள் வேத முறைப்படி காய்ச்சிய இவ்வெண்ணெய்யை பாவித்து பலனடைய.**

பதிவு இல : 16168
077 263 9037
221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## SUPER BALL

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 664
சீட்டிழுப்பு திகதி 17.06.2017 சனிக்கிழமை

V 22 24 44 50

சுப்பர் ஜக்பொட்
ரூ. 48, 986, 436/=
வெல்லப்படவில்லை

தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம் 2891 திகதி 17.06.2017

23 37 54 63 P 32

சூப்பர் ஜக்பொட் 66, 818, 387/-

தொ.பே : 011 4824824

## உத்தியோகபூர்வ முடிவுகள்

சவுர்தன வாசனாவ
Development Fortune

சீட்டிழுப்பு வாரம் 49
சீட்டிழுப்பு திகதி 17.06.2017 சனிக்கிழமை

வெற்றி இலக்கங்கள்: 04 07 11 32
சுப்பர் இலக்கம்: 03
அதிர்ஷ்ட மாதம்: மே

அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் ரூ. 12, 690, 258/=
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 2, 889, 191/=
அடுத்த ஜக்பொட் ரூ. 1, 000, 000/=

22.06.2017 ம் திகதி வியாழக் கிழமை நீல நிற டிக்கட்டுடன் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk


## இதய அஞ்சலி



கீரிமலை
சிவநெறிக்கழகத்தின்
ஸ்தாபகரும், தெல்லிப்பழை
ஸ்ரீ துர்க்காதேவி
தேவஸ்தானத்தின்
நிர்வாகசபையின்
சிரேஷ்ட உறுப்பினரும்,
இளைப்பாறிய முதன்மை
ஆசிரியரும், தெல்லிப்பழை
மகாஜனக்கல்லூரியின்
முன்னாள் ஆசிரியரும் சிவத்தமிழ் செல்வியின்
அறக்கொடை விழாவில் சிவத்தமிழ் விருது
பெற்றவருமான

### சரவணமுத்து விநாயகரத்தினம்

நேற்று 17.06.2017 இறையடியில் அமைதி பெற்று விட்டார்.

தன் வாழ்நாள் முழுவதும் சமயத்துக்காவும் கல்வி வளர்ச்சிக்காகவும் அயராது உழைத்த உத்தமரை நினைத்து பிரார்த்திப் போம்.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் வளர்ச்சியில் அல்லும் பகலும் அயராது பணி செய்த திருத்தொண்டரின் பிரிவால் மிகுந்த கவலையடைகிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தி பெற துர்க்காதேவியை [illegible]த்திக்கின்றோம்.

[illegible]கா தேவி தேவஸ்தானம்,
[illegible]ழ. நிர்வாகசபை.


## VACANCY
### HOTEL MANAGER

To manage charty beach resort in Velanai. 10 rooms and a Restaurant must have experience in hotel management.
Should be able to speak English. Should work on your own initiative.
Salary in Excess of Rs. 35,000/=
Please send your CV to tilko.tilak@gmail.com 0777696443

## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முன்னணி Hotel ஆன Tilko Jaffna City Hotel இற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.
பராமரிப்பு உதவியாளர்கள் - House Keeping Staff
சமையலறை பணியாளர் - Kitchen Staff
உணவக பணியாளர் - Restaurant Waiters
அனுபவம் மற்றும் வயதிற்கேற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

021 222 5969 / 077 981 7617

## உடனடி வேலைவாய்ப்பு

கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இடங்களிற்கான நடமாடும் வியாபாரத்திற்கு அனுபவமுள்ள

1. விற்பனை முகாமையாளர் (வயது 20-35)
2. அனுபவமுள்ள சாரதி (AD) (வயது 25-45) தேவை.

சம்பளம், பிறவிடயம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும். கிளிநொச்சியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

**சிவனருட்செல்வன் அரிசி ஆலை,
D 05, பெரிய பரந்தன்,
கரடிப்போக்கு, கிளிநொச்சி.
077 753 1731, 021 228 0009**


## மரண அறிவித்தல்

### அருணாசலம் ஸ்ரீதயாளன்

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் ஸ்ரீதயாளன் (17.06.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் மற்றும் தேனியம்மா தம்பதியரின் அன்பு மகனும் மதிவதனாவின் (ஆசிரியை யா/புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்) அன்புக்கணவரும் நடராசா - புவனேஸ்வரி தம்பதியரின் மருமகனும் கௌசல்யா (மாணவி), கௌதமி (மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**6 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.**

தகவல்:
குடும்பத்தினர்.
077 531 2271

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சதாசிவம்



மலர்வு 10.12.1937 இறப்பு 16.06.2017

பூநகரியைப் பிறப்பிடமாகவும் அராலி கிழக்கு, ஐயனார்கோயில டியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பிசதாசிவம் 16.06.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வள்ளி தம்பதியரின் அன்பு மகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வெற்றிவேலாயுதம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் யோகராசா, கோபால், சிவராசா, தயாபரன், நாகநாதன், கனிநாதன், முத்துலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2017) ஞாயிற்றுக் கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அராலி கிழக்கு, மினாங்குப்பிட்டி இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஐயனார் கோயிலடி,
அராலி கிழக்கு.**

தகவல்:
குடும்பத்தினர்.

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 18
கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு சங்கத்தின் மண்டபத்தில் நடைபெறும் என்று சங்கத்தின் செயலாளர் ந.கனகலிங்கம் தெரிவித்துள்ளார். (ஐ)


### விற்பனைக்கு

நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் குழுநீர் வியாபாரம் விற்பனைக்குண்டு.
மாதாந்த வருமானம் 200000.00
076 425 8791

### வீடு வாடகைக்கு

ஆறுகால்மடம், பழம் வீதியில்
வீடு வாடகைக்கு உண்டு
தொடர்பு: 076 980 3935
(CS/4975) (10)

### விற்பனைக்கு

புதிய 4S, 5S கைத்தொலைபேசி சம்சங் (samsung), பாவித்த மடிக்கணினி, மொனிற்றர் விற்பனைக்குண்டு.
தொடர்பு - 071 418 2469

### பணிப்பெண் தேவை

சாவகச்சேரிப் பகுதியில் உள்ள வீடொன்றுக்கு பணிப்பெண் தேவை.
தொடர்பு:
077 424 9947
(CS/4976) (10)

### பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் 5 பேர் கொண்ட குடும்பத்திற்கு தங்கி நின்று வேலை செய்வதற்கு பெண் ஒருவர் தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.
076 851 4296

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நல்லூர் செல்லர் வீதியில் நிலப்பரப்பு 02 வெற்று ஆதனம் விற்பனைக்கு உண்டு.
072 437 0172

### வீடு, காணி விற்பனைக்குண்டு

திருநெல்வேலி சந்திக்கு அருகில் பலாலி வீதிக்கு அண்மையிலும் 2 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. கோண்டாவிலில் வெறும் காணியும் விற்பனைக்குண்டு. 076 994 9229

### வீடு வாடகைக்கு உண்டு

யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில் இரண்டாம், மூன்றாம் மாடிகளைக்கொண்ட சகல வசதிகளுடன் கூடிய (தனியார் / நிறுவனங்கள்) வீடு வாடகைக்கு கொடுக்கப் படும். தொடர்புகளுக்கு,
077 393 8891 / 071 154 4479

### பயிற்சி வகுப்பு

வேலை இல்லாமல் திணறுகின்றீர்களா ?
Interview என்றால் தடுமாற்றமா ?
தற்போதைய வேலை திருப்தி இல்லையா ?
Job Interview traning Professional CV, Cover letter இனை எப்படி தபால் செய்வது உங்களுக்கு பொருத்தமான வேலையை எப்படி தேடிக் கொள்வது Applications fill செய்யும் முறை பொதுவாக கேட்கப்படும் கேள்விகளும் பதில் அளிக்கும் முறைகளும், Interview முறைமைகள் வேலைத்தளத்தில் நடந்து கொள்ளும் முறைமைகள், சம்பள உயர்வு/ Promotion இனை எப்படி அணுகுவது, வேலைத்தளத்தில் எப்படி தொலை பேசிகளை பாவித்தல் வேண்டும் ஆகியன தொடர்பாக 02 நாள்கள் பயிற்சி வகுப்புக்கள் Leaders International Campus கொழும்பில் நடைபெறும். 21 ஆம் திகதி முன்பதிவு செய்பவர்களுக்கு 4800/= மட்டுமே.
தொடர்பு: 077 884 9049

### வீடு வாடகைக்கு தேவை

ஓய்வுபெற்ற அரச ஊழியருக்கு 3 அங்கத்தவர் கொண்ட கௌரவ குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு தேவை. யாழ்ப்பாணம், நல்லூர், கொக்குவில், திருநெல்வேலி ஆகிய இடங்களில் உடனடியாக தேவை. (தரகர் தேவையில்லை)
077 517 8727, 077 242 3400, 077 887 1217

### காணி விற்பனை

புன்னாலைக்கட்டுவன் தெற்கில் (4 அல்லது 8) பரப்புக் காணி விற்பனைக்குண்டு. 34 பரப்புக் காணியில் பகுதியாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.
(CS/4997) (12.17)
076 857 3798, 077 871 5430


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புளொட்...

நேற்றிரவு அனுப்பி வைத்தார். எனினும் தனது கடிதத்துக்குச் சம்பந்தனின் பதில் கிடைத்த பின்னரே இந்த விடயத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மாகாண அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கையில் குற்றமற்றவர்கள் என்று விடுவிக்கப்பட்ட இருவருக்கு எதிராகவும் தான் மீண்டும் ஆரம்பிக்க எண்ணியுள்ள விசாரணையை அவர்கள் இருவரும் குழப்ப மாட்டார்கள் என்று கூட்டமைப்பின் தலைவர் உறுதிமொழி தந்து, அதனடிப்படையில் முன்னாள் இயக்கங்களின் தலைவர்களும் அதே உறுதிமொழியை வழிமொழிந்தால் குறித்த அமைச்சர்கள் இருவரும் விசாரணை முடியும் வரை விடுமுறையில் செல்லவேண்டும் என்ற தனது நிபந்தனையைக் கைவிட்டு சமரசம் ஒன்றுக்கு வருவதற்குத் தயார் என்று விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சம்பந்தரின் கடிதம்

முன்னதாக இந்த விடயம் குறித்து கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் முதலமைச்சருக்கு ஒரு கடிதம் அனுப்பி வைத்திருந்தார். அதில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:

அன்புக்குரிய விக்னேஸ்,

தங்கள் உரையின் பிரதியுடன் 14.06.2017 அன்று அனுப்பியிருந்த உங்கள் கடிதத்துக்கு நன்றி.

நான் பின்வருவனவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தங்களால் அமைக்கப்பட்ட விசாரணைக்குழு நான்கு அமைச்சர்கள் தொடர்பில் தமது விசாரணைகளை நடத்தியிருந்தது. விசாரணையைப் பூர்த்தி செய்து அவர்களது அறிக்கையை உங்களுக்குச் சமர்ப்பித்திருந்தார்கள். இதில் இருவர் குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ள அதேவேளை, ஏனைய இருவரும் குற்றவாளிகளாகக் காணப்படவில்லை.

விசாரணைக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் நீங்கள் செயற்படப்போவதாக மாகாண சபையில் தெரிவித்திருந்தீர்கள். குற்றவாளிகளாகக் காணப்பட்ட இரண்டு அமைச்சர்களையும் பதவியில் இருந்து விலகுமாறு நீங்கள் கோரிக்கை விடுத்திருந்தீர்கள். அந்தத் தீர்மானத்துக்கு எவரும் முறைப்பாடு தெரிவிக்கவில்லை.

விசாரணைக் குழுவினால் குற்றவாளிகளாகக் காணப்படாத இரண்டு அமைச்சர்களுக்கும் எதிராக நீங்கள் எடுத்த நடவடிக்கை தொடர்பிலேயே முறைப்பாடு முன்வைக்கப்பட்டது. இந்த நடவடிக்கையானது இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு முரணானதாகவும் பொருத்தமற்றதாகவுமே பார்க்கப்படுகின்றது.

13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நான் தங்களுக்கு அழைப்பை ஏற்படுத்திப் பேசியபோது இத்தகைய நடவடிக்கை குற்றவாளிகளாகக் காணப்படாத இரண்டு அமைச்சர்களினாலும் ஏனைய மாகாணசபை உறுப்பினர்களாலும் எதிர்க்கப்படக்கூடும் எனவும் இது குறித்து அவதானமாகச் செயற்படுமாறும் கூறியிருந்தேன். அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சிகளின் தலைவர்களோடு இந்த விடயம் தொடர்பில் நீங்கள் பேசியிருந்தபோதும், நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை.சேனாதிராசாவோடு இந்த விடயம் தொடர்பில் நீங்கள் கலந்துரையாடாமை தொடர்பிலும் எனது கரிசனையை வெளிப்படுத்தியிருந்தேன். அதன் பின்னர், அன்றே நீங்கள் அவரோடு உரையாடிய போது குற்றவாளிகளாகக் காணப்படாத அமைச்சர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்தியிருந்தார்.

14ஆம் திகதி புதன்கிழமை, குற்றவாளிகளாகக் காணப்படாத இரு அமைச்சர்களுக்கு எதிராகவும் தண்டனை நடவடிக்கையை அறிவித்திருந்தீர்கள். அதற்குப் பிற்பாடு இடம்பெற்றவை எல்லாமே நீங்கள் மேற்கொண்ட மேற்குறித்த நடவடிக்கையின் விளைவேயாகும்.

இந்தச் சம்பவங்களை முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமெனில், முதலில் குற்றவாளிகளாகக் காணப்படாத இரு அமைச்சர்கள் தொடர்பிலும் தேவையான திருத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பது எனது கருத்தாகும். அவசியமற்ற நடவடிக்கைகள் ஒற்றுமையின்மையை ஊக்குவிப்பதாகவும், வடமாகாண சபையின் நடவடிக்கைகளைப் பாதிப்பதாகவும் அமைந்துவிடக் கூடாது.

எனவே, உங்களது விசாரணைக் குழுவினால் குற்றவாளிகளாகக் காணப்படாத இரு அமைச்சர்கள் தொடர்பில் தேவையான உடனடித் திருத்த நடவடிக்கைகளை எடுக்குமாறு நான் உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். இது, நீங்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ளும் விசாரணைகளுக்கு எவ்வித தடையும் ஏற்படுத்தாது என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன் என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமரச முயற்சி

இந்தக் கடிதம் முதலமைச்சருக்குக் கிடைத்ததைத் தொடர்ந்தே புளொட், ஈபிஆர்எல்எவ், ரெலோ அகியவற்றின் தலைவர்களான த. சித்தார்த்தன், க.பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் விக்னேஸ்வரனைச் சந்தித்துப் பேசினர்.

அமைச்சர்களான ப.சத்தியலிங்கம் மற்றும் பா.டெனீஸ்வரன் ஆகியோர் மீது நடத்தப்படவுள்ள மேலதிக விசாரணைகளுக்கு அவர்களால் தடை ஏற்படாது என்று சம்பந்தரே உறுதியளித்திருப்பதன் அடிப்படையில் தாங்களும் அதற்குப் பொறுப்பு நிற்பதாக மூன்று கட்சிகளின் தலைவர்களும் தெரிவித்தனர். அதனை ஏற்றுக்கொண்ட முதலமைச்சர், அவ்வாறு சம்பந்தர் உறுதிமொழி வழங்கி அதனை மற்றைய தலைவர்களும் பொறுப்பேற்பார்களானால் அமைச்சர்கள் இருவரும் விசாரணைக் காலத்தில் விடுமுறையில் இருக்கவேண்டும் என்கிற தனது நிபந்தனையைக் கைவிடுவதற்கு இணங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனால் சம்பந்தனின் பதில் கடிதத்தின் பின்பே இது தொடர்பில் இறுதி முடிவு ஒன்று எட்டப்படும் என்றும் முதலமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

தற்போதைய நிலையில் முதலமைச்சருக்கு எதிராக தமிழ் அரசுக் கட்சியின் 15 உறுப்பினர்களும் ஆதரவாக மற்றைய மூன்று கட்சிகளையும் சேர்ந்த 15 உறுப்பினர்களும் ஆளுநரிடம் தமது சத்தியக் கடதாசிகளை வழங்கியிருந்தனர். எனினும் இப்போது முதலமைச்சருக்கு ஆதரவு தெரிவித்த கட்சிகள் தமிழ் அரசுக் கட்சியுடன் அவரைச் சமரசம் செய்வதற்கான முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளன. (உ-5-101)

## கொழும்பு...

அவசரமாகக் கொழும்பு பயணமானார் எனத் தெரியவருகிறது.

வடக்கு மாகாண சபையில் எழுந்துள்ள சர்ச்சை தொடர்பில் வார இறுதி நாள்களில் ஆளுநர் கொழும்பிலுள்ள அரச தரப்பு அதிகாரிகளுடன் விரிவாக ஆராய்ந்த பின்னர் எதிர்வரும் திங்கட்கிழமை உத்தியோகபூர்வ நடவடிக்கை எடுப்பாரென்றும் ஆளுநர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

முதலமைச்சர் சி.வி விக்கினேஸ்வரன் பதவி விலக வேண்டுமென 22 பேர் கையொப்பமிட்டு நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்றை ஆளுநரிடம் கையளித்துள்ளனர். இதனையடுத்து ஆளுநர், வடக்கு மாகாணசபையில் பெரும்பான்மையை நிரூபிக்குமாறு முதலமைச்சருக்குத் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் சிவாஜிலிங்கம் தலைமையிலான 15 பேர் கொண்ட மற்றுமொரு குழுவினர் முதலமைச்சருக்கு ஆதரவாக நம்பிக்கைத் தீர்மானமொன்றைக் கையளித்துள்ளனர். அவை தொடர்பில் சட்ட ஆலோசனை பெறுவதற்காக ஆளுநர் கொழும்பு விரைந்துள்ளார் எனக் கூறப்பட்டது.

இதேவேளை, ஆளுநர் வழமையாகவே வார இறுதி நாள்களில் கொழும்புக்குப் பயணம் மேற்கொள்பவர் என்றும், அதன்படியே கொழும்பு பயணமானார் என்றும் ஆளுநரின் செயலாளர் தெரிவித்தார். (த)

## தமிழரசு...

ரிடம் கொடுத்த மனுவில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தவிர்ந்த ஏனையோர் கையெழுத்திடவில்லை.

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் நீதிக்கான அணியின் ஊடகப் பேச்சாளரும், மாகாண சபை உறுப்பினருமான கே.சயந்தன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மார்ட்டின் வீதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

குற்றவாளி இப்போதும் முதலமைச்சருடன்

'ஐங்கரநேசன் பதவி விலகிவிட்டார். ஆனால் குற்றம் சுமத்தப்பட்ட குருகுலராசா இன்னமும் பதவி விலகவில்லை. அவரை நீங்கள் உங்களுடன் இப்போது காப்பாற்றி வைத்திருக்கின்றீர்களே ?' என்று ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு,

'இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற நிலையில் பதவி விலகல் தொடர்பில் சிக்கல் நிலை இருக்கின்றது. நீதியரசர் விக்னேஸ்வரன் மாகாண முதலமைச்சராகப் பதவி வகிக்கின்றாரா இல்லையா என்ற ஒரு தேக்க நிலை தோன்றியிருக்கின்றது. இந்த நிலையில் அவர் பதவிக்காக ஆசைப்பட்டு அந்தப் பதவி விலகலைச் சமர்ப்பிக்காமல் இருக்கவில்லை. ஒருமுறைமையின் ஊடு அவர் அதனைச் சமர்ப்பிக்க இருக்கின்றார். இந்தக் குற்றச்சாட்டு வெளிவந்த உடனே ஒரு கணம் கூடத் தயங்காது கட்சித் தலைமைக்குத் தனது நிலைப்பாட்டை எழுத்துமூலம் அறிவித்தவர். அதாவது பதவி விலகத் தயாராக இருப்பதாகச் சொல்லியிருந்தவர். அந்த நிலையில் அவர் பதவி விலகுவதற்குத் தயங்குவார் என்று கூறவில்லை.

ஆனால் ஊழல் குற்றம் புரிந்ததாக நிரூபிக்கப்பட்டிருக்கின்ற அமைச்சர் பொ.ஐங்கரநேசன், இன்னமும் முதலமைச்சர் கூடத்தான் இருக்கின்றார் என்பதையும் கூறத் தயங்கமாட்டேன்' என்று பதில் வழங்கினார்.

**மூன்று தெரிவுகள்**

மேலும், நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் மூன்று தெரிவுகள் உள்ளதாகக் குறிப்பிட்டார். மாகாண சபையிலேயே நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்து முதலமைச்சரை தோற்கடிப்பது. அது தான் ஏனைய எல்லா அமைச்சர்களுக்கும் பதவியிலிருந்து அகற்றுவதற்கான சட்டத்தால் விதித்துரைக்கப்பட்ட பொறிமுறை. நாங்கள் அந்த முறையைக் கையில் எடுக்கவில்லை. நாங்கள் கையில் எடுத்துள்ள முறை, மாகாண முதலமைச்சர் நியமிக்கப்படுகையில் எப்படியான சம்பிரதாயங்கள் பின்பற்றப்படுமோ அதனுடைய பின்நோக்கிய முறைமை. மாகாண முதலமைச்சராக, உறுப்பினர்கள் பெயர் குறித்து ஒருவரை ஆளுநரிடம் நியமிக்குமாறு கட்சிச் செயலாளர் ஊடாகக் கோர முடியும். மாகாண முதலமைச்சரிடம் நம்பிக்கை இழந்துவிட்டோம் என்பதைக் குறிப்பிட்ட எண்ணிக்கையான உறுப்பினர்கள் தெரிவிக்க முடியும். அதற்கு அப்பால் ஆளுநரின் அதிகாரம் பிரயோகமாகும். ஆளுநர் புதிய முதலமைச்சரைப் பதவியேற்குமாறு கோரலாம். இருக்கின்ற முதலமைச்சரைத் தனது பெரும்பான்மையை நிரூபித்துக் காட்டுமாறு கோருவதற்குப் பதிலாகக் கூடப் புதிய முதலமைச்சரை, நீங்கள் சபைக்குச் சென்று பெரும்பான்மையை நிரூபியுங்கள் என்று கேட்கலாம். இப்பொழுதும்கூடத் தொடர்ந்தும் நீதியரசர் விக்னேஸ்வரன் முதலமைச்சர் பதவியிலிருந்து அகற்றப்பட்டார் என்ற எந்தப் பிரகடனமும் செய்யப்படாமல் புதிய முதலமைச்சர் நியமிக்கப்பட்டு அந்த நியமனத்தின் பின்னர் சபைக்குச் சென்று இரண்டு பேருமே பெரும்பான்மையை நிரூபிக்கின்ற சந்தர்ப்பம் ஏற்படும் வகையில் புதிய முதலமைச்சரைப் பெரும்பான்மையை நிரூபிக்குமாறு கோரலாம் என்றும் தெரிவித்தார்.

'உங்களது புதிய முதலமைச்சர் யார்' என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, யார் புதிய முதலமைச்சர் என்பது தொடர்பில் நாங்கள் இன்னமும் தீர்மானம் எடுக்கவில்லை. புதிய முதலமைச்சர்கள் என்ற சிபாரிசுகள் வந்திருக்கின்றன. அதில் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் பெரும்பான்மை உறுப்பினர்களால் சிபாரிசு செய்யப்பட்டிருக்கின்றார். அமைச்சர் சத்தியலிங்கத்தின் பெயரும் முன்மொழியப்பட்டுள்ளது, என்று பதில் வழங்கினார்.

**பெரும்பான்மையை நிரூபிப்போம்**

'சபையில் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டிய நிலை வந்தால் அதனை உங்களால் நிரூபிக்க முடியுமா ?' என்று கேட்ட போது, நிச்சயமாக எங்களால் பெரும்பான்மையை நிரூபிக்க முடியும் என்று நாங்கள் திடமாக நம்புகின்றோம், என்று குறிப்பிட்டார்.

'மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தானே வாக்களித்தனர். இப்போது தமிழ் அரசுக் கட்சி மேற்கொள்ளும் நடவடிக்கை எப்படி மக்களின் விருப்பமாக அமையும்' என்று கேட்டதற்கு, மக்கள் ஒருபோதும் ஊழலைக் காப்பாற்ற ஆணை வழங்கவில்லைஎன்றார்.

'முதல்வருக்கு ஆதரவான போராட்டங்களால் உங்கள் செல்வாக்கு குறைந்திருப்பதாக உணர்கின்றீர்களா ?' என்ற கேள்விக்கு, நாங்கள் மக்களுடைய செல்வாக்கை அளவிடுகின்ற அளவுகோலாக தேர்தல் முடிவுகளை மாத்திரம்தான் கொள்கின்றோம், என்று கூறினார்.

**மீள்விசாரணைக்குத் தயார்**

'அமைச்சர்கள் மீதான ஊழல் வெளிப்பட்டுவிடுமோ என்ற பயத்தினால்தான், மற்றைய இரு அமைச்சர்களும் முதலமைச்சருக்கு, விசாரணையில் தலையிடமாட்டோம் என்ற கடிதத்தைக் கொடுக்க தயங்குகின்றார்களா ?' என்று கேட்டதற்கு, நீதி விசாரணை பக்கச் சார்பானதாக இருக்க முடியாது. நீதி எல்லோருக்கும் சமமாகப் பிரயோகமாகவேண்டும். ஏற்கனவே விசாரிக்கப்பட்ட இரண்டு அமைச்சர்களிடமும் அவ்வாறான கோரிக்கை விடப்படவில்லைஎன்றார்.

'இரு அமைச்சர்களும் மீள் விசாரணைக்குத் தயாரா ?' என்ற வினாவுக்கு, அவர்கள் மீள் விசாரணைக்குத் தயார். ஆனால் எங்களைப் பொறுத்தவரை அது அவர்களின் சிறப்புரிமைகளை மீறாத சட்டபூர்வமான விசாரணைகளாக இருக்கவேண்டும். ஏனென்றால், 25 லட்சம் ரூபா செலவழித்து நடத்தப்பட்ட இந்த விசாரணை அதனுடைய தீர்ப்பு, விசாரணைக் குழுவின் சட்டபூர்வ தன்மையை கேள்விக்கு உட்படுத்தப்படுவதன் மூலம் நீர்த்துப்போகச் செய்யக் கூடியதாக இப்போதும் இருக்கின்றது. என்று குறிப்பிட்டார்.

**பதவியில் நீடிக்க விடத் தயாரில்லை**

'முதலமைச்சர் விக்னேஸ்வரன் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினரா ?' என்ற கேள்விக்கு, இதற்கு இன்னொரு சந்தர்ப்பத்தில் எமது கட்சியின் பொதுச் செயலர் அல்லது நிர்வாகச் செயலர் பதிலளிப்பார், என்றார்.

'கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்கி அவரைப் பதவி நீக்கலாம்தானே ?' என்று கேட்டதற்கு, இன்னமும் எஞ்சியிருப்பது 15 மாதங்கள் தான். இதனைச் சட்டச் சிக்கலுக்கு உட்பட்ட விடயமாக மாற்றி இன்னும் ஒன்றரை வருடத்துக்கு அவர் பதவியில் நீடிப்பதை அனுமதிக்கத் தயாரில்லை. அதனால்தான் நாங்கள் அந்தத் தெரிவுக்குள் போகவில்லை' என்று பதில் வழங்கினார். (த-5-26-101)

## சங்குப்பிட்டி...

ளது.

நேற்றுமுன்தினம் இரவு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய தேடுதல் நடத்தப்பட்டது. அதில் 248 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது. நேற்றுக் காலையும் தேடுதல் நடத்தப்பட்டது. அதில் 12 கிலோ கஞ்சா மீட்கப்பட்டது.

இது தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-6)

## ஐவரடங்கிய...

சைக்கிள்களையும் கைப்பற்றியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டதாகத் தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி கல்லாறு பகுதியில் கடந்த வாரம் ஆயுத முனையில் கடையிலும் வீட்டிலும் இருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தி பணம், நகை என்பன கொள்ளையிடப்பட்டன. கடை உரிமையாளர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். இதே வேளை சம்பவம் தொடர்பாகத் தருமபுரம் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

கிளிநொச்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் சிறப்புப் பிரிவினர் தருமபுரம் பொறுப்பதிகாரி சதுரங்க தருமபுரம் பொலிஸார் இராமநாதபுரம் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி சுபேசன் ஆகியோர் அடங்கிய குழுவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர். கொள்ளைக் குற்றச்சாட்டில் ஏற்கனவே ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டபோதே மற்றைய நான்கு பேரும் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து ஒரு தொகுதி நகைகள், குறிப்பிட்டதொகைப் பணம், 3 வாள்கள் , 3 மோட்டார் சைக்கிள்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதிலிருந்து கிளிநொச்சியில் இடம்பெற்ற மேலும் பல திருட்டுக் கொள்ளைகளில் அவர்கள் தொடர்புபட்டுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4-6-35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 18

**இளநிலைப் பிரிவு கூடைப்பந்தாட்டம்**

யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் இளநிலைப் பரிவினருக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. இன்றும் சில ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இன்று காலை 7.30 மணிக்கு இடம்பெறும் 13 வயதுப் பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டு பாடசாலை அணி மோதவுள்ளது. காலை 8.30 மணிக்கு இடம்பெறும் 15வயது பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணியை எதிர்த்து ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதவுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் 20 வயது பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது.

**கால்பந்தாட்டத் தொடர்**

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் நா.நவரத்தினராசா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**நண்பர்களின் கால்பந்தாட்டம்**

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளன.

**அலையோசையின் கால்பந்தாட்டம்**

உடுப்புக்குளம் அலையோசை விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இடம்பெறும் இறுதியாட்டத்தில் முல்லைத்தீவு சென். யூட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புதுக்குடியிருப்பு ஆனந்தா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இறுதி நாள் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா. வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-23)



# சரஸ்வதி 'ஏ' சம்பியனானது



யாழ்ப்பாணம் யூன் 18

அராலி சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 98ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய வடமாகாண ரீதியிலான வலைப்பந்தாட்டத் தொடரில் அராலி சரஸ்வதி 'ஏ' அணி கிண்ணம் வென்றது.

அரியாலை சரஸ்வதியின் வலைப்பந்தாட்டத் திடலில் நேற்று மாலை நடைபெற்ற இறுதியாட்டத்தில் வின்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியும், அராலி சரஸ்வதி விளையாட்டுக் கழக 'ஏ' அணியும் மோதின.

முதல் பாதியின் முடிவில் அராலி சரஸ்வதி 'ஏ' அணி 18:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை பெற்றது. இரண்டாம் பாதியில் வின் ஸ்ரார் அணி சிறிது போராட்டத்தை வெளிப்படுத்தியது. எனினும் தனது ஆதிக்கத்தைத் தக்கவைத்த சரஸ்வதி 'ஏ' அணி முடிவில் 30:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

(ம-23)

# இளைஞர் - கரணவாய் மத்தி. முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் மற்றும் கரணவாய் மத்திய விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் இந்த ஆட்டங்கள் நடைபெற்றன. நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் தொண்டமனாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகமும் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தை முழுமையான கட்டுப்பாட்டில் வைத்திருந்த திக்கம் இளைஞர் அணி 7:0 என்ற கோல் கணக்கில் பெரு வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் கரணவாய் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வரணி யுத் விளையாடுக் கழகம் மோதியது. முதல் பாதியின் முடிவில் 3:0 என்று ஆதிக்கம் செலுத்தியது மத்தி. இரண்டாம் பாதியில் கோல்கள் பதிவாகவில்லை. கரணவாய் மத்திய விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது. (ம-108)

# மானிப்பாய் ஏஞ்சல் அசத்தலான வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 16 வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கூடைப் பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் காலை 7.30 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணியை எதிர்த்து சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணி மோதியது.

முதல் பாதியின் முடிவில் 39:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி. அந்த அணி தனது ஏக ஆதிக்கத்தை தொடர்ந்தும் தக்கவைத்து முடிவில் 64:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

# டிறிபேக் கல்லூரியை வென்றது பற்றிக்ஸ்

யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 20 வயதுப் பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கூடைப் பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது. சென். பற்றிக்ஸ்42:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)



மினி உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் இன்று மோதவுள்ளன. நேற்று மாலை நடைபெற்ற (இலங்கை நேரப்படி) பன்னாட்டு கிரிக்கெட் சபையின் கிண்ண அறிமுக நிகழ்வில் இரு அணிகளின் தலைவர்களும் கலந்துகொண்டனர். (ம)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இரண்டாமிடம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் தோல்வியடைந்ததை அடுத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு இரண்டாவது இடம் கிடைத்தது.

கொழும்பு பல்கலைக்கழக மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தை எதிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் மோதியது.



நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகம் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஜோகேஸ்வரன் 48 ஓட்டங்களையும், கபில்ராஜ் 35 ஓட்டங்களையும், துவாரக சீலன் 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கருணாரட்ன 4 இலக்குகளையும், குணதிலக, பெர்னான்டோ இருவரும் தலா 2 இலக்குகளையும், டி சில்வா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகம் 44.5 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு இரண்டாவது இடம் கிடைத்தது. (ம-23-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மினி உலகக்கிண்ணத்தை கைப்பற்றுமா பாகிஸ்தான் தக்கவைக்குமா இந்தியா?



## இந்தியாவுக்கு வாய்ப்புக்கள் அதிகமுள்ளன

*லாரா சொல்கிறார்*

மினி உலகக்கிண்ணத் தொடரில் இன்று நடைபெறும் இறுதியாட்டத்தில் இந்திய அணி கிண்ணம் வெல்லும் என்று மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் ஜாம்பவான் லாரா தெரிவித்தார்.

பாகிஸ்தானின் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்று இறுதியாட்டம் தொடர்பில் அண்மையில் கலந்துரையாடலை நடத்தியது. இதில் விவ் ரிச்சட்ஸ், லாரா, இயன் சப்பல் ஆகியோர் கலந்துகொண்டனர். இதில் வைத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே லாரா இவ்வ[illegible] குறிப்பிட்டார்.

"இந்தியாவுக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் ஏனெனில் அந்த அணியிடம் ஒரு நிலையமைதி காணப்படுகிறது. பாகிஸ்தான் அணியும் ஒரு வாரத்திற்கு முன்பு இருந்தது போல் தங்களை உணரமாட்டார்கள். இந்திய அணி ஏற்கனவே பாகிஸ்தானை வீழ்த்தியிருக்கிறது, திட்டங்களை நல்லவிதத்தில் செயற்படுத்துகிறார்கள், எனவே அடுத்த 48 மணி நேரங்களில் சர்பராஸ் மற்றும் மிக்கி ஆர்தர் நிறைய வேலைகளைச் செய்ய வேண்டியுள்ளது. அதாவது வீரர்கள் தாங்கள் எந்த அளவுக்கு சிறப்பாக இருக்கிறோம் என்பதை புரிந்து கொள்ளச் செய்வது அவசியம். இந்திய அணியைப்போல் ஓட்டக்குவிப்பில்பாகிஸ்தானினால் ஈடுபட முடியாது. எனவே பந்துவீச்சில் இந்தியாவை பாகிஸ்தான் கட்டுப்படுத்த வேண்டும்" என லாரா மேலும் தெரிவித்தார்.

"பாகிஸ்தானுக்கு வெற்றி பெற வாய்ப்பு ஏதாவது இருக்கிறது என்றால் நாணயச்சுழற்சியில் வென்று முதலில் இந்திய அணியை துடுப்பெடுத்தாட அழைக்க வேண்டும். இது வித்தியாசமான ஒரு ஆர்வத்தை ஏற்படுத்தும். இரு நாடுகள் அரசியல் சிக்கல்கள் காரணமாக இந்த ஆட்டம் சுவாரசியத்தை அதிகப்படுத்தியுள்ளது. அதனால் இரு அணிகளும் நிச்சயம்பெரிய அளவில் விளையாடும்" என ரிச்சட்ஸ் தெரிவித்தார். "இந்தியா மிகவும் வலுவான துடுப்பாட்ட வரிசையைக் கொண்ட அணி. எனவே துடுப்பாட்டத்துக்கு துடுப்பாட்டத்தால் பதிலடி கொடுக்காமல் பந்துவீச்சை பாகிஸ்தான் பயன்படுத்த வேண்டும்" என சப்பல் தெரிவித்தார். (ம)

மினி உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டம் இன்று நடைபெறவுள்ளது. இந்தியா - பாகிஸ்தான் அணிகள் இந்த ஆட்டத்தில் மோதவுள்ளன. எந்த அணி கிண்ணம் வெல்லும் என்பதில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இணையத் தளங்கள், சமூக வலைத்தளங்கள் என அத்தனையிலும் எதிர்பார்ப்புகள் பலமடங்கு எகிறியுள்ளன.

**இந்திய அணி**

இந்திய அணியைப் பொறுத்தவரை அந்த அணி லீக் சுற்றில் பாகிஸ்தான், தென்னாபிரிக்க அணிகளை வீழ்த்தியும் அரையிறுதியில் பங்களாதேஷை வீழ்த்தியும் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது. அந்த அணியில் துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என அத்தனையும் தளம்பல் இல்லாமல் சீராகப் பேணப்படுகிறது.

துடுப்பாட்டத்தைப் பொறுத்தவரை தவான், ரோகித் இணை மிகச் சிறந்த ஆரம்பம் வழங்குகிறது. இங்கிலாந்து ஆடுகளங்களில் அடித்து நொறுக்கும் தவான் இன்றும் சாதிப்பார் என்பது பொதுவான எதிர்பார்ப்பு. கடந்த ஆட்டத்தில் சதம் விளாசினார் ரோகித் சர்மா. கோக்லியும் சிறந்த திறனில் உள்ளார். மத்திய வரிசையில் யுவராஜ், டோனி, கேதர் யாதவ் ஆகியோர் உள்ளனர். இறுதிக்கட்டத்தில் அடித்தாட பாண்டியா இருக்கிறார். அஸ்வின், ஜடேயா அணிக்கு கூடுதல் பலம்.

பந்துவீச்சைப் பொறுத்தவரை புயல்போல் உள்ளார் பும்ரா. யாதவ், புவனேஸ்வர் குமாரும் எழுச்சி காட்டுகிறார்கள். அஸ்வின், ஜடேயா கிடைக்கும் சில வாய்ப்புக்களை கச்சிதமாகப் பயன்படுத்துகிறார்கள். களத்தடுப்பை இந்திய வீரர்களுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டிய தேவை இல்லை. மொத்தத்தில் நடப்புச் சம்பியன் என்ற அந்தஸ்துடன் களமிறங்கிய இந்திய அணி அதைத் தக்கவைத்துக் கொள்ள சகல வழிகளிலும் பலம் பெற்றுள்ளது என்பது உண்மை.

**பாகிஸ்தான் அணி**

பாகிஸ்தான் அணியின் தலைவரான சர்பிராஸ் அகமட் அந்த அணியின் தலைவிதி என்று சொல்லிக் கொள்ளலாம். லீக் சுற்றுடன் பாகிஸ்தான் அணி வெளியேறியிருக்க வேண்டியது. இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் நம்பமுடியாத இன்னிங்ஸை வெளிப்படுத்தி அணியை அரையிறுதிக்கு அழைத்துச் சென்றவர் அகமட்டே. சிறந்த துடுப்பாட்டம், நுட்பமான தலைமைத்துவம் என அத்தனையிலும் வியக்க வைக்கிறார் அகமட். பாகிஸ்தானின் துடுப்பாட்டப் பலமாக அசார் அலி, சமன், அசாம், ஹபீஸ், மலிக் ஆகியோரைக் குறிப்பிடலாம். சமன் அடித்தாட வல்லவர். சிறந்த திறனிலும் உள்ளார்.

பாகிஸ்தானின் பந்துவீச்சு இந்தியாவைக் கதிகலங்க வைக்கக்கூடியது. ஆமிர், இமாட் வசிம், சடப் கான் என்று சிறந்த பந்துவீச்சுக் கூட்டணி உள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக மினி உலகக்கிண்ணத் தொடரின் லீக் ஆட்டத்தில் இந்தியா பாகிஸ்தானை வீழ்த்தியிருந்தது. இதனால் பதிலடி கொடுக்க வேண்டிய தேவையும் கட்டாயமும் பாகிஸ்தானுக்கு உள்ளது. (ம)




> களத்தடுப்பை இந்திய வீரர்களுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டிய தேவை இல்லை. மொத்தத்தில் நடப்புச் சம்பியன் என்ற அந்தஸ்துடன் களமிறங்கிய இந்திய அணி அதைத் தக்கவைத்துக்கொள்ள சகல வழிகளிலும் பலம்பெற்றுள்ளது என்பது உண்மை.

## பாகிஸ்தான் அணியில் சூதாட்டம் சொகைல் மறைமுகமாகக் கருத்து



பாகிஸ்தான் அணி இறுதிக்குத் தகுதிபெற்றமையின் பின்னணியில் சூதாட்டம் உள்ளது என்றவாறாக மறைமுகமாகக் கருத்துத் தெரிவித்துள்ளார் அந்த அணியின் முன்னாள் தலைவர் ஆமிர் சொகைல்.

மினி உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் இன்று மோதவுள்ளன. இந்தியா அணி இறுதிக்குத் தகுதி பெறும் என்ற எதிர்பார்ப்பு ஏற்கனவே இருந்தது. ஆனால் பாகிஸ்தான் அணி தகுதிபெற்றமையானது பலராலும் ஆச்சரியப்படும் ஒன்றாக உள்ளது. இந்த நிலையில் பாகிஸ்தான் இறுதிக்குத் தகுதிபெற்றமை தொடர்பில் பல்வேறு சந்தேகங்களை அந்த அணியின் முன்னாள் தலைவர் சொகைல் எழுப்பியுள்ளார்.

சர்பராஸ் அகமட் தலைமையிலான பாகிஸ்தான் அணி இறுதி ஆட்டம்வரை முன்னேறியதில் மகிழ்ச்சி அடைய வேண்டாம். இவர்கள் திறமையின் அடிப்படையில் முன்னேறவில்லை. வெளிப்புறகாரணிகளால்தான் இறுதி ஆட்டத்துக்கு நுழைந்துள்ளீர்கள். இந்தத் தொடரில் நீங்கள் வெற்றிபெற எவரோ உதவி செய்துள்ளார்கள். இதனால் நீங்கள் மகிழ்ச்சி அடைவதில் ஏதும் இல்லை. திரைக்குப் பின்னால் என்ன நடைபெறுகிறது என்பது எங்கள் அனைவருக்கும் தெரியும். நீங்கள்தான் இந்த ஆட்டங்களை வென்றீர்கள் என்று என்னால் நம்பமுடியவில்லை என சொகைல் மேலும் தெரிவித்தார். (ம)

## டோனியின் கண் கதை சொல்லும்

*கேதர் பெருமிதம்*



"நாம் எந்த இடத்தில் பந்துவீச வேண்டும் என்பதை டோனியின் கண்களை வைத்து அறிந்து கொள்ளலாம்" இவ்வாறு தெரிவித்தார் இந்திய அணியின் சகலதுறை வீரர் கேதர் யாதவ்.

இந்திய அணியின் பகுதி நேரப் பந்துவீச்சாளராக கேதர் உருவாகியுள்ளார். இவரை பகுதிநேரப் பந்துவீச்சாளராக மாற்றுவதற்கு டோனியே முக்கிய காரணம் என்று கோக்லி ஏற்கனவே குறிப்பிட்டிருந்த நிலையில் கேதர் யாதவும் டோனி தொடர்பில் பல கருத்துக்களைக் குறிப்பிட்டுள்ளார்.

"இந்திய அணியில் நான் நுழைந்ததில் இருந்து டோனியுடன் அதிக நேரம் செலவிட்டுள்ளேன். அப்போதெல்லாம் அவர் பெற்ற அனுபவத்தை கூறச் சொல்லி அதில் நான் மூழ்கிவிடுவேன். நான் அவருடன் ஒரு பிணைப்பை பகிர்ந்து கொள்கிறேன். நான் எந்த இடத்தில் பந்துவீச வேண்டுமென டோனியின் கண்களில் இருந்து அறிந்து கொள்கிறேன். அதை அப்படியே முயற்சி செய்வேன். அதற்குச் சிறந்த பலனும் கிடைக்கும்" என யாதவ் மேலும் தெரிவித்தார். மினி உலகக்கிண்ணத் தொடரில் இன்று நடைபெறும் இறுதியாட்டத்திலும் கேதர் யாதவை இந்திய அணி பகுதிநேரப் பந்துவீச்சாளராகப் பயன்படுத்தும் என்று எதிர்பார்ப்புக்கள் உள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோல்டன் ஸ்டேட் வாரியர்ஸ் கிளீவ்லான்டுக்குக் கவனிப்பு

**வேலை வாய்ப்பு**
கொழும்பு வெள்ளவத்தையில் இயங்கும் முதல்தர நிறுவனத்துக்கு Billing & Packing Staff தேவை. வயது எல்லை 18 - 28
076 826 0497

**காணி விற்பனைக்கு**
மானிப்பாய் வீதி ஆறுகால்மடத்தடியில் 1. 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு - 077 9131 128

**விற்பனைக்குண்டு**
அல்சேசியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு - 077 563 8283

**விற்பனை முகவர் தேவை**
முதல்தர பாதணி விற்பனையாளரின் யாழ்.கிளைக்கு விற்பனை முகவர் தேவை.
077 232 7058

**கட்டட இடிபாடுகள் தேவை**
ஆலய வீதி புனரமைப்பிற்கு கட்டடங்களின் இடிபாடுகள் தேவை. அராலி வடக்கு பிரதேசத்திற்கு விநியோகம் செய்ய வேண்டும். டிப்பர் (3கியூப்) ரூபா 5500/= இற்கு வாங்கப்படும்.
தொடர்பு -071 155 4401

**தேவை**
நெல்லியடியில் பிரபல்யமான புடைவை அகத்திற்கு பணியாளர் தேவை. அனுபவம் உள்ள, இல்லாதவர்களும் (ஆண்,பெண் இருபாலாரும்)
0763476733



ஐக்கிய அமெரிக்காவின் தேசிய கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்திய கூடைப்பந்தாட்டத் தொடரில் (என்.பி.ஏ.) கோல்டன் ஸ்டேட் வாரியர்ஸ் அணி சம்பியனாகியுள்ளது.

ஏழு ஆட்டங்கள் கொண்ட இறுதி ஆட்டத்தில் முதல் மூன்றிலும் கோல்டன் ஸ்டேட் வாரியர்ஸ் வென்றிருந்தபோதும், நான்காவது ஆட்டத்தில் கிளீவ்லாண்ட் கவாலியர்ஸ் வென்றிருந்தது. இந்த நிலையில், தமது அரங்கில், நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐந்தாவது ஆட்டத்தில் வெற்றிபெற்று, 4:1 என்ற ரீதியில் தொடரைக் கைப்பற்றி, கடந்தாண்டு கிளீவ்லான்ட்டிடம் தோற்றமைக்கு, கோல்டன் ஸ்டேட் வாரியர்ஸ் பழி தீர்த்துக்கொண்டது.

கடந்த வருடம் மிகவும் பெறுமதி வாய்ந்த வீரராகத் தெரிவாகிய கிளீவ்லான்ட்டின் லிப்ரோன் ஜேம்ஸ், 41 புள்ளிகளைப் பெற்றார். எட்டுப் புள்ளிகள் பெறப்படுவதற்கு உதவினார். 13 தடவைகள் எதிரணியிடமிருந்து பந்தைப் பறித்தபோதும், கோல்டன் ஸ்டேட் வெற்றிபெறுவதை அவரால் தடுத்திருக்க முடியவில்லை. (ம)

# அணியை மாற்றுதல் அவசியமல்ல

## விராட் கோக்லிக்கு ராவிட் வேண்டுகோள்

கடந்த இரு ஆட்டங்களில் களமிறக்கப்பட்ட அணியையே கோக்லி இன்றும் களமிறக்க வேண்டும். அவர் அதில் மாற்றங்களைச் செய்தல் கூடாது என்றவாறாகத் தெரிவித்துள்ளார் இந்திய அணியின் முன்னாள் தலைவர் ராகுல் ராவிட். "மினி உலகக்கிண்ணத் தொடரின் ஆரம்பத்தில் இருந்து தற்போது வரை இந்திய அணி என்னென்ன செய்ததோ அதைச் செய்தால் போதும். புதிதாக எதையும் சிந்திக்க வேண்டிய அவசியமில்லை. தேவை இல்லாமல் அணியை மாற்றுதல் கூடாது. இந்த விடயத்தில் கோக்லி சிந்தித்துச் செயற்படுதல் அவசியம். இறுதியாட்டம் என்பதால் பதற்றத்தை அதி கரிக்க வேண்டாம்" என ராவிட் மேலும் தெரிவித்தார். (ம)

# பதிலடி கொடுக்க சரியான தருணமிது பாகிஸ்தானுக்கு இம்ரான் ஆலோசனை

"மினி உலகக்கிண்ணத் தொடரின் முதலாவது ஆட்டத்தில் இந்தியாவிடம் அடைந்த தோல்விக்கு பாகிஸ்தான் அணி பதிலடி கொடுப்பதற்கு இது சரியான தருணம்" இவ்வாறு தெரிவித்தார் அந்த அணியின் முன்னாள் வீரர் இம்ரான் கான்.

பாகிஸ்தான் கிரிக்கெட் வரலாற்றில் அந்த அணி கண்டுள்ள சிறந்த தலைவர் என்று வர்ணிக்கப்படும் இம்ரான் கான், அந்த அணி உலகக் கிண்ணம் வெல்லவும் காரணமாக இருந்தார். இன்று நடைபெறவுள்ள இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டம் தொடர்பில் பாகிஸ்தான் ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இம்ரான் இவ்வாறு தெரிவித்தார்.

"முதலாவது ஆட்டத்தில் இந்தியாவிடம் அடைந்த மோசமான தோல்விக்கு பழிதீர்க்க பாகிஸ்தான் அணிக்கு சிறந்த வாய்ப்பு இது. இந்தியாவிடம் சிறந்த துடுப்பாட்ட வரிசை உள்ளது.

அவர்கள் முதலில் துடுப்பெடுத்தாடி அதிக ஓட்டங்கள் குவித்தால், அது பாகிஸ்தான் அணிக்கு அழுத்தம் தரும். அதனால் நாணயச் சுழற்சியில் வென்றால் பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாட வேண் டும்.

மற்ற அணிகளுக்கு எதிராக முதலில் பந்துவீச்சை தேர்ந்தெடுத்தது பாகிஸ்தான் அணிக்கு கை கொடுத்திருக்கலாம். ஆனால் இந்தியாவுக்கு எதிராக அவ்வாறு செயற்படக் கூடாது. பாகிஸ்தான் அணியின் உண்மையான பலம் அதன் பந்து வீச்சுத்தான்.

எனவே நாம் முதலில் துடுப்பெடுத்தாடி பிறகு கட்டுப்படுத்துவதே சிறந்த திட்டமாக இருக்கும். சர்பராஸ் அகமட் என்னை ஆச்சரியப்படுத்தியுள்ளார். சிறந்த தலைவராக உள்ளார். பாகிஸ்தானின் மற்றொரு முன்னாள் வீரர் மியான்டட் பிறிதொரு தொலைக்காட்சி அலைவரிசைக்கு, "உண்மையாகப் பேச வேண்டுமென்றால் இந்தியா வெல்லவே வாய்ப்புகள் அதிகம். சிறந்த அணி அவர்களுடையது. ஆனால் இது போன்ற பெரிய ஆட்டங்களில் சிறிய தருணங்களில் நடப்பது முக்கியம் என நான் எப்போதும் நம்புவேன். எனவே இரு அணிகளும் வெல்ல 50:50 வாய்ப்புகள் இருக்கின்றன" - என்றார். (ம)



**உங்களுக்கு DS MAX இல் இணைவதற்கு விருப்பமா? உடனே அழையுங்கள்**
வயதெல்லை - 18 - 30
தகைமை - O/L, A/L சித்தியடைந்தவர்கள் அனுபவம் அவசியமில்லை
15000 + பயிற்சியின் போது. 60000+ பயிற்சியின் பின்...
**நாங்கள் எதிர்பார்ப்பது:**
*எழுதுவினைஞர், *வரவேற்பாளர், *களஞ்சியபாதுகாவலர், *மேற்பார்வையாளர், *உதவிமுகாமையாளர், *கிளைமுகாமையாளர்
ETF, EPF மற்றும் மருத்துவகாப்பீடு, வெளிநாட்டு சுற்றுலா
தொடர்பு - 077 700 9820, 076 572 7243

**VACANCY IN UK BASED COMPANY**
Leading Whole sale company based in UNITED KINGDOM Looking for mentioned post for their back office in JAFFNA.
1. Customer Care Assistant
2. Accounts Clerk
Note - All the candidates should be proficiency in English & Basic Computer Knowledge. Accounting Knowledge is request Experience is additional qualification. Working hours is merged with UK Working hours. Send Your CV to ulx.job@gmail.com by mentioning the post that you are interested to apply on the subject of the Email T.P : 0212216656 we will inform the interview date through your E-Mail & Telephone. Suitable Retired person also can apply to this job. Selected candidate will be able to joint immediately.

**விரைவான வேலை ! நிறைவான இலாபம் !!**
ஜுஸ் பக்கெட் மெசின்




தமிழில் தொடர்பு கொள்ள
077 391 8870
WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitya,Colombo - 03
max adz

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org